உ

சோழ நாட்டுக் காவிரி வடகரை மேற்குப்பகுதித் தலங்கள்

தேவாரப் பாடல்களும் தல வரலாறுகளும்

தொகுத்தவர் :

"சித்தாந்தப் புலவர்மணி"

திரு. ந. ரா. முருகவேள், M.A., M.O.L.,

வெளியிடுவோர் :

திரு. R. மாசிலாமணி முதலியார் அவர்கள்
(மேயர் & கம்பெனி உரிமையாளர்)

திரு. K. C. நாகலிங்க முதலியார் அவர்கள்
(K. குப்புசாமி முதலியார் & கம்பெனி உரிமையாளர்)


திரு. K. கமலக்கண்ணன் M.L.C. அவர்கள்

வாழ்த்தி வழியனுப்புபவர் :

திரு. T. K. சுப்பிரமணியப் பிள்ளை B.A.B.L. அவர்கள்
வழக்கறிஞர், சென்னை.

தருமபுர ஆதீன சமயப் பிரசார நிலையம்
41, உஸ்மான் ரோடு,
தியாகராயநகர், : : சென்னை–17.

25–12–1964, ——— 31–12–1964.



சம்பந்தர் அப்பர் சுந்தரர் மணிவாசகர்

உ

34-1

சோழ நாட்டுக் காவிரி வடகரை மேற்குப்பகுதித் தலங்கள்

தேவாரப் பாடல்களும் தல வரலாறுகளும்

தொகுத்தவர் :
"சித்தாந்தப் புலவர்மணி"
திரு. ந. ரா. முருகவேள், M.A., M.O.L.,

வெளியிடுவோர் :

திரு. R. மாசிலாமணி முதலியார் அவர்கள்
(மேயர் & கம்பெனி உரிமையாளர்)

திரு. K. C. நாகலிங்க முதலியார் அவர்கள்
(K. குப்புசாமி முதலியார் & கம்பெனி உரிமையாளர்)

திரு. K. கமலக்கண்ணன் M.L.C. அவர்கள்

வாழ்த்தி வழியனுப்புபவர் :

திரு. T. K. சுப்பிரமணியப் பிள்ளை B.A.B.L. அவர்கள்
வழக்கறிஞர், சென்னை.

தருமபுர ஆதீன சமயப் பிரசார நிலையம்
41, உஸ்மான் ரோடு,
தியாகராயநகர், : : சென்னை—17.

25—12—1964,———31—12—1964.

அச்சிட்டோர் அமுர்தா அச்சகம் சென்னை-24.

உ

குருபாதம்

முகவுரை

ஞாலம் நின்புக ழேமிக வேண்டுந்தென்
ஆல வாயில் உறையுமெம் ஆதியே

—திருஞான சம்பந்தர்.

நமது புண்ணிய பூமியாகிய பரத கண்டத்தில் இமயமலை முதல் தென்குமரி வரையிலும், இலங்கையிலும் எண்ணில்லாத திருக்கோயில்கள் உளளன. அவற்றைப் பொதுவாக 1008 சிவாலயங்கள் எனத் தொகுத்துக் கூறுவர் ஆன்றோர். அவற்றுள் நமது தெய்வச்சைவச் செந்தமிழ்ப் பரமாசார்யமூர்த்திகளான நால்வருள் மூவரால் பாடல் பெற்ற சிவத்தலங்கள் மொத்தம் 274 என்பர். அவை சோழ நாட்டில் காவிரிக்கு வடகரையில் 63; தென் கரையில் 127; பாண்டி நாட்டில் 14; சேர நாட்டில் (மலை நாடு) 1; கொங்கு நாட்டில் 7; நடு நாட்டில் 22; தொண்டை நாட்டில் 32; துளுவ நாட்டில் 1; ஈழ நாட்டில் 2: வட நாட்டில் 5; ஆக விளங்குகின்றன.

தருமை யாதீனம் ஸ்ரீலஸ்ரீ கயிலைக்குரு மகா சந்நிதானத்தின் திருவுளம்பாங்கின் வண்ணம் நமது சமயப் பிரசார நிலையத்தின் சார்பில் சென்னையிலும், சென்னைக்கு அண்மையிலும் உள்ள சிவநேசச் செல்வர்கள் பலரும் ஐந்தாண்டு காலமாக மாதந்தோறும் முதல் அல்லது பெரும்பாலும் இரண்டாவது ஞாயிற்றுக்கிழமைகளில் தொண்டை நாட்டுத் தலங்கள் 32க்கும், நடு நாட்டுத் தலங்கள் 22க்கும், மலை நாட்டுத் தலம் 1க்கும், கொங்கு நாட்டுத் தலங்கள் 7க்கும், பாண்டி நாட்டுத் தலங்கள் 14க்கும், சோழ நாட்டுக் காவிரிக்கு வடகரையிலுள்ள தலங்கள் 31க்கும், சென்று வழிபாடும் சமயப் பிரசாரமும் நிகழ்த்தி நிறைவு செய்து மகிழ்ச்சியுற்றனர்.

இப்போது ஸ்ரீலஸ்ரீ கயிலைக் குருமகா சந்நிதானத்தின் திருவுளக்கருத்தின்படி அன்பர்கள். சோழ நாட்டுக் காவிரிக்கு வடகரையில் எஞ்சியுள்ள 32 தலங்களையும் இவற்றைச் சூழ்ந்துள்ள மற்ற திருக்கோயில்களையும் சென்று தரிசித்து வர நமது சமயப் பிரசார நிலையத்தின் சார்பில் ஏற்பாடு செய்யப் பெற்றுள்ளது. ஒரு பேருந்தூர்தியில் 60 அன்பர்கள் இவ்வழி பாட்டு யாத்திரையில் கலந்து கொண்டு மகிழ இருக்கின்றனர். 25-12-64 வெள்ளி முதல் 31-12–64 வியாழன் வரையில் நிகழ இருக்கின்றது. இந்த யாத்திரையில் ஆங்காங்கும் திரு. கே. கமலகண்ணன் M.L.C. வேலூர், திரு. K. இராமநாத ஆச்சாரியார், திரு. C. பத்மநாபன் B.A., திரு. N. ஆடலரசு, திருமதி R. இராஜ ரத்தினம் அம்மையார் M.A.L.T. வித்துவான். திருமதி மீனாட்சி சுந்தரசிவை முதலியார் சமய விரிவுரை நிகழ்த்துவார்கள். சங்கீத பூஷணம் திரு. P. சுவாமிநாதன் அவர்கள் ஆங்காங்கும் தலத் தேவாரங்களை இசையுடன் ஓதி மகிழ்விப்பார்.

இவ்வழி பாட்டு யாத்திரையில் கலந்துகொள்ளும் அன்பர்களுக்கும் ஏனையோருக்கும் பயன்படும்படி நமது நிலையத்தின்பால் பேரன்பும், பெரிதும் ஈடுபாடும் உடைய பெருமக்களான மேயர் கம்பெனி திரு. ரா. மாசிலாமணி முதலியார், திரு. K. குப்புசாமி முதலியார் கம்பெனி உரிமையாளர் திரு. K. C. நாகலிங்க முதலியார், திரு. K. கமலக் கண்ணன் M.L.C. ஆகியோர் சோழ நாட்டுத் தலங்களின் பாடல்களையும், அவற்றின் வரலாறுகளையும் சேர்த்து ஒரு சிறு நூலாக்கி அதனைத் தமது சொந்தச் செலவில் அச்சிட்டு அன்பர்களுக்கு மனமுவந்து வழங்குகின்றார்கள். இதன் பொருட்டு' இந்து சமய அறநிலைய ஆட்சித்துறையின் "திருக்கோயில்" ஆசிரியர் "சித்தாந்தப் புலவர்மணி" திரு. ந ரா. முருகவேள் M.A.M.O.L., அவர்கள் நமது விருப்பத்திற்கு இணங்கிச் சிறந்த ஒரு சமயத் தொண்டு என்ற நோக்கத்துடன், இதனை மிகக் குறுகிய காலத்தில் பெரிதும் முயன்று தல வரலாறுகளை எழுதி உதவினார்கள். தலத் தேவாரப் பாடல்களையெல்லாம் அச்சகத்திற்குக் கொடுத்து அச்சுக் கோர்க்க வசதியாகத் தாமே தம் தொண்டாகக் கருதிப்படி செய்து உதவியவர், இவ்வழிபாடுகளையெல்லாம் ஒன்றும் விடாது தொடர்ந்து செய்துவரும் அன்பர் திரு. M. சிவானந்த முதலியார் அவர்கள். இந்நூலை மிகக்குறுகிய காலத்தில் அச்சிட்டு உதவியவர்கள் கோடம்பாக்கம் "அமுர்தா அச்சகத்தார்" வழக்கம்போல அச்சகத்தில் இதனை அச்சிடுங்கால் உடனிருந்து அவ்வப்போது ஒப்புநோக்கி இந்நூலை அரிதின முயன்று காலத்தில் வெளிவரச் செய்து உதவியவர், "சித்தாந்த வித்தகர்" கயப்பாக்கம். திரு. சோமசுந்தரம் செட்டியார் அவர்கள்.

இவர்கள் அனைவருக்கும், யாத்திரையில் சிவபுண்ணியத்திற்குப் பாத்திரமாயுள்ள பல அன்பர்களுக்கும். எல்லா நலங்களும் நிறைந்து இனிது பெருகுதல் வேண்டுமென ஸ்ரீசெந்தமிழ்ச் சொக்கலிங்கப் பெருமான் திருவருளையும் ஸ்ரீலஸ்ரீ கயிலைக் குருமகா சந்நிதானத்தின் அருளையும் மனமொழி மெய்களால் வாழ்த்தி வணங்குகின்றேன்.

வாழ்க வையகம் ! வளர்க சிவநெறி !!

தருமபுர ஆதீன
சமயப் பிரசார நிலையம்
41, உஸ்மான் சாலை
தி. நகர், சென்னை-17.

இங்ஙனம் :
சோமசுந்தரத் தம்பிரான்.

உ

தல வரலாறு

31. திருஓமாம்புலியூர்

இருப்பிடம் : சிதம்பரத்துக்குத் தென்மேற்கே 15 கல் தொலைவிலுள்ள மன்னார்குடிக்குத் தெற்கே 4 கல்; குத்தாலம் நிலயத்திற்கு வடக்கே 11 கல்.

தலவரலாறு : இதனைப் 'பிரணவ வியாக்ரபுரம்' என வடமொழியில் வழங்குவர். அம்பிகை தட்சிணா மூர்த்தியிடம் பிரணவ உபதேசம் பெற்ற தலம். இஃது ஓமம் ஆம் புலியூர் என்றும் ஓம் ஆம் புலியூர் என்றும் வழங்கும். புலிக்குப் பயந்து வில்வ மரத்தில் ஏறிக் கொண்ட ஒரு வேடன் இரவு முழுதும் வில்வ இலைகளைப் பறித்துப் போட்டுக் கொண்டிருக்க அவை மரத்தின் அடியில் இருந்த சிவலிங்கத்தின் மேல் விழ, இறைவன் மனம் இரங்கியும் மகிழ்ந்தும் காலையிற் காட்சி தந்து, முத்தி யளித்த தலம். இங்குள்ள கோயிலுக்கு வடதளி என்பது பெயர். "ஓமாம் புலியூர் உடையவர் வடதளி யதுவே" எனவரும் ஞான சம்பந்தர் பாடலால் இதனை யுணரலாம். இறைவன் துயரம் தீர்த்த நாதர். இறைவி பூங்கொடி நாயகி.

கல்வெட்டு : இங்கே 6 கல்வெட்டுக்கள் உள்ளன. மூன்றாம் குலோத்துங்கன் 1, கோப் பெருஞ் சிங்கன் 5. இவ்வூர் "வடகரை விருதராச பயங்கர வள நாட்டு மேற்காநாட்டுப் பிரமதேயம், ஓமாம் புலியூர் ஆகிய உலகளந்த சோழச் சதுர்வேதி மங்கலம்" எனக் கல்வெட்டுக்களிற் குறிக்கப்பட்டுள்ளது. 'துயாம் தீர்த்த நாயனார்' என இறைவனின் பெயர் குறிப்பிடப் பட்டிருக்கின்றது.

32. திருக்கானாட்டு முள்ளூர்

இருப்பிடம் : மன்னார்குடியில் இருந்து தெற்கே ஓமாம் புலியூருக்குச் செல்லும் வழியில், 3 கல் தொலைவில் உள்ளது.

தலவரலாறு : இதனைக் 'கானாட்டம் புலியூர்' என வழங்குகின்றனர். இது பதஞ்சலி முனிவர் பூசித்துப் பேறுபெற்ற தலம். இக்கோயிலில் உள்ள சுவாமிக்குப் பதஞ்சலி நாதேசுரர் என்றும், அம்பிகைக்குக் கானார் குழலி, கோல்வளைக்கையம்மை என்றும் பெயர். இங்கு அத்திமரமும் வெள்ளெருக்கஞ் செடியும் தல வீருட்சங்களாக இருக்கின்றன. "கொள்ளிடத்தின் கரைமேற் கானாட்டு முள்ளூரிற் கண்டு தொழுதேனே" எனச் சுந்தரமூர்த்தி சுவாமிகள், இத்தலத்திற்கு ஒரு பதிகம் பாடியருளியிருக்கின்றனர்.

33. திரு நாரையூர்

இருப்பிடம் : சிதம்பரத்தில் இருந்து காட்டு மன்னூர் குடிக்குப் போகும் பெருவழியில், 10 கல் தொலைவில் உள்ளது.

தலவரலாறு : நாரை பூசித்துப் பேறு பெற்றதனால் இதற்கு இப்பெயர் அமைந்தது. திருத்தொண்டர் திருவந்தாதியைப் பாடிய நம்பியாண்டார் நம்பிகள் அவதாரம் செய்த புனிதத் தலம். தில்லைப் பொன்னம்பலத்தின் மேற்பாலுள்ள ஓர் அறையில் இருந்த தேவாரத் திருமுறைகளை நம்பியாண்டார் நம்பிகள் வாயிலாக வெளிப்படுத்திய 'பொல்லாப் பிள்ளையார்' எழுந்தருளியிருக்கும் தலமும் இதுவேயாகும். பொல்லாப் பிள்ளையார் என்பதற்கு உளியாற் பொள்ளப்படாமல், தாமாகவே இயற்கையில் தோன்றிய (சுயம்புவான)பிள்ளையார் என்பது பொருள். அப்பர், சம்பந்தர் பாடல் ஐந்து பதிகங்கள். அபயகுல சோழன் ஆகிய இராஜ ராஜசோழன், நம்பியாண்டார் நம்பிகளைத் திருமுறைகளை வகுக்கும்படி வேண்டிக் கொண்ட தலமாதலின், இங்கு அவ்விருவருடைய திருப்படிமங்களும் உள்ளன; மகாமண்டபத்தில் இருவரின் சிற்பங்களும் செதுக்கப் பட்டிருக்கின்றன.

கல்வெட்டு : இங்கு 4 கல்வெட்டுக்கள் கிடைத்துள்ளன. அவற்றினால், 'திருநாரையூர் தனியூரான் வீரநாராயணபுரம் சேர்ந்த ஒரு பிடாகை' விக்கிரம சோழன் ஆண்டு ஒன்றுக்கு 540 கலம் நெல் தரக் கூடிய நிலதானம் செய்தான். பசு திருடிய ஒருவனைச் சபையார் விசாரித்து, அவனிடமிருந்தும் பசுவும் கன்றுகளும் மீட்கப்பட்டன.

34. திருக்கடம்பூர்

இருப்பிடம் : சிதம்பரம் வட்டம் காட்டுமன்னூர் கோயிலுக்கு 3 கல் தொலைவில் உள்ளது.

தலவரலாறு : இங்கேயுள்ள கோயிலுக்குக் கரக்கோயில் என்று பெயர், "நங் கடம்பனைப் பெற்றவள் பங்கினன், தென் கடம்பைத் திருக்கரக் கோயிலான், தன் கடன் அடியேனையும் தாங்குதல், என் கடன் பணி செய்து கிடப்பதே" என்னும் சிறந்த தேவாரப் பாடலுக்குரிய தலம் இதுவே யாகும். 'கரக் கோயில்' என்று பெயர் அமைந்ததற்குரிய காரணம் தெளிவாகத் தெரியவில்லை. இத் தலத்தை வணங்கிய இந்திரன் இதனைத் தன் விண்ணுலகத்திற்குக் கொண்டு போக நினைத்துப் பாதாளம் வரையில் தோண்டிப் பார்த்தும், இஃது அதற்கு அப்பாலும் ஊடுருவிப் போனது கண்டு அஞ்சி, முன் போல அமைத்துப் பூசித்து அமிர்தம் உண்டாகும்படி வரம் பெற்றனன். அதனால் இதற்குக் கரக்கோயில் (காக்கும் கோயில்)

34-1

எனப் பெயர் வந்தது என்பர் சிலர். இறைவன் அமிர்தகடேசர் இறைவி சோதிமின்னம்மை. அப்பர் சம்பந்தர் பாடல், 3 பதிகங்கள். கோயிற் கருவறையின் அடிப்பகுதி, இரத வடிவிற் குதிரைகள் பூட்டிய நிலையில் உள்ளது; இக் கடம்பூர்க்குக் கிழக்கே ஒரு கல் தொலைவில் கடம்பூர் இளங்கோயில் இருக்கின்றது. இது முற்றிலும் இடிந்துபோய்க் கிடக்கின்றது.

36. திருக்கஞ்சனூர்

இருப்பிடம்: தஞ்சை மாவட்டம் கும்பகோணத்துக்கு அருகில் நரசிங்கன்பேட்டை நிலயத்தில் இருந்து சுமார் 2 கல் தொலைவில் இருக்கின்றது.

தலச்சிறப்பு: அக்கினியும் பிரமனும் வழிபட்டுப் பேறு பெற்றது. அரதத்த சிவாசாரியார் தோன்றிச் சைவத்தின் பெருமையை நிலைநாட்டிய தலம். இறைவன்; அக்கினீசுவரர். இறைவி; கற்பக நாயகி. அக்கினித் தீர்த்தம் கோயிலுக்குக் கிழக்கில் உள்ளது.

கல்வெட்டுக்கள்: விக்கிரம சோழன் திரிபுவனச் சக்கரவர்த்தி குலோத்துங்கச் சோழன் வீரராசேந்திர சோழன். கிருஷ்ணதேவராயர்.

ஆகியோர் காலத்துக் கல்வெட்டுக்கள் காணப்படுகின்றன. இது மதுரைத் திருஞானசம்பந்தர் ஆதீனத்துக் குருமகா சந்நிதானம் அவர்களின் அருளாட்சியில் இருந்து வருகின்றது.

37. திருக்கோடிகா

இருப்பிடம்: மாயூரம் கும்பகோணம் இருப்புப் பாதையில் நரசிங்கன்பேட்டை நிலயத்துக்கு வடக்கே ஒரு கல் தொலைவிலுள்ளது. இது திருக்கோடிகாவல் எனவும் வழங்கும்.

தலவரலாறு: இங்கே திரிகோடி (மூன்று கோடி) முனிவர்கள் பூசித்து வழிபட்டதனுல், இத் தலத்திற்குத் திருக்கோடிகா எனப் பெயர் அமைந்தது என்பர். இறைவன் கோடிகா நாதர். இறைவி வடிவாம்பாள். இங்குள்ள தீர்த்தம் சிருங்க தீர்த்தம் எனப்படும். இது கோயிலுக்கு வடபால் உள்ளது. இத்தலத்திற்குச் சம்பந்தர் பதிகம் ஒன்றும், அப்பர் பதிகம் 3-ம் பதிகங்கள் ஆக நான்கு உள்ளன.

கல்வெட்டு: இக்கோயிலில் பல்லவர்கள், சோழர்கள், பாண்டியர்கள், முத்தரையர்கள் ஆகியோரின் கல்வெட்டுக்கள் காணப்படுகின்றன. இக் கோயிலைக் கருங்கற்றளியாகச் செய்தவர் திருவிசைப்பாப் பதிகம் பாடிய கண்டராதித்த சோழதேவர் என்ப

வரின் மனைவியார் ஆகிய செம்பியன் மாதேவியார் ஆவர். இவ்வம்மையார் இக்கோயிலைக் கட்டுவதற்கு முன்பாக, இங்கே இருந்த பழைய கல்வெட்டுக்களைப் படியெடுக்கச் செய்து பாதுகாத்து, அவைகளை யெல்லாம் தாம் கட்டிய கோயிலில் செதுக்கி வைக்கச் செய்தனர். இச் செயல், அவர்க்குத் திருப்பணி செய்தலில் எத்தகைய கருத்தும் பொறுப்பும் கடமையுணர்வும் இருந்தன என்பதை விளக்கும் சான்றாகும். இக்கோயில் திருச்சுற்று மாளிகை விக்கிரம சோழ தேவர் கட்டியதாகும். சண்டேசுவரர் கோயில் 'தியாகசமுத்திரம்' என்னும் பட்டமுடைய சோழ அரசரால் கட்டப் பெற்றது 'திருக்கோடிகா ஆகிய கண்ண மங்கலத்து' எனவரும் கல் வெட்டுத் தொடரினால், இதற்குக் கண்ணன் மங்கலம் எனவும் ஒரு பெயர் வழங்கி வந்தமை புலனாகின்றது. மணவூருடையார் வரந்தரும் கூத்தப் பெருமாள், ஆழி சிறியன், மல்லன் வேங்கடவன் நிருபதுங்கமகா ராஜர் தேவியார், ஆரூர் உடையான் அருளாக்கி சேந்தன், பழையாற்று நந்திராத்துக் குமரன் கணபதி, உதையஞ் சடையன், தில்லையம்பல விழுப்பரையன், வரகுணமகாராஜ பாண்டியன் துவைபுரிப் பிள்ளைப் பெருமாள் மகனார் சடையர், ஆகிய பலர் இக்கோயிலுக்குப் பற்பல திருப்பணிகள் செய்து நிபந்தங்களும் அமைத்துள்ளனர்.

38. திரு மங்கலக்குடி

இருப்பிடம் : இது மாயூரம் - கும்பகோணம் இருப்புப் பாதையில், ஆடுதுறை நிலையத்துக்கு வடக்கே சுமார் 3 கல் தொலைவிலுள்ளது.

தலவரலாறு : இத்தலத்துக்கு அப்பர் பதிகம் ஒன்றும், சம்பந்தர் ஒன்றும் ஆக 2 பதிகங்கள் உள்ளன. இத்தலத்தில் வாழ்ந்த முனிவர் ஒருவர் சிவபூசைக்குரிய திருமஞ்சன நீரை, அமர்ந்த வண்ணமே தம் திருக்கைகளை ஆற்றளவும் நீட்டி, ஆற்றுநீரை முகந்து அபிடேகம் புரிந்தார். இவ் வரலாற்றை ஞானசம்பந்தர் "நீரின் மாமுனிவன் நெடுங் கைகொடு நீர்தனைப் பூரித்து ஆட்டி அர்ச்சிக்க இருந்த புராணனே' என அருளிச் செய்திருத்தல் கொண்டு உணரலாம். இறைவன் புராணேசுவரர் இறைவி மங்கள நாயகி. இத்லத்தில் காளி சூரியன் திருமால் பிரமன் அகத்தியா ஆகியவர்கள் வழிபட்டு அருள்பெற்றனர். "மங்கலக் குடி ஈசனை மாகாளி, வெங்கதிர்ச் செல்வன், விண்ணொடு மண்ணும் நேர் சங்கு சக்கர தாரி, சதுர்முகன், அங்கு அகத்தியனும் அர்ச்சித்தார் அன்றே" எனவரும் அப்பர் சுவாமிகள் திருக்குறுந்தொகையால் உணரலாம்.

கல்வெட்டு : இங்குள்ள இராஜராஜ சோழன் கல்வெட்டு ஒன்று, கோயில் சொத்தைச் சூறையாடிய சிலரை நீதிபதிகள் விசாரித்துத் தக்க நடவடிக்கைகள் எடுத்த செய்தியினை

புணர்த்துகின்றது. பெருமங்கலம் தொண்டைமான் என்பவன் இக் கோயிலுக்கு நிலதானங்கள் செய்தான். கிருஷ்ண தேவராயர் சகம் 1439 ஆம் ஆண்டில் இக்கோயில் நிலங்களுக்கு வரி விலக்கு அளித்தார். 'சுங்கம் தவிர்த்தவன்' என்னும் முதற் குலோத்துங்க சோழன் சில வரிகளை விதித்து, அவற்றால் கிடைத்த பொருள் வருவாயை இக்கோயிலுக்கு வழங்கினான். இவ்வரசரின் காலத்தின் நிலங்களின் அளவீடு (survey) நிகழ்ந்தது என்றும் கல்வெட்டு உணர்த்துகின்றது. தட்சிணா மூர்த்தி சந்நிதியில் நின்ற கோலத்தில் கைகுவித்துக் கடவுளை வணங்கும் முறையில் இருக்கும் உருவம் "முல்லைக் குடையான் தியாகப் பெருமாள் ஆகிய வானவன் பல்லரையன்" என்பவருடையதாகும்.

39. திருப்பனந்தாள்

இருப்பிடம் : இது மாயூரம்-கும்பகோணம் இருப்புப்பாதையில், ஆடுதுறை நிலையத்தில் இருந்து வடக்கே சுமார் 6 கல் தொலைவில் உள்ளது.

தலவரலாறும் சிறப்பும் : பனை மரத்தைத் தல விருட்சம் எனக் கொண்டிருத்தலால், இதற்குத் திருப்பனந்தாள் எனப் பெயர் அமைந்தது. இங்குள்ள கோயிலின் பெயர் 'தாடகையீச்சரம்'. தாடகை என்னும் பக்தி மிக்க பெண் ஒருத்தியால் வழிபடப் பெற்றமையினால், கோயிலுக்கு இப்பெயர் வழங்குவது ஆயிற்று, 'திருப்பனந்தாள் தாடகை ஈச்சரமே' எனத் திருஞானசம்பந்தர் தேவாரத் திருப்பதிகத்தின் ஒவ்வொரு பாடலிலும் வந்திருத்தல் காணலாம். தாடகை, மாலை சாத்துதற்கு இறைவன் வளைந்துகொடுத்து அருள் புரிந்தான். பின்னர்க் குங்குலியக் கலய நாயனார் பொருட்டு வளைந்த திருவுருவம் நிமிர்ந்து நின்றான். இறைவன் செஞ்சடையப்பர். இறைவி பெரியநாயகி. இங்குள்ள கோயில், நமது திருத்தருமபுர ஆதீனத்தின் அருளாட்சியில் இருந்து வருகின்றது. இந்தத் தலத்தில்தான் ஸ்ரீ குமர குருபர சுவாமிகள் நிறுவிய காசிமடம் அமைந்து திகழ்ந்து வருகின்றது. அதன் தலைவராக இதுபோது விளங்கி வரும் ஸ்ரீலஸ்ரீ அருள்நந்தித் தம்பிரான் சுவாமிகள் அவர்களின் அறக் கட்டளைகளையும் அருமை பெருமைகளையும் தமிழ்நாடு நன்கறியும்.

கல்வெட்டுக்கள் : இங்குள்ள 'தாடகை யீச்சரம்' என்ற கோயிலைக் கட்டியவர் 'திருப்பனந்தாள் நக்கன்தாணி' என்பவர் என்று கல்வெட்டு அறிவிக்கின்றது. இவ்வாறே இங்குள்ள இறைவியின் கோயிலைக் கட்டுவித்தவர் "வெண்கூருடையான் அன்பர்க்கரசு மருதமாணிக்கம் ஆன வில்லவன் ராசன்" என்பதும் கல்வெட்டினால் அறியப்படுகின்றது. கோயிலின் இரண்டாம்

திருச்சுற்றுமலையில் உள்ள குங்குலியக் கலய நாயனுர் கோயில் "நீயிலும் பிரியாதான் அழியாவிரதங் கொண்டவன் ஆன குங்குலியக் கலயர்" என்பவரால் கட்டப் பெற்றது. இங்குள்ள முதற் குலோத்துங்க சோழன் கல்வெட்டு ஒன்றினுல், குங்குலியக் கலய நாயனுருடைய மனைவியின் பெயர் 'நீலாயி அம்மை' எனத் தெரிகின்றது.

40. திரு ஆப்பாடி

இருப்பிடம்: கும்பகோணம் வட்டத்தில் திருப்பனந்தாள் என்னும் தலத்துக்குத் தென்மேற்கில் ஒருகல் தொலைவில் உள்ளது. மண்ணரியாற்றின் தென்கரை.

தலவரலாறு: திருநாவுக்கரசர் "சண்டியார்க்கு அருள்கள் செய்த தலைவர் ஆப்பாடி யாரே" எனப் பாடியுள்ளபடி, இந்தத் தலமே சண்டேசுர நாயனர் சிவபெருமானை வழிபட்டுப் பேறுபெற்ற தலம். இத் தலத்திற்கு அருகில் சேய்ஞலூர் உள்ளது. அது சண்டேசுர நாயனுர் அவதரித்ததலம். சேய்ஞலூரில் வாழ்ந்த சண்டேசுரர் இத்தலத்தில் ஆனிரைகளை மேய்த்து, ஆத்தி மரத்தின் கீழ் மண்ணரியாற்றின் மணலாற் சிவலிங்கம் அமைத்து, ஆனிரைகளின் பாலைக் கறந்து அபிடேகம் செய்து வழிபட்டுச் சண்டேசுரப்பதம் பெற்றுர். இறைவன் பாலுகந்த நாதர். இறைவி பெரியநாயகி தலமரம் ஆத்தி. தீர்த்தம் மண்ணியாறு. அப்பர் சுவாமிகள் பதிகம் ஒன்று இத் தலத்திற்கு உண்டு.

கல்வெட்டு: இரண்டாம் இராசராசன், மூன்றும் குலோத்துங்கன், சுந்தரபாண்டியன், கோப் பெருஞ்சிங்க தேவன், அரியப்ப உடையார், மல்லிகார்ச்சுன மகாதேவர் முதலியவர்களின் காலத்திற் செதுக்கப்பட்ட கல்வெட்டுக்கள் பலஇங்கே யுள்ளன.

41. திருச்சேய்ஞலூர்

இருப்பிடம்: இது குபம்கோணத்தில் இருந்து திருப்பனந்தாள் செல்லும் சாலையில் 9½ கல் தொலைவில் இருக்கின்றது.

தலவரலாறு: இத்தலம் இக்காலத்திற் 'சேங்கனூர்' என வழங்குகின்றது. முருகப் பெருமான் திருக்கயிலையல் இருந்து சூரசம்மாரத்தின் பொருட்டு, வீர மகேந்திர புரிக்கு எழுந்தருளிய பொழுது வழியில் இங்கு வந்து சிறிது நேரம் தங்கியிருந்து, சிவபிரானை வழிப்பட்டனர் என்பது கந்த புராண வரலாறு. சேய் என்னும் முருகன் வழிபட்ட நல்ல ஊர்ஆதலின் இதற்குச் (சேய்+நல்+ஊர்) சேய்ஞலூர் எனப் பெயர் ஏற்பட்டது. சண்டேசுர நாயனர் அவதாரத் தலம், ஆதலின் சம்

பந்தர் சிவிகையினின்றும் இறங்கி நடந்து சென்று இத்தலத்து இறைவனை வழிபட்டனர் எனப் பெரிய புராணம் கூறுகின்றது. இறைவன் சத்தகிரீசுவரர்- இறைவி சகிதேவியார். தீர்த்தம் மண்ணியாறு. சம்பந்தர் பதிகம் ஒன்று. 1932இல் படியெடுக்கப்பட்ட ஒரே ஒரு கல்வெட்டு மட்டும் இங்கு உள்ளது

42. திருந்துதேவன்குடி

இருப்பிடம்: இது திருவிடைமருதூர் நிலையத்திற்கு 5 கல் தொலைவில் உள்ளது. 'திருந்து தேவன்குடி' என்னும் ஊர் இக்காலத்தில் இல்லை. வயல்களின் நடுவில் கோயில் மட்டுமேயுள்ளது. கோயிலைச் சுற்றி மூன்று பக்கமும் அகழிகள் இருக்கின்றன.

தலவரலாறு: இத் தலத்தில் இறைவனை நண்டு (கற்கடகம்) ஒன்று பூசித்துப் பேறு பெற்றது. ஆதலின் இதனை 'நண்டாங் கோயில்' என இக்காலத்து மக்கள் வழங்கி வருகின்றனர். சுவாமியின் திருமுடியில் நண்டின் உருவம்காணப்படுகின்றது. இறைவன் கற்கடேசுவரர். இறைவி அருமருந்து அம்மை. இங்கே இரண்டு அம்பாள் சந்நிதிகள் இருக்கின்றன.

43. திரு வியலூர்

இருப்பிடம்: இது திருவிடை மருதூர் நிலையத்தில் இருந்து வடமேற்கே, வேப்பத்தூர் வழியில் 4கல் தொலைவில் உள்ளது. தஞ்சை மாவட்டத்தில் திருவியலூர் என்று வேறு இரண்டு ஊர்களும் உள்ளன. ஆதலின் இதனைப் 'பண்டாரவாடைத் திருவிசநல்லூர்' என மக்கள் வழங்கி வருகின்றனர்.

தலவரலாறு: இத் தலத்தில் சடாயு என்னும் கழுகரசன், இறைவனை வழிபட்டுப் பேறு பெற்றார். இறைவன் யோகானந்த ஈசுவரர் 'இறைவி சாந்த நாயகி' புராதன ஈசுவரர், 'வில்வாரண்ய ஈசுவரர் எனவும் இறைவனுக்குப் பெயர் வழங்கும். இறைவிக்குச் சௌந்தர நாயகி எனவும் பெயருண்டு.

கல்வெட்டு; முதலாம் பராந்தக சோழன் (கி. பி. 907-947) இரண்டாம் பராந்தகன் முதலாம் இராஜராஜன் (கி. பி. 985-1014), இராஜேந்திர சோழன் (கி. பி. 1014-1044) மூன்றாம் குலோத்துங்கன் (கி. பி. 1178 1218), வரகுணபாண்டியன் (கி பி. 862-894), கிருஷ்ண தேவராயர் ஆகியோரின் கல்வெட்டுக்கள் 94 கிடைத்துள்ளன.

44. திருக் கொட்டையூர்

இருப்பிடம்: கும்பகோணத்திற்கு வடமேற்கே ஒருகல் தொலைவில், காவிரியாற்றின் வடகரையில் அமைந்துள்ளது.

தலச்சிறப்பு: இதற்கு வில்வாரண்யம், ஏரண்டபுரம் என்னும் வேறு பெயர்களும் உண்டு. ஆயினும் கொட்டையூர் என்னும் பெயரே தேவாரத்திலும் கல்வெட்டிலும் காணப்படுகின்றது. இங்கேயுள்ள கோயிலுக்குக் கோடீச்சுரம் என்பது பெயர். பத்ரயோகி என்னும் முனிவர் ஒருவருக்கு, இறைவன் கோடித் திருவுருவங்கள் கொண்டு காட்சி யளித்து அருள் புரிந்தார். ஆதலின் இங்கே யுள்ள இறைவனுக்குக் கோடீச்சுரர் எனப் பெயர் அமைந்தது. இங்கே கோடி விநாயகர், கோடி அம்மையார், கோடி முருகர், கோடி சண்டேசுரர் எனப் பிற மூர்த்திகளுக்கும் பெயர் வழங்கும். இறைவனின் சிவலிங்கத் திருமேனி பலாக்காய் போன்று முள் முள்ளாக இருக்கும். ஒவ்வொரு முள்ளும் ஒவ்வொரு சிவலிங்கம் ஆகும். இங்ஙனமே கோடி விநாயகர் திருவுருவிலும் பல விநாய வடிவங்கள் காணபடும். இங்கே செய்யும் புண்ணியமும் பாவமும், பிற தலங்களிற் செய்வதை விடக் கோடி மடங்கு மிகுதிப்பட்டுப் பெருகும் என்பர். கொட்டையூர், திருவலஞ்சுழி என்னும் இரண்டு தலங்களையும் இணைத்துத் திருநாவுக்கரசர் பாடியுள்ளார். இத்தலத்திற்கு அருணகிரிநாதர் அருளிய திருப்புகழும் உண்டு. சம்பகாலத்தில் வாழ்ந்திருந்த கொட்டையூர்ச் சிலக்கொழுந்து தேசிகர் என்பவர், இத்தலத்திற்கு ஒரு கோவையும் உலாவும் பாடியுள்ளார்.

கல்வெட்டு: இரண்டாம் இராசாதிராசன் (கி. பி. 1163–1178) மூன்றாம் குலோத்துங்கன் (கி. பி. 1178-1216) ஆகியோர் காலத்துக் கல்வெட்டுக்கள், இக்கோயிலில் இருக்கின்றன. அம்மை கோயிலிலும் ஒரு கல்வெட்டு உண்டு.

45. திரு இன்னம்பர்

இருப்பிடம்: இது கும்பகோணத்தில் இருந்து சுவாமிமலைக்குச்செல்லும் பெருவழியில், புளியஞ்சேரி என்னும் ஊருக்கு வடக்கே, திருப்புறம்பயம் போகும் வழியில் ஒரு கல் தொலைவில் உள்ளது.

தலச்சிறப்பு: திருஞானசம்பந்தர் பதிகம் ஒன்றும், திருநாவுக்கரசர் பதிகம் நான்கும் ஆக, ஐந்து பதிகங்கள் இத்தலத்திற்கு உண்டு. இறைவன்: தான்தோன்றியீசர், எழுத்தறிந்தநாதர் இறைவி: கொந்தார் பூங்குழல் அம்மை ஐராவததீர்த்தம். சூரியன் அகத்திய முனிவர் ஐராவதம் ஆகியவர்கள் வழிபட்டுப் பேறு பெற்ற தலம்.

கல்வெட்டு: இக் கோயிலில் 'இராசகேசரிவர்மன்' என்னும் பட்டமுடைய சோழ மன்னர் ஒருவரின் கல்வெட்டும், விஜயநகர வேந்தர் ஆகிய வீரகம்பண்ண உடையார் காலத்துக் கல்வெட்டு ஒன்றும் உள்ளன. வீரகம்பண்ணஉடையார் கலவெட்டி

ளுல் இக்கோயில் துருக்கர்களின் படையெடுப்பால் 40ஆண்டுகள் பூசையின்றிக் கிடந்த செய்தி அறியப்படுகின்றது.

46. திருப்புறம்பயம்

இருப்பிடம் : இது கும்பகோணத்திற்கு வடமேற்கே $5^1/_2$ கல தொலைவில் மண்ணியாற்றின் வட கரையில் இருக்கின்றது.

தல வரலாறும் சிறப்பும் : 'புறம்பயம்' என்னும் சொற்றொடர் 'பக்கத்தில் தண்ணீரை யுடையது' எனப் பொருள் படும். இதற்கு ஏற்பத் திருக்கோயிலின் மேற்குப் புறத்தில் மதிலை ஒட்டி நீர் நிலை இன்றும் இருக்கின்றது. ஒரு காலத்தில் பிரளயம் வந்த பொழுது. அஃது இறைவன் அருளால் ஊரின் உள்ளே போகாமல் தடைப்பட்டுப் புறத்தே நின்றமையால், புறம்பயம் என இத்தலத்திற்குப் பெயர் உண்டாயிற்று. இங்கே யுள்ள விநாயகர்க்குப் பிரளயங்காத்த விநாயகர் என்பது பெயர். இறைவன் புறம்பய நாதர், ஒரு வணிகப் பெண்ணின் நிமித்தம், இவ்வூர்ச் சிவபெருமான் மதுரை சென்று சாட்சியாக விளங்கியமையால், சாட்சிநாதர் எனவும் பெயர் வழங்கும். இறைவி கரும்பு அடு சொல்லி. இப்பெயர் சம்பந்தர் தேவாரத்தில் வந்துள்ளது. தீர்த்தம் : பிரமதீர்த்தம் சத்த சாகர தீர்த்தம் என்பன. தலமரம் புன்னை. கொள்ளிட நதியும் மண்ணியாறும் இத்தலத்திற்கு அணித்தாக முறையே வடக்கிலும் கிழக்கிலும் ஓடுகின்றன. மணிவாசகர் ''புறம்பயம் அதனில் அறம்பல அருளியும்'' என்றருளியபடி சிவபெருமான் இத்தலத்தில் சனகர் முதலிய நால்வர்களுக்கு அறநெறியினை உபதேசித்தருளினர். ஞானசம்பந்தர் இதனை ''நால்வர்க்கு அறம்பயன் உரைத்தனை புறம்பயம் அமர்ந்தோய்'' எனக் குறிப்பிட்டுள்ளார். துரோணர் இங்கே இறைவனை வழிபட்டு அசுவத்தாமா என்ற புதல்வனைப் பெற்றார். விசுவாமித்திரர், சுக்ரீவன் ஆகியோரும் இங்கு வழிபாடு செய்தனர். அப்பர், சம்பந்தர், சுந்தரர் ஆகிய மூவர் பதிகமும் இதற்குண்டு.

இக்கோயில் மதுரைச் திருஞான சம்பந்தர் ஆதீன குரு மகா சந்நிதானம் அவர்களின் அருளாட்சியில் இருந்து வருகின்றது.

கல்வெட்டுக்கள் : இங்கே 63 கல்வெட்டுக்கள் படியெடுக்கப் பெற்றுள்ளன. முதலாம் பராந்தகன், இரண்டாம் ஆதித்தன், இராசராச சோழன், முதற்குலோத் துங்கன், விக்கிரம சோழன், மூன்றாம் இராசராச சோழன், விபோட்சிராயன் முதலியவர்களின் கல்வெட்டுக்கள் அவை. இக்கோயிலின் பெயர் ஆதித்தேச்சுரம் எனக் கல்வெட்டிற் குறிக்கப்படுகின்றது.

இக்கோயிலை ஆதித்த சோழன் கட்டியதனை, இஃது உணர்த்துகின்றது. இங்கே தாமோதர ஆண்டார் கடியா பரணர்மடம் என ஒன்றும், தாமோதர விண்ணகரம் எனப் பெருமாள் கோயில் ஒன்றும் இருந்தமை கல்வெட்டாற் புலனு கின்றது. செம்பியன் மாதேவியார், வானவன் மூவேந்த வேளான். முடிகொண்ட சோழப் பல்லவரையன் முதலிய பற்பலர் இக்கோயிலுக்குப் பற்பல தானங்கள் செய்துள்ளனர்.

47. திருவிசயமங்கை

இருப்பிடம் : இது கும்பகோணத்திற்கு வடமேற்கில் உள்ள திருவைகாவூர்க்கு வடக்கே, கொள்ளிடப் பேராற்றின் வடகரையில் இருக்கின்றது.

தல வரலாறு : இது பஞ்சபாண்டவர்களுள் ஒருவனுகிய விசயன் (அர்ச்சுனன்) வழிபட்டுப் பேறுபெற்ற தலமாதலால் 'விசய மங்கை' எனப் பெயர் பெற்றது. இவ்வரலாற்றினைத் திருநாவுக்கரசர் ''பாண்டுவின் மகன் பார்த்தன் பணிசெய்து வேண்டும் நல்வரங்கொள் விசய மங்கை'' எனத் தம் திருக் குறுந்தொகைப் பாடலில் குறிப்பிடுதல் காணலாம். கோயி லின் பெயர் விசய மங்கை. ஊரின் பெயர் கோவந்த புத்தூர். ஒரு பசு (கோ) நாடோறும் இங்கு வந்து சிவலிங்கத் திருமேனி யின்மீது தன் பாலைச் சொரிந்து வழிபட்டுப் பேறுபெற்ற காரணத்தினுல், இத்தலத்திற்குக் 'கோவந்த புத்தூர்' எனப் பெயர் அமைந்தது. திருஞானசம்பந்தர் ''கோதனம் வழிபடக் குலவும் நான்மறை வேதியர் தொழுதெழு விசய மங்கையே'' எனவரும் பாடலால், இவ் வரலாற்றைக் குறிப்பிட்டுள்ளனர். ''கொள்ளிடக் கரைக் கோவந்த புத்தூரில் வெள்விடைக்கு அருள்செய் விசயமங்கை'' எனவரும திருநாவுக்கரசர் பாடற் பகுதியும் கொண்டு உணர்ந்து இன்புறுதற்கு உரியது. இறைவன் விசயநாதர்; இறைவி; மங்கை நாயகி; அருச்சுன தீர்த்தம்.

கல்வெட்டு : இக்கோயிலில் மதுரை கொண்ட கோப்பர கேசரி வர்மன், பரகேசரி உத்தம சோழன் முதலாம் இராசராச சோழன், முதலாம் இராசேந்திர சோழன், முதற்கு லோத்துங்க சோழன், மூன்ருங் குலோத்துங்க சோழன், இராசராச தேவன் ஆகியோர் கல்வெட்டுக்கள் உள்ளன. இக்கோயில் விமானத் தைக் கல்லாற் கட்டியவன் ''மும்முடிச் சோழ தேவர் பெருந் தரத்துக் குவளாலமுடையான் அம்பலவன் பழுவூர் நக்கனுன விக்கிரம சோழ மகாராஜன்''. கோயிலின் பூசைப் பொருள் களுக்காக ''அம்பலவன் பழுவூர் நக்கன் ஆன ராஜராஜப் பல்லவரையன்''. ஏராளமான நிலங்களை வழங்கி யிருந்தான். இத்தலத்தில் திருத்தொண்டத் தொகையன் திருமடம் என ஒன்று இருந்தமையும் கல்வெட்டினுல் அறியப்படுகினறது.

48. திருவைகாவூர்

இருப்பிடம் : இது கொள்ளிடப் பேராற்றின் தென்கரையில் இருக்கின்றது. கும்பகோணத்திற்கு வடமேற்கே 5½ கல் தொலைவில் உள்ள திருப்புறம்பயம் என்னும் தலத்திற்கு மேற்கே 8 கல் தொலைவில இந்தத் தலம் அமைந்துள்ளது.

தலவரலாறு : இது சிவராத்திரித் திருநாள் வழிபாட்டிற்கு மிகவும் சிறந்த தலம். வேடன் ஒருவன் புலிக்குப் பயந்து, வில்வமரத்தின் மீது ஏறி, தூக்கம் வந்து கீழே விழுந்து இறந்து விடாமல் இருத்தற் பொருட்டு, வில்வப் பத்திரங்களைப் பறித்துத் தன்னை அறியாமையிலே கீழே எறிந்து கொண்டிருக்க, அவைகள் கீழே எழுந்தருளியிருந்த சிவலிங்கத் திருவுருவின் மீது விழுந்ததனுல், சிவராத்திரி நாளில் வில்வ இலை கொண்டு உறங்காமல் இருந்து சிவ பிரானைப் பூசித்து வழிபடும் புண்ணியம் பெற்று, வீடு பேறு எய்திய தலம். இதற்கு ஞானசம்பந்தர் பதிகம் ஒன்றுள்ளது. இறைவன் வில்வவனேசுரர். இறைவி, வளைக்கை நாயகி-எமதீர்த்தம். தலமரம் கொன்றை.

கல்வெட்டு : சம்புவராய மன்னர்களில் சகல புவனச் சக்கரவர்த்தி இராசநாராயணச் சம்புவராயர் : காலத்திற் பொறிக்கப் பெற்ற கல்வெட்டுக்கள் உள்ளன.

49. திரு வடகுரங்காடுதுறை

இருப்பிடம் : இது கும்பகோணத்தில் இருந்து திருவையாற்றுக்குப் போகும் பெருவழியில் 15 ஆவது கல்லில் இருக்கின்றது. திருவையாற்றிலிருந்து சென்ருல், கிழக்கே 6 கல் தொலைவில் உள்ளது.

தலவரலாறு : குரங்கினுல் பூசிக்கப் பெற்றுக் காவிரியின் வடகரையில் இருப்பதனுல், இது வடகுரங்காடு துறை என்னும் பெயர் பெற்றது. வாலி வழிபட்டுப் பேறு பெற்ற தலம். "கோலமா மலரொடு தூபமும் சாந்தமும் கொண்டு போற்றி வாலியார் வழிபடப் பொருந்தினுர்" என்று ஞானசம்பந்தர் பாடியிருத்தல் காணலாம். இறைவன். அழகுசடைமுடிநாதர். இறைவி அழகு சடை முடியம்மை.

கல்வெட்டுக்கள் : இக்கோயிலில் கோப்பர கேசரி வர்மன், முதலாம் இராசராச சோழன், முதலாம் இராஜேந்திர சோழன், மூன்ரும் குலோத்துங்க சோழன், விக்கிரம பாண்டிய தேவன் ஆகியோர் காலத்துப் பொறிக்கப் பெற்ற கல்வெட்டுக்கள் இருக்கின்றன. இக்கோயிலின் திருநடை மாளிகைத் திருப்பணி எழுபத்தொன்பது வளநாட்டுப் பெரிய நாட்டாரும், பதினெண் விஷயத்தாரும் வரி கொடுத்துக் கட்டிய தென்னும் செய்தி, கல் வெட்டினுல் அறியப் பெறுகின்றது.

50. திருப்பழனம்

இருப்பிடம் : இது திருவையாற்றிற்குக் கிழக்கே 2 கல் தொலைவில் உள்ளது.

தலவரலாறு : இது திருவையாற்று சப்த ஸ்தானத் தலங்களுள் ஒன்று. அப்பூதிஅடிகள் அவதாரத் தலம் ஆகிய திங்களூர் இதற்கு அண்மையில் உள்ளது. அதனால் இங்கு அப்பர் சுவாமிகள் இறைவனைப் பாடி வழிபட்ட போது 'அஞ்சிப் போய்க் கலிமெலிய அழல் ஓம்பும் அப்பூதி' எனச் சிறப்பித்து அவரைக் குறிப்பிட்டருளினர். உயிர்நீத்த மூத்த திருநாவுக்கரசு உயிர் பெற்று எழும்படி, நாவுக்கரசர் 'ஒன்று கொலாம்' எனத் தொடங்கும் விடந்தீர்த்தபதிகம் பாடிய தலம் இது. இறைவன் ஆபத் சகாயர். இறைவி பெரிய நாயகி.

கல்வெட்டுக்கள் : முதற் பராந்தகன், முதலாம் இராஜராஜ சோழன், மூன்றும் குலோத்துங்கன் ஆகிய அரசர்களின் கல்வெட்டுக்கள் 29 படியெடுக்கப்பட்டுள்ளன. இவற்றால் அவர்கள் இக்கோயிலுக்குச் செய்த பலவகைத் தானங்களைப் பற்றிய செய்திகள் புலனாகின்றன.

51. திருவையாறு

இருப்பிடம் : தஞ்சாவூர்க்கு வடக்கு 7 கல் தொலைவில் கும்பகோணம் செல்லும் சாலையில் உள்ளது.

தலவரலாறு : வடவாறு வெண்ணாறு வெட்டாறு குடமுருட்டி காவிரி என்னும் ஐந்து ஆறுகளை யுடையது ஆதலால், ஐயாறு எனப் பெயர் பெற்றது இத்தலம். இதனைப் பஞ்ச நதம் எனவும் வழங்குவர். இறைவன் ஐயாறப்பர், பஞ்சநதீசுவரர், பிரணதார்த்திஹரர். இறைவி அறம் வளர்த்த நாயகி : தர்ம சம்வர்த்தினி. சமயகுரவர்கள் நால்வரும் பாடியது. "நந்தியருள் பெற்ற நன்னகர்" என்று சேக்கிழார் சுவாமிகள் இத்தலத்தினைச் சிறப்பித்துள்ளார். கடலரசன் இங்கு வந்து ஐயாறப்பரைப் பூசித்துப் பேறு பெற்றான். இந்திரன், வாலி, திருமகள் ஆகியோர் இத்தலத்தில் பூசித்தனர். திருமகளுக்குக் கோயிலின் இரண்டாம் பிராகாரத்தில் தனிக்கோயில் உள்ளது. அப்பர் கயிலைக் காட்சி பெற்ற தலம். இயமனைத் தண்டித்து, ஓர் அந்தணச் சிறுவனைக் காத்தருளிய ஆட்கொண்டார் சந்நிதியும், சுந்தரர் இங்கு வந்த பொழுது காவிரியில் வெள்ளப் பெருக்கு மிகுதிப் பட்டிருக்க, அவர் 'ஐயாறு உடைய அடிகளோ!' என்று பதிகம் பாடிய அளவில், காவிரியை வழிவிடுமாறு செய்து, தாம் இருப்பதனைக் குரல் கொடுத்துக் காட்டிய 'ஓலம் இட்ட விநாயகர்' சந்நிதியும் இங்கே யுள்ளன. காசிக்குச் சென்ற அருச்சகர் பொருட்டு, இறைவன் அவர் வடிவில் வந்து, தம்மைத் தாமே பூசித்துக் கொண்டு சிவபூசை செய்யும் செந்நெறியினை

உலகுக்கு உணர்த்திய தலம் இது. இதனை "ஐயாறதனிற் சைவன் ஆகியும்" என மணிவாசகர் குறிப்பிட்டிருத்தல் காண லாம். இதற்கு 18 தேவாரப் பதிகங்கள் உள்ளன. பங்குனித் திருவிழாவும், சித்திரைப் பெருந்திருவிழாவும் இங்கு மிக்க சிறப்புடையனவாகும். ஏழூர்விழா அல்லது சப்தஸ்தானத் திரு விழா சித்திரையில் நிகழும்.

இக்கோயில் திருத்தருமபுர ஆதீனம் கயிலைக் குருமகா சந்நிதானம அவர்களின் அருளாட்சியில் இருந்து வருகின்றது.

கல்வெட்டுக்கள் : கிழக்குக் கோபுரம் விக்கிரம சோழன் கட்டியது. மேலக் கோபுரமும், முதற் பிராகாரமும், திருநட மாளிகைப் பத்தியும், ஐந்தாம் பிராகாரத்தின் தெற்கு வாசலில் சூரிய புட்காணித் திருக்குளமும், மூன்றும் பிராகாரத்தில் தெற் குக் கோபுரமும் ஆனையப்ப பிள்ளை, அவர் தம்பி வைத்திய நாத பிள்ளை என்பவர்களால் கட்டப் பெற்றன. அச்சுதப்ப நாயக்கர் பூசப்படித்துறை மண்டபம் கட்டினார். இங்குள்ள தென்கயிலைக் கோயிலை முதலாம் இராஜேந்திரனின் (கி. பி. 1014-1042) மனைவியாகிய பஞ்சவன் மாதேவியும், உலக மாதேவீச்சரம் கோயிலை இராச ராச சோழன் (கி. பி. 985-1014) மனைவி யாகிய உலகமாதேவியும் கட்டினர். இப்போதுள்ள அம்மன் கோயிலைத் தேவகோட்டை உ. ராம சுப. சேவு. மெய்யப்பச் செட்டியார் அவர்கள் கட்டித் திருப்பணி செய்தனர்.

52. திரு நெய்த்தானம்

இருப்பிடம் : இந்தத் தலம் திருவையாற்றிற்கு மேற்கே ஒரு கல் தொலைவில் உள்ளது.

தலவரலாறு : திருவையாற்று ஏழூர் (சப்தஸ்தான் க்ஷேத் திரம்) என்னும் தலங்களுள் இஃது ஏழாவது தலம் ஆகும். இங்கே கலைமகள் இறைவனை வழிபட்டுப் பேறு பெற்றாள். இறைவன். நெய்யாடியப்பர், இறைவி. பாலாம்பிகை. 'இள மங்கை யம்மை' எனத் தேவாரம் குறிப்பிடுகின்றது. தீர்த்தம் காவிரி. கிழக்குப் பார்த்த சந்நிதி. இத்தலம் இப்போது 'தில்லைஸ் தானம்' என மருவி வழங்குகின்றது. வடமொழியில் 'கிருதஸ்தானம்' என்பர். 'நெய்யாடியப்பர்' என்னும் பெயருக்கு ஏற்ப, இங்கே இறைவனுக்குப் பசுநெய் அபிஷேகிப்பது வழக்கம்.

கல்வெட்டுக்கள் : இங்கே 51 கல்வெட்டுக்கள் படியெடுக்கப் பட்டுள்ளன. கோயில் காரியத் தலைவன் காமக் கோட நல் லூர் ஆயன் என்றும், முதலாம் பராந்தக சோழனின் மாமி யார் முள்ளூர் நங்கை என்றும் கல்வெட்டுக்களால் அறியப்படு கின்றன. செம்பியன் ஈக்காட்டு வேளாணுண பரிசை கிழான்

மறவன் நக்கன், கூத்தன் அருள்மொழியான வானவன் பேரரையன், சாமரகேசரி தெரிஞ்ச கைக்கோளர், விக்ரம சிங்க தெரிஞ்ச கைக்கோளர், நங்கை கூத்தப் பெருமானுர், வளவர் கோயான் பேரரையன், செம்பியன் தமிழ்வேளான் விக்கணன் மனைவி கடம்பமாதேவி, கண்ணாங்குடி நாராயணன் ஆகிய பற்பலர் இக்கோயிலுக்குத் தானங்கள் செய்துள்ளனர்.

53. திருப்பெரும்புலியூர்

இருப்பிடம்: இது திருவையாற்றுக்கு வடமேற்கே சுமார் 2 கல் தொலைவில் உள்ளது.

தலவரலாறு: இத்தலத்திற் புலிக்கால் முனிவர் இறைவனைப் பூஜித்து அருள் பெற்றனர். ஆதலின் இப்பெயர் பெற்றது. 'புலியூர்' என்னும் பெயருடையு தலங்கள் பல தமிழ்நாட்டில் இருப்பதனுல், வேறுபாடு அறிதற் பொருட்டு இது பெரும்புலியூர் என வழங்கப் பெற்றது. பெரும் பற்றப் புலியூர் (சிதம்பரம்), எருக்கத்தம் புலியூர் (இராசேந்திர பட்டினம்), ஓமாம்புலியூர், பாதிரிப் புலியூர் எனப் பிற தலங்களும் வேறுபாடு தெரியும் வகையில் வழங்கப்படுதல் காணலாம். இறைவன் புலியூர் நாதர் (வியாக்ரபுரீசுவரர்) இறைவி சௌந்தரிய நாயகி.

54. திருமழபாடி

இருப்பிடம்: இது திருவையாற்றிற்கு வடமேற்கே சுமார் நான்கு கல் தொலைவில், காவிரியின் வடகரையில் உள்ளது.

தலவரலாறு: சேரர் கிளையினராகிய மழவர்கள் என்போர் பாடி (பாசறை) செய்து கொண்டு தங்கி வாழ்ந்து வந்தமையால், மழவர்பாடி எனப் பெயர் பெற்று மழபாடி என மருவி வழங்கி வருகின்றது. இறைவனின் மழு ஆயுதம் நிருத்தம் செய்து ஆடிய தலம் ஆதலால் மழுவாடி ஆயிற்று எனவும் கூறுவர். இறைவன் வயிரத்தூண் நாதர். இறைவி அழகம்மை. பிரமன் உலகத்தில் இருந்த சிவலிங்கத்தைப் புருஷா மிருகம் இங்குக் கொண்டு வந்து எழுந்தருளுவித்தது. அதை மீளவும் கொண்டு போகப் பிரமதேவர், அதைப் பெரிதும் முயன்று பெயர்த்தெடுக்க முற்பட்டார். அதைப் பெயர்த்து எடுக்க முடியாமையால், 'இது வயிரத் தூணோ' என்று கூறி வியந்து நின்ருர். ஆதலின் இங்கு இறைவனுககு வயிரத் தூண் நாதர் எனப் பெயர் வழங்குவதாயிற்று. 'மழபாடி வயிரத் தூணே' என்று தேவாரப் பாடல்களிற் பயின்று வந்துள்ளது.

இத்தலத்தில் இந்திரன், திருமால் முதலினோர் வழிபட்டுப் பேறு பெற்றனர். திருநந்தி தேவர் திருவையாற்றில் இருந்து

எழுந்தருளி, இங்கே சுயசை அம்மையாரைத் திருமணம் செய்து கொண்டார். இவ் விழா இங்கு ஒவ்வோர் ஆண்டும் பங்குனி உத்திரத் திருநாளிற் கொண்டாடப் பெறும். சுந்தரமூர்த்தி சுவாமிகள் திருவாலம் பொழிலில் வந்து தங்கியிருந்த பொழுது, 'மழபாடிக்கு வர மறந்தனையோ ?' என இறைவன் அவர்தம் கனவில தோன்றி வினவியருளினர். உடனே சுந்தரர் 'பொன்னர் மேனியனே' எனத் தொடங்கும் பதிகம் பாடி, இத்தலத்தை வழிபட்டனர். மூவர் பாடலும் பெற்றது.

கல்வெட்டுக்கள்: முதலாம் பராந்தகன், முதலாம் இராசராசன், இராசாதிராசன், விசயராசேந்திர சோழன், முதலாம் குலோத்துங்கன், விக்கிரமசோழன், மாறவர்மன் பராக்கிரம பாண்டியன், சுந்தர பாண்டிய தேவன், ஹொய்சள வீரராமநாதன், வீரசோமீசுவர நாதன், விசய நகரப் பிரதாபராயர் காலத்துக் கல்வெட்டுக்கள் இக்கோயிலிற்காணப்படுகின்றன. இராசராசன் காலத்தில் இக்கோயில் கற்றளியாக்கப் பெற்றது. இதன் விமானத் திருப்பணியைச் செய்வித்தவர், நாமசிம்மதேவ தண்ட நாயக்கன். இக்கோயிலில் இறைவனின் 'பொன்னர் திருமேனி'யைச் செப்புத்தராவால் எழுந்தருளுவித்தவர், அணிமுரி நாடாழ்வான் (கி. பி. 1022). நந்தி தேவர் படிமம் எழுந்தருளுவித்தவர், செந்தாமரைக் கண்ணன் ஆன நந்தி கேசுவர நம்பி. பிட்சாடனர் திருவுருவம், தீன சிந்தாமணி என்பவரின் தந்தையால் அமைக்கப் பட்டது, எதிரிலி சோழ மூவேந்த வேளார், இக்கோயில் மண்டபங்கள் சிலவற்றை விரிவு படுத்திக்கட்டினர்.

55. திருப்பழுவூர்

இருப்பிடம்: திருவையாற்றில் இருந்து அரியலூருக்குப் போகும் வழியில், 10 கல் தொலைவில் உள்ளது.

தலவரலாறு: இது 'பழு' என்னும் ஆலமரத்தைத் தல விருட்சமாக உடைமையால் 'பழுவூர்' எனப் பெயர் பெற்றது. இது மேலப் பழுவூர், கீழப் பழுவூர் என்னும் இரு பகுதிகளாக இருக்கின்றது. இவற்றுள் கீழப் பழுவூரே தேவாரம் பெற்ற தலம் ஆகும். பரசுராமர் தம் தாயைக் கொன்ற பாவமும் பழியும் நீங்கப் பூசித்த தலம். சம்பந்தர் பாடல். இறைவன் வடமூல நாதர். இறைவி அருந்தவநாயகி சோழர்களின் உறவினராகிய சேரர் கிளையினரைப் பற்றிய கல்வெட்டுக்கள் மேலப் பழுவூரில் இருப்பதனல் அவர்கள் இங்கு வந்த காலத்தில் இக்கோயிலின் பூசனைக்காக மலையாள அந்தணர்களை உடன் கொண்டு வந்தனர். இதனை "அந்தணர்கள் ஆன மலையாளர் அவ ரேத்தும் பந்தம் மலிகின்ற பழுவூர்..." என வரும் ஞான சம்பந்தர் பாடல் கொண்டு உணரலாம்.

கல்வெட்டு: இங்கே 23 கல் வெட்டுக்கள் உள்ளன. சோழ அரசர்கள் பலவகைத் தானங்களைச் செய்துள்ளனர். விஜய நகரத்தார் காலத்தில் மல்லிகார்ச்சுனராயன் சில நிலங்களுக்கு வரிவிலக்கு அளித்தார். மல்லரச தண்ட நாயகர் ஓர் ஊரைச் சர்வமானியம் ஆகக் கொடுத்தார். இரவி மணியன் என்பார் இக்கோயிலுக்கு ஒரு மண்டபம் கட்டிக் கொடுத்துள்ளார்.

56. திருக்கானூர்

இருப்பிடம்: இது தஞ்சைக்கு அருகில் உள்ள பூதலூர் நிலையத்தில் இருந்து வடக்கே 2 கல் தொலைவிலுள்ளது.

தலவரலாறு: உமாதேவியார் சிவயோகத்து எழுந்தருளியிருந்த போது இறைவன் செந்தீ வண்ணராகத் திருவுருக் காட்டிய தலம் இதனை அப்பர் சுவாமிகள் "கானூரிற் பரமனுய பரஞ்சுடர்" எனக் குறிப்பிட்டுள்ளார்கள். இறைவன் செம்மேனிநாதர். இறைவி சிவயோக நாயகி.

கல்வெட்டு: இது கல்வெட்டிற் 'கரிகால சோழ சதுர்வேதிமங்கலத்துத் திருக்கானூர்' என்று குறிக்கப்படுகின்றது. இராசாதிராசன் காலத்துக் கல்வெட்டு ஒன்றில், கரிகாற் சோழீசுரமுடைய மகா தேவர் கோயில் என ஒன்று இருந்தமைபுலனுகின்றது. மாறவர்மன் குலசேகர தேவன் (கி. பி. 1268–1308) என்னும் பாண்டியன், இக்கோயிலில் சில நிபந்தங்கள் அமைத்திருக்கின்றான்.

57. திரு அன்பில் ஆலந்துறை

இருப்பிடம்: இது கொள்ளிடக் கரையில் உள்ளது.

தலவரலாறு: 'அன்பில்' என்பது தலத்தின் பெயர். 'ஆலந்துறை' என்பது கோயிலின் பெயர். பிரமதேவர், வாகீசமுனிவர் முதலியோர் பூசித்த தலம். சம்பந்தர் இத்தலத்துக்கு எழுந்தருளிய போது, கொள்ளிடம் நீர்ப் பெருக்காய் இருந்ததனால், இக்கரையில் இருந்தே பதிகம் பாடினர் அதனை இறைவன் ஆணையின் வண்ணம் விநாயகர் செவி சாய்த்துக் கேட்டனர் என்பது வரலாறு. இதற்கு ஏற்பத் தல விநாயகர் திருவுருவம் முடிவளைத்துச் செவி சாய்த்துக் கேட்கின்ற பாவனையில் இருக்கின்றது. இறைவன் சத்திய வாகீசர். இறைவி சௌந்தர நாயகி' தீர்த்தம் கொள்ளிட நதி.

கல்வெட்டுக்கள்: இத்தலத்தைப் பற்றியனவாக 13 உள்ளன. மாறவர்மன் குலசேகர பாண்டியன், மூன்றும் இராஜேந்திர சோழன், ஹொய்சள வீரராமநாத தேவர் முதலியவர்கள் நிபந்தங்கள் பல அமைத்த செய்திகள் இவற்றால் அறியப்படுகின்றன.

58. திருமாந்துறை

இருப்பிடம்: இது லால்குடி (திருத்தவத்துறை) நிலையத்திற்கு மேற்கில் மூன்று கல் தொலைவில் உள்ளது.

தலவரலாறு: இது மருதவானவரும் (மருத்துக்களும்), கண்ணுவ முனிவரும் பூசித்துப் பேறு பெற்ற தலம். 'மாந்துறை' என்னும் வைப்புத்தலம் ஒன்று, காவிரியின் தென் கரையில் இருப்பதனால், இது வடகரை மாந்துறை என வழங்கப் பெறும். இதனை 'ஆம்பிரவனம்' எனவட மொழியாளர் வழங்குவர். இறைவன் மாந்துறைநாதர் இறைவி அழகம்மை.

கல்வெட்டுக்கள்: இத் தலத்துக் கோயிலில் முதலாம் இராச ராச சோழனின் 15, 16-ம் ஆண்டுக் கல்வெட்டுக்கள் இரண்டு படியெடுக்கப் பெற்றுள்ளன. முதற்கல்வெட்டு வறுமையிற் குடிபெயர்ந்த மக்களை வரி நீக்கிக் குடியேற வசதி செய்தமை பற்றியும், இரண்டாம் கல்வெட்டு கோயிலுக்கு நந்தவனம் அமைப்பதற்காகக் கொடுத்த நிலத்தின் வரியைத் தள்ளுபடி செய்தமை பற்றியும் கூறுகின்றது.

59. திருப்பாற்றுறை

இருப்பிடம்: இது திருவானைக்காவில் இருந்து கிழக்கே ஐந்து கல் தொலைவில் உள்ளது.

தலவரலாறு: மார்க்கண்டேய முனிவர் இங்குப் போந்தபோது சிவபூசைக்குப் பால் இல்லாமையால் வருந்தினர். சிவபெருமான் அருளால் பால் பெருகிக் கிடைத்துச் சிவபூசை செய்ய அவருக்குப் பயன்பட்டது. ஆதலின் இத்தலம் பாற்றுறை எனப் பெயர் பெற்றது. இறைவன் திருமூல நாதர் இறைவி மோகநாயகி, மேகலாம்பிகை.

கல்வெட்டுக்கள்: இங்கே 16 கல்வெட்டுக்கள் படியெடுக்கப்பட்டுள்ளன. அவற்றுள் திருநாவுக்கரசர் திருமடம், ஆண்டார் எம்பிரானார் மடம், திருஞானசம்பந்தர் மடம், நாற்பத்தெண்ணாயிரவர் மடம், காக்கும் நாயகன் மடம் எனப் பலமடங்கள் இங்கு இருந்து வந்தமை புலனாகின்றது.

60. திரு ஆனைக்கா

இருப்பிடம்: ஸ்ரீரங்கம் நிலையத்திற்குக் கிழக்கே ½ கல் தொலைவில் உள்ளது. திருச்சிராப்பள்ளிக்கு அருகில் இருப்பது.

தலவரலாறு: யானை பூசித்துப் பேறுபெற்ற தலமாதலின், திருவானைக்கா என வழங்குவதாயிற்று. இது பஞ்சபூதத்

தலங்களுள், அப்பு ஸ்தலம். கருவறையில் சிவலிங்கத்தைச் சுற்றி எப்போதும் நீர் ஊறிக் கொண்டே யிருத்தல் காணலாம். ஆதலின் இறைவனுக்கு இங்கே நீர்த்திரள் நாதர் என்பது பெயர். "செழுநீர்த் திரளைச் சென்று ஆடினேனே" என்பது திருத்தாண்டகம். 'ஜம்பு' எனப்படும் வெண்ணாவல் மரத்தின் கீழ் இறைவன் எழுந்தருளி யிருப்பதனால், ஜம்புகேசுவரர் என்றும் சுவாமிக்குப் பெயர். அம்பிகை அகிலாண்ட நாயகி.

இக்கோயில் ஐந்து பிராகாரங்கள் கொண்டது. ஆயிரங் கால் மண்டபம் உண்டு. நான்காவது மதில் 'திருநீறிட்டான் திருமதில்' என வழங்கும், இறைவனே ஒரு சித்தராகத் தோன்றித் திருநீற்றைக் கூலியாகக் கொடுத்துக் கட்டுவித்த காரணத்தால், இம்மதிலுக்கு இப்பெயர் அமைந்தது இறைவி இங்குத் தவஞ்செய்து ஞானோபதேசம் பெற்றாள் ஆதலின் இது ஞானத் தலம் எனப்படும். இங்கு நாடோறும் அம்பிகையே இறைவனைப் பூசிப்பதனைக் காட்டும் முறையில், அருச்சகர் பெண் வேடம் தாங்கிப் பூசை புரிதல் காணலாம். முற்பிறப்பில் சிலந்தியாக இருந்து சிவபிரானை வழிபட்ட புண்ணியத்தால் சோழர் குலத்தில் மன்னனாகத் தோன்றிய கோச்செங்கட் சோழர் இக்கோயிலைக் கட்டுவித்தனர் என்பது வரலாறு. உறையூர் சோழன் காவிரியாற்றில் தவறவிட்ட மணியாரம் திருமஞ்சனக் குடத்தில் புக, அதனை அவ்வழியே அவ்வரசன் விரும்பியபடி தனக்கு ஆரமாக ஏற்றுக் கொண்டு அருள் புரிந்ததனால், இறைவனுக்கு "ஆரம் நீரோடு ஏந்தினான்' எனவும் ஒருபெயர் உண்டு. "ஆரம் நீரோடு ஏந்தினான் ஆனைக்காவு சேர்மினே" என்பது சம்பந்தர் தேவாரம்.

கல்வெட்டுக்கள்: இக் கோயிலில் 154 கல் வெட்டுக்கள் படியெடுக்கப் பெற்றுள்ளன. நீலகண்ட நாயக்கர் அம்மன் கோயிலின் முன்பு உள்ள ஸ்ரீ பசுபதீசுவரம் உடையாரை எழுந்தருளுவித்தார். சதாசிவ வாஜப்பைய யாஜி தீட்சிதர் உற்சவ மண்டபம் கட்டினார். மேலக் கோபுரம் ஆதித்ய தேவனது மகனான சந்தபேந்திரன் (கி.பி. 1435) கட்டியது. மும்முடி நிம்மரசர் வலம்புரி விநாயகரையும் முருகனையும் எழுந்தருளுவித்தார். ஹொய்சள வீரசோமீசுவரன் கிழக்கு எழுநிலைக் கோபுரம் அமைத்தான். அவனே தன் பாட்டன் பாட்டி நினைவாக வல்லாளேசுவரம், பதுமலீசுவரம் எடுப்பித்தான். தோப்பு ஒன்றுக்குச் 'சிலந்தியைச் சோழன் ஆக்கினான்' என்றும், பட்டன் ஒருவனுக்கு 'என் ஆனைக்கன்று' என்றும் பெயர் இருந்ததைக் கல் வெட்டுக்கள் குறிப்பிடுகின்றன. விஜயரங்க சொக்கநாத நாயகர் அவர்களின் நாடகசாலை ஆசிரியர் வைத்தியப்ப ஐயா ஜம்பு தீர்த்த மண்டபத்திற்குப் படித்துறைகள் அமைத்தார்.

61. திருப்பைஞ்ஞீலி

இருப்பிடம்: இது விழுப்புரம்-திருச்சிராப்பள்ளி இருப்புப் பாதையில் பிட்சாண்டார் கோயில் நிலையத்தில் இறங்கி, கொச்சியம் வழியாகச் செல்லுதற்கு உரியது. மண்ணச்சநல்லூருக்கு மேற்கே 1½ கல்.

தலவரலாறு: பசுமையான வாழை (பைஞ்ஞீலி) யினைத் தலமரமாக உடைமையால், பைஞ்ஞீலி என இத்தலத்திற்குப் பெயர் அமைந்தது. திருநாவுக்கரசர் பொருட்டு இறைவன் பொதி சோறு கொணர்ந்து கொடுத்தருளிய தலம். அத்தடாகமும் தோட்டமும் இத்தலத்திற்குத் தெற்கே ¾ கல் தொலைவில் உள்ளது. பைஞ்ஞீலி என்பது நீலிச்செடியையும் குறிக்கும் ஆதலின் நீலிவனம் என்றும் இத்தலத்திற்குப் பெயர் உண்டு. இத்தலத்தில் நவக்கிரகங்கள், விக்கிரகங்களுக்குப் பதிலாகத் தீபங்களால் வழிபடப் படுகின்றன. இயமனுக்குத் தனிச் சந்நிதி இறைவன் திரு நீலகண்டர். இறைவி நீள்நெடுங்கண்ணி (விசாலாட்சி).

கல்வெட்டுக்கள்: முதலாம் இராசேந்திர சோழன், முதலாம் இராசாதிராசன், இராசராச தேவன், திரிபுவனச் சக்கரவர்த்தி கோனேரின்மை கொண்டான் ஆகியோர் கல்வெட்டுக்கள் இங்கேயுள்ளன. நளவெண்பாப் பாடிய புகழேந்திப் புலவரை ஆதரித்த சந்திரன் சுவர்க்கியின் நாடு, மள்ளுவ நாடு அன்று, வள்ளுவ நாடு என்பது, இங்கேயுள்ள கோனேரின்மை கொண்டான் கல்வெட்டு ஒன்றினால் அறியப்படுகின்றது.

62. திருப்பாச்சில்ஆச்சிராமம்

இருப்பிடம்: திருச்சி—விழுப்புரம் குறுக்குப் பாதையில் உத்தமர் கோயில் நிலையத்தில் இருந்து 4½ கல் தொலைவில் உள்ளது

தலவரலாறு: பாச்சில் கூற்றத்து ஆச்சிராமம் ஆதலின், பாச்சில் ஆச்சிரமம் என வழங்கப் படுகின்றது கொல்லி மழவன் புதல்விக்கு உள்ள முயலகன் என்னும் நோயைத் திருஞானசம்பந்தர் நீக்கியருளிய தலம். எனவே இங்குள்ள நடராஜர் திருவுருவிலும் முயலகன் உருவம் இல்லை. திருவடியின் கீழ்அதற்குப் பதிலாக ஒரு பெரும் பாம்பின் உருவமே யுள்ளது. சுந்தரர் 'இவரலது இல்லையோ பிரானார்' என இகழ்ந்து பேசிப் பொருள் மிகப் பெற்ற தலம். பார்வதி பிரமன் இலக்குமி அகத்தியர் முதலினோர் வழிபட்ட மாண்புடையது. இறைவன் மாற்றறிவரதர் சமீவனேசுவரர். இறைவி பாலசௌந்தரி தீர்த்தம் அன்னமாம் பொய்கை, சிலம்புநதி; தலமரம் வன்னி

கல்வெட்டு: ஹொய்சள மன்னன் வீரசோமேசுவரன் காலத்துக் கல்வெட்டு ஒன்று, இக் கோயிலுக்குப் பதினாயிரம் கலம் அரிசி கிடைத்துவந்த செய்தியை அறிவிக்கின்றது.

63. திரு ஈங்கோய்மலை

இருப்பிடம்: திருச்சி-ஈரோடு இருப்புப் பாதையிலுள்ள குளித்தலை நிலையத்தில் இறங்கி, வடக்கே அகண்ட காவிரி யாற்றைக் கடந்தால் இத்தலத்தை அடையலாம்.

தலவரலாறு: அகத்தியர் ஈயின்வடிவம் கொண்டு வழி பட்டுப் பேறு பெற்ற தலம். ஆதலின் ஈங்கோய்மலை எனப் பெயர் பெற்றது. திருலிங்க நாதமலை என மருவி வழங்குகின்றது. கோயில் ஒரு சிறிய குன்றின் மேல் அமைந்துள்ளது. காவிரி யின் தென்கரையில் உள்ள கடம்பந்துறையைக் காலையிலும். திருவாட்போக்கியை நண்பகலிலும், ஈங்கோய்மலையை மாலை யிலும் ஒரே நாளில் தரிசித்தால் மிகவும் சிறப்பும் பயனும் விளையும். ''காலைக் கடம்பர் மத்தியானச் சொக்கர் மாலைத் திருலிங்கநாதர்'' என்பது பழமொழி. இறைவன் மரகதாசலர் இறைவி மரகதவல்லி அமிர்த தீர்த்தம் பதினோராம் திருமுறை யில் உள்ள 'திருஈங்கோய்மலை எழுபது' என்னும் நூல், நக்கீரராற் பாடப் பெற்ற சிறந்த நூல் ஆகும்.

கல்வெட்டு: இக்கோயில் ஆளுடைய பிள்ளையார் திருநாவுக் கரசு தேவர் ஆலாலசுந்தரப் பெருமான் நக்கீரதேவர் ஆகியோர்க் குத் திருப்படி மாற்றுக்கும் வியஞ்சனத்துக்கும், வடகரை இரா ஜராஜ வளநாட்டு மலை ஸ்ரீஜயங் கொண்ட சோழச் சதுர்வேதி மங்கலத்துப் பெருங்குடி மகாசபையார் நிலம் விற்றுக் கொடுத் தனர்.

—:●:—

சோழ நாட்டுத் தலங்கள்

காவிரிக்கு வடகரை

31. திருஓமாம்புலியூர்

திருஞானசம்பந்த சுவாமிகள்

பண் – புறநீர்மை 3–ம் திருமுறை

திருச்சிற்றம்பலம்

பூங்கொடி மடவாள் உமையொரு பாகம்
புரிதரு சடை முடி யடிகள்
வீங்கிருள் நட்டம் ஆடுமெம் விகிர்தர்
விருப்பொடும் உறைவிடம் வினவில்
தேங்கமழ் பொழிலிற் செழுமலர் கோதிச்
செறிதரு வண்டிசை பாடும்
ஓங்கிய புகழார் ஓமமாம்புலியூர்
உடையவர் வடதளி யதுவே.

சம்பரற் கருளிச் சலந்தரன் வீயத்
தழலுமிழ் சக்கரம் படைத்த
எம்பெரு மானுர் இமையவ ரேத்த
இனிதினங் குறைவிடம் வினவில்
அம்பரமாகி யழலுமிழ் புகையின்
ஆகுதி யால்மழை பொழியும்
உம்பர்க ளேத்தும் ஓமமாம்புலியூர்
உடையவர் வடதளி யதுவே. 2

பாங்குடைத் தவத்துப் பகீரதற் கருளிப்
படர்சடைக் கரந்த நீர்க் கங்கை
தாங்குதல் தவிர்த்துத் தராதலத் திழித்த
தத்துவன் உறைவிடம் வினவில்
ஆங்கெரி மூன்றும் அமர்ந்துட னிருந்த
அங்கையால் ஆகுதி வேட்கும்
ஓகிய மறையோர் ஓமமாம் புலியூர்
உடையவர் வடதளி யதுவே. 3

புற்றர வணிந்து நீறுமெய் பூசிப
　　பூதங்கள் சூழ்தர வூரூர்
பெற்றமொன் றேறிப் பெய்பலி கொள்ளும்
　　பிரானவன் உறைவிடம் வினவில்
கற்றநால் வேதம் அங்கமோரா றுங்
　　கருத்தினார் அருத்தியால் தெரியும்
உற்றபல் புகழார் ஓமமாம் புலியூர்
　　உடையவர் வடதளி யதுவே. 4

நிலத்தவர் வானம் ஆள்பவர் கீழோர்
　　துயர்கெட நெடியமாற் கருளால்
அலைத்தவல் லசுரர் ஆசற வாழி
　　யளித்தவன் உறைவிடம் வினவில்
சலத்தினாற் பொருள்கள் வேண்டுதல் செய்யாத்
　　தன்மையார் நன்மையால் மிக்க
உலப்பில்பல் புகழார் ஓமமாம் புலியூர்
　　உடையவர் வடதளி யதுவே. 5

மணந்திகழ் திசைகள் எட்டும் ஏழிசையும்
　　மலியுமா றங்கம் ஐவேள்வி
இணைந்தநால் வேதம் மூன்றெரி யிரண்டு
　　பிறப்பென வொருமையா லுணரும்
குணங்களும் அவற்றின் கொள்பொருள் குற்ற
　　மற்றவை யுற்றது மெல்லாம்
உணர்ந்தவர் வாழும் ஓமமாம் புலியூர்
　　உடையவர் வடதளி யதுவே. 6-7

தலையொரு பத்துந் தடக்கைய திரட்டி
　　தானுடை அரக்கனொண் கயிலை
அலைவது செய்த அவன்திறல் கெடுத்த
　　ஆதியார் உறைவிடம் வினவில்
மலையென வோங்கும் மாளிகை நிலவும்
　　மாமதில் மாற்றல ரென்றும்
உலவுபல் புகழார் ஓமமாம் புலியூர்
　　உடையவர் வடதளி யதுவே. 8

கள்ளவிழ் மலர்மே லிருந்தவன் கரியோ
　　னென்றிவர் காண்பரி தாய
ஒள்ளெரி யுருவர் உமையவ ளோடும்
　　உகந்தினி துறைவிடம் வினவில்

பள்ளநீர் வாளை பாய்தரு கழனிப்
பனிமலர்ச் சோலைசூ ழாலை
ஒள்ளிய புகழார் ஓமமாம் புலியூர்
உடையவர் வடதளி யதுவே. 9

தெள்ளிய ரல்லாத் தேரரோ டமணர்
தடுக்கொடு சீவரம் உடுக்கும்
கள்ளமார் மனத்துக் கலதிகட் கருளாக்
கடவுளார் உறைவிடம் வினவில்
நள்ளிருள் யாமம் நான்மறை தெரிந்து
நலந்திகழ் மூன்றெரி யோம்பும்
ஒள்ளியார் வாழும் ஓமமாம் புலியூர்
உடையவர் வடதளி யதுவே. 10

விளைதரு வயலுள் வெயில்செறி பவள
மேதிகள் மேய்புலத் திடறி
ஒளிதர மல்கும் ஓமமாம்புலியூர்
உடையவர் வடதளி யரனைக்
களிதரு நிவப்பிற் காண்டகு செல்வக்
காழியுள் ஞானசம் பந்தன்
அளிதரு பாடல் பத்தும் வல்லார்கள்
அமரலோ கத்திருப் பாரே. 11

திருச்சிற்றம்பலம்

திருநாவுக்கரசு சுவாமிகள்

திருத்தாண்டகம் 6-ம் திருமுறை

திருச்சிற்றம்பலம்

ஆராரும் மூவிலைவேல் அங்கை யானை
அலைகடல்நஞ் சயின்றானை அமர ரேத்தும்
ஏராரும் மதிபொதியுஞ் சடையி னானை
எழுபிறப்பும் எனையாளா வுடையான் தன்னை
ஊராரும் படநாகம் ஆட்டு வானை
உயர்புகழ்சேர் தரும்ஓமாம் புலியூர் மன்னுஞ்
சீராரும் வடதளியெஞ் செல்வன் தன்னைச்
சேராதே திகைத்துநாள் செலுத்தி னேனே. 1

ஆதியான் அரிஅயனென் றறிய வொண்ணு
அமரர்தொழுங் கழலானை யமலன் தன்னைச்
சோதிமதி கலைதொலையத் தக்க னெச்சன்
சுடரிரவி அயிலெயிறு தொலைவித்தானை
ஓதிமிக அந்தணர்கள் எரிமூன் றோம்பும்
உயர்புகழார் தருமோமாம் புலியூர் மன்னுந்
தீதில்திரு வடதளியெஞ் செல்வன் தன்னைச்
சேராதே திகைத்துநாள் செலுத்தி னேனே. 2

வருமிக்க மதயானை யுரித்தான் தன்னை
வானவர்கோன் தோளனைத்தும் மடிவித் தானைத்
தருமிக்க குழலுமையாள் பாகன் தன்னைச்
சங்கரனெம் பெருமானைத் தரணி தன்மேல்
உருமிக்க மணிமாடம் நிலாவு வீதி
உத்தமர்வாழ் தருமோமாம் புலியூர் மன்னுந்
திருமிக்க வடதளியெஞ் செல்வன் தன்னைச்
சேராதே திகைத்துநாள் செலுத்தி னேனே 3

அன்றினவர் புரமூன்றும் பொடியாய் வேவ
அழல்விழித்த கண்ணானை அமரர் கோனை
வென்றிமிகு காலனுயிர் பொன்றி வீழ
விளங்குதிரு வடியெடுத்த விகிர்தன் தன்னை
ஒன்றியசீர் இருபிறப்பர் முத்தீ யோம்பும்
உயர்புகழ்நான் மறையோமாம் புலியூர் நாளுந்
தென்றல்மலி வடதளியெஞ் செல்வன் தன்னைச்
சேராதே திகைத்துநாள் செலுத்தி னேனே. 4

பாங்குடைய எழிலங்கி யருச்சனைமுன் விரும்பப்
பரிந்தவனுக் கருள்செய்த பரமன் தன்னைப்
பாங்கிலா நரகதனில் தொண்டரானார்
பாராத வகைபண்ண வல்லான்தன்னை
ஓங்கு மதில் புடைதழுவும் எழிலோமாம் புலியூர்
உயர்புகழந் தணரேத்த வுலகர்க் கென்றுந்
திங்கில்திரு வடதளியெஞ் செல்வன் தன்னைச்
சேராதே திகைத்துநாள் செலுத்தி னேனே. 5

அருந்தவத்தோர் தொழுதேத்தும் அம்மான் தன்னை
ஆராதஇன்னமுதை அடியார் தம்மேல்
வருந்துயரந் தவிர்ப்பானை உமையாள் நங்கை
மணவாள நம்பியையென் மருந்து தன்னைப்
பொருந்துபுனல் தழுவுவயல் நிலவு துங்கப்
பொழில்கெழுவு தருமோமாம் புலியூர் நாளுந்
திருந்துதிரு வடதளியெஞ் செல்வன் தன்னைச்
சேராதே திகைத்துநாள் செலுத்தி னேனே. 6

மலையானை வருமலையன் றுரிசெய் தானை
மறையானை மறையாலும் அறிய வொண்ணுக்
கலையானைக் கலையாருங் கையி னானைக்
கடிவானை அடியார்கள் துயர மெல்லாம்
உலையாத அந்தணர்கள் வாழு மோமாம்
புலியூரெம் உத்தமனைப் புரம்மூன் றெய்த
சிலையானை வடதளியெஞ் செல்வன்தன்னைச்
சேராதே திகைத்துநாள் செலுத்தி னேனே. 7

சேர்ந்தோடு மணிக்கங்கை சூடி னானைச்
செழுமதியும் படஅரவும் உடன்வைத் தானைச்
சார்ந்தோர்கட் கினியானைத் தன்னொப் பில்லாத்
தழலுருவைத் தலைமகனைத் தகைநால் வேதம்
ஓர்ந்தோதிப் பயில்வார்வாழ் தருமோமாம் புலியூர்
உள்ளானைக் கள்ளாத அடியார் நெஞ்சில்
சேர்ந்தானை வடதளியெஞ் செல்வன் தன்னைச்
சேராதே திகைத்துநாள் செலுத்தி னேனே. 8

வார்கெழுவு முலையுமையாள் வெருவ அன்று
மலையெடுத்த வாளரக்கன் தோளுந் தாளும்
ஏர்கெழுவு சிரம்பத்தும் இறுத்து மீண்டே
இன்னிசைகேட் டிருந்தானை இமையோர் கோனைப்
பார்கெழுவு புகழ்மறையோர் பயிலும் மாடப்
பைம்பொழில்சேர் தருமோமாம் புலியூர் மன்னுஞ்
சீர்கெழுவு வடதளியெஞ் செல்வன் தன்னைச்
சேராதே திகைத்துநாள் செலுத்தி னேனே. 9-10

திருச்சிற்றம்பலம்

32. திருக்கானட்டுமுள்ளூர்

சுந்தரமூர்த்தி நாயனர்

பண் – கொல்லிக் கௌவாணம் 7–ந் திருமுறை

திருச்சிற்றம்பலம்

வள்வாய மதிமிளிரும் வளர்சடையி னுனை
மறையவனை வாய்மொழியை வானவர்தங் கோனைப்
புள்வாயைக் கீண்டுலகம் விழுங்கிஉமிழ்ந் தானைப்
பொன்னிறத்தின் மும்புரிநூல் நான்முகத்தி னுனை
முள்வாய மடல்தழுவி முடத்தாழை ஈன்று
மொட்டலர்ந்து விரைநாறும் முருகுவிரி பொழில்சூழ்
கள்வாய கருங்குவளை கண்வளருங் கழனிக்
கானட்டு முள்ளூரிற் கண்டுதொழு தேனே. 1

ஒருமேக முகிலாகி ஒத்துலகந் தானுய்
ஊர்வனவும் நிற்பனவும் ஊழிகளுந் தானுய்ப்
பொருமேவு கடலாகிப் பூதங்கள் ஐந்தாய்ப்
புணர்ந்தவனைப் புண்ணியனைப் புரிசடையி னுனைத்
திருமேவு செல்வத்தார் தீமூன்றும் வளர்த்த
திருத்தக்க அந்தணர்கள் ஓதுநகர் எங்கும்
கருமேதி செந்தா மரைமேயுங் கழனிக்
கானட்டு முள்ளூரிற் கண்டுதொழு தேனே. 2

இரும்புயர்ந்த மூவிலைய சூலத்தி னுனை
இறையவனை மறையவனை எண்குணத்தி னுனைச்
சுரும்புயர்ந்த கொன்றையொடு தூமதியஞ் சூடும்
சடையானை விடையானைச் சோதியெனும் சுடரை
அரும்புயர்ந்த அரவிந்தத் தணிமலர்கள் ஏறி
அன்னங்கள் விளையாடும் அகன்றுறையின் அருகே
கரும்புயர்ந்து பெருஞ்செந்நெல் நெருங்கிவிளை கழனிக்
கானட்டு முள்ளூரிற் கண்டுதொழு தேனே. 3

பூளைபுனை கொன்றையொடு புரிசடையி னுனைப்
புனலாகி அனலாகிப் பூதங்கள் ஐந்தாய்
நாளைஇன்று நெருநலாய் ஆகாயம் ஆகி
ஞாயிருய் மதியமாய் நின்றஎம் பரனைப்

பாளைபடு பைங்கமுகின் சூழலிளந் தெங்கின்
படுமதஞ்செய் கொழுந்தேறல் வாய்மடுத்துப் பருகிக்
காளைவண்டு பாடமயில் ஆலும்வளர் சோலைக்
கானாட்டு முள்ளூரிற் கண்டுதொழு தேனே. 4

செருக்குவாய்ப் பைங்கண்வெள் அரவரையி னானைத்
தேவர்கள்சூ ளாமணியைச் செங்கண்விடை யானை
முருக்குவாய் மலர்ஒக்குந் திருமேனி யானை
முன்னிலையாய் முழுதுலகம் ஆயபெரு மானை
இருக்குவாய் அந்தணர்கள் எழுபிறப்புள் எங்கும்
வேள்வியிருந் திருநிதியம் வழங்குநகர் எங்கும்
கருக்குவாய்ப் பெண்ணையொடு தெங்கமலி சோலைக்
கானாட்டு முள்ளூரிற் கண்டுதொழு தேனே. 5

விடைஅரவக் கொடிஏந்தும் விண்ணவர்தம் கோனை
வெள்ளத்து மாலவனும் வேதமுத லானும்
அடியிணையுந் திருமுடியுங் காணஅரி தாய
சங்கரனைத் தத்துவனைத் தையல்மட வார்கள்
உடைஅவிழக் குழல்அவிழக் கோதைகுடைந் தாடக்
குங்குமங்கள் உங்கிவரு கொள்ளிடத்தின் கரைமேல்
கடைகள்விடு வார்குவளை களைவாருங் கழனிக்
கானாட்டு முள்ளூரிற் கண்டுதொழு தேனே. 6

அருமணியை முத்தினைஆன் அஞ்சும் ஆடும்
அமரர்கள்தம் பெருமானை அருமறையின் பொருளைத்
திருமணியைத் தீங்கரும்பின் ஊறலிருந் தேனைத்
தெரிவரிய மாமணியைத் திகழ்தருசெம் பொன்னைக்
குருமணிகள் கொழித்திழிந்து சுழித்திழியுந் திரைவாய்க்
கோல்வளையார்குடைந்தாடுங்கொள்ளிடத்தின் கரைமேல்
கருமணிகள் போல்நீலம் மலர்கின்ற கழனிக்
கானாட்டு முள்ளூரிற் கண்டுதொழு தேனே. 7

இழைதழுவு வெண்ணூலும் மேவுதிரு மார்பின்
ஈசன்றன் எண்டோள்கள் வீசியெரி ஆடக்
குழைதழுவு திருக்காதிற் கோளரவம் அசைத்துக்
கோவணம்கொள் குழகனைக் குளிர்சடையி னானைத்

தழைதழுவு தண்ணிறத்த செந்நெலதன் அயலே
தடந்தரள மென்கரும்பின் தாழ்கிடங்கின் அருகே
கழைதழுவித் தேன்தொடுக்குங் கழனிசூழ் பழனக்
கானாட்டு முள்ளூரிற் கண்டுதொழு தேனே. 8

குனிவினிய கதிர்மதியம் சூடுசடை யானைக்
குண்டலஞ்சேர் காதவனை வண்டினங்கள் பாடப்
பனிஉதிருஞ் சடையானைப் பால்வெண்ணீற் றானைப்
பலஉருவுந் தன்உருவே ஆயபெரு மானைத்
துனிவினிய தூயமொழித் தொண்டைவாய் நல்லார்
தூநிலங் கண்வளருஞ் சூழ்கிடங்கின் அருகே
கனிவினிய கதலிவனந் தழுவுபொழிற் சோலைக்
கானாட்டு முள்ளூரிற் கண்டுதொழு தேனே. 9

தேவியம்பொன் மலைக்கோமான் தன்பாவை ஆகத்
தனதுருவம் ஒருபாகஞ் சேர்த்துவித்த பெருமான்
மேவியவெந் நரகத்தில் அழுந்தாமை நமக்கு
மெய்ந்நெறியைத் தான்காட்டும் வேதமுத லானைத்
தூவிவாய் நாரையொடு குருகுபாய்ந் தார்ப்பத்
துறைக்கெண்டை மிளிர்ந்துகயல் அள்ளிவிளை யாடக்
காவிவாய் வண்டுபல பண்செய்யுங் கழனிக்
கானாட்டு முள்ளூரிற் கண்டுதொழு தேனே. 10

திரையினார் கடல்சூழ்ந்த தென்னிலங்கைக் கோனைச்
செற்றவனைச் செஞ்சடைமேல் வெண்மதியி னானைக்
கரையினார் புனல்தழுவு கொள்ளிடத்தின் கரைமேற்
கானாட்டு முள்ளூரிற் கண்டுகழல் தொழுது
உரையினார் மதயானை நாவலா ரூரன்
உரிமையால் உரைசெய்த ஒண்தமிழ்கள் வல்லார்
வரையினார் வகைஞாலம் ஆண்டவர்க்குந் தாம்போய்
வானவர்க்குந் தலைவராய் நிற்பரவர் தாமே. 11

திருச்சிற்றம்பலம்

33. திருநாரையூர்

திருஞானசம்பந்த சுவாமிகள்

பண் – பியந்தைக் காந்தாரம் 2–ம் திருமுறை

திருச்சிற்றம்பலம்

உரையினில் வந்தபாவம் உணர்நோய்க ளும்ப
செயல்தீங்கு குற்ற முலகில்
வரையினி லாமைசெய்த அவைதீரும் வண்ணம்
மிகவேத்தி நித்தம் நினைமின்
வரைசிலை யாகஅன்று மதில் மூன்றெரித்து
வளர்கங்குல் நங்கை வெருவத்
திரையொலி நஞ்சமுண்ட சிவன்மேய செல்வத்
திருநாரை யூர்கை தொழவே.

ஊனடை கின்றகுற்ற முதலாகி
யுற்ற பிணிநோ யொருங்கும் உயரும்
வானடை கின்றவெள்ளை மதிசூடு சென்னி
விதியான வேத விகிர்தன்
கானிடை யாடிபூதப் படையான் இயங்கு
விடையான் இலங்கு முடிமேல்
தேனடை வண்டு பாடு சடையண்ணல் நண்ணி
திருநாரை யூர்கை தொழவே.

ஊரிடை நின்றுவாழும் உயிர்செற்ற காலன்
துயருற்ற தீங்கு விரவிய்
பாரிடை மெள்ள வந்து பழியுற்ற வார்த்தை
பொழிவுற்ற வண்ண மகலும்
போரிடை யன்று; மூன்று மதிலெய்த ஞான்று
புகழ்வா னுளோர்கள் புணரும்
தேரிடை நின்றஎந்தை பெரு மானிருந்த
திருநாரை யூர்கை தொழவே. 3

தீயுற வாயஆக்கை யதுபற்றி வாழும்
வினைசெற்ற வுற்ற உலகின்
தாயுறு தன்மையாய தலைவன்றன் நாமம்
நிலையாக நின்று மருவும்
பேயுற வாயகானில் நடமாடி கோல
விடமுண்ட கண்டன் முடிமேல்
தேய்பிறை வைத்துகந்த சிவன்மேய செல்வத்
திருநாரை யூர்கை தொழவே 4

வசையபராதமாய வுவரோதம் நீங்குந்
தவமாய தன்மை வரும்வான்
மிசையவ ராதியாய திருமார் பிலங்கு
விரிநூலர் விண்ணும் நிலனும்
இசையவ ராசிசொல்ல இமையோர் களேத்தி
யமையாத காத லொடுசேர்
திசையவர் போற்ற நின்ற சிவன்மேய செல்வத்
திருநாரை யூர்கை தொழவே. 5

உறைவள ருன்நிலாய வுயிர்நிற்கும் வண்ணம்
உணர் வாக்கும் உண்மை உலகில்
குறைவுள வாகிநின்ற குறைதீர்க்கு நெஞ்சில்
நிறைவாற்று நேசம் வளரும்
மறைவளர் நாவன்மாவின் உரிபோர்த்த மெய்யன்
அரவார்த்த அண்ணல் கழலே
திறைவளர் தேவர் தொண்டின் அருள்பேண நின்ற
திருநாரை யூர்கை தொழவே.

தனம்வரும் நன்மையாகும் தகுதிக் குழந்து
வருதிக் குழன்ற உடலின்
இனம்வள ரைவர் செய்யும் வினயங்கள் செற்று
நினைவொன்று சிந்தை பெருகும்
முனமொரு காலம்மூன்று புரம்வெந்து மங்கச்
சரமுன் றெரிந்த அவுணர்
சினமொரு காலழித்த சிவன்மேய செல்வத்
திருநாரை யூர்கை தொழவே. 7

உருவரை கின்றநாளில் உயிர்கொள்ளுங் கூற்றம்
நனியஞ்சு மாத லுறநீர்
மருமலர் தூவியென்றும் வழிபாடு செய்ம்மின்
அழிபா டிலாத கடலின்
அருவரை சூழிலங்கை யரையன்றன் வீரம்
அழியத் தடக்கை முடிகள்
திருவிரல் வைத்துகந்த சிவன்மேய செல்வத்
திருநாரை யூர்கை தொழவே. 8

வேறுயர் வாழ்வுதனமை வினைதுக்கம் மிக்க
பகை தீர்க்குமேய வுடலில்
தேறிய சிந்தைவாய்மை தெளிவிக்க நின்ற
கரவைக் கரந்து திகழும்
சேறுயர் பூவின்மேய பெருமானும் மற்றைத்
திருமாலும் நேட எரியாய்ச்
சீறிய செம்மையாகுஞ் சிவன்மேய செல்வத்
திருநாரை யூர்கை தொழவே. 9

மிடைபடு துன்பம் இன்பம் உளதாக்கும் உள்ளம்
வெளியாக்கு முன்னி யுணரும்
படையொரு கையிலேந்திப் பலிகொள்ளும் வண்ணம்
ஒலிபாடி யாடி பெருமை
உடையினை விட்டுளோரும் உடல்போர்த்து ளோரும்
உரைமாயும் வண்ணம் அழியச்
செடிபட வைத்துகந்த சிவன்மேய செல்வத்
திருநாரை யூர்கை தொழவே. 10

எரியொரு வண்ணமாய உருவானை எந்தை
பெருமானை யுள்கி நினையார்
திரிபுர மன்றுசெற்ற சிவன்மேய செல்வத்
திருநாரை யூர்கை தொழுவான்
பொருபுனல் சூழ்ந்தகாழி மறைஞான பந்தன்
உரைமாலை பத்தும் மொழிவார்
திருவளர் செம்மையாகி யருள்பேறு மிக்க
துளதென்பர் செம்மை யினரே. 11

திருச்சிற்றம்பலம்

பண் – பழம்பஞ்சுரம் 3-ம் திருமுறை

திருச்சிற்றம்பலம்

காம்பினை வென்றமென் தோளிபாகங் கலந்தான் நலந்தாங்கு
தேம்புனல் சூழ்திகழ் மாமடு வில்திரு நாரை யூர்மேய
பூம்புனல் சேர்புரி புன்சடையான் புலியின் னுரிதோல்மேல
பாம்பினை வீக்கிய பண்ட ரங்கன் பாதம் பணிவோமே.

தீவினை யாயின தீர்க்க நின்றான் திருநா ரையூர்மேயான்
பூவினை மேவு சடைமுடி யான்புடை சூழப் பலபூதம்
ஆவினில் ஐந்துங் கொண்டாட்டுகந்தான் அடங்கார்
மதில்மூன்றும்
ஏவினை யெய்த ழித்தான் கழலே பரவா எழுவோமே. 2

மாயவன் சேயவன் வெள்ளியவன் விடஞ்சேரும் மைமிடற்றன்
ஆயவ னாகியொ ரந்தர மும்மவ னென்று வரையாகம்
தீயவன் நீரவன் பூமிய வன்திரு நாரை யூர்தன்னில்
மேயவ னைத்தொழு வாரவர் மேல்வினை யாயின வீடுமே. 3

துஞ்சிரு ளாடுவர் தூமு றுவல்து ளங்கும் உடம்பினராய்
அஞ்சுட ரார்எரி யாடுவர் ஆரழ லார் விழிக்கண்
நஞ்சுமிழ் நாகம் அரைக் கசைப் பர்நல னோங்கு நாரையூர்
எஞ்சிவ னார்க்கடி மைப்படு வார்க்கினி யில்லை யேதமே. 4

பொங்கி ளங்கொன் றையினார் கடலில் விடமுண்
டிமையோர்கள்
தங்களை ஆரிடர் தீர நின்ற தலைவர் சடைமேலோர்
திங்களை வைத்தனல் ஆடலி னார்திரு நாரை யூர்மேய
வெங்கனல் வெண்ணீ றணிய வல்லார் அவரே விழுமியரே. 5

பாருறு வாய்மையி னார்பர மேட்டி பைங்கொன்றைத்
தாருறு மார்புடை யான்மலை யின்தலைவன் மலைமகளைச்
சீருறு மாமறு கிற்சிறை வண்ட றையுந் திருநாரை
ஊருறை யெம்மிறை வர்க்கி வையொன் றேடொன்
றெவ்வாவே. 6

கள்ளி யிடுதலை யேந்துகை யர்கரி காடர் கண்ணுதலர்
வெள்ளிய கோவண ஆடை தன்மேன் மிளிரா டரவார்த்து
நள்ளிருள் நட்டம தாடுவர் நல்நலன் ஓங்கு நாரையூர்
உள்ளிய போழ்திலெம் மேல்வரு வல்வினையாயின
வோடுமே. 7

நாமமெ னப்பல வும்முடை யான்நலன் ஓங்கு நாரையூர்
தாமொம் மெனப்ப றையாழ் குழரு ளார்க ழல்பயில
ஈமவி ளக்கெரி சூழ்சுட லையி யம்பும் மிடுகாட் டில்
சாமம்உ ரைக்கநின் ருடுவா னுந்தழ லாய சங்கரனே. 8

ஊனுடைவெண் டலை கொண்டுழல் வான் ஒளிர்புன்
சடைமேலோர்
வானிடை வெண்மதிவைத் துகந் தான்வரி வண்டியாழ் முரலத்
தேனுடை மாமல ரன்னம் வைகுந் திருநா ரையூர்மேய
ஆனிடை யைந்து கந்தான் அடியே பரவா அடைவோமே.

தூசு புனைதுவ ராடை மேவுந் தொழிலா ருடம்பினுள்
மாசு புனைந்துடை நீத்தவர் கள்மயல் நீர்மை கேளாதே
தேசுடையீர்கள் தெளிந் தடைமின் திருநாரையூர் தன்மேல்
பூசு பொடித்த லைவர் அடியார் அடியே பொருத்தமே. 10

தண்மதி தாழ்பொ ழில்சூழ் புகலித் தமிழ்ஞா னசம்பந்தன்
ஒண்மதி சேர்சடையான் உறையுந் திருநா ரையூர்தன்மேல்
பண்மதி யாற்சொன்ன பாடல் பத்தும் பயின்ருர் வினை போகி
மண்மதி யாது போய்வான் புகுவர் வானோர் எதிர்கொளவே.

திருச்சிற்றம்பலம்

பண்-பழம்பஞ்சுரம் 3-ந் திருமுறை

திருச்சிற்றம்பலம்

கடலிடை வெங்கடு நஞ்சமுண்ட கடவுள் விடையேறி
உடலிடை யிற்பொடிப் பூசவல்லான் உமையோடொருபாகன்
அடலிடை யிற்சிலை தாங்கியெய்த அம்மான் அடியார்மேல்
நடலைவி னைத்தொகை தீர்த்துகந்தான் இடம்நா ரையூர்தானே.

விண்ணின் மின்னேர்மதி துத்திநாகம் விரிபூ மலர்க்கொன்றை
பெண்ணின்முன் னேமிக வைத்துகந்த பெருமான் எரியாடி
நண்ணிய தன்னடி யார்களோடுந் திருநா ரையூரானென்
றெண்ணுமின் நும்வினை போகும்வண்ணம் இறைஞ்சும்
நிறைவாமே 2

தோடொருகாதொரு காதுசேர்ந்த குழையான்இழை தோன்றும்
பீடொரு கால்பிரி யாதுநின்ற பிறையான் மறையோதி
நாடொரு காலமுஞ் சேரநின்றதிருநா ரையூரானைப்
பாடுமின் நீர்பழி போகும்வண்ணம் பயிலும் உயர்வாமே. 3

வெண்ணில வஞ்சடை சேரவைத்து விளங்குந் தலையேந்திப்
பெண்ணில மர்ந்தொரு கூறதாய பெருமான் அருளார்ந்த
அண்ணல்மன் னியுறைகோயிலாகும் அணிநாரையூர் தன்னை
நண்ணல மர்ந்துறை வாக்குமின்கள் நடலை கரிசறுமே. 4

வானமர் திங்களும் நீர்நிலனும் வழங்கும் பழியாகும்
ஊனமர் இன்னுயிர் தீங்குகுற்ற முறைவால் பிறிதின்றி
நானமரும் பொருளாகிநின்றான் திருநா ரையூரெந்தை
கோனவ னைக்குறு கக்குறுகா கொடுவல் வினைதானே. 5

கொக்கிற குங்குளிர் சென்னிமத்தங் குலாய மலர்சூடி
அக்கர வோடரை யார்த்துகந்த அழகன் குழகாக
நக்கம ருந்திரு மேனியாளன் திருநா ரையூர்மேவிப்
புக்கம ரும்மனத் தோர்கள்தம்மைப் புணரும் புகல்தானே. 6

ஊழியும் இன்பமுங் காலமாகி உயிருந் தவமாகி
ஏழிசை யின்பொருள் வாழும்வாழ்க்கை வினையின் புணர்ப்பாகி
நாழிகை யும்பல ஞாயிறாகி நளிர்நா ரையூர்தன்னில்
வாழியர் மேதகு மைந்தர்செய்யும் வகையின் விளைவாமே. 7

கூசமி லாதரக்கன் வரையைக் குலுங்க எடுத்தான்தோள்
நாசம தாகி இறஅடர்த்த விரலான் கரவாதார்
பேசவி யப்பொடு பேணநின்ற பெரியோன் இடம்போலும்
தேசமு றப்புகழ் செம்மைபெற்ற திருநா ரையூர்தானே. 8

பூமக னும்மவ னைப்பயந்த புயலார் நிறத்தானும்
ஆமள வுந்திரிந் தேத்திக்காண்டல் அறிதற் கரியானூர்
பாமரு வுங்குணத் தோர்கள்ஈண்டிப் பலவும் பணிசெய்யும்
தேமரு வுந்திகழ் சோலைசூழ்ந்த திருநா ரையூர்தானே. 9

வெற்றரை யாகிய வேடங்காட்டித் திரிவார் துவராடை
உற்றரை யோர்கள் உரைக்குஞ்சொல்லை உணரா தெழுமின்கள்
குற்றமி லாததோர் கொள்கையெம்மான் குழகன் தொழிலாரப்
பெற்றர வாட்டி வரும்பெருமான் திருநா ரையூர்சேர்வே. 10

பாடிய லுந்திரை சூழ்புகலித் திருஞான சம்பந்தன்
சேடிய லும்புக ழோங்குசெம்மைத் திருநா ரையூரான்மேல்
பாடிய தண்டமிழ் மாலைபத்தும் பரவித் திரிந்தாக
வாடிய சிந்தையி னார்க்கு நீங்கும் அவலக் கடல்தானே. 11

திருச்சிற்றம்பலம்

திருநாவுக்கரசு சுவாமிகள்

திருக்குறுந்தொகை 5-ம் திருமுறை

திருச்சிற்றம்பலம்

வீறு தானுடை வெற்பன் மடந்தையோர்
கூற னாகிலுங் கூன்பிறை சூடலும்
நாறு பூம்பொழில் நாரையூர் நம்பனுக்(கு)
ஆறு சூடிலும் அம்ம அழகிதே. 1

புள்ளி கொண்ட புலியுரி யாடையும்
வெள்ளி கொண்டவெண் பூதிமெய் யாடலும்
நள்ளி தெண்டிரை நாரையூ ரான்நஞ்சை
அள்ளி யுண்டலும் அம்ம அழகிதே. 2

வேடு தங்கிய வேடமும் வெண்டலை
ஓடு தங்கிய வுண்பலி கொள்கையும்
நாடு தங்கிய நாரையூ ரான்நடம்
ஆடு பைங்கழல் அம்ம அழகிதே. 3

கொக்கின் தூவலுங் கூவிளங் கண்ணியும்
மிக்க வெண்டலை மாலை விரிசடை
நக்க னாகிலும் நாரையூர் நம்பனுக்(கு)
அக்கி னாரமும் அம்ம அழகிதே. 4

வடிகொள் வெண்மழு மான்அமர் கைகளும்
பொடிகொள் செம்பவ ளம்புரை மேனியும்
நடிகொள் நன்மயில் சேர்திரு நாரையூர்
அடிகள் தம்வடி வம்ம அழகிதே. 5

சூலம் மல்கிய கையுஞ் சுடரொடு
பாலும் நெய்தயி ராடிய பான்மையும்
ஞாலம் மல்கிய நாரையூர் நம்பனுக்கு
ஆல நீழலும் அம்ம அழகிதே. 6

பண்ணி னான்மறை பாடலொ டாடலும்
எண்ணி லார்புர மூன்றெரி செய்ததும்
நண்ணி னார்துயர் தீர்த்தலும் நாரையூர்
அண்ண லார்செய்கை அம்ம அழகிதே. 7

என்பு பூண்டெரு தேறி இளம்பிறை
மின்பு ரிந்த சடைமேல் விளங்கவே
நன்ப கற்பலி தேரினும் நாரையூர்
அன்ப னுக்கது அம்ம அழகிதே. 8

முரலுங் கின்னரம் மொந்தை முழங்கவே
இரவி னின்றெரி யாடலு நீடுலாம்
நரலும் வாரிநன் னாரையூர் நம்பனுக்(கு)
அரவும் பூணுதல் அம்ம அழகிதே 9

கடுக்கை யஞ்சடை யன்கயி லைம்மலை
எடுத்த வாளரக் கன்தலை ஈரைஞ்சும்
நடுக்கம் வந்திற நாரையூ ரான்விரல்
அடுத்த தன்மையும் அம்ம அழகிதே. 10

திருச்சிற்றம்பலம்

திருத்தாண்டகம் 6-ம் திருமுறை

திருச்சிற்றம்பலம்

சொல்லானைப் பொருளானைச் சுருதி யானைச்
சுடராழி நெடுமாலுக் கருள்செய் தானை
அல்லானைப் பகலானை அரியான் தன்னை
அடியார்கட் கெளியானை அரண்மூன் றெய்த
வில்லானைச் சரம்விசயற் கருள்செய் தானை
வெங்கதிரோன் மாமுனிவர் விரும்பி யேத்தும்
நல்லானைத் தீயாடு நம்பன் தன்னை
நாரையூர் நன்னகரிற் கண்டேன் நானே. 1

பஞ்சுண்ட மெல்லடியாள் பங்கன் தன்னைப்
பாரொடுநீர் சுடர்படர்காற் றாயி னானை
மஞ்சுண்ட வானாகி வானந் தன்னில்
மதியாகி மதிசடைமேல் வைத்தான் தன்னை
நெஞ்சுண்டென் நினைவாகி நின்றான் தன்னை
நெடுங்கடலைக் கடைந்தவர்போய் நீங்க வோங்கும்
நஞ்சுண்டு தேவர்களுக் கமுதீந் தானை
நாரையூர் நன்னகரிற் கண்டேன் நானே. 2

மூவாதி யாவர்க்கும் மூத்தான் தன்னை
முடியாதே முதல்நடுவு முடிவா னானைத்
தேவாதி தேவர்கட்குந் தேவன் தன்னைத்
திசைமுகன்றன் சிரமொன்று சிதைத்தான் தன்னை
ஆவாத அடலேறொன் றுடையான் தன்னை
அடியேற்கு நினைதோறும் அண்ணிக் கின்ற
நாவானை நாவினில்நல் லுரையா னானை
நாரையூர் நன்னகரிற் கண்டேன் நானே. 3

செம்பொன்னை நன்பவளந் திகழும் முத்தைச்
செழுமணியைத் தொழுமவர்தஞ் சித்தத் தானை
வம்பவிழும் மலர்க்கணைவேள் உலக்க நோக்கி
மகிழ்ந்தானை மதிற்கச்சி மன்னு கின்ற
கம்பனையெங் கயிலாய மலையான் தன்னைக்
கழுகினொடு காகுத்தன் கருதி யேத்தும்
நம்பனையெம் பெருமானை நாதன் தன்னை
நாரையூர் நன்னகரிற் கண்டேன் நானே. 4

2

புரையுடைய கரியுரிவைப் போர்வை யானைப்
புரிசடைமேற் புனலடைத்த புனிதன் தன்னை
விரையுடைய வெள்ளெருக்கங் கண்ணி யானை
வெண்ணீறு செம்மேனி விரவி னானை
வரையுடைய மகள்தவஞ்செய் மணாளன் தன்னை
வருபிணிநோய் பிரிவிக்கும் மருந்து தன்னை
நரைவிடைநற் கொடியுடைய நாதன் தன்னை
நாரையூர் நன்னகரிற் கண்டேன் நானே. 5

பிறவாதும் இறவாதும் பெருகி னானைப்
பேய்பாட நடமாடும் பித்தன் தன்னை
மறவாத மனத்தகத்து மன்னி னானை
மலையானைக் கடலானை வனத்து ளானை
உறவானைப் பகையானை உயிரா னானை
உள்ளானைப் புறத்தானை ஓசை யானை
நறவாரும் பூங்கொன்றை சூடி னானை
நாரையூர் நன்னகரிற் கண்டேன் நானே. 6

தக்கனது வேள்விகெடச் சாடி னானைத்
தலைகலனாப் பலியேற்ற தலைவன் தன்னைக்
கொக்கரைசச் சரிவீணைப் பாணி யானைக்
கோணாகம் பூணாகக் கொண்டான் தன்னை
அக்கினொடும் என்பணிந்த அழகன் தன்னை
அறுமுகனோ டானைமுகற் கப்பன் தன்னை
நக்கனைவக் கரையானை நள்ளாற் றானை
நாரையூர் நன்னகரிற் கண்டேன் நானே. 7

அரிபிரமர் தொழுதேத்தும் அத்தன் தன்னை
அந்தகனுக் கந்தகனை அளக்க லாகா
எரிபுரியும் இலிங்கபுரா ணத்து ளானை
எண்ணாகிப் பண்ணா ரெழுத்தா னானைத்
திரிபுரஞ்செற் றொருமூவர்க் கருள்செய் தானைச
சிலந்திக்கும் அரசளித்த செல்வன் தன்னை
நரிவிரவு காட்டகத்தி லாட லானை
நாரையூர் நன்னகரிற் கண்டேன் நானே. 8

ஆலாலம் மிடற்றணியா அடக்கி ஞனை
ஆலதன்கீழ் அறம் நால்வர்க் கருள்செய் தானைப்
பாலாகித் தேனாகிப் பழமு மாகிப்
பைங்கரும்பா யங்கருந்துஞ் சுவையா னானை
மேலாய வேதியர்க்கு வேள்வி யாகி
வேள்வியினின் பயனாய விமலன் தன்னை
நாலாய மறைக்கிறைவ னாயி னானை
நாரையூர் நன்னகரிற் கண்டேன் நானே. 9

மீளாத ஆளென்னை உடையான் தன்னை
வெளிசெய்த வழிபாடு மேவி னானை
மாளாமை மறையவனுக் குயிரும் வைத்து
வன்கூற்றின் உயிர்மாள உதைத்தான் தன்னைத்
தோளாண்மை கருதிவரை யெடுத்த தூர்த்தன்
தோள்வலியுந் தாள்வலியுந் தொலைவித் தாங்கே
நாளோடு வாள்கொடுத்த நம்பன் தன்னை
நாரையூர் நன்னகரிற் கண்டேன் நானே. 10

திருச்சிற்றம்பலம்

34. திருக்கடம்பூர் (மேலைக்கடம்பூர்)

திருஞானசம்பந்த சுவாமிகள்

பண் - காந்தாரம் 2-ம் திருமுறை

திருச்சிற்றம்பலம்

வானமர் திங்களும் நீரும் மருவிய வார்சடை யானைத்
தேனமர் கொன்றையி னானைத் தேவர்தொழப்படு வானைக்
கானம ருப்பிணை புல்கிக் கலைபயி லுங்கடம் பூரில்
தானமர் கொள்கையி னானைத் தாள்தொழ வீடெளி தாமே. 1

அரவினொ டாமையும் பூண்டு அந்துகில் வேங்கை யதளும்
விரவுந் திருமுடி தன்மேல் வெண்திங்கள் சூடி விரும்பிப்
பரவுந் தனிக்கடம் பூரிற் பைங்கண்வெள் ளேற்றண்ணல் பாதம்
இரவும் பகலும் பணிய இன்பம் நமக்கது வாமே. 2

இளிபடும் இன்சொலி ஞர்கள் இருங்குழல் மேலிசைந் தேறத்
தெளிபடு கொள்கை கலந்த தீத்தொழி லார்கடம் பூரில்
ஒளிதரு வெண்பிறை சூடி யொண்ணுத லோடுட ஞகிப்
புலியதளாடை புணைந்தான் பொற்கழல் போற்றுதும் நாமே. 3

பறையொடு சங்கம் இயம்பப் பல்கொடி சேர்நெடு மாடம்
கறையுடை வேல்வரிக் கண்ணார் கலையொலி சேர்கடம் பூரில்
மறையொலி கூடிய பாடல் மருவினின் ருடல் மகிழும்
பிறையுடை வார்சடை யானைப் பேணவல் லார்பெரி யோரே. 4

தீவிரி யச்சழ லார்ப்பச் சேயெரி கொண்டிடு காட்டில்
நாவிரி கூந்தல்நல் பேய்கள் நகைசெய்ய நட்டம் நவின்ருேன்
காவிரி கொன்றை கலந்த கண்ணுத லான்கடம் பூரில்
பாவிரி பாடல் பயில்வார் பழியொடு பாவ மிலாரே. 5

தண்புனல் நீள்வயல் தோறுந் தாமரை மேலனம் வைகக்
கண்புணர் காவில்வண் டேறக் கள்ளவி ழுங்கடம் பூரில்
பெண்புணை கூறுடை யானைப் பின்னு சடைப்பெரு மானைப்
பண்புணை பாடல் பயில்வார் பாவமி லாதவர் தாமே. 6

பலிகெழு செம்மலர் சாரப் பாடலொ டாட லருத
கலிகெழு வீதி கலந்த கார்வயல் சூழ்கடம் பூரில்
ஒலிதிகழ் கங்கை கரந்தான் ஒண்ணுத லாள்உமை கேள்வன்
புலியத ளாடையி ஞன்றன் புனைகழல் போற்றல் பொருளே. 7

பூம்படு கிற் கயல் பாயப் புள்ளிரி யப்புறங் காட்டில்
காம்படு தோளியர் நாளுங் கண்கவ ருங்கடம் பூரில்
மேம்படு தேவியொர் பாகம் மேவியெம் மானென வாழ்த்தித்
தேம்படு மாமலர் தூவித் திசை தொழத் தீய கெடுமே. 8

திருமரு மார்பி லவனுந் திகழ்தரு மாமல ரோனும்
இருவரு மாயறி வொண்ணு எரியுரு வாகிய ஈசன்
கருவரை காலில் அடர்த்த கண்ணுத லான்கடம் பூரில்
மருவிய பாடல் பயில்வார் வானுல கம்பெறு வாரே. 9

ஆடை தவிர்த்தறங் காட்டு மவர்களும் அந்துவ ராடைச்
சோடைகள் நன்னெறி சொல்லார் சொல்லினுஞ் சொல்லல கண்டீர்
வேடம் பலபல காட்டும் விகிர்தன்நம் வேதமு தல்வன்
காடத னில்நட மாடுங் கண்ணுத லான்கடம் பூரே. 10

விரைநவி லுங்கொடி யானை வெண் கொடி சேர்நெடு மாடம்
கடைநவி லுங்கடம் பூரிற் காதல னைக்கடற் காழி
நடைநவில் ஞானசம் பந்தன் நன்மையா லேத்திய பத்தும்
படைநவில் பாடல் பயில்வார் பழியொடு பாவ மிலாரே. 11

திருச்சிற்றம்பலம்

திருநாவுக்கரசு சுவாமிகள்

திருக்குறுந்தொகை 5-ம் திருமுறை

திருச்சிற்றம்பலம்

தளருங் கோளர வத்தொடு தண்மதி
வளருங் கோல வளர்சடை யார்க்கிடம்
கிளரும் பேரிசைக் கின்னரம் பாட்டருக்
களருங் கார்க்கடம் பூர்க்கரக் கோயிலே. 1

வெலவ லான்புலன் ஐந்தொடு வேதமும்
சொலவ லான்சுழ லுந்தடு மாற்றமும்
அலவ லான்மனை யார்ந்தமென் தோளியைக்
கலவ லான்கடம் பூர்க்கரக் கோயிலே. 2

பொய் தொழாது புலியுரி யோன்பணி
செய்தெ ழாஎழு வார்பணி செய்தெழா
வைதெ ழாதெழு வாரவர் எள்கநீர்
கைதொ ழாஎழு மின்கரக் கோயிலே. 3

துண்ணெ னுமனத் தால்தொழு நெஞ்சமே
பண்ணி னுல்முனம் பாடலது செய்தே
எண்ணி லார்எயில் மூன்றும் எரித்தமுக்
கண்ணி னுன்கடம் பூர்க்கரக் கோயிலே. 4

சுனையுள் நீல மலரன கண்டத்தன்
புனையும் பொன்னிறக் கொன்றை புரிசடைக்
கனையும் பைங்கழ லான்கரக் கோயிலை
நினையும் உள்ளத் தவர்வினை நீங்குமே. 5

குணங்கள் சொல்லியுங் குற்றங்கள் பேசியும்
வணங்கி வாழ்த்துவர் அன்புடை யாரெல்லாம்
வணங்கி வான்மலர் கொண்டடி வைகலும்
கணங்கள் போற்றிசைக் குங்கரக் கோயிலே. 6

பண்ணி னார்மறை பல்பல பூசனை
மண்ணி னார்செய்வ தன்றியும் வைகலும்
விண்ணி னார்கள் வியக்கப் படுவன
கண்ணி னார்கடம் பூர்க்கரக் கோயிலே. 7

அங்கை ஆரழல் ஏந்திநின் றாடலன்
மங்கை பாட மகிழ்ந்துடன் வார்சடைக்
கங்கை யானுறை யுங்கரக் கோயிலைத்
தங்கை யால்தொழு வார்வினை சாயுமே. 8

நங்க டம்பனைப் பெற்றவள் பங்கினன்
தென்க டம்பைத் திருக்கரக் கோயிலான்
தன்க டன்னடி யேனையுந் தாங்குதல்
என்க டன்பணி செய்து கிடப்பதே. 9

பணங்கொள் பாற்கடல் பாம்பணை யானொடும்
மணங்க மழ்மலர்த் தாமரை யானவன்
பிணங்கும் பேரழல் எம்பெரு மாற்கிடம்
கணங்கள் போற்றிசைக் குங்கரக் கோயிலே. 10

வரைக்கண் நாலஞ்சு தோளுடை யான்தலை
அரைக்க வூன்றி அருள்செய்த ஈசனார்
திரைக்குந் தண்புனல் சூழ்கரக் கோயிலை
உரைக்கும் உள்ளத்த வர்வினை ஓயுமே. 11

திருச்சிற்றம்பலம்

திருச்சிற்றம்பலம்

ஒருவ ராய்இரு மூவரு மாயவன்
குருவ தாய குழகன் உறைவிடம்
பருவ ரால்குதி கொள்ளும் பழனஞ்சூழ்
கருவ தாங்கடம் பூர்க்கரக் கோயிலே. 1

வன்னி மத்தம் வளரிளந் திங்களோர்
கன்னி யாளைக் கதிர்முடி வைத்தவன்
பொன்னின் மல்கு புணர்முலை யாளொடும்
மன்னி னுன்கடம் பூர்க்கரக் கோயிலே. 2

இல்லக் கோலமும் இந்த இளமையும்
அல்லற் கோலம் அறுத்துய வல்லிரே
ஒல்லைச் சென்றடை யுங்கடம் பூர்நகர்ச்
செல்வக் கோயில் திருக்கரக் கோயிலே. 3

வேறு சிந்தையி லாதவர் தீவினை
கூறு செய்த குழகன் உறைவிடம்
ஏறு செல்வத் திமையவர் தாந்தொழும்
ஆறு சேர்கடம் பூர்க்கரக் கோயிலே. 4

திங்கள் தங்கிய செஞ்சடை மேலுமோர்
மங்கை தங்கும் மணாளன் இருப்பிடம்
பொங்கு சேர்மணற் புன்னையும் ஞாழலும்
தெங்கு சேர்கடம் பூர்க்கரக் கோயிலே. 5

மல்லை ஞாலத்து வாழும் உயிர்க்கெலாம்
எல்லை யான பிரானார் இருப்பிடம்
கொல்லை முல்லை கொழுந்தகை மல்லிகை
நல்ல சேர்கடம் பூர்க்கரக் கோயிலே. 6

தளரும் வாளர வத்தொடு தண்மதி
வளரும் பொற்சடை யாற்கிட மாவது
கிளரும் பேரொளி கின்னரம் பாட்டருக்
களரி யார்கடம் பூர்க்கரக் கோயிலே. 7

உற்ற ராய்உற வாகி உயிர்க்கெலாம்
பெற்ற ராயபி ரானுர் உறைவிடம்
முற்ருர் மும்மதில் எய்த முதல்வனுர்
கற்ருர் சேர்கடம் பூர்க்கரக் கோயிலே. 8

வெள்ளை நீறணி மேனிய வர்க்கெலாம்
உள்ள மாய பிரானுர் உறைவிடம்
பிள்ளை வெண்பிறை சூடிய சென்னியான்
கள்வன் சேர்கடம் பூர்க்கரக் கோயிலே. 9

பரப்பு நீரிலங் கைக்கிறை வன்அவன்
உரத்தி னுல்அடுக் கல்எடுக் கல்லுற
இரக்க மின்றி இறைவிர லாற்றலை
அரக்கி னுன்கடம் பூர்க்கரக் கோயிலே. 10

திருச்சிற்றம்பலம்

36. திருக்கஞ்சனூர்

திருநாவுக்கரசு சுவாமிகள்

திருத்தாண்டகம் 6-ம் திருமுறை

திருச்சிற்றம்பலம்

மூவிலைநற் சூலம்வலம் ஏந்தி னுனை
மூன்று சுடர்க் கண்ணுனை மூர்த்தி தன்னை
நாவலனை நரைவிடையொன் றேறு வானை
நால்வேதம் ஆறங்க மாயி னுனை
ஆவினிலைந் துகந்தானைஅமரர் கோவை
அயன்திருமா லானுனை அனலோன் போற்றுங்
காவலனைக் கஞ்சனூ ராண்ட கோவைக்
கற்பகத்தைக் கண்ணுரக் கண்டுய்ந் தேனே. 1

தலையேந்து கையானை என்பார்த் தானைச்
சவந்தாங்கு தோளானைச் சாம்ப லானைக்
குலையேறு நறுங்கொன்றை முடிமேல் வைத்துக்
கோணுக மசைத்தானைக் குலமாங் கைலை
மலையானை மற்றெருப்பா ரில்லா தானை
மதிகதிரும் வானவரும் மாலும் போற்றுங்
கலையானைக் கஞ்சனூ ராண்ட கோவைக்
கற்பகத்தைக் கண்ணுரக் கண்டுய்ந் தேனே. 2

தொண்டர்குழாம் தொழுதேத்த அருள்செய் வானைச்
சுடர்மழுவாள் படையானைச் சுழிவான் கங்கைத்
தெண்டிரைகள் பொருதிழிசெஞ் சடையினானைச்
செக்கர்வா னொளியானைச் சேரா தெண்ணிப்
பண்டமரர் கொண்டுகந்த வேள்வி யெல்லாம்
பாழ்படுத்துத் தலையறுத்துப் பற்கண் கொண்ட
கண்டகனைக் கஞ்சனூ ராண்ட கோவைக்
கற்பகத்தைக் கண்ணாரக் கண்டுய்ந் தேனே. 3

விண்ணவனை மேருவில்லா வுடையான் தன்னை
மெய்யாகிப் பொய்யாகி விதியா னானைப்
பெண்ணவனை ஆணவனைப் பித்தன் தன்னைப்
பிணமிடுகா டுடையானைப் பெருந்தக் கோனை
எண்ணவனை எண்டிசையுங் கீழும் மேலும்
இருவிசும்பும் இருநிலமு மாகித் தோன்றும்
கண்ணவனைக் கஞ்சனூ ராண்ட கோவைக்
கற்பகத்தைக் கண்ணாரக் கண்டுய்ந் தேனே. 4

உருத்திரனை உமாபதியை உலகா னானை
உத்தமனை நித்திலத்தை ஒருவன் தன்னைப்
பருப்பதத்தைப் பஞ்சவடி மார்பி னானைப்
பகலிரவாய் நீர்வெளியாய்ப் பரந்து நின்ற
நெருப்பதனை நித்திலத்தின் தொத்தொப் பானை
நீறணிந்த மேனியராய் நினைவார் சிந்தைக்
கருத்தவனைக் கஞ்சனூ ராண்ட கோவைக்
கற்பகத்தைக் கண்ணாரக் கண்டுய்ந் தேனே. 5

ஏடேறு மலர்க்கொன்றை அரவு தும்பை
இளமதியம் எருக்குவா னிழிந்த கங்கை
சேடெறிந்த சடையானைத் தேவர் கோவைச்
செம்பொன்மால் வரையானைச் சேர்ந்தார் சிந்தைக்
கேடிலியைக் கீழ்வேளூ ராளுங் கோவைக்
கிறிபேசி மடவார்பெய் வளைகள் கொள்ளுங்
காடவனைக் கஞ்சனூ ராண்ட கோவைக்
கற்பகத்தைக் கண்ணாரக் கண்டுய்ந் தேனே. 6

நாரணனும் நான்முகனும் அறியா தானை
நால்வேதத் துருவானை நம்பி தன்னைப்
பாரிடங்கள் பணிசெய்யப் பலிகொண் டுண்ணும்
பால்வணனைத் தீவணனைப் பகலா னானை
வார்பொதியும் முலையாளோர் கூறன் தன்னை
மானிடங்கை யுடையானை மலிவார் கண்டம்
கார்பொதியுங் கஞ்சனூ ராண்ட கோவைக்
கற்பகத்தைக் கண்ணாரக் கண்டுய்ந் தேனே. 7

வானவனை வலிவலமும் மறைக்காட் டானை
மதிசூடும் பெருமானை மறையோன் தன்னை
ஏனவனை இமவான்றன் பேதை யோடும்
இனிதிருந்த பெருமானை ஏத்து வார்க்குத்
தேனவனைத் தித்திக்கும் பெருமான் தன்னைத்
தீதிலா மறையோனைத் தேவர் போற்றுங்
கானவனைக் கஞ்சனூ ராண்ட கோவைக்
கற்பகத்தைக் கண்ணாரக் கண்டுய்ந் தேனே. 8

நெருப்புருவு திருமேனி வெண்ணீற் றானை
நினைப்பார்தம் நெஞ்சானை நிறைவா னானைத்
தருக்கழிய முயலகன்மேல் தாள்வைத் தானைச்
சலந்தரனைத் தடிந்தோனைத் தக்கோர் சிந்தை
விருப்பவனை விதியானை வெண்ணீற் றானை
விளங்கொளியாய் மெய்யாகி மிக்கோர் போற்றுங்
கருத்தவனைக் கஞ்சனூ ராண்ட கோவைக்
கற்பகத்தைக் கண்ணாரக் கண்டுய்ந் தேனே. 9

மடலாழித் தாமரைஆ யிரத்தி லொன்று
மலர்க்கணிடந் திடுதலுமே மலிவான் கோலச்
சுடராழி நெடுமாலுக் கருள்செய் தானைத்
தும்பியுரி போர்த்தானைத் தோழன் விட்ட
அடலாழித் தேருடைய இலங்கைக் கோனை
அருவரைக்கீழ் அடர்த்தானை அருளார் கருணைக்
கடலானைக் கஞ்சனூ ராண்ட கோவைக்
கற்பகத்தைக் கண்ணாரக் கண்டுய்ந் தேனே. 10

திருச்சிற்றம்பலம்

37. திருக்கோடிகா

திருஞானசம்பந்த சுவாமிகள்

பண் – நட்டராகம் 2–ம் திருமுறை

திருச்சிற்றம்பலம்

இன்றுநன்று நாளைநன் றென்றுநின்ற இச்சையால்
பொன்றுகின்ற வாழ்க்கையைப் போகவிட்டுப் போதுமின்
மின்தயங்கு சோதியான் வெண்மதி விரிபுனல்
கொன்றைதுன்று சென்னியான் கோடிகாவு சேர்மினே. 1

அல்லல்மிக்க வாழ்க்கையை ஆதரித் திராதுநீர்
நல்லதோர் நெறியினை நாடுதும் நடம்மினோ
வில்லையன்ன வாணுதல் வெள்வளையொர் பாகமாம்
கொல்லைவெள்ளை யேற்றினன் கோடிகாவு சேர்மினே. 2

துக்கமிக்க வாழ்க்கையின் சோர்வினைத் துறந்துநீர்
தக்கதோர் நெறியினைச் சார்தல் செய்யப் போதுமின்
அக்கணிந் தரைமிசை யாறணிந்த சென்னிமேல்
கொக்கிற கணிந்தவன் கோடிகாவு சேர்மினே. 3

பண்டுசெய்த வல்வினை பற்றறக் கெடும்வகை
உண்டுமக் குரைப்பன்நான் ஒல்லைநீர் எழுமினோ
மண்டுகங்கை செஞ்சடை வைத்துமாதொர் பாகமாக்
கொண்டுகந்த மார்பினன் கோடிகாவு சேர்மினே. 4

முன்னைநீர்செய் பாவத்தால் மூர்த்திபாதஞ் சிந்தியா
தின்னநீ ரிடும்பையில் மூழ்கி எழும்மினோ
பொன்னைவென்ற கொன்றையான் பூதம்பாட ஆடலான்
கொன்னவிலும் வேலினன் கோடிகாவு சேர்மினே. 5

ஏவமிக்க சிந்தையோ டின்பமெய்த லாமெனப்
பாவமெத் தனையும்நீர் செய்தொரு பயனிலைக்
காவல்மிக்க மாநகர் காய்ந்துவெங் கனல்படக்
கோவமிக்க நெற்றியான் கோடிகாவு சேர்மினே. 6

ஏணழிந்த வாழ்க்கையை இன்பமென் றிருந்துநீர்
மாணழிந்த மூப்பினால் வருந்தன்முன்னம் வம்மினோ
பூணல்வெள் ளெலும்பினன் பொன்திகழ் சடைமுடிக்
கோணல்வெண் பிறையினன் கோடிகாவு சேர்மினே. 7

மற்றி வாழ்க்கை மெய்யெனும் மனத்தினைத் தவிர்ந்துநீர்
பற்றிவாழ்மின் சேவடி பணிந்துவந் தெழுமினோ
வெற்றிகொள் தசமுகன் விறல்கெட இருந்ததோர்
குற்றமில் வரையினான் கோடிகாவு சேர்மினே. 8

மங்குநோய் உறும்பிணி மாயும்வண்ணஞ் சொல்லுவன்
செங்கண்மால் திசைமுகன் சென்றளந்துங் காண்கிலா
வெங்கண்மால் விடையுடை வேதியன் விரும்புமூர்
கொங்குலாம் வளம்பொழிற் கோடிகாவு சேர்மினே. 9

தட்டொடு தழைமயிற் பீலிகொள் சமணரும்
பட்டுடை விரிதுகிலி னார்கள்சொற் பயனில
விட்டபுன் சடையினான் மேதகும் முழவொடும்
கொட்டமைந்த ஆடலான் கோடிகாவு சேர்மினே. 10

கொந்தணி குளிர்பொழிற் கோடிகாவு மேவிய
செந்தழ லுருவனைச் சீர்மிகு திறலுடை
அந்தணர் புகலியு ளாயகேள்வி ஞானசம்
பந்தன தமிழ்வல்லார் பாவமான பாறுமே. 11

திருச்சிற்றம்பலம்

திருநாவுக்கரசு சுவாமிகள்

திருநேரிசை 4-ம் திருமுறை

திருச்சிற்றம்பலம்

நெற்றிமேற் கண்ணி னானே நீறுமெய் பூசி னானே
கற்றைப்புன் சடையி னானே கடல்விடம் பருகி னானே
செற்றவர் புரங்கள் மூன்றுஞ் செவ்வழல் செலுத்தி னானே
குற்றமில் குணத்தி னானே கோடிகா வுடைய கோவே. 1

கடிகமழ் கொன்றை யானே கபாலங்கை யேந்தி னானே
வடிவுடை மங்கை தன்னை மார்பிலோர் பாகத் தானே
அடியிணை பரவ நாளும் அடியவர்க் கருள்செய் வானே
கொடியணி விழவ தோவாக் கோடிகா வுடைய கோவே. 2

நீறுமெய் பூசி னானே நிழல்திகழ் மழுவி னானே
ஏறுகந் தேறி னானே இருங்கடல் அமுதொப் பானே
ஆறுமோர் நான்கு வேதம் அறமுரைத் தருளி னானே
கூறுமோர் பெண்ணி னானே கோடிகா வுடைய கோவே. 3

காலனைக் காலாற் செற்றான் றருள்புரி கருணை யானே
நீலமார் கண்டத் தானே நீண்முடி யமரர் கோவே
ஞாலமாம் பெருமை யானே நளிரிளந் திங்கள் சூடுங்
கோலமார் சடையி னானே கோடிகா வுடைய கோவே. 4

பூணர வாரத் தானே புலியுரி அரையி னானே
காணில்வெண் கோவ ணம்முங் கையிலோர் கபாலம் ஏந்தி
ஊணுமோர்ப் பிச்சை யானே உமையொரு பாகத் தானே
கோணல்வெண் பிறையி னானே கோடிகா வுடைய கோவே. 5

கேழல்வெண் கொம்பு பூண்ட கிளரொளி மார்பி னானே
ஏழையேன் ஏழை யேன்நான் என்செய்கேன் எந்தை பெம்மான்
மாழையொண் கண்ணி னார்கள் வலைதனில் மயங்கு கின்றேன்
கூழையே றுடைய செல்வா கோடிகா வுடைய கோவே. 6

அழலுமிழ் அங்கை யானே அரிவையோர் பாகத் தானே
தழலுமிழ் அரவம் ஆர்த்துத் தலைதனிற் பலிகொள் வானே
நிழலுமிழ் சோலை சூழ நீள்வரி வண்டி னங்கள்
குழலுமிழ் கீதம் பாடுங் கோடிகா வுடைய கோவே. 7

ஏவடு சிலையி னாலே புரமவை எரிசெய் தானே
மாவடு வகிர்கொள் கண்ணாள் மலைமகள் பாகத் தானே
ஆவடு துறையு ளானே ஐவரால் ஆட்டப் பட்டேன்
கோவடு குற்றந் தீராய் கோடிகா வுடைய கோவே. 8

ஏற்றநீர்க் கங்கை யானே இருநிலந் தாவி னானும்
நாற்றமா மலர்மேல் ஏறும் நான்முகன் இவர்கள் கூடி
ஆற்றலால் அளக்க லுற்றார்க் கழலுரு வாயி னானே
கூற்றுக்குங் கூற்ற னாய் கோடிகா வுடைய கோவே. 9

பழகநான் அடிமை செய்வேன் பசுபதீ பாவ நாசா
மழகளி யானை யின்தோல் மலைமகள் வெருவப் போர்த்த
அழகனே அரக்கன் திண்டோள் அருவரை நெரிய வூன்றுங்
குழகனே கோல மார்பா கோடிகா வுடைய கோவே. 10

திருச்சிற்றம்பலம்

திருக்குறுந்தொகை 5-ம் திருமுறை

திருச்சிற்றம்பலம்

சங்குலா முன்கைத் தையலோர் பாகத்தன்
வெங்கு லாமத வேழம் வெகுண்டவன்
கொங்கு லாம்பொழிற் கோடிகா வாவென
எங்கி லாததோர் இன்பம்வந் தெய்துமே. 1

வாடி வாழ்வதென் னாவது மாதர்பால்
ஓடி வாழ்வினை உள்கிநீர் நாடொறும்
கோடி காவனைக் கூறிரேற் கூறினேன்
பாடி காவலிற் பட்டுக் கழிதிரே. 2

முல்லை நன்முறு வல்லுமை பங்கனார்
தில்லை யம்பலத் தில்லுறை செல்வனார்
கொல்லை யேற்றினர் கோடிகா வாஎன் றங்
கொல்லை யேத்துவார்க் கூனமொன் றில்லையே. 3

நாவ ளம்பெறு மாறும னன்னுதல்
ஆம ளஞ்சொலி அன்புசெ யின்னலால்
கோம ளஞ்சடைக் கோடிகா வாஎன
ஏவ ளின்றெனை ஏசுமவ் வேழையே. 4

வீறு தான்பெறு வார்சில ராகிலும்
நாறு பூங்கொன்றை தான்மிக நல்கானேல்
கூறு வேன்கோடி காவுளாய் என்றுமால்
ஏறு வேனும்மால் ஏசப் படுவனே. 5

நாடி நாரணன் நான்முகன் வானவர்
தேடி யேசற வுந்தெரி யாததோர்
கோடி காவனைக் கூறாத நாளெல்லாம்
பாடி காவலிற் பட்டுக் கழியுமே. 6-7-8-9

வரங்க ளால்வரை யையெடுத் தான்றனை
அரங்க வூன்றி அருள்செய்த அப்பனார்
குரங்கு சேர்பொழிற் கோடிகா வாஎன
இரங்கு வேன்மனத் தேதங்கள் தீரவே.

திருச்சிற்றம்பலம்

திருத்தாண்டகம் 6-ம் திருமுறை

திருச்சிற்றம்பலம்

கண்டலஞ்சேர் நெற்றியிளங் காளை கண்டாய்
கல்மதில்சூழ் கந்தமா தனத்தான் கண்டாய்
மண்டலஞ்சேர் மயக்கறுக்கும் மருந்து கண்டாய்
மதிற்கச்சி யேகம்பம் மேயான் கண்டாய்
விண்டலஞ்சேர் விளக்கொளியாய் நின்றான் கண்டாய்
மியச்சூர் பிரியாத விகிர்தன் கண்டாய்
கொண்டலஞ்சேர் கண்டத்தெங் கூத்தன் கண்டாய்
கோடிகா அமர்ந்துறையுங் குழகன் தானே. 1

வண்டாடு பூங்குழலாள் பாகன் கண்டாய்
மறைக்காட் டுறையு மணாளன் கண்டாய்
பண்டாடு பழவினைநோய் தீர்ப்பான் கண்டாய்
பரலோக நெறிகாட்டும் பரமன் கண்டாய்
செண்டாடி அவுணர்புரஞ் செற்றான் கண்டாய்
திருவாரூர்த் திருமூலட் டானன் கண்டாய்
கொண்டாடும் அடியவர்தம் மனத்தான் கண்டாய்
கோடிகா அமர்ந்துறையுங் குழகன் தானே. 2

அலையார்ந்த புனற்கங்கைச் சடையான் கண்டாய்
அடியார்கட் காரமுத மானான் கண்டாய்
மலையார்ந்த மடமங்கை பங்கன் கண்டாய்
வானோர்கள் முடிக்கணியாய் நின்றான் கண்டாய்
இலையார்ந்த திரிசூலப் படையான் கண்டாய்
எழுலகு மாய்நின்ற எந்தை கண்டாய்
கொலையார்ந்த குஞ்சரத்தோல் போர்த்தான் கண்டாய்
கோடிகா அமர்ந்துறையுங் குழகன் தானே. 3

மற்றாருந் தன்னொப்பா ரில்லான் கண்டாய்
மயிலாடு துறையிடமா மகிழ்ந்தான் கண்டாய்
புற்றா டரவணிந்த புனிதன் கண்டாய்
பூந்துருத்திப் பொய்யிலியாய் நின்றான் கண்டாய்
அற்றார்கட் கற்றானாய் நின்றான் கண்டாய்
ஐயா றகலாத ஐயன் கண்டாய்
குற்றாலத் தமர்ந்துறையுங் கூத்தன் கண்டாய்
கோடிகா அமர்ந்துறையுங் குழகன் தானே. 4

வாராந்த வனமுலையாள் பங்கன் கண்டாய்
மாற்பேறு காப்பா மகிழ்ந்தான் கண்டாய்
போரார்ந்த மால்விடையொன் றூர்வான் கண்டாய்
புகலூரை அகலாத புனிதன் கண்டாய்
நீரார்ந்த நிமிர்சடையொன் றுடையான் கண்டாய்
நினைப்பார்தம் வினைப்பாரம் இழிப்பான் கண்டாய்
கூரார்ந்த மூவிலைவேற் படையான் கண்டாய்
கோடிகா அமர்ந்துறையுங் குழகன் தானே. 5

கடிமலிந்த மலர்க்கொன்றைச் சடையான் கண்டாய்
கண்ணப்ப விண்ணப்புக் கொடுத்தான் கண்டாய்
படிமலிந்த பல்பிறவி யறுப்பான் கண்டாய்
பற்றற்றார் பற்றவனாய் நின்றான் கண்டாய்
அடிமலிந்த சிலம்பலம்பத் திரிவான் கண்டாய்
அமரர்கணந் தொழுதேத்தும் அம்மான் கண்டாய்
கொடிமலிந்த மதில்தில்லைக் கூத்தன் கண்டாய்
கோடிகா அமர்ந்துறையுங் குழகன் தானே. 6

உழையாடு கரதலமொன் றுடையான் கண்டாய்
ஒற்றியூ ரொற்றியா வுடையான் கண்டாய்
கழையாடு கழுக்குன்றம் அமர்ந்தான் கண்டாய்
காளத்திக் கற்பகமாய் நின்றான் கண்டாய்
இழையாடும் ஒண்புயத்த இறைவன் கண்டாய்
என்னெஞ்சத் துள்நீங்கா எம்மான் கண்டாய்
குழையாட நடமாடுங் கூத்தன் கண்டாய்
கோடிகா அமர்ந்துறையுங் குழகன் தானே. 7

படமாடு பன்னகக்கச் சசைத்தான் கண்டாய்
பராய்த்துறையும் பாசூரும் மேயான் கண்டாய்
நடமாடி ஏழுலகுந் திரிவான் கண்டாய்
நான்மறையின் பொருள் கண்டாய் நாதன் கண்டாய்
கடமாடு களிறுரித்த கண்டன் கண்டாய்
கயிலாயம் மேவி யிருந்தான் கண்டாய்
குடமாடியிடமாகக் கொண்டான் கண்டாய்
கோடிகா அமர்ந்துறையுங் குழகன் தானே. 8

திருச்சிற்றம்பலம்

38. திருமங்கலக்குடி

திருஞானசம்பந்த சுவாமிகள்

பண் – இந்தளம் 2–ம் திருமுறை

திருச்சிற்றம்பலம்

சீரி னார்மணி யும்மகில் சந்துஞ்செ றிவரை
வாரி நீர்வரு பொன்னிவ டமங்க லக்குடி
நீரின் மாமுனி வன்நெடுங் கைகொடு நீர்தனைப்
பூரித் தாட்டியர்ச் சிக்கஇ ருந்த புராணனே. 1

பணங்கொ ளாடர வல்குல்நல் லார்பயின் றேத்தவே
மணங்கொள் மாமயி லாலும்பொ ழில்மங்க லக்குடி
இணங்கி லாமறை யோரிமை யோர் தொழு தேத்திட
அணங்கி னோடிருந் தானடி யேசர ணாகுமே. 2

கருங்கை யானையின் ஈருரி போர்த்திடு கள்வனார்
மருங்க லாம்மண மார்பொழில் சூழ்மங்க லக்குடி
அரும்பு சேர்மலர்க் கொன்றையி னானடி யன்பொடு
விரும்பி யேத்தவல் லார்வினை யாயின வீடுமே. 3

பறைபி னோடொலி பாடலும் ஆடலும் பாரிடம்
மறையி னோடியல் மல்கிடு வார்மங்க லக்குடிக்
குறைவி லாநிறை வேகுண மில்குண மேயென்று
முறையி னால்வணங் கும்மவர் முன்னெறி காண்பரே. 4

ஆனி லங்கிளர் ஐந்தும் அவிர்முடி யாடியோர்
மானி லங்கையி னான்மண மார்மங்க லக்குடி
ஊனில் வெண்டலைக் கையுடை யானுயர் பாதமே
ஞான மாகநின் றேத்தவல் லார்வினை நாசமே. 5

தேனு மாயமு தாகிநின் றான்தெளி சிந்தையுள்
வானு மாய்மதி சூடவல் லான்மங்க லக்குடி
கோனை நாடொறும் ஏத்திக்கு ணங்கொடு கூறுவார்
ஊன மானவை போயறும் உய்யும்வ கையதே. 6

வேள் படுத்திடு கண்ணினன் மேருவில் லாகவே
வாள ரக்கர்பு ரமெரித்தான்மங்க லக்குடி

ஆளும் ஆதிப்பி ரானடி கள்ளடைந் தேத்தவே
கோளு நாளவை போயறுங் குற்றமில் லார்களே. 7

பொலியும் மால்வரை புக்கெடுத் தான்புகழ்ந் தேத்திட
வலியும் வாளொடு நாள்கொடுத் தான்மங்க லக்குடிப்
புலியின் ஆடையி னானடி யேத்திடும் புண்ணியர்
மலியும் வானுல கம்புக வல்லவர் காண்மினே. 8

ஞாலம் முன்படைத் தான்நளிர் மாமலர் மேலயன்
மாலுங் காணவொ ணாஎரி யான்மங்க லக்குடி
ஏல வார்குழ லாளொரு பாகமி டங்கொடு
கோல மாகிநின் றான்குணங் கூறுங் குணமதே. 9

மெய்யின் மாசினர் மேனிவி ரிதுவ ராடையர்
பொய்யை விட்டிடும் புண்ணியர் சேர்மங்க லக்குடிச்
செய்ய மேனிச்செ ழும்புனற் கங்கைசெ றிசடை
ஐயன் சேவடி யேத்தவல் லார்க்கழ காகுமே. 10

மந்த மாம்பொழில் சூழ்மங்க லக்குடி மன்னிய
எந்தை யையெழி லார்பொழிற் காழியர் காவலன்
சிந்தை செய்தடி சேர்த்திடு ஞானசம் பந்தன்சொல்
முந்தி யேத்தவல் லாரிமை யோர்முத லாவரே. 11

திருச்சிற்றம்பலம்

திருநாவுக்கரசு சுவாமிகள்

திருக்குறுந்தொகை 5-ம் திருமுறை

திருச்சிற்றம்பலம்

தங்க லப்பிய தக்கன் பெருவேள்வி
அங்க லக்கழித் தாரருள் செய்தவன்
கொங்க லர்க்குழல் கொம்பனை யாளொடு
மங்க லக்குடி மேய மணாளனே. 1

காவி ரியின் வடகரைக் காண்டகு
மாவி ரியும்பொழில் மங்க லக்குடித்
தேவ ரியும்பி ரமனுந் தேடொணாத்
தூவெ ரிச்சுடர்ச் சோதியுட் சோதியே. 2

மங்க லக்குடி ஈசனை மாகாளி
வெங்க திர்ச்செல்வன் விண்ணொடு மண்ணும்நேர்
சங்கு சக்கர தாரி சதுர்முகன்
அங்க கத்திய னும்அர்ச்சித் தாரன்றே. 3

மஞ்சன் வார்கடல் சூழ்மங் கலக்குடி
நஞ்ச மாரமு தாக நயந்து கொண்(டு)
அஞ்சு மாடல் அமர்ந்தடி யேனுடை
நெஞ்ச மாலய மாக்கொண்டு நின்றதே. 4

செல்வம் மல்கு திருமங் கலக்குடி
செல்வம் மல்கு சிவநிய மத்தராய்ச்
செல்வம் மல்கு செழுமறை யோர்தொழச்
செல்வன் தேவியொ டுந்திகழ் கோயிலே. 5

மன்னு சீர்மங் கலக்குடி மன்னிய
பின்னு வார்சடைப் பிஞ்ஞகன் தன்பெயர்
உன்னு வாரும் உரைக்கவல் லார்களும்
துன்னு வார்நன் னெறிதொடர் வெய்தவே. 6

மாத ரார்மரு வும்மங் கலக்குடி
ஆதி நாயகன் அண்டர்கள் நாயகன்
வேத நாயகன் வேதியர் நாயகன்
பூத நாயகன் புண்ணிய மூர்த்தியே. 7

வண்டு சேர்பொழில் சூழ்மங் கலக்குடி
விண்ட தாதையைத் தாளற வீசிய
சண்ட நாயக னுக்கருள் செய்தவன்
துண்ட மாமதி சூடிய சோதியே. 8

கூசு வாரலர் குண்டர் குணமிலர்
நேச மேது மிலாதவர் நீசர்கள்
மாசர் பால்மங் கலக்குடி மேவிய
ஈசன் வேறு படுக்கஉய்ந் தேனன்றே. 9

மங்க லக்குடி யான்கயி லைம்மலை
அங்க லைத்தெடுக் குற்றஅ ரக்கர்கோன்
தங்க ரத்தொடு தாள்தலை தோள்தகர்ந்(து)
அங்க லத்தழு துய்ந்தனன் தானன்றே.

திருச்சிற்றம்பலம் 10

39. திருப்பனந்தாள்

திருஞானசம்பந்த சுவாமிகள்

பண் – பஞ்சமம் 3–ம் திருமுறை

திருச்சிற்றம்பலம்

கண்பொலி நெற்றியினான் திகழ் கையிலோர் வெண்மழுவான்
பெண்புணர் கூறுடையான் மிகு பீடுடை மால்விடையான்
விண்பொலி மாமதிசேர் தரு செஞ்சடை வேதியனூர்
தண்பொழில் சூழ்பனந்தாள் திருத் தாடகை யீச்சரமே. 1

விரித்தவன் நான்மறையை மிக்க விண்ணவர் வந்திறைஞ்ச
எரித்தவன் முப்புரங்கள் இய லேழுல கில்லுயிரும்
பிரித்தவன் செஞ்சடைமேல் நின்ற பேரொலி வெள்ளந்தன்னைத்
தரித்தவன் ஊர்பனந்தாள் திருத் தாடகை யீச்சரமே. 2

உடுத்தவன் மானுரிதோல் கழ லுள்கவல் லார்வினைகள்
கெடுத்தருள் செய்யவல்லான் கிளர் கீதமொர் நான்மறையான்
மடுத்தவன் நஞ்சமுதா மிக்க மாதவர் வேள்வியைமுன்
தடுத்தவன் ஊர்பனந்தாள் திருத் தாடகை யீச்சரமே. 3

சூழ்தரு வல்வினையும் முடல் தோன்றிய பல்பிணியும்
பாழ்பட வேண்டுதிரேல் மிக ஏத்துமின் பாய்புனலும்
போழிள வெண்மதியும் அனல் பொங்கர வும்புனைந்த
தாழ்சடை யான்பனந்தாள் திருத் தாடகை யீச்சரமே. 4

விடம்படு கண்டத்தினாள் இருள் வெள்வளை மங்கையொடும்
நடம்புரி கொள்கையினான் அவன் எம்மிறை சேருமிடம்
படம்புரி நாகமொடு திரை பன்மணி யுங்கொணரும்
தடம்புனல் சூழ்பனந்தாள் திருத் தாடகை யீச்சரமே. 5

விடையுயர் வெல்கொடியான் அடி விண்ணொடு
மண்ணுமெல்லாம்
புடைபட ஆடவல்லான் மிகு பூதமார் பல்படையான்
தொடைநவில் கொன்றையொடு வன்னி துன்னெருக்
கும்மணிந்த
சடையவன் ஊர்பனந்தாள் திருத் தாடகை யீச்சரமே. 6

மலையவன் முன்பயந்த மட மாதையொர் கூறுடையான்
சிலைமலி வெங்கணையாற் புரம் மூன்றவை செற்றுகந்தான்
அலைமலி தண்புனலும் மதி ஆடர வும்மணிந்த
தலையவன் ஊர்பனந்தாள் திருத் தாடகை யீச்சரமே. 7

செற்றரக் கன்வலியைத் திரு மெல்விர லால்அடர்த்து
முற்றும்வெண் ணீறணிந்த திரு மேனியன் மும்மையினுன்
புற்றர வம்புலியின் னுரி தோலொடு கோவணமும்
தற்றவன் ஊர்பனந்தாள் திருத் தாடகை யீச்சரமே. 8

வின்மலை நாணரவம் மிகு வெங்களல் அம்பதனுல்
புன்மைசெய் தானவர்தம் புரம் பொன்றுவித் தான்புனிதன்
நன்மலர் மேலயனும் நண்ணும் நாரண னும்மறியாத்
தன்மையன் ஊர்பனந்தாள் திருத் தாடகை யீச்சரமே. 9

ஆதர் சமணரொடும் மடை யைந்துகில் போர்த்துழலும்
நீதர் உரைக்குமொழி யவை கொள்ளன்மின் நின்மலனூர்
போதவிழ் பொய்கை தனுள் திகழ் புள்ளிரி யப்பொழில்வாய்த்
தா தவி ழும்பனந்தாள் திருத் தாடகை யீச்சரமே. 10

தண்வயல் சூழ்பனந்தாள் திருத் தாடகை யீச்சரத்துக்
கண்ணய லேபிறையான் அவன் றன்னைமுன் காழியர்கோன்
நண்ணிய செந்தமிழால் மிகு ஞானசம் பந்தன்நல்ல
பண்ணியல் பாடல்வல்லார் அவர் தம்வினை பற்றறுமே. 11

திருச்சிற்றம்பலம்

40. திருஆப்பாடி

திருநாவுக்கரசு சுவாமிகள்

பண் – திருநேரிசை 4–ந் திருமுறை

திருச்சிற்றம்பலம்

கடலகம் ஏழி னேடும் புவனமுங் கலந்த விண்ணும்
உடலகத் துயிரும் பாரும் ஒள்ளழ லாகி நின்று
தடமலர்க் கந்த மாலை தண்மதி பகலு மாகி
மடலவிழ் கொன்றை சூடி மன்னும்ஆப் பாடி யாரே. 1

ஆதியும் அறிவு மாகி அறிவினுட் செறிவு மாகிச்
சோதியுட் சுடரு மாகித் தூநெறிக் கொருவ னாகிப்
பாதியிற் பெண்ணு மாகிப் பரவுவார் பாங்க ராகி
வேதியர் வாழுஞ் சேய்ஞல் விரும்புமாப் பாடி யாரே. 2

எண்ணுடை இருக்கு மாகி யிருக்கினுட் பொருளு மாகிப்
பண்ணொடு பாடல் தன்னைப் பரவுவார் பாங்க ராகிக்
கண்ணொரு நெற்றி யாகிக் கருதுவார் கருத லாகாப்
பெண்ணொரு பாக மாகிப் பேணுமாப் பாடி யாரே. 3

அண்டமார் அமரர் கோமான் ஆதிஎம் அண்ணல் பாதங்
கொண்டவன் குறிப்பி னாலே கூப்பினான் தாப ரத்தைக்
கண்டவன் தாதை பாய்வான் காலற எறியக் கண்டு
சண்டியார்க் கருள்கள் செய்த தலைவர்ஆப் பாடி யாரே. 4

சிந்தையுந் தெளிவு மாகித் தெளிவினுட் சிவமு மாகி
வந்தநற் பயனு மாகி வாள்நுதல் பாக மாகி
மந்தமாம் பொழில்கள் சூழ்ந்த மண்ணித்தென் கரைமேல் மன்னி
அந்தமோ டளவி லாத அடிகள்ஆப் பாடி யாரே. 5

வன்னிவா ளரவு மத்தம் மதியமும் ஆறுஞ் சூடி
மின்னிய உருவாஞ் சோதி மெய்ப்பொருட் பயனு மாகிக்
கன்னியோர் பாக மாகிக் கருதுவார் கருத்து மாகி
இன்னிசை தொண்டர் பாட இருந்தஆப் பாடி யாரே. 6

உள்ளுமாய்ப் புறமு மாகி உருவுமாய் அருவு மாகி
வெள்ளமாய்க் கரையு மாகி விரிகதிர் ஞாயி றாகிக்
கள்ளமாய்க் கள்ளத் துள்ளார் கருத்துமாய் அருத்த மாகி
அள்ளுவார்க் கள்ளல் செய்திட் டிருந்தஆப் பாடி யாரே. 7

மயக்கமாய்த் தெளிவு மாகி மால்வரை வளியு மாகித்
தியக்கமாய் ஒருக்க மாகிச் சிந்தையுள் ஒன்றி நின்று
இயக்கமாய் இறுதி யாகி எண்டிசைக் கிறைவ ராகி
அயக்கமாய் அடக்க மாய ஐவர்ஆப் பாடி யாரே. 8

ஆரழல் உருவ மாகி அண்டமேழ் கடந்த எந்தை
பேரொளி உருவி ஞனைப் பிரமனும் மாலுங் காணுச்
சீரவை பரவி யேத்திச் சென்றடி வணங்கு வார்க்குப்
பேரருள் அருளிச் செய்வார் பேணும்ஆப் பாடி யாரே. 9

திண்டிறல் அரக்க னேடிச் சீகயி லாயந் தன்னை
எண்டிறல் இலனு மாகி எடுத்தலும் ஏழை அஞ்ச
விண்டிறல் நெரிய வூன்றி மிகக்கடுத் தலறி வீழப்
பண்டிறல் கேட்டு கந்த பரமர்ஆப் பாடி யாரே. 10

திருச்சிற்றம்பலம்

41. திருச்சேய்ஞலூர்

திருஞானசம்பந்த சுவாமிகள்

பண் – பழந்தக்கராகம் -ம் திருமுறை

திருச்சிற்றம்பலம்

நூலடைந்த கொள்கையாலே நுன்னடி கூடுதற்கு
மாலடைந்த நால்வர்கேட்க நல்கிய நல்லறத்தை
ஆலடைந்த நீழல்மேவி யருமறை சொன்னதென்னே
சேலடைந்த தண்கழனிச் சேய்ஞலூர் மேயவனே. 1

நீறடைந்த மேனியின்கண் நேரிழை யாளொருபால்
கூறடைந்த கொள்கையன்றிக் கோல வளர்சடைமேல்
ஆறடைந்த திங்கள்சூடி யரவம் அணிந்ததென்னே
சேறடைந்த தண்கழனிச் சேய்ஞலூர் மேயவனே. 2

ஊனடைந்த வெண்டலையி னேடு பலிதிரிந்து
கானடைந்த பேய்களோடு பூதங் கலந்துடனே
மானடைந்த நோக்கிகாண மகிழ்ந்தெரி யாடலென்னே
தேனடைந்த சோலைமல்கு சேய்ஞலூர் மேயவனே. 3

வீணடைந்த மும்மதிலும் வில்மலை யாவரவின்
நாணடைந்த வெஞ்சரத்தால் நல்லெரி யூட்டலென்னே
பாணடைந்த வண்டுபாடும் பைம்பொழில் சூழ்ந்தழகார்
சேணடைந்த மாடமல்கு சேய்ஞலூர் மேயவனே. 4

பேயடைந்த காடிடமாப் பேணுவ தன்றியும்போய்
வேயடைந்த தோளியஞ்ச வேழம் உரித்ததென்னே
வாயடைந்த நான்மறையா றங்கமோ டைவேள்வித்
தீயடைந்த செங்கையாளர் சேய்ஞலூர் மேயவனே. 5

காடடைந்த ஏனமொன்றின் காரண மாகிவந்து
வேடடைந்த வேடனாகி விசயனொ டெய்ததென்னே
கோடடைந்த மால்களிற்றுக் கோச்செங் ணாற்கருள்செய்
சேடடைந்த செல்வர்வாழுஞ் சேய்ஞலூர் மேயவனே. 6

பீரடைந்த பாலதாட்டப் பேணா தவன்தாதை
வேரடைந்து பாய்ந்ததாளை வேர்த்தடிந் தான்றனக்குத்
தாரடைந்த மாலைசூட்டித் தலைமை வகுத்ததென்னே
சீரடைந்த கோயில்மல்கு சேய்ஞலூர் மேயவனே. 7

மாவடைந்த தேரரக்கன் வலிதொலை வித்தவன்றன்
நாவடைந்த பாடல்கேட்டு நயந்தருள் செய்ததென்னே
பூவடைந்த நான்முகன்போற் பூசுரர் போற்றிசெய்யும்
சேவடைந்த வூர்தியானே சேய்ஞலூர் மேயவனே. 8

காரடைந்த வண்ணனோடு கனக மணையானும்
பாரடைந்தும் விண்பறந்தும் பாதமு டிகாணார்
சீரடைந்து வந்துபோற்றச் சென்றருள் செய்ததென்னே
தேரடைந்த மாமறுகிற் சேய்ஞலூர் மேயவனே. 9

மாசடைந்த மேனியாரும் மனந்திரி யாதகஞ்சி
நேசடைந்த வூனினாரும் நேசமி லாததென்னே
வீசடைந்த தோகையாட விரைகம ழும்பொழில்வாய்த்
தேசடைந்த வண்டுபாடுஞ் சேய்ஞலூர் மேயவனே. 10

சேயடைந்த சேய்ஞலூரிற் செல்வன சீர்பரவித்
தோயடைந்த வண்வயல்சூழ் தோணி புரத்தலைவன்
சாயடைந்த ஞானமல்கு சம்பந்தன் இன்னுரைகள்
வாயடைந்து பாடவல்லார் வானுல காள்பவரே. 11

திருச்சிற்றம்பலம்

42. திருந்துதேவன்குடி

திருஞானசம்பந்த சுவாமிகள்

பண் - கொல்லி　　3-ம் திருமுறை

திருச்சிற்றம்பலம்

மருந்துவேண் டில்லிவை மந்திரங் கள்ளிவை
புரிந்துகேட் கப்படும் புண்ணியங் கள்ளிவை
திருந்துதே வன்குடித் தேவர்தே வெய்திய
அருந்தவத் தோர்தொழும் அடிகள்வே டங்களே. 1

வீதிபோக் காவன வினையைவீட் டுவ்வன
ஓதியோர்க் கப்படாப் பொருளையோர் விப்பன
தீதில்தே வன்குடித் தேவர்தே வெய்திய
ஆதியந் தம்மிலா அடிகள்வே டங்களே. 2

மானமாக் குவ்வன மாசுநீக் குவ்வன
வானையுள் கச்செலும் வழிகள்காட் டுவ்வன
தேனும்வண் டும்மிசை பாடுந்தே வன்குடி
ஆனஞ்சா டும்முடி யடிகள்வே டங்களே. 3

செவிகளார் விப்பன சிந்தையுட் சேர்வன
கவிகள்பா டுவ்வன கண்குளிர் விப்பன
புவிகள்பொங் கப்புனல் பாயுந்தே வன்குடி
அவிகளுய்க் கப்படும் அடிகள்வே டங்களே. 4

விண்ணுலா வுந்நெறி வீடுகாட் டுந்நெறி
மண்ணுலா வுந்நெறி மயக்கந்தீர்க் குந்நெறி
தெண்ணிலா வெண்மதி தீண்டுதே வன்குடி
அண்ணலான் ஏறுடை யடிகள்வே டங்களே. 5

பங்கமென் னப்படர் பழிகளென் னப்படா
புங்கமென் னப்படர் புகழ்களென் னப்படும்
திங்கள்தோ யும்பொழில் தீண்டுதே வன்குடி
அங்கமா றுஞ்சொன்ன அடிகள்வே டங்களே. 6

கரைதலொன் றும்மிலை கருதவல் லார்தமக்
குரையிலூ னம்மிலை உலகினின் மன்னுவர்
திரைகள்பொங் கப்புனல் பாயுந்தே வன்குடி
அரையில்வெண் கோவணத் தடிகள்வே டங்களே. 7

உலகமுட் குந்திறல் லுடையரக் கன்வலி
விலகுபூ தக்கணம் வெருட்டும்வே டத்தின
திலகமா ரும்பொழில் சூழ்ந்ததே வன்குடி
அலர்தயங் கும்முடி யடிகள்வே டங்களே· 8

துளக்கமில் லாதன தூயதோற் றத்தன
விளக்கமாக் குவ்வன வெறிவண்டா ரும்பொழில்
திளக்குந்தே வன்குடித் திசைமுக னேடுமால்
அளக்கவொண் ணாவண்ணத் தடிகளவே டங்களே. 9

செருமரு தண்துவர்த் தேர்அமண் ஆதர்கள்
உருமரு வப்படாத் தொழும்பர்தம் உரைகொளேல்
திருமரு வும்பொய்கை சூழ்ந்ததே வன்குடி
அருமருந் தாவன அடிகள்வே டங்களே. 10

சேடர்தே வன்குடித் தேவர்தே வன்றனை
மாடமோங் கும்பொழில் மல்குதண் காழியான்
நாடவல் லதமிழ் ஞானசம் பந்தன
பாடல்பத் தும்வல்லார்க் கில்லையாம் பாவமே. 11

திருச்சிற்றம்பலம்

43. திருவியலூர்

திருஞானசம்பந்த சுவாமிகள்

பண் - நட்டபாடை 1-ம் திருமுறை

திருச்சிற்றம்பலம்

குரவங்கமழ் நறுமென்குழல் அரிவையவள் வெருவப்
பொருவெங்கரி படவென்றதன் உரிவையுடல் அணிவோன்
அரவும்மலை புனலும்மிள மதிநாகுங்கு தலையும்
விரவுஞ்சடை யடிகட்கிடம் விரிநீர்விய லூரே. 1

ஏரூர்தரும் ஒருவன்பல வுருவன்னிலை யானான்
ஆரூர்தரு சடையன்னன லுருவன்புரி வுடையான்
மாரூர்புரம் எரியச்சிலை வளைவித்தவன் மடவாள்
வீரூர்தர நின்றானிடம் விரிநீர்விய லூரே. 2

செம்மென்சடை யவைதாழ்வுற மடவார்மனை தோறும்
பெய்ம்மின்பலி யெனநின் றிசை பகர்வாரவ ரிடமாம்
உம்மென்றெழும் அருவித்திரள் வரைபற்றிட வுரைமேல்
விம்மும்பொழில் கெழுவும்வயல் விரிநீர்விய லூரே. 3

அடைவாகிய அடியார்தொழ அலரோன் தலை யதனில்
மடவாரிடு பலிவந்துண லுடையானவ னிடமாம்
கடையார் தர அகிலார்கழை முத்தந்நிரை சிந்தி
மிடையார்பொழில் புடைசூழ்தரு விரிநீர்விய லூரே. 4

எண்ணார்தரு பயனாயய னவனாய்மிகு கலையாய்ப்
பண்ணார்தரு மறையாயுயர் பொருளாயிறை யவனாய்க்
கண்ணார் தரும் உருவாகிய கடவுள்ளிட மெனலாம்
விண்ணோரொடு மண்ணோர்தொழு விரிநீர்விய லூரே. 5

வசைவிற்கொடு வருவேடுவ னவனாய்நிலை யறிவான்
திசையுற்றவர் காணச்செரு மலைவான்நிலை யவனை
அசையப்பொரு தசையாவணம் அவனுக்குயர் படைகள்
விசையற்கருள் செய்தானிடம் விரிநீர்விய லூரே. 6

மானார்அர வுடையான் இர வுடையான் பகல்நட்டம்
ஊனார்தரும் உயிரானுயர் விசையான்விளை பொருள்கள்
தானாகிய தலைவன்னென நினைவாரவ ரிடமாம்
மேனாடிய விண்ணோர்தொழும் விரிநீர்விய லூரே. 7

பொருவாரெனக் கெதிராரெனப் பொருப்பையெடுத் தான்றன்
கருமால்வரை கரந்தோளுரங் கதிர்நீள்முடி நெரிந்து
சிரமாயின கதறச்செறி கழல்சேர்திரு வடியின்
விரலாலடர் வித்தானிடம் விரிநீர்விய லூரே. 8

வளம்பட்டலர் மலர்மேலயன் மாலும்மொரு வகையால்
அளம்பட்டறி வொண்ணாவகை அழலாகிய அண்ணல்
உளம்பட்டெழு தழல்தூணதன் நடுவேயொரு வுருவம்
விளம்பட்டருள் செய்தானிடம் விரிநீர்விய லூரே. 9

தடுக்கால் உடல் மறைப்பாரவர் தவர்சீவர மூடிப்
பிடக்கேயுரை செய்வாரொடு பேணார்நமர் பெரியோர்
கடற்சேர்தரு விடமுண்டமு தமரர்க்கருள் செய்த
விடைச்சேர்தரு கொடியானிடம் விரிநீர்விய லூரே. 10

விளங்கும்பிறை சடைமேலுடை விகிர்தன்விய லூரைத்
தளங்கொண்டதொர் புகலித்தகு தமிழ்ஞானசம் பந்தன்
துளங்கில்தமிழ் பரவித்தொழும் அடியாரவ ரென்றும்
விளங்கும்புக ழதனேடுயர் விண்ணும்முடை யாரே. 11

திருச்சிற்றம்பலம்

44. திருக்கொட்டையூர்

திருநாவுக்கரசு சுவாமிகள்

திருத்தாண்டகம் 6–ம் திருமுறை

திருச்சிற்றம்பலம்

கருமணிபோற் கண்டத் தழகன் கண்டாய்
கல்லால் நிழற்கீ ழிருந்தான் கண்டாய்
பருமணிமா நாகம் பூண்டான் கண்டாய்
பவளக்குன் றன்ன பரமன் கண்டாய்
வருமணிநீர்ப் பொன்னி வலஞ்சுழியான் கண்டாய்
மாதேவன் கண்டாய் வரதன் கண்டாய்
குருமணிபோல் அழகமருங் கொட்டை யூரிற்
கோடீச் சரத்துறையுங் கோமான் தானே. 1

கலைக்கன்று தங்கு கரத்தான் கண்டாய்
கலைபயில்வோர் ஞானக்கண் ஆனுன் கண்டாய்
அலைக்கங்கை செஞ்சடைமேல் ஏற்றுன் கண்டாய்
அண்ட கபாலத்தப் பாலான் கண்டாய்
மலைப்பண்டங் கொண்டு வருநீர்ப் பொன்னி
வலஞ்சுழியின் மேவிய மைந்தன் கண்டாய்
குலைத்தெங்கஞ் சோலைசூழ் கொட்டை யூரிற்
கோடீச் சரத்துறையுங் கோமான் தானே. 2

செந்தா மரைப்போ தணிந்தான் கண்டாய்
சிவன் கண்டாய் தேவர் பெருமான்கண்டாய்
பந்தாடு மெல்விரலாள் பாகன் கண்டாய்
பாலோடு நெய்தயிர்தே ஞடி கண்டாய்
மந்தாரம் உந்தி வருநீர்ப் பொன்னி
வலஞ்சுழியின் மன்னு மணுளன் கண்டாய்
கொந்தார் பொழில்புடை சூழ் கொட்டையூரிற்
கோடீச் சரத்துறையுங் கோமான் தானே. 3

பொடியாடு மேனிப் புனிதன் கண்டாய்
புட்பாகற் காழி கொடுத்தான் கண்டாய்
இடியார் கடுமுழக்கே றூர்ந்தான் கண்டாய்
எண் திசைக்கும் விளக்காகி நின்றான் கண்டாய்
மடலார் திரைபுரளு காவிரி வாய்
வலஞ்சுழியின் மேவிய மைந்தன் கண்டாய்
கொடியாடு நெடுமாடக் கொட்டை யூரிற்
கோடீச் சரத்துறையுங் கோமான் தானே. 4

அக்கரவம் அரைக்கசைத்த அம்மான் கண்டாய்
அருமறைக ளாறங்க மானான் கண்டாய்
தக்கனது பெருவேள்வி தகர்த்தான் கண்டாய்
சதாசிவன்காண் சலந்தரனைப் பிளந்தான் கண்டாய்
மைக்கொண் மயில் தழைகொண்டு வருநீர்ப் பொன்னி
வலஞ்சுழியான் கண்டாய் மழுவன் கண்டாய்
கொக்கமரும் வயல்புடைசூழ் கொட்டை யூரிற்
கோடீச் சரத்துறையுங் கோமான் தானே. 5

சண்டனை நல்லண்டர்தொழச் செய்தான் கண்டாய்
சதாசிவன் கண்டாய் சங்கரன்றான் கண்டாய்
தொண்டர் பலர்தொழுதேத்துங் கழலான் கண்டாய்
சுடரொளியால் தொடர்வரிதாய் நின்றான் கண்டாய்
மண்டுபுனல் பொன்னிவலஞ் சுழியான் கண்டாய்
மாமுனிவர் தம்முடைய மருந்து கண்டாய்
கொண்டல்தவழ் கொடிமாடக் கொட்டையூரிற்
கோடீச் சரத்துறையுங் கோமான் தானே. 6

அணவரியான் கண்டாய் அமலன் கண்டாய்
அவிநாசி கண்டாய் அண்டத்தான் கண்டாய்
பணமணிமா நாக முடையான் கண்டாய்
பண்டரங்கன் கண்டாய் பகவன் கண்டாய்
மணல்வருநீர்ப் பொன்னிவலஞ் சுழியான் கண்டாய்
மாதவற்கும் நான்முகற்கும் வரதன் கண்டாய்
குணமுடைநல் லடியார்வாழ் கொட்டை யூரிற்
கோடீச் சரத்துறையுங் கோமான் தானே, 7

விரைகமழு மலர்க்கொன்றைத் தாரான் கண்டாய்
வேதங்கள் தொழநின்ற நாதன் கண்டாய்
அரையதனிற் புள்ளியத ளுடையான் கண்டாய்
அழலாடி கண்டாய் அழகன் கண்டாய்
வருதிரைநீர்ப் பொன்னிவலஞ் சுழியான் கண்டாய்
வஞ்சமனத் தவர்க்கரிய மைந்தன் கண்டாய்
குரவமரும் பொழில்புடைசூழ் கொட்டையூரிற்
கோடீச் சரத்துறையுங் கோமான் தானே. 8

தளங்கிளருந் தாமரையா தனத்தான் கண்டாய்
தசரதன்தன் மகன்அசைவு தவிர்த்தான் கண்டாய்
இளம்பிறையும் முதிர்சடைமேல் வைத்தான் கண்டாய்
எட்டெட் டிருங்கலையு மானான் கண்டாய்
வளங்கிளர்நீர்ப் பொன்னிவலஞ் சுழியான் கண்டாய்
மாமுனிகள் தொழுதெழுபொற் கழலான் கண்டாய்
குளங்குளிர்செங் குவளைகிளர் கொட்டை யூரிற்
கோடீச் சரத்துறையுங் கோமான் தானே. 9

விண்டார் புரமூன் றெரித்தான் கண்டாய்
விலங்கலில் வல்லரக்க னுடலடர்த்தான் கண்டாய்
தண்தா மரையானும் மாலுந் தேடத்
தழற்பிழம்பாய் நீண்ட கழலான் கண்டாய்
வண்டார் பூஞ்சோலை வலஞ்சுழியான் கண்டாய்
மாதேவன் கண்டாய் மறையோ டங்கம்
கொண்டாடு வேதியர்வாழ் கொட்டை யூரிற்
கோடீச் சரத்துறையுங் கோமான் தானே. 10

திருச்சிற்றம்பலம்

45. திருஇன்னம்பர்

திருஞானசம்பந்த சுவாமிகள்

திருமுக்கால் – பண் – சாதாரி 3-ம் திருமுறை

திருச்சிற்றம்பலம்

எண்டிசைக் கும்புகழ் இன்னம்பர் மேவிய
வண்டிசைக் குஞ்சடை யீரே
வண்டிசைக் குஞ்சடை யீருமை வாழ்த்துவார்
தொண்டிசைக் குந்தொழி லோரே. 1

யாழ்நரம் பின்னிசை இன்னம்பர் மேவிய
தாழ்தரு சடைமுடி யீரே
தாழ்தரு சடைமுடி யீருமைச் சார்பவர்
ஆழ்துயர் அருவினை யிலரே. 2

இளமதி நுதலியொ டின்னம்பர் மேவிய
வளமதி வளர்சடை யீரே
வளமதி வளர்சடை யீருமை வாழ்த்துவார்
உளமதி மிகவுடை யோரே. 3

இடிகுரல் இசைமுரல் இன்னம்பர் மேவிய
கடிகமழ் சடைமுடி யீரே
கடிகமழ் சடைமுடி யீரும கழல்தொழும்
அடியவர் அருவினை யிலரே. 4

இமையவர் தொழுதெழும் இன்னம்பர் மேவிய
உமையொ.ரு கூறுடை யீரே
உமையொரு கூறுடை யீருமை உள்குவார்
அமைகில ராகிலர் அன்பே. 5

எண்ணரும் புகழுடை இன்னம்பர் மேவிய
தண்ணருஞ் சடைமுடி யீரே
தண்ணருஞ் சடைமுடி யீருமைச் சார்பவர்
விண்ணவர் அடைவுடை யோரே. 6

எழில்திக ழும்பொழில் இன்னம்பர் மேவிய
நிழல்திகழ் மேனியி னீரே
நிழல்திகழ் மேனியி னீருமை நினைபவர்
குழறிய கொடுவினை யிலரே. 7

ஏத்தரும் புகழணி இன்னம்பர் மேவிய
தூர்த்தனைத் தொலைவுசெய் தீரே
தூர்த்தனைத் தொலைவுசெய் தீருமைத் தொழுபவர்
கூர்த்தநற் குணமுடை யோரே. 8

இயலுளோர் தொழுதெழும் இன்னம்பர் மேவிய
அயனுமால் அறிவரி யீரே
அயனுமால் அறிவரி யீரும தடிதொழும்
இயலுளார் மறுபிறப் பிலரே. 9

ஏரமர் பொழிலணி இன்னம்பர் மேவிய
தேரமண் சிதைவுசெய் திரே
தேரமண் சிதைவுசெய் திருமைச் சேர்பவர்
ஆர்துயர் அருவினை யிலரே. 10

ஏடமர் பொழிலணி இன்னம்பர் ஈசனை
நாடமர் ஞானசம் பந்தன்
நாடமர் ஞானசம் பந்தன நற்றமிழ்
பாடவல் லார்பழி யிலரே. 11

திருச்சிற்றம்பலம்

திருநாவுக்கரசு சுவாமிகள்

திருநேரிசை 4-ம் திருமுறை

திருச்சிற்றம்பலம்

விண்ணவர் மகுட கோடி மிடைந்தசே வடியார் போலும்
பெண்ணொரு பாகர் போலும் பேடலி யாணர் போலும்
வண்ணமால் அயனுங் காணு மால்வரை எரியர் போலும்
எண்ணுரு வநேகர் போலும் இன்னம்பர் ஈச னாரே. 1

பன்னிய மறையர் போலும் பாம்பரை யுடையர் போலும்
துன்னிய சடையர் போலும் தூமதி மத்தர் போலும்
மன்னிய மழுவர் போலும் மாதிடம் மகிழ்வர் போலும்
என்னையும் உடையர் போலும் இன்னம்பர் ஈச னாரே. 2

மறியொரு கையர் போலும் மாதுமை யுடையர் போலும்
பறிதலைப் பிறவி நீக்கிப் பணிகொள வல்லர் போலும்
செறிவுடை அங்க மாலை சேர்திரு வுருவர் போலும்
எறிபுனற் சடையர் போலும் இன்னம்பர் ஈச னாரே. 3

விடமலி கண்டர் போலும் வேள்வியை அழிப்பர் போலும்
கடவுநல் விடையர் போலுங் காலனைக் காய்வர் போலும்
படமலி அரவர் போலும் பாய்புலித் தோலர் போலும்
இடர்களைந் தருள்வர் போலும் இன்னம்பர் ஈச னாரே. 4

அளிமலர்க் கொன்றை துன்றும் அவிர்சடை யுடையர் போலும்
களிமயிற் சாய லோடுங் காமனை விழிப்பர் போலும்
வெளிவளர் உருவர் போலும் வெண்பொடி யணிவர் போலும்
எளியவர் அடியர்க் கென்றும் இன்னம்பர் ஈச னாரே. 5

கணையமர் சிலையர் போலுங் கரியுரி உடையர் போலும்
துணையமர் பெண்ணர் போலுந் தூமணிக் குன்றர் போலும்
அணையுடை யடியர் கூடி அன்பொடு மலர்கள் தூவும்
இணையடி உடையர் போலும் இன்னம்பர் ஈச னாரே. 6

பொருப்பமர் புயத்தர் போலும் புனலணி சடையர் போலும்
மருப்பிள வாமை தாங்கு மார்பில்வெண் ணூலர் போலும்
உருத்திர மூர்த்தி போலும் உணர்விலார் புரங்கள் மூன்றும்
எரித்திடு சிலையர் போலும் இன்னம்பர் ஈச னாரே. 7

காடிடம் உடையர் போலும் கடிகுரல் விளியர் போலும்
வேடுரு வுடையர் போலும் வெண்மதிக் கொழுந்தர் போலும்
கோடலர் வன்னி தும்பை கொக்கிற கலர்ந்த கொன்றை
ஏடமர் சடையர் போலும் இன்னம்பர் ஈச னாரே. 8

காறிடு விடத்தை யுண்ட கண்டர்எண் டோளர் போலும்
நீறுடை உருவர் போலும் நினைப்பினை அரியர் போலும்
பாறுடைத் தலைகை ஏந்திப் பலிதிரிந் துண்பர் போலும்
ஏறுடைக் கொடியர் போலும் இன்னம்பர் ஈச னாரே. 9

ஆர்த்தெழு மிலங்கைக் கோனை அருவரை அடர்ப்பர் போலும்
பார்த்தனோ டமர்பொருது படைகொடுத் தருள்வர் போலும்
தீர்த்தமாங் கங்கை தன்னைத் திருச்சடை வைப்பர் போலும்
ஏத்தர மூலகும் வைத்தார் இன்னம்பர் ஈச னாரே. 10

திருச்சிற்றம்பலம்

திருவிருத்தம் 4-ம் திருமுறை

திருச்சிற்றம்பலம்

மன்னும் மலைமகள் கையால் வருடின மாமறைகள்
சொன்ன துறைதொறுந் தூப்பொரு ளாயின தூக்கமலத்
தன்ன வடிவின அன்புடைத் தொண்டர்க் கமுதரும்பி
இன்னல் களைவன இன்னம்ப ரான்றன் இணையடியே. 1

பைதற் பிணக்குழைக் காளிவெங் கோபம்பங் கப்படுப்பான்
செய்தற் கரிய திருநடஞ் செய்தன சீர்மறையோன்
உய்தற் பொருட்டு வெங்கூற்றை யுதைத்தன உம்பர்க்கெலாம்
எய்தற் கரியன இன்னம்ப ரான்றன் இணையடியே. 2

சுணங்குநின் றார்கொங்கை யாள்உமை சூடின தூமலரால்
வணங்கிநின் றும்பர்கள் வாழ்த்தின மன்னு மறைகள் தம்மில்
பிணங்கிநின் றின்னன என்றறி யாதன பேய்கணத்தோ
டிணங்கிநின் றாடின இன்னம்ப ரான்றன் இணையடியே. 3

ஆறொன் றியசம யங்களின் அவ்வவர்க்கப் பொருள்கள்
வேறொன் றிலாதன விண்ணோர் மதிப்பன மிக்குமவன்
மாறொன் றிலாதன மண்ணொடு விண்ணகம் மாய்ந்திடினும்
ஈறொன் றிலாதன இன்னம்ப ரான்றன் இணையடியே. 4

அரக்கர்தம் முப்புரம் அம்பொன்றி னாலட லங்கியின்வாய்க்
கரக்கமுன் வைதிகத் தேர்மிசை நின்றன கட்டுருவம்
பரக்கவெங் கானிடை வேடுரு வாயின பல்பதிதோ
றிரக்க நடந்தன இன்னம்ப ரான்றன் இணையடியே. 5

கீண்டும் கிளர்ந்தும்பொற் கேழல்முன் தேடின கேடுபடா
ஆண்டும் பலபல வூழியு மாயின ஆரணத்தின்
வேண்டும் பொருள்கள் விளங்கநின் றாடின மேவுசிலம்
பீண்டுங் கழலின இன்னம்ப ரான்றன் இணையடியே. 6

போற்றுந் தகையன பொல்லா முயலகன் கோபப்புன்மை
ஆற்றுந் தகையன ஆறு சமயத் தவரவரைத்
தேற்றுந் தகையன தேறிய தொண்டரைச் செந்நெறிக்கே
ஏற்றும் தகையன இன்னம்ப ரான்றன் இணையடியே. 7

பயப்புன்மை சேர்தரு பாவந் தவிர்ப்பன பார்ப்பதிதன்
குயம்பொன்மை மாமல ராகக் குலாவின கூடவொண்ணச்
சயம்புவென் றேதகு தாணுவென் றேசதுர் வேதங்கள்நின்
றியம்புங் கழலின இன்னம்ப ரான்றன் இணையடியே. 8

அயன்நெடு மால்இந் திரன்சந் தி ராதித்தர் அமரரெல்லாம்
சயசய என்றுமுப் போதும் பணிவன தண்கடல்சூழ்
வியன்நில முற்றுக்கும் விண்ணுக்கும் நாகர் வியன்நகர்க்கும்
இயபரமாவன இன்னம்ப ரான்றன் இணையடியே. 9

தருக்கிய தக்கன்றன் வேள்வி தகர்த்தன தாமரைப்போ
துருக்கிய செம்பொன் உவமன் இலாதன வொண்கயிலை
நெருக்கிய வாளரக் கன்தலை பத்தும் நெரித்தவன்றன்
இருக்கியல் பாயின இன்னம்ப ரான்றன் இணையடியே. 10

திருச்சிற்றம்பலம்

திருச்சிற்றம்பலம்

என்னி லாரும் எமக்கினி யாரில்லை
என்னி லும்மினி யாஞெரு வன்னுளன்
என்னு ளேஉயிர்ப் பாய்ப்புறம் போந்துபுக்
கென்னு ளேநிற்கும் இன்னம்பர் ஈசனே. 1

மட்டுண் பார்கள் மடந்தையர் வாட்கணுல்
கட்டுண் பார்கள் கருதுவ தென்கொலோ
தட்டி முட்டித் தள்ளாடித் தழுக்குழி
எட்டு மூர்த்தியர் இன்னம்பர் ஈசனே. 2

கனலுங் கண்ணியுந் தண்மதி யோடுடன்
புனலுங் கொன்றையுஞ் சூடும் புரிசடை
அனலும் சூலமும் மான்மறிக் கையினர்
எனலும் என்மனத் தின்னம்பர் ஈசனே. 3

மழைக்கண் மாமயி லாலும் மகிழ்ச்சியான்
அழைக்குந் தன்னடி யார்கள்தம் அன்பினைக்
குழைக்குந் தன்னைக் குறிக்கொள வேண்டியே
இழைக்கு மென்மனத் தின்னம்பர் ஈசனே. 4

தென்ன வன்னெனை யாளுஞ் சிவனவன்
மன்ன வன்மதி யம்மறை யோதியான்
முன்ன மன்னவன் சேர்வன பூழியான்
இன்னம் இன்புற்ற இன்னம்பர் ஈசனே. 5

விளக்கும் வேறு படப்பிறர் உள்ளத்தில்
அளக்குந் தன்னடி யார்மனத் தன்பினைக்
குளக்கும் என்னைக் குறிக்கொள வேண்டியே
இளக்கும் என்மனத் தின்னம்பர் ஈசனே. 6

சடைக்க ணாள்புன லாள்அனல் கையதோர்
கடைக்க ணால்மங்கை நோக்கிம வான்மகள்
படைக்க ணால்பரு கப்படு வான்நமக்(கு)
இடைக்க ணப்நின்ற இன்னம்பர் ஈசனே. 7

தொழுது தூமலர் தூவித் துதித்துநின்
றழுது காமுற் றரற்றுகின் றாரையும்

பொழுது போக்கிப் புறக்கணிப் பாரையும்
எழுதுங் கீழ்க்கணக் கின்னம்பர் ஈசனே. 8

விரியுந் தண்ணிள வேனிலில் வெண்பிறை
புரியுங் காமனை வேவப் புருவமும்
திரியும் எல்லையில் மும்மதில் தீயெழுந்(து)
எரிய நோக்கிய இன்னம்பர் ஈசனே. 9

சனியும் வெள்ளியுந் திங்களும் ஞாயிறும்
முனிவ னுய்முடி பத்துடை யான்றனைக்
கனிய வூன்றிய காரண மென்கொலோ
இனிய னுய்நின்ற இன்னம்பர் ஈசனே. 10

திருச்சிற்றம்பலம்

திருத்தாண்டகம் 6-ம் திருமுறை

திருச்சிற்றம்பலம்

அல்லிமலர் நாற்றத் துள்ளார் போலும்
அன்புடையார் சிந்தை அகலார் போலும்
சொல்லின் அருமறைகள் தாமே போலுந்
தூநெறிக்கு வழிகாட்டுந் தொழிலார் போலும்
வில்லிற் புரமூன் றெரித்தார் போலும்
வீங்கிருளும் நல்வெளியு மானூர் போலும்
எல்லி நடமாட வல்லார் போலும்
இன்னம்பர்த் தான்தோன்றி யீச னுரே. 1

கோழிக் கொடியோன்தன் தாதை போலுங்
கொம்பனுள் பாகங் குளிர்ந்தார் போலும்
ஊழி முதல்வருந் தாமே போலும்
உள்ளுவா ருள்ளத்தி னுள்ளார் போலும்
ஆழித்தேர் வித்தகரும் தாமே போலும்
அடைந்தவர்கட் கன்பராய் நின்ருர் போலும்
ஏழு பிறவிக்கும் தாமே போலும்
இன்னம்பர்த் தான்தோன்றி யீச னுரே. 2

தொண்டர்கள் தம்தகவி னுள்ளார் போலுந்
தூநெறிக்குந் தூநெறியாய் நின்ருர் போலும்
பண்டிருவர் காணுப் படியார் போலும்
பத்தர்கள்தம் சித்தத் திருந்தார் போலும்

கண்ட மிறையே கறுத்தார் போலுங்
காமனையுங் காலனையுங் காய்ந்தார் போலும்
இண்டைச் சடைசேர் முடியார் போலும்
இன்னம்பர்த் தான்தோன்றி யீச னாரே. 3

வானத் திளந்திங்கட் கண்ணி தன்னை
வளர்சடைமேல் வைத்துகந்த மைந்தர் போலும்
ஊனொத்த வேலொன் றுடையார் போலும்
ஒளிநீறு பூசு மொருவர் போலும்
தானத்தின் முப்பொழுதுந் தாமே போலுந்
தம்மிற் பிறர்பெரியா ரில்லை போலும்
ஏனத் தெயிறிலங்கப் பூண்டார் போலும்
இன்னம்பர்த் தான்தோன்றி யீச னாரே. 4

சூழுந் துயரம் அறுப்பார் போலுந்
தோற்றம் இறுதியாய் நின்றார் போலும்
ஆழுங் கடல்நஞ்சை யுண்டார் போலும்
ஆட லுகந்த அழகர் போலும்
தாழ்வின் மனத்தேனை யாளாக் கொண்டு
தன்மை யளித்த தலைவர் போலும்
ஏழு பிறப்பு மறுப்பார் போலும்
இன்னம்பர்த் தான்தோன்றி யீச னாரே. 5

பாதத் தணையுஞ் சிலம்பர் போலும்
பாரூர் விடையொன் றுடையார் போலும்
பூதப் படையான் புனிதர் போலும்
பூம்புகலூர் மேய புராணர் போலும்
வேதப் பொருளாய் விளைவார் போலும்
வேடம் பரவித் திரியுந் தொண்டர்
ஏதப் படாவண்ணம் நின்றார் போலும்
இன்னம்பர்த் தான்தோன்றி யீச னாரே. 6

பல்லார் தலையோட்டில் ஊணார் போலும்
பத்தர்கள்தம் சித்தத் திருந்தார் போலும்
கல்லாதார் காட்சிக் கரியார் போலுங்
கற்றவர்கள் ஏதங் களைவார் போலும்

பொல்லாத பூதப் படையார் போலும்
பொருகடலும் ஏழ்மலையுந் தாமே போலும்
எல்லாரு மேத்தத் தகுவார் போலும்
இன்னம்பர்த் தான்தோன்றி யீச னூரே. 7

மட்டு மலியுஞ் சடையார் போலும்
மாதையோர் பாக முடையார் போலும்
கட்டம் பிணிகள் தவிர்ப்பார் போலுங்
காலன் தன்வாழ்நாள் கழிப்பார் போலும்
நட்டம் பயின்ருடும் நம்பர் போலும்
ஞாலமெரி நீர்வெளிகா லானுர் போலும்
எட்டுத் திசைகளுந் தாமே போலும்
இன்னம்பர்த் தான்தோன்றி யீச னூரே. 8

கருவுற்ற காலத்தே யென்னை ஆண்டு
கழற்போது தந்தளித்த கள்வர் போலும்
செருவிற் புரமூன்றும் அட்டார் போலும்
தேவர்க்கும் தேவராஞ் செல்வர் போலும்
மருவிப் பிரியாத மைந்தர் போலும்
மலரடிகள் நாடி வணங்க லுற்ற
இருவர்க் கொருவராய் நின்ருர் போலும்
இன்னம்பர்த் தான்தோன்றி யீச னூரே. 9

அலங்கற் சடைதாழ ஐய மேற்று
அரவம் அரையார்க்க வல்லார் போலும்
வலங்கை மழுவொன் றுடையார் போலும்
வான்தக்கன் வேள்வி சிதைத்தார் போலும்
விலங்கல் எடுத்துகந்த வெற்றி யானை
விறலழித்து மெய்ஞ்ஞரம்பால் கீதங் கேட்டன்
றிலங்கு சுடர்வாள் கொடுத்தார் போலும்
இன்னம்பர்த் தான்தோன்றி யீச னூரே. 10

திருச்சிற்றம்பலம்

46. திருப்புறம்பயம்

திருஞானசம்பந்த சுவாமிகள்

திருவிராகம் – பண் – இந்தளம் 2-ம் திருமுறை

திருச்சிற்றம்பலம்

மறம்பய மலைந்தவர் மதிற்பரி சறுத்தனை
நிறம்பசுமை செம்மையொ டிசைந்துனது நீர்மை
திறம்பய னுறும்பொருள் தெரிந்துணரு நால்வர்க்
கறம்பய னுரைத்தனை புறம்பயம் அமர்ந்தோய். 1

விரித்தனை திருச்சடை யரித்தொழுகு வெள்ளம்
தரித்தனை யன்றியும் மிகப்பெரிய காலன்
எருத்திற வுதைத்தனை இலங்கிழையொர் பாகம்
பொருத்துதல் கருத்தினை புறம்பயம் அமர்ந்தோய். 2

விரிந்தனை குவிந்தனை விழுங்குயி ருமிழ்ந்தனை
திரிந்தனை குருந்தொசி பெருந்தகையு நீயும்
பிரிந்தனை புணர்ந்தனை பிணம்புகு மயானம்
புரிந்தனை மகிழ்ந்தனை புறம்பயம் அமர்ந்தோய். 3

வளங்கெழு கடும்புன லொடுஞ்சடை யொடுங்கத்
துளங்கம ரிளம்பிறை சுமந்தது விளங்க
உளங்கொள வளைந்தவர் சுடுஞ்சுடலை நீறு
புளங்கொள விளங்கினை புறம்பயம் அமர்ந்தோய். 4

பெரும்பிணி பிறப்பினொ டிறப்பிலையொர் பாகம்
கரும்பொடு படுஞ்சொலின் மடந்தையை மகிழ்ந்தோய்
சுரும்புண அரும்பவிழ் திருந்தியெழு கொன்றை
விரும்பினை புறம்பயம் அமர்ந்தஇறை யோனே. 5

அனற்படு தடக்கையவ ரெத்தொழில ரேனும்
நினைப்புடை மனத்தவர் வினைப்பகையு நீயே
தனற்படு சுடர்ச்சடை தனிப்பிறையொ டொன்றப்
புனற்படு கிடக்கைபை புறம்பயம் அமர்ந்தோய். 6

மறத்துறை மறுத்தவர் தவத்தடிய ருள்ளம்
அறத்துறை யொறுத்துன தருட்கிழமை பெற்றோர்
திறத்துள திறத்தினை மதித்தகல நின்றும்
புறத்துள திறத்தினை புறம்பயம் அமர்ந்தோய். 7

இலங்கைய ரிறைஞ்சிறை விலங்கலின் முழங்க
உலங்கெழு தடக்கைக ளடர்த்திடலு மஞ்சி
வலங்கொள எழுந்தவன் நலங்கவின அஞ்சு
புலங்களை விலங்கினை புறம்பயம் அமர்ந்தோய். 8

வடங்கெட நுடங்குண இடந்தவிடை யல்லிக்
கிடந்தவன் இருந்தவன் அளந்துணர லாகார்
தொடர்ந்தவ ருடம்பொடு நிமிர்ந்துடன் வணங்கப்
புடங்கருள்செய் தொன்றினை புறம்பயம் அமர்ந்தோய். 9

விடக்கொருவர் நன்றென விடக்கொருவர் தீதென
உடற்குடை களைந்தவ ருடம்பினை மறைக்கும்
படக்கர்கள் பிடக்குரை படுத்துமையொர் பாகம்
அடக்கினை புறம்பயம் அமர்ந்தவுர வோனே. 10

கருங்கழி பொருந்திரை கரைக்குலவு முத்தம்
தருங்கழு மலத்திறை தமிழ்க்கிழமை ஞானன்
சுரும்பவிழ் புறம்பயம் அமர்ந்ததமிழ் வல்லார்
பெரும்பிணி மருங்கற ஒருங்குவர் பிறப்பே. 11

திருச்சிற்றம்பலம்

திருநாவுக்கரசு சுவாமிகள்

திருத்தாண்டகம் 6-ம் திருமுறை

திருச்சிற்றம்பலம்

கொடிமாட நீடெருவு கூடல் கோட்டூர்
கொடுங்கோளூர் தண்வளவி கண்டி யூரும்
நடமாடு நன்மருகல் வைகி நாளும்
நலமாகு மொற்றியூ ரொற்றி யாகப்
படுமாலை வண்டறையும் பழனம் பாசூர்
பழையாறும் பாற்குளமுங் கைவிட்டிந் நாள்
பொடியேறு மேனியராய்ப் பூதஞ் சூழப்
புறம்பயம்நம் மூரென்று போயி னாரே. 1

முற்றொருவர் போல முழுநீ றாடி
முளைத்திங்கள் சூடிமுந் நூலும் பூண்டு
ஒற்றொருவர் போல உறங்கு வேன்கை
ஒளிவளையை யொன்றொன்றா எண்ணு கின்றார்

மற்றொருவ ரில்லைத் துணை யெனக்கு
மால்கொண்டாற் போல மயங்கு வேற்குப்
புற்றரவக் கச்சார்த்துப் பூதஞ் சூழப்
புறம்பயம்நம் மூரென்று போயி னாரே. 2

ஆகாத நஞ்சுண்ட அந்தி வண்ணர்
ஐந்தலைய மாசுணங்கொண் டம்பொற் றோள்மேல்
ஏகாச மாவிட்டோ டொன்றேந் திவந்
திடுதிருவே பலியென்றூர்க் கில்லே புக்கேன்
பாகேதுங் கொள்ளார் பலியுங் கொள் ளார்
பாவியேன் கண்ணுள்ளே பற்றி நோக்கிப்
போகாத வேடத்தர் பூதஞ் சூழப்
புறம்பயம்நம் மூரென்று போயி னாரே. 3

பன்மலிந்த வெண்டலை கையி லேந்திப்
பனிமுகில்போல் மேனிப் பவந்த நாதர்
நென்மலிந்த நெய்த்தானஞ் சோற்றுத் துறை
நியமந் துருத்தியும் நீடூர் பாச்சில்
கன்மலிந் தோங்கு கழுநீர்க் குன்றங்
கடனாகைக் காரோணங் கைவிட் டிந்நாள்
பொன்மலிந்த கோதையருந் தாமு மெல்லாம்
புறம்பயம்நம் மூரென்று போயி னாரே. 4

செத்தவர்தம் தலைமாலை கையி லேந்திச்
சிரமாலை சூடிச் சிவந்த மேனி
மத்தகத்த யானை யுரிவை மூடி
மடவா ளவளோடு மானொன் றேந்தி
அத்தவத்த தேவர் அறுப தின்மர்
ஆறுநா றுயிரவர்க் காடல் காட்டிப்
புத்தகங் கைக்கொண்டு புலித்தோல் வீக்கிப்
புறம்பயம்நம் மூரென்று போயி னாரே. 5

நஞ்சடைந்த கண்டத்தர் வெண்ணீ றாடி
நல்லபுலி யதள்மேல் நாகங் கட்டிப்
பஞ்சடைந்த மெல்விரலாள் பாக மாகப்
பராய்த்துறையே னென்றோர் பவள வண்ணர்

துஞ்சிடையே வந்து துடியுங் கொட்டத்
    துண்ணென் றெழுந்திருந்தேன் சொல்ல மாட்டேன்
புன்சடையின் மேலோர் புனலுஞ் சூடிப்
    புறம்பயம் நம் மூரென் று போயி ஞரே. 6

மறியிலங்கு கையர் மழுவொன் றேந்தி
    மறைக்காட்டே னென்ரேர் மழலை பேசிச்
செறியிலங்கு திண்தோள்மேல் நீறு கொண்டு
    திருமுண்ட மாஇட்ட திலக நெற்றி
நெறியிலங்கு கூந்தலார் பின்பின் சென் று
    நெடுங்கண் பனிசோர நின் று நோக்கிப்
பொ றியிலங்கு பாம்பார்த்துப் பூதஞ் சூழப்
    புறம்பயம்நம் மூரென் று போயி ஞரே. 7

நில்லாதே பல்லூரும் பலிகள் வேண்டி
    நிரைவளையார் பலிபெய்ய நிறையுங் கொண்டு
கொல்லேறுங் கொக்கரையுங் கொடு கொட்டியுங்
    குடமூக்கி லங்கொழியக் குளிர் தண் பொய்கை
நல்லாளை நல்லூரே தவிரே னென் று
    நரையூரிற் ருமுந் தவிர்வார் போலப்
பொல்லாத வேடத்தர் பூதஞ் சூழப்
    புறம்பயம்நம் மூரென் று போயி ஞரே. 8

விரையேறு நீறணிந்தோ ராமை பூண்டு
    வெண்தோடு பெய்திடங்கை வீணை யேந்தித்
திரையேறு சென்னிமேல் திங்கள் தன்னைத்
    திசைவிளங்க வைத்துகந்த செந்தீ வண்ணர்
அரையேறு மேகலையாள் பாக மாக
    ஆரிடத்தி லாட லமர்ந்த ஐயன்
புரையேறு தாமேறிப் பூதஞ் சூழப்
    புயம்பயம்நம் மூரென் று போயி ஞரே. 9

கோவாய இந்திரனுள் ளிட்டா ராகக்
    குமரனும் விக்கின விநாயக கன் னும்
பூவாய பீடத்து மேல யன்னும்
    பூமி யளந்தானும் போற்றி சைப்பப்

பாவாய இன்னிசைகள் பாடி யாடிப்
பாரிடமுந் தாமும் பரந்து பற்றிப்
பூவார்ந்த கொன்றை பொறிவண் டார்க்கப்
புறம்பயம்நம் மூரென்று போயி னாரே. 10

திருச்சிற்றம்பலம்

சுந்தரமூர்த்தி சுவாமிகள்

பண் – கொல்லி 7-ம் திருமுறை

திருச்சிற்றம்பலம்

அங்கம் ஓதிஓர் ஆறைமேற்றளி
நின்றும் போந்துவந் தின்னம்பர்த்
தங்கி னேமையும் இன்ன தென்றிலர்
ஈசனார் எழுநெஞ்சமே
கங்குல் ஏமங்கள் கொண்டுதேவர்கள்
ஏத்திவானவர் தாந்தொழும்
பொங்கு மால்விடை ஏறி செல்வப்
புறம்பயந்தொழப் போதுமே. 1

பதியுஞ்சுற்றமும் பெற்றமக்களும்
பண்டை யாரலர் பெண்டிரும்
நிதியிலிம்மனை வாழும் வாழ்க்கையும்
நினைப்பொழி மடநெஞ்சமே
மதியஞ்சேர்சடைக் கங்கை யானிடம்
மகிழும் மல்லிகை செண்பகம்
புதியபூமலர்ந் தெல்லி நாறும்
புறம்பயந் தொழப் போதுமே. 2

புறந்திரைந்து நரம்பெழுந்து நரைத்து
நீயுரை யால் தளர்ந்
தறம்புரிந்து நினைப்ப தாண்மை
அரிதுகாண் அதறிதியேல்
திறம்பியா தெழு நெஞ்சமே
சிறுகாலை நாமுறு வாணியம்
புறம்பயத்துறை பூதநாதன்
புறம்பயந் தொழப் போதுமே. 3

குற்ளுருவரைக் கூறைகொண்டு
கொலேகள் சூழ்ந்த களவெலாம்
செற்ருருவரைச் செய்ததீமைகள்
இம்மை யேவருந்திண்ணமே
மற்ருருவரைப் பற்றிலேன் மற
வாதெழுமட நெஞ்சமே
புற்றரவுடைப் பெற்றம்ஏறி
புறம்பயந் தொழப் போதுமே. 4

கள்ளி நீசெய்த தீமை உள்ளன
பாவமும்பறை யும்படி
தெள்ளி தாளழு நெஞ்சமே செங்கண்
சேவுடைச் சிவலோகனூர்
துள்ளிவெள்ளிள வாளேபவயற்
ருேன்று தாமரைப் பூக்கள்மேல்
புள்ளிநள்ளிகள் பள்ளிகொள்ளும்
புறம்பயந் தொழப் போதுமே. 5

படையெலாம்பக டாரஆளிலும்
பௌவஞ்சூழ்ந்தர சாளிலும்
கடையெலாம்பிணைத் தேரைவால்கவ
லாதெழுமட நெஞ்சமே
மடையெலாங்கழு நீர்மலர்ந்து
மருங்கெலாங்கரும் பாடத்தேன்
புடையெலாம் மணம் நாறுசோலேப்
புறம்பயந் தொழப் போதுமே. 6

முன்னேச்செய்வினே இம்மையில்வந்து
மூடும் ஆதலின் முன்னமே
என்னேநீதியக் காதெழுமட
நெஞ்சமே எந்தைதந்தையூர்
அன்னச் சேவலோடுடிப் பேடைகள்
கூடிச்சேரும் அணிபொழில்
புன்னேக்கன்னி கழிக்கணுறும்
புறம்பயந்தொழப் போதுமே. 7

மலமெலாம்அறும் இம்மையேமறு
மைக்கும் வல்வினை சார்கிலா
சலமெலாம் ஒழி நெஞ்சமேஎங்கள்
சங்கரன் வந்து தங்கும் ஊர்
கலமெலாங்கடல் மண்டுகாவிரி
நங்கை ஆடிய கங்கைநீர்
புலமெலாம்மண்டிப் பொன்விளக்கும்
புறம்பயந்தொழப் போதுமே. 8

பண்டரீயன செய்ததீமையும்
பாவமும்பறை யும்படி
கண்டரீயன கேட்டியேற்கவ
லாதெழுமட நெஞ்சமே
தொண்டரீயன பாடித்துள்ளிநின்
றுடிவானவர் தாந்தொழும்
புண்டரீக மலரும் பொய்கைப்
புறம்பயந்தொழப் போதுமே. 9

துஞ்சியும்பிறந் துஞ்சிறந்துந்
துயக்கறுத மயக்கிவை
அஞ்சிஊரன் திருப்புறம்பயத்
தப்பனைத்தமிழ்ச் சீரினால்
நெஞ்சினாலே புறம்பயந்தொழு
துய்தும் என்று நினைத்தன
வஞ்சி யாதுரை செய்ய வல்லவர்
வல்லவானுல காள்வரே. 10

திருச்சிற்றம்பலம்

47. திருவிசயமங்கை

திருஞானசம்பந்த சுவாமிகள்

பண்– காந்தார பஞ்சமம் 3-ம் திருமுறை

திருச்சிற்றம்பலம்

மருவமர் குழலுமை பங்கர் வார்சடை
அரவமர் கொள்கையெம் அடிகள் கோயிலாம்
குரவமர் சுரபுன்னை கோங்கு வேங்கைகள்
விரவிய பொழிலணி விசய மங்கையே. 1

கீதமுன் இசைதரக் கிளரும் வீணையர்
பூதமுன் இயல்புடைப் புனிதர் பொன்னகர்
கோதனம் வழிபடக் குலவு நான்மறை
வேதியர் தொழுதெழு விசயமங்கையே. 2

அக்கர வரையினர் அரிவை பாகமாத்
தொக்கநல் விடையுடைச் சோதி தொன்னகர்
தக்கநல் வானவர் தலைவர் நாடொறும்
மிக்கவர் தொழுதெழு விசய மங்கையே. 3

தொடைமலி இதழியுந் துன்ன ருக்கொடு
புடைமலி சடைமுடி யடிகள் பொன்னகர்
படைமலி மழுவினர் பைங்கண் மூரிவெள்
விடைமலி கொடியணல் விசய மங்கையே. 4

தோடமர் காதினன் துதைந்த நீற்றினன்
ஏடமர் கோதையோ டினித மர்விடம்
காடமர் மாகரி கதறப் போர்த்ததோர்
வேடம துடையணல் விசய மங்கையே. 5

மைப்புரை கண்ணுமை பங்கன் வண்டழல்
ஒப்புரை மேனியெம் முடைய வன்னகர்
அப்பொடு மலர்கொடங் கிறைஞ்சி வானவர்
மெய்ப்பட அருள்புரி விசய மங்கையே. 6

இரும்பொனின் மலைவிலின் எரிச ரத்தினல்
வரும்புரங் களைப்பொடி செய்த மைந்தனூர்
சுரும்பமர் கொன்றையுந் தூய மத்தமும்
விரும்பிய சடையணல் விசய மங்கையே. 7

உளங்கைய இருபதோ டொருப துங்கொடாங்
களந்தரும் வரையெடுத் திடும் அரக்கனைத்
தளர்ந்துடல் நெரிதர அடர்த்த தன்மையன்
விளங்கிழை யொடும்புகும் விசய மங்கையே 8

மண்ணினை யுண்டவன் மலரின் மேலுறை
அண்ணல்கள் தமக்களப் பரிய அத்தனூர்
தண்ணறுஞ் சாந்தமும் பூவும் நீர்கொடு
விண்ணவர் தொழுதெழு விசய மங்கையே. 9

கஞ்சியுங் கவளமுண் கவணர் கட்டுரை
நஞ்சினுங் கொடியன நமர்கள் தேர்கிலார்
செஞ்சடை முடியுடைத் தேவன் நன்னகர்
விஞ்சையர் தொழுதெழு விசய மங்கையே 10

விண்ணவர் தொழு தெழு விசய மங்கையை
நண்ணிய புகலியுள் ஞான சம்பந்தன்
பண்ணிய செந்தமிழ் பத்தும் வல்லவர்
புண்ணியர் சிவகதி புகுதல் திண்ணமே. 11

திருச்சிற்றம்பலம்

திருநாவுக்கரசு சுவாமிகள்

திருக்குறுந்தொகை 5-ம் திருமுறை

திருச்சிற்றம்பலம்

குசையும் அங்கையிற் கோசமுங் கொண்டவன்
வசையின் மங்கல வாசகர் வாழ்த்தவே
இசைய மங்கையுந் தாமொன் றாயினான்
விசைய மங்கையுள் வேதியன் காண்மினே. 1

ஆதி நாதன் அடல்விடை மேலமர்
பூத நாதன் புலியத ளாடையன்
வேத நாதன் விசயமங் கையுளான்
பாத மோதவல் லார்க்கில்லை பாவமே. 2

கொள்ளிடக்கரைக் கோவந்த புத்தூரில்
வெள்வி டைக்கருள் செய்விச யமங்கை
உள்ளிடத் துறைகின்ற உருத் திரன்
கிள்ளி டத்தலை யற்ற தயனுக்கே. 3

திசையு மெங்குங் குலுங்கத் திரிபுரம்
அசைய அங்கெய்திட் டாரழ லூட்டினான்
விசைய மங்கை விருத்தன் புறத்தடி
விசையின் மங்கி விழுந்தனன் காலனே. 4

பொள்ள லாக்கை அகத்தில்ஐம் பூதங்கள்
கள்ள மாக்கிக் கலக்கிய காரிருள்
விள்ள லாக்கி விசயமங் கைப்பிரான்
உள்ளம் நோக்கியென் னுள்ளுள் உறையுமே. 5

கொல்லை யேற்றுக் கொடியொடு பொன்மலை
வில்லை யேற்றுடை யான்விச யமங்கைச்
செல்வ போற்றியென் பாருக்குத் தென்திசை
எல்லை யேற்றலும் இன்சொலு மாகுமே. 6

கண்பல் உக்க கபாலம் அங் கைக்கொண்டு
உண்ப லிக்குழல் உத்தமன் உள்ளொளி
வெண்பி றைக்கண்ணி யான்விச யமங்கை
நண்ப னைத்தொழப் பெற்றது நன்மையே. 7

பாண்டு வின்மகன் பார்த்தன் பணிசெய்து
வேண்டும் நல்வரங் கொள்விச யமங்கை
ஆண்ட வன்னடி யேநினைந் தாசையால்
காண்ட லேகருத் தாகியி ருப்பனே. 8

வந்து கேண்மின் மயல்தீர் மனிதர்காள்
வெந்த நீற்றன் விசயமங் கைப்பிரான்
சிந்தை யால்நினை வார்களைச் சிக்கெனப்
பந்து வாக்கி உயக்கொளுங் காண்மினே. 9

இலங்கை வேந்தன் இருபது தோளிற
விலங்கல் சேர்விர லான்விச யமங்கை
வலஞ்செய் வார்களும் வாழ்த்திசைப் பார்களும்
நலஞ்செய் வாரவர் நன்னெறி நாடியே. 10

திருச்சிற்றம்பலம்

48. திருவைகாவூர் (திருவைகாவில்)

திருஞானசம்பந்த சுவாமிகள்

திருவிராகம்–பண்-சாதாரி 3ம்–திருமுறை

திருச்சிற்றம்பலம்.

கோழைமிட றாககவி கோளுமில
ராக இசை கூடுவகையால்
ஏழையடி யாரவர்கள் யாவைசொன
சொல்மகிழும் ஈசனிடமாம்
தாழையிள நீர்முதிய காய்கமுகின்
வீழநிரை தாறுசிதறி
வாழையுதிர் வீழ்கனிகள் ஊறிவயல்
சேறு செயும் வைகாவிலே. 1

அண்டமுறு மேருவரை யங்கிகணை
நாணரவ தாகஎழிலார்
விண்டவர்த முப்புரமெ ரித்தவிகிர்
தன்னவன் விரும்புமிடமாம்
புண்டரிக மாமலர்கள் புக்குவிளை
யாடுவயல் சூழ்தடமெலாம்
வண்டினிசை பாடஅழ கார்குயில்மி
ழற்றுபொழில் வைகாவிலே. 2

ஊனமில ராகியுயர் நற்றவமெய்
கற்றவையுணர்ந்த அடியார்
ஞானமிக நின்றுதொழ நாளுமருள்
செய்யவல நாதனிடமாம்
ஆனவயல் சூழ்தருமல் சூழியரு
கேபொழில்கள் தோறும் அழகார்
வானமதி யோடுமழை நீள்முகில்கள்
வந்தணவும் வைகாவிலே. 3

இன்னவுரு இன்னநிறம் என்றறிவ
தேலரிது நீதிபலவும்
தன்னவுரு வாமெனமி குத்ததவன்
நீதியொடு தானமர்விடம்

முன்னைவினை போய்வகையி னுல்முழு
துணர்ந்து முயல் கின்றமுனிவர்
மன்ன இரு போது மருவித் தொழுது
சேரும்வயல் வைகாவிலே. 4

வேதமொடு வேள்வி பல வாயினமி
குத்து விதியாறு சமயம்
ஓதியுமு ணர்ந்துமுள தேவர்தொழ
நின்றருள்செ யொருவனிடமாம்
மேதகைய கேதகைகள் புன்னையொடு ஞாழ
லவைமிக்க அழகால்
மா தவிம ணங்கமழ வண்டுபல
பாடு பொழில் வைகாவிலே. 5

நஞ்சமுது செய்தமணி கண்டன்நமை
யாளுடைய ஞான முதல்வன்
செஞ்சடையி டைப்புனல்க ரந்தசிவ
லோகன் அமர் கின்ற இடமாம்
அஞ்சுடரொ டாறுபத மேழின் இசை
யெண்ணரிய வண்ண முளவாய்
மைஞ்ச ரொடு மாதர்பல ருந்தொழுது
சேரும் வயல் வைகாவிலே. 6

நாளுமிகு பாடலொடு ஞானமிகு
நல்ல மலர் வல்லவகையால்
தோளினெடு கைகுளிர வேதொழும
வர்க்கருள்செய் சோதியிடமாம்
நீளவளர் சோலைதொறும் நாளிபல
துன்றுகனி நின்றது திர
வாளைகுதி கொள்ளமது நாறமலர்
விரியும் வயல் வைகாவிலே. 7

கையிருப தோடுமெய்க லங்கிடவி
லங்கலையெ டுத்த கடியோன்
ஐயிருசி ரங்களையொ ருங்குடன்நெ
ரித்தஅழ கன்றனிடமாம்

கையின்மலர் கொண்டுநல காலையொடு
மாலைகரு திப்பலவிதம்
வையகமெ லாமருவி நின்றுதொழு
தேத்துமெழில் வைகாவிலே. 8

அந்தமுதல் ஆதிபெரு மானமரர்
கோனையயன் மாலு மிவர்கள்
எந்தைபெரு மான்இறைவன் என்றுதொழ
நின்றருள்செ யீசனிடமாம்
சிந்தைசெய்து பாடும்அடி யார்பொடிமெய்
பூசியெழு தொண்டரவர்கள்
வந்துபல சந்தமலர் முந்தியணை
யும்பதி நல் வைகாவிலே. 9

ஈசனெமை யாளுடைய எந்தைபெரு
மான் இறைவ னென்றுதனையே
பேசுதல்செ யாவமணர் புத்தரவர்
சித்த மணு யாவவனிடம்
தேசமதெ லாமருவி நின்றுபர
வித்திகழ நின்ற புகழோன்
வாசமல ரானபல தூவியணை
யும்பதிநல் வைகாவிலே. 10

முற்றுநமை யாளுடைய முக்கண்முதல்
வன்திருவை காவிலதனைச்
செற்றமலி ஞர்சிரபு ரத்தலைவன்
ஞானசம் பந்தன் உரைசெய்
உற்றதமிழ் மாலையீ ரைந்துமிவை
வல்லவர் உருத்திரரெனப்
பெற்றமர லோகமிக வாழ்வர்பிரி
யாரவர்பெ ரும்புக ழொடே. 11

திருச்சிற்றம்பலம்

49. திருவடகுரங்காடுதுறை

திருஞானசம்பந்த சுவாமிகள்

பண் - சாதாரி 3-ம் திருமுறை

திருச்சிற்றம்பலம்

கோங்கமே குரவமே கொழுமலர்ப்
புன்னையே கொகுடி முல்லை
வேங்கையே ஞாழலே விம்முபா
திரிகளே விரவி யெங்கும்
ஓங்குமா காவிரி வடகரை
யடைகுரங் காடு துறை
வீங்குநீர்ச் சடைமுடி அடிகளா
ரிடமென விரும்பி னாரே. 1

மந்தமா யிழிமதக் களிற்றிள மருப்பொடு
பொருப்பின் நல்ல
சந்தமார் அகிலொடு சாதியின்
பலங்களுந் தகைய மோதி
உந்துமா காவிரி வடகரை
யடைகுரங் காடு துறை
எந்தையார் இணையடி இமையவர்
தொழுதெழும் இயல்பி னாரே. 2

முத்துமா மணியொடு முழைவளர்
ஆரமும் முகந்து நுந்தி
எத்துமா காவிரி வடகரை
யடைகுரங் காடு துறை
மத்தமா மலரொடு மதிபொதி
சடைமுடி யடிகள் தம்மேல்
சித்தமாம் அடியவர் சிவகதி
பெறுவது திண்ண மன்றே. 3

கறியுமா மிளகொடு கதலியின்
பலங்களுங் கலந்து நுந்தி
எறியுமா காவிரி வடகரை
யடைகுரங் காடு துறை

மறியுலாங் கையினர் மலரடி
தொழுதெழு மருவு முள்ளக்
குறியினு ரவர்மிகக் கூடுவார்
நீடுவா னுலகினூடே. 4

கோடிடைச் சொரிந்ததே னதனொடுங்
கொண்டல்வாய் விண்ட முனனீர்
காடுடைப் பீலியுங் கடறுடைப்
பண்டமுங் கலந்து நுந்தி
ஓடுடைக் காவிரி வடகரை
யடைகுரங் காடு துறை
பீடுடைச் சடைமுடி யடிகளா
ரிடமெனப் பேணி னுரே. 5

கோலமா மலரொடு தூபமுஞ்
சாந்தமுங் கொண்டு போற்றி
வாலியார் வழிபடப் பொருந்தினுர்
திருந்துமாங் கனிக ளுந்தி
ஆலுமா காவிரி வடகரை
யடைகுரங் காடு துறை
நீலமா மணிமிடற் றடிகளை
நினையவல் வினைகள் வீடே. 6–7

நீலமா மணிநிறத் தரக்கனை
யிருபது கரத்தொ டொல்க
வாலினுற் கட்டிய வாலியார்
வழிபட மன்னுகோயில்
ஏலமோ டிலையில வங்கமே
யிஞ்சியே மஞ்ச ளுந்தி
ஆலியா வருபுனல் வடகரை
யடைகுரங் காடு துறையே. 8

பொருந்திறல் பெருங்கைமா வுரித்துமை
யஞ்சவே யொருங்க நோக்கிப்
பெருந்திறத் தங்களை அநங்கமா
விழித்ததும் பெருமை போலும்

வருந்திறற் காவிரி வடகரை
யடைகுரங் காடு துறை
அருந்திறத் திருவரை யல்லல்கண்
டோங்கிய அடிக ளாரே. 9

கட்டமண் தேரருங் கடுக்கடின்
கழுக்களுங் கசிவொன் றில்லாப்
பிட்டர்தம் மறவுரை கொள்ளவும்
பெருவரைப் பண்ட முந்தி
எட்டுமா காவிரி வடகரை
யடைகுரங் காடு துறைச்
சிட்டனு ரடிதொழச் சிவகதி
பெறுவது திண்ண மாமே. 10

தாழிளங் காவிரி டகரை
யடைகுரங் காடு துறைப்
போழிள் மதிபொதி புரிதரு
சடைமுடிப் புண்ணிய னைக்
காழியான் அருமறை ஞானசம்
பந்தன கருது பாடல்
கோழையா அழைப்பினுங் கூடுவார்
நீடுவா னுலகி னூடே. 11

திருச்சிற்றம்பலம்

50. திருப்பழனம்

திருஞானசம்பந்த சுவாமிகள்

பண் – தக்கேசி . . 1-ம் திருமுறை

திருச்சிற்றம்பலம்

வேதமோதி வெண்ணூல்பூண்டு வெள்ளையெருதேறிப்
பூதஞ்சூழப் பொலியவருவார் புலியினுரிதோலார்
நாதாஎனவும் நக்காஎனவும் நம்பாஎனநின்று
பாதந்தொழுவார் பாவந்தீர்ப்பார் பழனநகராரே. 1

கண்மேற்கண்ணுஞ் சடைமேற்பிறையும் உடையார்காலனைப்
புண்ணாறுதிர மெதிராவோடப் பொன்றப்புறந்தாளால்
எண்ணாதுதைத்த எந்தைபெருமான் இமவான்மகளோடும்
பண்ணார்களிவண் டறைபூஞ்சோலைப் பழனநகராரே. 2

பிறையும்புனலுஞ் சடைமேலுடையார் பறைபோல்விழிகட்பேய்
உறையுமான மிடமாவுடையார் உலகர்தலைமகன்
அறையுமலர்கொண் டடியார்பரவி ஆடல்பாடல்செய்
பறையுஞ்சங்கும் பலியும்ஓவாப் பழனநகராரே. 3

உரமன்னுயர்கோட் டுலறுகூகை யலறுமயானத்தில்
இரவிற்பூதம் பாடஆடி யெழிலாரலர்மேலைப்
பிரமன்தலையில் நறவமேற்ற பெம்மான் எமையாளும்
பரமன்பகவன் பரமேச்சுவரன் பழனநகராரே. 4

குலவெஞ்சிலையால் மதில்மூன்றெரித்த கொல்லேறுடை
பண்ணல்
கலவமயிலுங் குயிலும்பயிலுங் கடல்போற்காவேரி
நலமஞ்சுடைய நறுமாங்கனிகள் குதிகொண்டெதிருந்திப்
பலவின்கனிகள் திரைமுன்சேர்க்கும் பழனநகராரே. 5

வீணைக்குரலும் விளிசங்கொலியும் விழவின்னொலியோவா
மூளைத்தலைகொண் டடியாரேத்தப் பொடியாமதிளெய்தார்
ஈளைப்படுகில் இலையார்தெங்கிற் குலையார்வாழையின்
பாளைக்கமுகின் பழம்வீழ்சோலைப் பழனநகராரே. 6

பொய்யாமொழியார் முறையாலேத்திப் புகழ்வார்திருமேனி
செய்யார்கரிய மிடற்றார்வெண்ணூல் சேர்ந்தஅகலத்தார்
கையாடலினார் புனலால்மல்கு சடைமேற்பிறையோடும்
பையாடரவ முடனேவைத்தார் பழனநகராரே. 7

மஞ்சோங்குயரம் உடையான்மலையை மாறாயெடுத்தான்தோள்
அஞ்சோடஞ்சும் ஆறுநான்கும் அடரவூன்றினார்
நஞ்சார்சுடலைப் பொடிநீறணிந்த நம்பான்வம்பாரும்
பைந்தாமரைகள் கழனிசூழ்ந்த பழனநகராரே. 8

கடியார் கொன்றைச் சுரும்பின்மாலை கமழ்புன்சடையார்விண்
முடியாப்படிமூ வடிவாலுலக முழுதுந்தாவிய
நெடியான்நீள்தா மரைமேலயனும் நேடிக்காணாத
படியார்பொடியா டகலமுடையார் பழனநகராரே. 9

கண்டான்கழுவா முன்னேயோடிக் கலவைக்கஞ்சியை
உண்டாங்கவர்கள் உரைக்குஞ்சிறுசொல் லோரார்பாராட்ட
வண்டாமரையின் மலர்மேல்நறவ மதுவாயமிகவுண்டு
பண்டான்கெழும வண்டியாழ்செய்யும் பழனநகராரே. 10

வேய்முத்தோங்கி விரைமுன்பரக்கும் வேணுபுரந்தன்னுள்
நாவுய்த்தனைய திறலான்மிக்க ஞானசம்பந்தன்
பேசற்கினிய பாடல்பயிலும் பெருமான்பழனத்தை
வாயிற்பொலிந்த மாலைபத்தும் வல்லார்நல்லாரே. 11

திருச்சிற்றம்பலம்

திருநாவுக்கரசு சுவாமிகள்

பண் – பழந்தக்கராகம் 4-ம் திருமுறை

திருச்சிற்றம்பலம்

சொன்மாலை பயில்கின்ற குயிலினங்காள் சொல்லீரே
பன்மாலை வரிவண்டு பண்மிழற்றும் பழனத்தான்
முன்மாலை நகுதிங்கள் முகிழ்விளங்கு முடிச்சென்னிப்
பொன்மாலை மார்பன்என் புதுநலமுண் டிகழ்வானோ. 1

கண்டகங்காள் முண்டகங்காள் கைதைகாள் நெய்தல்காள்
பண்டரங்க வேடத்தான் பாட்டோவாப் பழனத்தான்
வண்டுலாந் தடம்மூழ்கி மற்றவனென் தளிர்வண்ணம்
கொண்டநாள் தானறிவான் குறிக்கொள்ளாதொழிவானோ. 2

மனைக்காஞ்சி இளங்குருகே மறந்தாயோ மதமுகத்த
பனைக்கைம்மா வுரிபோர்த்தான் பலர்பாடும் பழனத்தான்
நினைக்கின்ற நினைப்பெல்லாம் உரையாயோ நிகழ்வண்டே
சுனைக்குவளை மலர்க்கண்ணாள் சொற்றூதாய்ச் சோர்வாளோ. 3

புதியையாய் இனியையாம் பூந்தென்றால் புறங்காடு
பதியாவ திதுவென்று பலர்பாடும் பழனத்தான்
மதியாதார் வேள்விதனை மதித்திட்ட மதிகங்கை
விதியாளன் என்னுயிர்மேல் விளையாடல் விடுத்தானோ. 4

மண்பொருந்தி வாழ்பவர்க்கும் மாதீர்த்த வேதியர்க்கும்
விண்பொருந்து தேவர்க்கும் வீடுபேறாய் நின்றானைப்
பண்பொருந்த இசைபாடும் பழனஞ்சேர் அப்பனைஎன்
கண்பொருந்தும் போதத்துங் கைவிடநான் கடவேனோ. 5

பொங்கோத மால்கடலிற் புறம்புறம்போய் இரைதேரும்
செங்கால்வெண் மடநாராய் செயற்படுவ தறியேன்நான்
அங்கோல வளைகவர்ந்தான் அணிபொழில்சூழ் பழனத்தான்
தங்கோல நறுங்கொன்றைத் தாரருளா தொழிவானே. 6

துணையார முயங்கிப்போய்த் துறைசேரும் மடநாராய்
பணையார வாரத்தான் பாட்டோவாப் பழனத்தான்
கணையார இருவிசும்பிற் கடிஅரணம் பொடிசெய்த
இணையார மார்பன்என் எழில்நலமுண் டிகழ்வானே. 7

கூவைவாய் மணிவரன்றிக் கொழித்தோடுங் காவிரிப்பூம்
பாவையாய் முத்திலங்கப் பாய்ந்தாடும் பழனத்தான்
கோவைவாய் மலைமகள்கோன் கொல்லேற்றின் கொடியாடைப்
பூவைகாள் மழலைகாள் போகாத பொழுதுளதே. 8

புள்ளிமான் பொறிஅரவம் புள்ளுயர்த்தான் மணிநாகப்
பள்ளியான் தொழுதேத்த இருக்கின்ற பழனத்தான்
உள்ளுவார் வினைதீர்க்கும் என்றுரைப்பர் உலகெல்லாம்
கள்ளியேன் நான்இவர்க்கென் கனவளையுங் கடவேனே. 9

வஞ்சித்தென் வளைகவர்ந்தான் வாரானே யாயிடினும்
பஞ்சிக்காற் சிறகன்னம் பரந்தார்க்கும் பழனத்தான்
அஞ்சிப்போய்க் கலிமெலிய அழலோம்பும் அப்பூதி
குஞ்சிப்பூ வாய்நின்ற சேவடியாய் கோடியையே. 10

திருச்சிற்றம்பலம்

திருநேரிசை 4-ம் திருமுறை

திருச்சிற்றம்பலம்

ஆடினா ரொருவர் போலு மலர்கமழ் குழலி னாளைக்
கூடினா ரொருவர் போலுங் குளிர்புனல் வளைந்த திங்கள்
சூடினா ரொருவர் போலுந் தூயநன் மறைகள் நான்கும்
பாடினா ரொருவர் போலும் பழனத்தெம் பரம னாரே 1

போவதோர் நெறியு மானார் புரிசடைப் புனித னார்நான்
வேவதோர் வினையிற் பட்டு வெம்மைதான் விடவுங் கில்லேன்
கூவல்தான் அவர்கள் கேளார் குணமிலா ஐவர் செய்யும்
பாவமே தீர நின்றார் பழனத்தெம் பரம னாரே. 2

கண்டராய் முண்டராகிக் கையிலோர் கபால மேந்தித்
தொண்டர்கள் பாடி யாடித் தொழுகழற் பரம ஞர்தாம்
விண்டவர் புரங்க ளெய்த வேதியர் வேத நாவர்
பண்டைஎன் வினைகள் தீர்ப்பார் பழனத்தெம் பரம ஞரே. 3

நீரவன் தீயி ஞேடு நிழலவன் எழில தாய
பாரவன் விண்ணின் மிக்க பரமவன் பரம யோகி
ஆரவ னண்டமிக்க திசையினே டொளிக ளாகிப்
பாரகத் தமுத மானுர் பழனத்தெம் பரம ஞரே. 4

ஊழியா ரூழி தோறும் உலகினுக் கொருவ ராகிப்
பாழியார் பாவந் தீர்க்கும் பராபரர் பரம தாய
ஆழியான் அன்னத்தானும் அன்றவர்க் களப்பரிய
பாழியார் பரவி யேத்தும் பழனத்தெம் பரம ஞரே. 5

ஆலின்கீழ் அறங்க ளெல்லாம் அன்றவர்க் கருளிச செய்து
நூலின்கீ ழவர்கட் கெல்லா நுண்பொரு ளாகி நின்று
காலின்கீழ்க் காலன் தன்னைக் கடுகத்தான் பாய்ந்து பின்னும்
பாலின்கீழ் நெய்யுமானுர் பழனத்தெம் பரம ஞரே. 6

ஆதித்தன் அங்கி சோமன் அயனெடு மால் புதனும்
போதித்து நின்று லகிற் போற்றிசைத் தாரி வர்கள்
சோதித்தா ரேழு லகுஞ் சோதியுட் சோதி யாகிப்
பாதிப்பெண் ணுருவ மானுர் பழனத்தெம் பரம ஞரே. 7

காற்றனுர் காலற் காய்ந்து காருரி போர்த்த ஈசர்
தோற்றனுர் கடலுள் நஞ்சைத் தோடுடைக் காதர் சோதி
ஏற்றினுர் இளவெண் திங்கள் இரும்பொழில் சூழ்ந்த காயம்
பாற்றினுர் வினைக ளெல்லாம் பழனத்தெம் பரம ஞரே. 8

கண்ணனும் பிரம ஞேடு காண்கில ராகி வந்தே
எண்ணியுந் துதித்தும் ஏத்த எரியுரு வாகி நின்று
வண்ணநன் மலர்கள் தூவி வாழ்த்துவார் வாழ்த்தி ஏத்தப்
பண்ணுலாம் பாடல் கேட்டார் பழனத்தெம் பரம ஞரே. 9

குடையுடை அரக்கன் சென்று குளிர்கயி லாய வெற்பின்
இடைமட வரலைஅஞ்ச எடுத்தலும் இறைவன் நோக்கி
விடையுடை விகிர்தன் தானும் விரலினுல் ஊன்றி மீண்டும்
படைகொடை அடிகள் போலும் பழனத்தெம் பரம ஞரே. 10

திருச்சிற்றம்பலம்

திருவிருத்தம் 4-ம் திருமுறை

திருச்சிற்றம்பலம்

மேவித்து நின்று விளைந்தன வெந்துயர் துக்கமெல்லாம்
ஆவித்து நின்று கழிந்தன அல்லல் அவையறுப்பான்
பாவித்த பாவனை நீயறி வாய்பழ னத்தரசே
கூவித்துக் கொள்ளுந் தனைஅடி யேனைக் குறிக்கொள்வதே. 1

சுற்றிநின் றார்புறங் காவல் அமரர் கடைத்தலையில்
மற்றுநின் றார்திரு மாலொடு நான்முகன் வந்தடிக்கீழ்ப்
பற்றிநின் றார்பழ னத்தரசே உன் பணியறிவான்
உற்றுநின் றார்அடி யேனைக் குறிக்கொண் டருளுவதே. 2

ஆடிநின் றாய்அண்டம் ஏழுங் கடந்துபோய் மேலவையும்
கூடிநின் றாய்குவி மென்முலை யாளையுங் கொண்டுடனே
பாடிநின் றாய்பழ னத்தர சேஅங்கொர் பான்மதியம்
சூடிநின் றாய்அடி யேனைஅஞ் சாமைக் குறிக்கொள்வதே. 3

எரித்துவிட் டாய்அம்பி னாற்புர மூன்றுமுன் னேபடவும்
உரித்துவிட் டாய்உமை யாள்நடுக் கெய்தவோர் குஞ்சரத்தைப்
பரித்துவிட் டாய்பழ னத்தர சேகங்கை வார்சடைமேல்
தரித்துவிட் டாய்அடி யேனைக் குறிக்கொண் டருளுவதே. 4

முன்னியு முன்னை முளைத்தன மூஎயி லும்முடனே
மன்னியு மங்கு மிருந்தனை மாய மனத்தவர்கள்
பன்னிய நூலின் பரிசறி வாய்பழ னத்தரசே
உன்னியும் உன்னடி யேனைக் குறிக்கொண் டருளுவதே. 5

ஏய்ந்தறுத் தாய்இன்ப னாய்இருந் தேபடைத் தான்தலையைக்
காய்ந்தறுத் தாய்கண்ணி னாலன்று காமனைக் காலனையும்
பாய்ந்தறுத் தாய்பழ னத்தர சேஎன் பழவினைநோய்
ஆய்ந்தறுத் தாய்அடி யேனைக் குறிக்கொண் டருளுவதே. 6

மற்றுவைத் தாய்அங்கொர் மாலொரு பாகம் மகிழ்ந்துடனே
உற்றுவைத் தாய்உமை யாளொடுங் கூடும் பரிசெனவே
பற்றிவைத் தாய்பழ னத்தர சேஅங்கொர் பாம்பொருகை
சுற்றிவைத் தாய்அடி யேனைக் குறிக்கொண் டருளுவதே. 7

ஊரினின் றுய்ஒன் றி நின் றுவிண் டாரையும் ஒள்ளழலால்
போரினின் றுய்பொறை யாய் உயி ராவி சுமந்துகொண்டு
பாரினின் றுய்பழ னத்தர சேபணி செய்பவர்கட்
காரநின் றுய்அடி யேனைக் குறிக்கொண் டருளுவதே. 8

போகம்வைத் தாய்புரி புன்சடை மேலோர் புனலதனை
ஆகம்வைத் தாய்மலை யான்மட மங்கை மகிழ்ந்துடனே
பாகம்வைத் தாய்பழ னத்தர சேஉன் பணியருளால்
ஆகம் வைத் தாய்அடி யேனைக் குறிக்கொண்ட ருளுவதே. 9

அடுத்திருந் தாய்அரக் கன்முடி வாயொடு தோள்நெரியக்
கெடுத்திருந் தாய்கிளர்ந் தார்வ லி யைக்கிளை யோடுடனே
படுத்திருந் தாய்பழ னத்தர சேபுலி யின்னுரிதோல்
உடுத்திருந் தாய்அடி யேனைக் குறிக்கொண் டருளுவதே. 10

திருச்சிற்றம்பலம்

திருக்குறுந்தொகை. 5-ந் திருமுறை

திருச்சிற்றம்பலம்

அருவ னாய்அத்தி யீருரி போர்த்துமை
உருவ னாய்ஒற்றி யூர்பதி யாகிலும்
பருவ ரால்வயல் சூழ்ந்த பழனத்தான்
திருவி னாற்றிரு வேண்டுமித் தேவர்க்கே. 1

வையம் வந்து வணங்கி வலங்கொளும்
ஐய னைஅறி யார்சிலர் ஆதர்கள்
பைகொ ளாடர வார்த்த பழனன்பால்
பொய்யர் காலங்கள் போக்கிடு வார்களே. 2

வண்ண மாக முறுக்கிய வாசிகை
திண்ண மாகத் திருச்சடைச் சேர்த்தியே
பண்ணு மாகவே பாடும் பழனத்தான்
எண்ணும் நீர்அவன் ஆயிர நாமமே. 3

மூர்க்கப் பாம்பு பிடித்தது மூச்சிட
வாக்கப் பாம்பினைக் கண்ட துணிமதி
பாக்கப் பாம்பினைப் பற்றும் பழனத்தான்
தார்க்கொண் மாலை சடைக்கணிந் திட்டதே. 4

நீல முண்ட மிடற்றினன் நேர்ந்ததோர்
கோல முண்ட குணத்தால் நிறைந்ததோர்
பாலு முண்டு பழனன்பா லென்னிடை
மாலு முண்டிறை யென்றன் மனத்துளே. 5

மந்த மாக வளர்பிறை சூடியோர்
சந்த மாகத் திருச்சடை சாத்துவான்
பந்த மாயின தீர்க்கும் பழனத்தான்
எந்தை தாய்தந்தை எம்பெரு மானுமே. 6

மார்க்க மொன்றறி யார்மதி யில்லிகள்
பூக்க ரத்திற் புரிகிலர் மூடர்கள்
பார்க்க நின்று பரவும் பழனத்தான்
தாட்கள் நின்று தலைவணங் கார்களே. 7

ஏறி னார்இமை யோர்கள் பணிகண்டு
தேறு வாரலர் தீவினை யாளர்கள்
பாறி னார்பணி வேண்டும் பழனத்தான்
கூறி னான்உமை யாளொடுங் கூடவே. 8

சுற்று வார்தொழு வார்சுடர் வண்ணன்மேல்
தெற்றி னார்திரி யும்புரம் மூன்றெய்தான்
பற்றி னார்வினை தீர்க்கும் பழனனை
எற்றி னான்மறக் கேனெம் பிரானையே. 9

பொங்கு மாகடல் சூழ்இலங் கைக்கிறை
அங்க மான இறுத்தருள் செய்தவன்
பங்க னென்றும் பழனன் உமையொடும்
தங்கன் தாளடி யேனுடை யுச்சியே. 10

திருச்சிற்றம்பலம்

திருத்தாண்டகம் 6-ம் திருமுறை

திருச்சிற்றம்பலம்

அலையார் கடல்நஞ்ச முண்டார் தாமே
அமரர்களுக் கருள்செய்யும் ஆதி தாமே
கொலையாய கூற்ற முதைத்தார் தாமே
கொல்வேங்கைத தோலொன் றசைத்தார் தாமே

சிலையால் புரமூன் றெரித்தார் தாமே
தீநோய் களைந்தென்னை யாண்டார் தாமே
பலிதேர்ந் தழகாய பண்பர் தாமே
பழன நகரெம் பிரானூர் தாமே. 1

வெள்ள மொருசடைமே லேற்றூர் தாமே
மேலார்கண் மேலார்கண் மேலார் தாமே
கள்ளங் கடிந்தென்னை யாண்டார் தாமே
கருத்துடைய பூதப் படையார் தாமே
உள்ளத் துவகை தருவார் தாமே
உறுநோய் சிறுபிணிகள் தீர்ப்பார் தாமே
பள்ளப் பரவைநஞ் சுண்டார் தாமே
பழன நகரெம் பிரானூர் தாமே. 2

இரவும் பகலுமாய் நின்றூர் தாமே
எப்போதும் என்னெஞ்சத் துள்ளார் தாமே
அரவ மரையி லசைத்தார் தாமே
அனலாடி யங்கை மறித்தார் தாமே
குரவங் கமழுங் குற்றாலர் தாமே
கோலங்கள் மேன்மே லுகப்பார் தாமே
பரவும் அடியார்க்குப் பாங்கர் தாமே
பழன நகரெம் பிரானூர் தாமே. 3

மாறில் மதில்மூன்று மெய்தார் தாமே
வரியரவங் கச்சாக ஆர்த்தார் தாமே
நீறுசேர் திருமேனி நிமலர் தாமே
நெற்றி நெருப்புக்கண் வைத்தார் தாமே
ஏறுகொடுஞ் சூலக் கையார் தாமே
யென்பா பரண மணிந்தார் தாமே
பாறுண் தலையிற் பலியார் தாமே
பழன நகரெம் பிரானூர் தாமே. 4

சீரால் வணங்கப் படுவார் தாமே
திசைக்கெல்லாந் தேவாகி நின்றூர் தாமே
ஆரா அமுதமு மானூர் தாமே
யளவில் பெருமை யுடையார் தாமே

நீரார் நியம முடையார் தாமே
நீள்வரை வில்லாக வளைத்தார் தாமே
பாரார் பரவப் படுவார் தாமே
பழன நகரெம் பிரானூர் தாமே. 5

காலனுயிர் வௌவ வல்லார் தாமே
கடிதோடும் வெள்ளை விடையார் தாமே
கோலம் பலவு முகப்பார் தாமே
கோள்நாக நாணாகப் பூண்டார் தாமே
நீலம் பொலிந்த மிடற்றார் தாமே
நீள்வரையி னுச்சி யிருப்பார் தாமே
பால விருத்தரு மானூர் தாமே
பழன நகரெம் பிரானூர் தாமே. 6

ஏய்ந்த வுமைநங்கை பங்கர் தாமே
யேழுழிக் கப்புறமாய் நின்றார் தாமே
ஆய்ந்து மலர்தூவ நின்றார் தாமே
அளவில் பெருமை யுடையார் தாமே
தேய்ந்த பிறைசடைமேல் வைத்தார் தாமே
தீவாய் அரவதனை யார்த்தார் தாமே
பாய்ந்த படர்கங்கை யேற்றார் தாமே
பழன நகரெம் பிரானூர் தாமே. 7

ஓராதா ருள்ளத்தில் நில்லார் தாமே
யுள்ளூறும் அன்பர் மனத்தார் தாமே
பேராதென் சிந்தை யிருந்தார் தாமே
பிறர்க்கென்றுங் காட்சிக் கரியார் தாமே
ஊராரு மூவுலகத் துள்ளார் தாமே
உலகை நடுங்காமற் காப்பார் தாமே
பாரார் முழவத் திடையார் தாமே
பழன நகரெம் பிரானூர் தாமே. 8

நீண்டவர்க் கோர் நெருப்புருவ மானூர் தாமே
நேரிழையை யொருபாகம் வைத்தார் தாமே
பூண்டரவைப் புலித்தோல்மே லார்த்தார் தாமே
பொன்னிறத்த வெள்ளச் சடையார் தமோ

ஆண்டுலகே ழனைத்தினையும் வைத்தார் தாமே
அங்கங்கே சிவமாகி நின்றார் தாமே
பாண்டவரிற் பார்த்தனுக்குப் பரிந்தார் தாமே
பழன நகரெம் பிரானார் தாமே. 9

விடை யேறி வேண்டுலகத் திருப்பார் தாமே
விரிகதிரோன் சோற்றுத் துறையார் தாமே
புடைசூழத் தேவர் குழாத்தார் தாமே
பூந்துருத்தி நெய்த்தானம் மேயார் தாமே
அடைவே புனல்சூழ் ஐயாற்றார் தாமே
அரக்கனையும் ஆற்றல் அழித்தார் தாமே
படையாப் பல்பூத முடையார் தாமே
பழன நகரெம் பிரானார் தாமே. 10

திருச்சிற்றம்பலம்

51. திருவையாறு

திருஞானசம்பந்த சுவாமிகள்

பண்—தக்கராகம் 1-ம் திருமுறை

திருச்சிற்றம்பலம்

கலையார் மதியோ டுரநீரும்
நிலையார் சடையா ரிடமாகும்
மலையா ரமுமா மணிசந்தோ
டலையார் புனல்சே ருமையாறே. 1

மதியொன் றியகொன் றைவடத்தன்
மதியொன் றவுதைத் தவர்வாழ்வும்
மதியின் னுெடுசேர் கொடிமாடம்
மதியம் பயில்கின் றவையாறே. 2

கொக்கின் னிறகின் னுெடுவன்னி
புக்க சடையார்க் கிடமாகும்
திக்கின் னிசைதே வர்வணங்கும்
அக்கின் னரையா ரதையாறே. 3

சிறைகொண் டபுரம் மவைசிந்தக்
கறைகொண் டவர்கா தல்செய்கோயில்
மறைகொண் டநல்வா னவர்தம்மில்
அறையும் மொலிசே ருமையாறே. 4

உமையா ளொருபா கமதாகச்
சமைவா ரவர்சார் விடமாகும்
அமையா ருடல்சோர் தரமுத்தம்
அமையா வருமங் தணையாறே. 5

தலையின் தொடைமா லையணிந்து
கலைகொண்ட தொர்கை யினர்சேர்வாம்
நிலை கொண் டமனத் தவர்நித்தம்
மலர்கொண் டுவணங் குமையாறே. 6

வரமொன் றியமா மலரோன்தன்
சிரமொன் றையறுத் தவர் சேர்வாம்
வரைநின் றிழிவார் தருபொன்னி
அரவங் கொடுசே ருமையாறே. 7

வரையொன் றதெடுத் தஅரக்கன்
சிரமங் கநெரித் தவர்சேர்வாம்
விரையின் மலர்மே தகுபொன்னித்
திரைதன் னொடுசே ருமையாறே. 8

சங்கக் கயனும் மறியாமைப்
பொங்குஞ் சுடரா னவர்கோயில்
கொங்கிற் பொலியும் புனல்கொண்டு
அங்கிக் கெதிர்காட் டுமையாறே. 9

துவரா டையர்தோ லுடையார்கள்
கவர்வாய் மொழிகா தல்செய்யாதே
தவரா சர்கள்தா மரையானோ
டவர்தா மணைஅந் தணையாறே. 10

கலையார் கலிக்கா ழியர்மன்னன்
நலமார் தகுஞா னசம்பந்தன்
அலையார் புனல்சூ ழுமையாற்றைச்
சொலுமா லைவல்லார் துயர்வீடே. 11

திருச்சிற்றம்பலம்

திருவிராகம்–பண்–வியாழக்குறிஞ்சி 1–ம்திருமுறை

திருச்சிற்றம்பலம்

பணிந்தவர் அருவினை பற்றறுத் தருசெயத்
துணிந்தவன் தோலொடு நூல்துதை மார்பினில்
பிணிந்தவன் அரவொடு பேரெழி லாமைகொண்
டணிந்தவன் வளநகர் அந்தண் ஐயாறே. 1

கீர்த்திமிக் கவன்நகர் கிளரொளி யுடனடப்
பார்த்தவன் பனிமதி படர்சடை வைத்துப்
போர்த்தவன் கரியுரி புலியதள் அரவரை
ஆர்த்தவன் வளநகர் அந்தண் ஐயாறே. 2

வரிந்தவெஞ் சிலைபிடித் தவுணர்தம் வளநகர்
எரிந்தற எய்தவன் எழில்திகழ் மலர்மேல்
இருந்தவன் சிரமது இமையவர் குறைகொள
அரிந்தவன் வளநகர் அந்தண் ஐயாறே. 3

வாய்ந்தவல் அவுணர்தம் வளநகர் எரியிடை
மாய்ந்தற எய்தவன் வளர்பிறை விரிபுனல்
தோய்ந்தெழு சடையினன் தொன்மறை ஆறங்கம்
ஆய்ந்தவன் வளநகர் அந்தண் ஐயாறே. 4

வானமர் மதிபுல்கு சடையிடை அரவொடு
தேனமர் கொன்றையன் திகழ்தரு மார்பினன்
மானன மென்விழி மங்கையொர் பாகமும்
ஆனவன் வளநகர் அந்தண் ஐயாறே. 5

முன்பனை முனிவரோ டமரர்கள் அடிதொழும்
இன்பனை யிணையில இறைவனை யெழில்திகழ்
என்பொனை யேதமில் வேதியர் தாந்தொழும்
அன்பன வளநகர் அந்தண் ஐயாறே. 6

வன்திறல் அவுணர்தம் வளநகர் எரியிடை
வெந்தற எய்தவன் விளங்கிய மார்பினில்
பந்தமர் மெல்விரல் பாகம தாகிதன்
அந்தமில் வளநகர் அந்தண் ஐயாறே. 7

விடைத்தவல் அரக்கன்நல் வெற்பினை யெடுத்தலும்
அடித்தலத் தால்இறை யூன்றிமற் றவனது
முடித்தலை தோளவை நெரிதர முறைமுறை
அடர்த்தவன் வளநகர் அந்தண் ஐயாறே. 8

விண்ணவர் தம்மொடு வெங்கதி ரோன்நல
எண்ணிலி தேவர்கள் இந்திரன் வழிபடக்
கண்ணனும் பிரமனுங் காண்பரி தாகிய
அண்ணல்தன் வளநகர் அந்தண் ஐயாறே. 9

மருளுடை மனத்துவன் சமணர்கள் மாசரு
இருளுடை யிணைத்துவர்ப் போர்வையி னார்களும்
தெருளுடை மனத்தவர் தேறுமின் திண்ணமா
அருளுடை யடிகள்தம் அந்தண் ஐயாறே. 10

நலமலி ஞானசம் பந்தன தின்தமிழ்
அலைமலி புனல்மல்கும் அந்தண்ஐ யாற்றினைக்
கலைமலி தமிழிவை கற்றுவல் லார்மிக
நலமலி புகழ்மிகும் நன்மையர் தாமே. 11

திருச்சிற்றம்பலம்

பண்– மேகராகக்குறிஞ்சி 1 ம்–திருமுறை

திருச்சிற்றம்பலம்

புலனைந்தும் பொறிகலங்கி நெறிமயங்கி
யறிவழிந்திட் டைம்மே லுந்தி
அலமந்த போதாக அஞ்சேலென்
றருள்செய்வான் அமருங் கோயில்
வலம்வந்த மடவார்கள் நடமாட
முழுவ திர மழை யென்றஞ்சிச்
சிலமந்தி யலமந்து மரமேறி
முகில் பார்க்குந் திருவையாறே. 1

விடலேறு படநாகம் அரைக்கசைத்து
வெற்பரையன் பாவை யோடும்
அடலேறொன் றதுவேறி யஞ்சொலீர்
பலியென்னும் அடிகள் கோயில்

கடலேறித் திரைமோதிக் காவிரியி
னுடன் வந்து கங்குல் வைகித்
திடலேறிச் சுரிசங் கஞ் செழு முத்தங்
கீன் றலைக்குந் திருவையாறே. ௨

கங்காளர் கயிலாய மலையாளர்
கானப்பே ராளர் மங்கை
பங்காளர் திரிசூலப் படையாளர்
விடையாளர் பயிலுங் கோயில்
கொங்காளப் பொழில்நுழைந் து கூர்வாயால்
இறகுலர்த்திக் கூதல் நீங்கிச்
செங்கானல் வெண் குருகு பைங்கானல்
இரைதேருந் திருவை யாறே. ௩

ஊன் பாயும் முடை தலைகொண் டூரின்
பலிக் குழல்வார் உமையாள் பங்கர்
தான்பாயும் விடையே றுஞ் சங்கரனூர்
தழலுருவர் தங்குங் கோயில்
மான்பாய வயலருகே மரமேறி
மந்திபாய் மடுக்கள் தோறும்
தேன்பாய மீன்பாயச் செங்கமல
மொட்டலருந் திருவை யாறே. 4

நீரோடு கூவிளமும் நிலாமதியும்
வெள்ளெருக்கும் நிறைந்த கொன்றைத்
தாரோடு தண்கரந்தை சடைக்கணிந்த
தத்துவனூர் தங்குங் கோயில்
காரோடி விசும் பளந்து கடிநாறும்
பொழிலணைந்த கமழ்தார் வீதித்
தேரோடும் அரங்கேறிச் சேயிழையார்
நடம்பயிலுந் திருவை யாறே. 5

வேந்தாகி விண்ணவர்க்கும் மண் ணவர்க்கும்
நெறி காட்டும் விகிர்த னாகிப்
பூந்தாம நறுங்கொன்றை சடைக்கணிந்த
புண்ணியனூர் நண்ணுங் கோயில்

காந்தார மிசையமைத்துக் காரிகையார்
பண்பாடக் கவினர் வீதித்
தேந்தாமென் றரங்கேறிச் சேயிழையார்
நடமாடுந் திருவை யாறே. 6

நின்றுலா நெடுவிசும்பில் நெருக்கிவரு
புரமூன்றும் நீள்வா யம்பு
சென்றுலாம் படிதொட்ட சிலையாளி
மலையாளி சேருங் கோயில்
குன்றெலாங் குயில்கூவக் கொழும்பிரச
மலர்பாய்ந்து வாச மல்கு
தென்றலார் அடிவருடச் செழுங்கரும்பு
கண்வளருந் திருவை யாறே. 7

அஞ்சாதே கயிலாய மலையெடுத்த
அரக்கர்கோன் தலைகள் பத்தும்
மஞ்சாடு தோள்நெறிய அடர்த்தவனுக்
கருள்புரிந்த மைந்தர் கோயில்
இஞ்சாயல் இளந்தெங்கின் பழம்வீழ
இளமேதி யிரிந்தங் கோடிச்
செஞ்சாலிக் கதிருழக்கிச் செழுங்கமல
வயல்படியுந் திருவை யாறே. 8

மேலோடி விசும்பணவி வியன்நிலத்தை
மிகஅகழ்ந்து மிக்கு நாடும்
மாலோடு நான்முகனும் அறியாத
வகைநின்றான் மன்னுங் கோயில்
கோலோடக் கோல்வளையார் கூத்தாடக்
குவிமுலையார் முகத்தி னின்று
சேலோடச் சிலையாடச் சேயிழையார்
நடமாடுந் திருவை யாறே. 9

குண்டாடு குற்றுடுக்கைச் சமணரோடு
சாக்கியருங் குணமொன் றில்லா
மிண்டாடு மிண்டருரை கேளாதே
யாளாமின் மேவித் தொண்டீர்

எண்டோளர் முக்கண்ணர் எம்மீசர்
இறைவர்இனி தமருங் கோயில்
செண்டாடு புனற்பொன்னிச் செழுமணிகள்
வந்தலைக்குந் திருவை யாறே. 10

அன்னமலி பொழில்புடைசூழ் ஐயாற்றெம்
பெருமானை அந்தண் காழி
மன்னியசீர் மறைநாவன் வளர்ஞான
சம்பந்தன் மருவு பாடல்
இன்னிசையால் இவைபத்தும் இசையுங்கால்
ஈசனடி யேத்து வார்கள்
தன்னிசையோ டமருலகில் தவநெறிசென்
றெய்துவார் தாழா தன்றே. 11

திருச்சிற்றம்பலம்

பண்–இந்தளம் 2-ம் திருமுறை

திருச்சிற்றம்பலம்

கோடல் கோங்கங் குளிர்கூ விளமாலை குலாயசீர்
ஒடு கங்கை ஒளிவெண் பிறைசூடும் ஒருவனர்
பாடல் வீணை முழவங்குழல் மொந்தை பண்ணுகவே
ஆடு மாறு வல்லானும் ஐயாறுடை ஐயனே. 1

தன்மை யாரும் அறிவாரில்லை தாம்பிறர் எள்கவே
பின்னும் முன்னுஞ் சிலபேய்க் கணஞ்சூ ழத்திரிதர்வர்
துன்ன ஆடை யுடுப்பர் சுடலைப்பொ டிப்பூசுவர்
அன்னம் ஆலுந் துறையானும் ஐயாறுடை ஐயனே. 2

கூறு பெண்ணுடை கோவணம் உண்பதும் வெண்டலை
மாறி லாருங்கொள் வாரில்லை மார்பி லணிகலம்
ஏறும் ஏறித் திரிவரிமை யோர்தொழு தேத்தவே
ஆறும் நான்குஞ் சொன்னானும் ஐயாறுடை ஐயனே. 3

பண்ணின் நல்ல மொழியார் பவளத்துவர் வாயினர்
எண்ணின் நல்லகுணத் தாரிணை வேல் வென்ற கண்ணினர்
வண்ணம் பாடிவலி பாடித்தம் வாய்மொழி பாடவே
அண்ணல் கேட்டு கந்தானும் ஐயாறுடை ஐயனே. 4

வேனலானை வெருவவுரி போர்த்துமை யஞ்சவே
வானை யூடறுக் கும்மதி சூடிய மைந்தனூர்
தேன்நெய் பால்தயிர் தெங்கிள நீர்கரும் பின்தெளி
ஆனஞ் சாடும் முடியானும் ஐயாறுடை ஐயனே. 5

எங்கு மாகி நின்றானும் இயல்பறி யப்படா
மங்கை பாகங் கொண்டானும் மதிசூடு மைந்தனும்
பங்க மில்பதி னெட்டொடு நான்குக் குணர்வு மாய்
அங்கம் ஆறுஞ் சொன்னானும் ஐயாறுடை ஐயனே. 6

ஓதி யாருமறி வாரில்லை யோதி யுலகெலாம்
சோதி யாய்நிறைந் தான்சுடர்ச் சோதியுட் சோதியான்
வேதி யாகிவிண் ணாகிமண் ணோடெறி காற்றுமாய்
ஆதி யாகி நின்றானும் ஐயாறுடை ஐயனே. 7

குரவ நாண்மலர் கொண்டடி யார்வழி பாடுசெய்
விரவ நீறணி வார்சில தொண்டர் வியப்பவே
பரவி நாடொறும் பாடநம் பாவம் பறைதலால்
அரவ மார்த்துகந் தானும் ஐயாறுடை ஐயனே. 8

உரைசெய் தொல்வழி செய்தறி யாஇலங் கைக்குமன்
வரைசெய் தோளடர்த் தும்மதி சூடிய மைந்தனூர்
கரைசெய் காவிரி யின்வட பாலது காதலான்
அரைசெய் மேகலை யானும் ஐயாறுடை ஐயனே. 9

மாலுஞ் சோதி மலரானும் அறிகிலா வாய்மையான்
காலங் காம்பு வயிரங் கடிகையன் பொற்கழல்
கோல மாய்க் கொழுந் தீன்று பவளந் திரண்டதோர்
ஆல நீழ லுளானும் ஐயாறுடை ஐயனே. 10

கையி லுண்டுழல் வாருங் கமழ்துவ ராடையால்
மெய்யைப் போர்த்துழல் வாரும் உரைப்பன மெய்யல
மைகொள் கண்டத் தெண்டோள்முக் கணான்கழல் வாழ்த்தவே
ஐயந் தேர்ந்தளிப் பானும் ஐயாறுடை ஐயனே. 11

பலிதி ரிந்துழல் பண்டங்கள் மேய ஐயாற்றினைக்
கலிக டிந்தகை யான்கடற் காழியர் காவலன்
ஒலிகொள் சம்பந்தன் ஒண்டமிழ் பத்தும்வல் லார்கள்போய்
மலிகொள் விண்ணிடை மன்னிய சீர்பெறு வார்களே. 12

திருச்சிற்றம்பலம்

திருவிராகம் பண்-இந்தளம் 2-ம் திருமுறை

திருச்சிற்றம்பலம்

திருத்திகழ் மலைச்சிறுமி யோடுமிகு தேசர்
உருத்திகழ் எழிற்கயிலை வெற்பிலுறை தற்கே
விருப்புடைய அற்புத ரிருக்குமிடம் ஏரார்
மருத்திகழ் பொழிற்குலவு வண்திருவை யாறே. 1

கந்தமர வுந்துபுகை யுந்தலில் விளக்கேர்
இந்திர னுணர்ந்துபணி யெந்தையிட மெங்கும்
சந்தமலி யுந்தரு மிடைந்தபொழில் சார
வந்தவளி நந்தணவு வண்திருவை யாறே. 2

கட்டுவட மெட்டுமுறு வட்டமுழ வத்தில்
கொட்டுகர மிட்டவொலி தட்டும்வகை நந்திக்
கிட்டமிக நட்டமவை யிட்டவ ரிடஞ்சீர்
வட்டமதில் உட்டிகழும் வண்திருவை யாறே. 3

நண்ணியொர் வடத் தின்நிழல் நால்வர்முனி வர்க்கன்
றெண்ணிலி மறைப்பொருள் விரித்தவ ரிடஞ்சீர்த்
தண்ணின்மலி சந்தகிலொ டுந்திவரு பொன்னி
மண்ணின் மிசை வந்தணவு வண்திருவை யாறே. 4

வென்றிமிகு தாரகன தாருயிர் மடங்கக்
கன்றிவரு கோபம்மிகு காளி கதமோவ
நின்றுநட மாடியிட நீடுமலர் மேலால்
மன்றல்மலி யும்பொழில்கொள் வண்திருவை யாறே. 5

பூதமொடு பேய்கள்பல பாடநட மாடிப்
பாதமுதல் பையரவு கொண்டணி பெறுத்திக்
கோதைய ரிடும்பலி கொளும்பர னிடம்பூ
மாதவி மணங்கமழும் வண்திருவை யாறே. 6

துன்னுகுழல் மங்கையுமை நங்கைசுளி வெய்தப்
பின்னொரு தவஞ்செய்துழல் பிஞ்ஞகனு மங்கே
என்னசதி என்றுரைசெ யங்கண னிடஞ்சீர்
மன்னுகொடை யாளர்பயில் வண்திருவை யாறே. 7

இரக்கமில் குணத்தொடுல கெங்குஙலி வெம்போர்
அரக்கன்முடி யத்தலே புயத்தொடு மடங்கத்
துரக்கவிர லிற்சிறிது வைத்தவ ரிடஞ்சீர்
வரக்கருணை யாளர்பயில் வண்திருவை யாறே. 8

பருத்துருவ தாகிவிண் அடைந்தவனொர் பன்றிப்
பெருத்துருவ தாயுல கிடந்தவனு மென்றும்
கருத்துரு வொண்ணுவகை நிமிர்ந்தவ னிடங்கார்
வருத்துவகை தீர்கொள்பொழில் வண்திருவை யாறே. 9

பாக்கியம தொன்றுமில் சமண்பதகர் புத்தர்
சாக்கியர்க ளென றுடல் பொதிந்துதிரி வார்தாம்
நோக்கரிய தத்துவ னிடம் படியின் மேலால்
மாக்கமுற நீடுபொழில் வண்திருவை யாறே. 10

வாசமலி யும்பொழில்கொள் வண்திருவை யாற்றுள்
ஈசனை யெழிற்புகலி மன்னவன் மெய்ஞ்ஞானப்
பூசுர னுரைத்ததமிழ் பத்துமிவை வல்லார்
நேசமலி பத்தரவர் நின்மல னடிக்கே. 11

திருச்சிற்றம்பலம்

திருநாவுக்கரசு சுவாமிகள்

திருவையாறு – பண் – காந்தாரம் 4-ம் திருமுறை

திருச்சிற்றம்பலம்

மாதர்ப் பிறைக் கண்ணியானை மலையான் மகளொடும்பாடிப்
போதொடு நீர்சுமந் தேத்திப் புகுவா ரவர்பின் புகுவேன்
யாதுஞ் சுவடுபடாமல் ஐயா றடைகின்ற போது
காதன் மடப்பிடி யோடுங் களிறு வருவனகண்டேன்
கண்டே னவர்திருப் பாதங் கண்டறி யாதனகண்டேன். 1

போழிளங் கண்ணியி னானைப் பூந்துகி லாளொடும்பாடி
வாழியம் போற்றியென் றேத்தி வட்டமிட்டாடாவருவேன்
ஆழி வலவனின் றேத்தும் ஐயா றடைகின்றபோது
கோழிபெடையொடுங் கூடிக் குளிர்ந்து வருவனகண்டேன்
கண்டே னவர்திருப் பாதங் கண்டறி யாதனகண்டேன். 2

எரிப்பிறைக் கண்ணியி னானை ஏந்திழையா ளொடும்பாடி
முரித்த விலயங்க ளிட்டு முகமலர்ந் தாடாவருவேன்
அரித்தொ ழுகும்வெள் ளருவி ஐயா றடைகின்றபோது
வரிக்குயில் பேடை யொ டாடி வைகி வருவனகண்டேன்
கண்டே னவர் திருப் பாதங் கண்டறி யாதன கண்டேன். 3

பிறையிளங் கண்ணியி னானைப் பெய்வளை யாளொடும் பாடித்
துறையிளம் பன்மலர் தூவித் தோளைக் குளிரத் தொழுவேன்
அறையிளம் பூங்குயி லாலும் ஐயா றடைகின்ற போது
சிறையிளம் பேடையொ டாடிச் சேவல் வருவன கண்டேன்
கண்டே னவர் திருப்பாதங் கண்டறி யாதன கண்டேன். 4

ஏடுமதிக் கண்ணி யானை ஏந்திழை யாளொடும் பாடிக்
காடொடு நாடும் மலையுங் கைதொழு தாடா வருவேன்
ஆட லமர்ந்துறை கின்ற ஐயா றடைகின்ற போது
பேடை மயிலொடுங் கூடிப் பிணைந்து வருவன கண்டேன்
கண்டே னவர் திருப் பாதங் கண்டறி யாதன கண்டேன். 5

தண்மதிக் கண்ணியி னானைத் தையல்நல் லாளொடும் பாடி
உண்மெலி சிந்தை யனாகி உணரா வுருகா வருவேன்
அண்ண லமர்ந்துறை கின்ற ஐயா றடைகின்ற போது
வண்ணப் பகன்றிலொ டாடி வைகி வருவன கண்டேன்
கண்டே னவர் திருப் பாதங் கண்டறி யாதன கண்டேன். 6

கடிமதிக் கண்ணியி னானைக் காரிகை யாளொடும் பாடி
வடிவொடு வண்ண மிரண்டும் வாய்வேண்டுவ சொல்லி
வாழ்வேன்
அடியிணை ஆர்க்குங் கழலான் ஐயா றடைகின்ற போது
இடிகுர லன்னதொர் ஏனம் இசைந்து வருவன கண்டேன்
கண்டே னவர் திருப் பாதங் கண்டறி யாதன கண்டேன். 7

விரும்புமதிக்கண்ணி யானை மெல்லிய லாளொடும் பாடிப்
பெரும்புலர் காலை யெழுந்து பெறுமலர் கொய்யா வருவேன்
அருங்கலம் பொன்மணி யுந்தும் ஐயா றடைகின்ற போது
கருங்கலை பேடை யொடாடிக் கலந்து வருவன கண்டேன்
கண்டே னவர் திருப் பாதங் கண்டறி யாதன கண்டேன். 8

முற்பிறைக் கண்ணி யினுனை மொய்குழ லாளொடும் பாடிப்
பற்றிக் கயிறறுக் கில்லேன் பாடியும் ஆடா வருவேன்
அற்றருள் பெற்றுநின் றாரோ டையா றடைகின்ற போது
நற்றுணைப் பேடையொ டாடி நானர வருவன கண்டேன்
கண்டே னவர் திருப் பாதங் கண்ட றியாதன கண்டேன் 9

திங்கள் மதிக்கண்ணி யானைத் தேமாழி யாளொடும் பாடி
எங்கருள் நல்குங் கொலெந்தை எனக்கினி யென்று வருவேன்
அங்கிள மங்கைய ராடும் ஐயா றடைகின்ற போது
பைங்கிளி பேடையொ டாடிப் பரந்து வருவன கண்டேன்
கண்டே னவர் திருப் பாதங் கண்ட றியாதன கண்டேன் 10

வயர்மதிக் கண்ணியினுனை வார்குழ லாளொடும் பாடிக்
களவு படாததொர் காலங் காண்பான் கடைக் கணிக்கின்றேன்
அளவு படாததொ ரன்போ டையா றடைகின்ற போது
இளமண நாகுதழுவி ஏறு வருவன கண்டேன்
கண்டே னவர் திருப் பாதங் கண்ட றியாதன கண்டேன். 11

திருச்சிற்றம்பலம்

பண் – பழந்தக்கராகம் 4–ம் திருமுறை

திருச்சிற்றம்பலம்

விடகிலேன் அடிநாயேன் வேண்டியக்கால் யாதொன்றும்
இடைகிலேன் அமணர்கள் தம் அறவுரைகேட் டலமந்தேன்
தொடர்கின்றேன் உன்னுடைய தூமலர்ச்சே வடிகாண்பான்
அடைகின்றேன் ஐயாறர்க் காளாய்நான் உய்ந்தேனே. 1

செம்பவளத் திருவுருவர் திகழ்சோதி குழைக்காதர்
கொம்பமருங் கொடிமருங்குற் கோல்வளையா ளொருபாகர்
வம்பவிழும் மலர்க்கொன்றை வளர்சடைமேல் வைத்துகந்த
அம்பவள ஐயாறர்க் காளாய்நான் உய்ந்தேனே. 2

நணியானே சேயானே நம்பானே செம்பொன்னின்
துணியானே தோலானே சுண்ணவெண் ணீற்றானே
மணியானே வானவர்க்கு மருந்தாகிப் பிணிதீர்க்கும்
அணியானே ஐயாறர்க் காளாய்நான் உய்ந்தேனே. 3

ஊழித்தீ யாய்நின்றாய் உள்குவார் உள்ளத்தாய்
வாழித்தீ யாய்நின்றாய் வாழ்த்துவார் வாயானே
பாழித்தீ யாய்நின்றாய் படர்சடைமேற் பனிமதியம்
ஆழித்தீ ஐயாறர்க் காளாய்நான் உயர்ந்தேனே, 4

சடையானே சடையிடையே தவழுந்தண் மதியானே
விடையானே விடையேறிப் புரமெரித்த வித்தகனே
உடையானே உடைதலைகொண் டூருருண் பலிக்குழலும்
அடையானே ஐயாறர்க் காளாய்நான் உய்ந்தேனே. 5

நீரானே தீயானே நெதியானே கதியானே
ஊரானே உலகானே உடலானே உயிரானே
பேரானே பிறைசூடி பிணிதீர்க்கும் பெருமானென்
றூராத ஐயாறர்க் காளாய்நான் உய்ந்தேனே. 6

கண்ணானாய் மணியானாய் கருத்தானாய் அருத்தானாய்
எண்ணானாய் எழுத்தானாய் எழுத்தினுக்கோர் இயல்பானாய்
விண்ணானாய் விண்ணிடையே புரமெரித்த வேதியனே
அண்ணான ஐயாறர்க் காளாய்நான் உய்ந்தேனே, 7

மின்னானாய் உருவானாய் வேதத்தின் பொருளானாய்
பொன்னானாய் மணியானாய் பொருகடல்வாய் முத்தானாய்
நின்றானா நிருவர்க்குங் காண்பரிய நிமிர்சோதி
அன்னானே ஐயாறர்க் காளாய் நான் உய்ந்தேனே. 8

முத்திசையும் புனற்பொன்னி மொய்பவளங் கொழித்துந்தப்
பத்தர்பலர் நீர்மூழ்கிப் பலகாலம் பணிந்தேத்த
எத்திசையும் வானவர்கள் எம்பெருமா னெனஇறைஞ்சும்
அத்திசையாம் ஐயாறர்க் காளாய்நான் உய்ந்தேனே. 9

கருவரைசூழ் கடல்இலங்கைக் கோமானைக் கருத்தழியத்
திருவிரலால் உதகரணஞ் செய்துகந்த சிவமூர்த்தி
பெருவரைசூழ் வையகத்தார் பேர்நந்தி என்றேத்தும்
அருவரைசூழ் ஐயாறர்க் காளாய்நான்உய்ந்தேனே. 10

திருச்சிற்றம்பலம்

திருச்சிற்றம்பலம்

கங்கையைச் சடையுள் வைத்தார் கதிர்பொறி அரவும் வைத்தார்
திங்களைத் திகழ வைத்தார் திசைதிசை தொழவும் வைத்தார்
மங்கையைப் பாகம் வைத்தார் மான்மறி மழுவும் வைத்தார்
அங்கையுள் அனலும் வைத்தார் ஐயன்ஐ யாற னாரே. 1

பொடிதனைப் பூச வைத்தார் பொங்குவெண் ணூலும்வைத்தார்
கடிபடதோர் நாகம் வைத்தார் காலனைக் கால வைத்தார்
வடிவுடை மங்கை தன்னை மார்பிலோர் பாகம் வைத்தார்
அடியிணை தொழவும் வைத்தார் ஐயன்ஐ யாற னாரே. 2

உடைதரு கீளும் வைத்தார் உலகங்க ளனைத்தும் வைத்தார்
படைதரு மழுவும் வைத்தார் பாய்புலித் தோலும் வைத்தார்
விடைதரு கொடியும் வைத்தார் வெண்புரி நூலும் வைத்தார்
அடைதர அருளும் வைத்தார் ஐயன்ஐ யாற னாரே. 3

தொண்டர்கள் தொழவும் வைத்தார் தூமதி சடையில் வைத்தார்
இண்டையைத் திகழ வைத்தார் எமக்கென்றும் இன்பம் வைத்தார்
வண்டுசேர் குழலி னாளை மருவியோர் பாகம் வைத்தார்
அண்டவா னவர்கள் ஏத்தும் ஐயன்ஐ யாற னாரே. 4

வானவர் வணங்க வைத்தார் வல்வினை மாய வைத்தார்
கானிடை நடமும் வைத்தார் காமனைக் கனலா வைத்தார்
ஆனிடை ஐந்தும் வைத்தார் ஆட்டுவார்க் கருளும் வைத்தார்
ஆனையின் உரியும் வைத்தார் ஐயன்ஐ யாற னாரே. 5

சங்கணி குழையும் வைத்தார் சாம்பல்மெய்ப் பூச வைத்தார்
வெங்கதிர் எரிய வைத்தார் விரிபொழி லனைத்தும் வைத்தார்
கங்குலும் பகலும் வைத்தார் கடுவினை களைய வைத்தார்
அங்கம தோத வைத்தார் ஐயன்ஐ யாற னாரே. 6

பத்தர்கட் கருளும் வைத்தார் பாய்விடை ஏற வைத்தார்
சித்தத்தை ஒன்ற வைத்தார் சிவமதே நினைய வைத்தார்
முத்தியை முற்ற வைத்தார் முறைமுறை நெறிகள் வைத்தார்
அத்தியின் உரிவை வைத்தார் ஐயன்ஐ யாற னாரே. 7

ஏறுகந் தேற வைத்தார் இடைமரு திடமும் வைத்தார்
நாறுபூங் கொன்றை வைத்தார் நாகமும் அரையில் வைத்தார்
கூறுமை யாக வைத்தார் கொல்புலித் தோலும் வைத்தார்
ஆறுமோர் சடையில் வைத்தார் ஐயன்ஐ யாற னாரே. 8

பூதங்கள் பலவும் வைத்தார் பொங்குவெண் ணீறும் வைத்தார்
கீதங்கள் பாட வைத்தார் கின்னரந் தன்னை வைத்தார்
பாதங்கள் பரவ வைத்தார் பத்தர்கள் பணிய வைத்தார்
ஆதியும் அந்தம் வைத்தார் ஐயன்ஐ யாற னாரே. 9

இரப்பவர்க் கீய வைத்தார் ஈபவர்க் கருளும் வைத்தார்
கரப்பவர் தங்கட் கெல்லாங் கடுநர கங்கள் வைத்தார்
பரப்புநீர்க் கங்கை தன்னைப் படர்சடைப் பாகம் வைத்தார்
அரக்கனுக் கருளும் வைத்தார் ஐயன்ஐ யாற னாரே. 10

திருச்சிற்றம்பலம்

திருநேரிசை 4-ம் திருமுறை

குண்டனாய்ச் சமண ரோடே கூடிநான் கொண்ட மாலைத்
துண்டனே சுடர்கொள் சோதீ தூநெறி யாகி நின்ற
அண்டனே அமரர் ஏறே திருஐயா றமர்ந்த தேனே
தொண்டனேன் தொழுதுன் பாதஞ் சொல்லிநான் திரிகின்
றேனே. 1

பீலிகை இடுக்கி நாளும் பெரியதோர் தவமென் றெண்ணி
வாலிய தறிகள் போல மதியிலார் பட்ட தென்னே
வாலியார் வணங்கி ஏத்துந் திருஐயா றமர்ந்த தேனே
ஞாலியா எழுந்த நெஞ்சம் அழகிதா எழுந்த வாறே. 2

தட்டிடு சமண ரோடே தருக்கிநான் தவமென் றெண்ணி
ஒட்டிடு மனத்தி னீரே உம்மையான் செய்வ தென்னே
மொட்டிடு கமலப் பொய்கைத் திருஐயா றமர்ந்த தேனே
கொட்டிடும் உள்ளத்தீரே உம்மைநான் உகந்திட் டேனே. 3

பாசிப்பல் மாசு மெய்யர் பலமிலாச் சமண ரோடு
நேசத்தா லிருந்த நெஞ்சை நீக்குமா றறிய மாட்டேன்
தேசத்தார் பரவி ஏத்துந் திருஐயா றமர்ந்த தேனை
வாசத்தால் வணங்க வல்லார் வல்வினை மாயு மன்றே 4

கடுப்பொடி யட்டி மெய்யிற் கருதியோர் தவமென் றெண்ணி
வடுக்களோ டிசைந்த நெஞ்சே மதியிலி பட்ட தென்னே
மடுக்களில் வாளை பாயுந் திருஐயா றமர்ந்த தேனை
அடுத்துநின் றுன்னு நெஞ்சே அருந்தவஞ் செய்த வாறே. 5

துறவியென் றவமதோரேன் சொல்லிய செலவு செய்து
உறவினுல் அமண ரோடும் உணர்விலேன் உணர்வொன்றின்றி
நறவமார் பொழில்கள் சூழ்ந்த திருஐயா றமர்ந்த தேனை
மறவிலா செஞ்ச மேநன் மதியுனக் கடைந்த வாறே. 6

பல்லுரைச் சமண ரோடே பலபல கால மெல்லாஞ்
சொல்லிய செலவு செய்தேன் சோர்வனுன் நினைந்த போது
மல்லிகை மலருஞ் சோலைத் திருஐயா றமர்ந்த தேனை
எல்லியும் பகலு மெல்லாம் நினைந்தபோ தினிய.வாறே 7

மண்ணுளார் விண்ணு ளாரும் வணங்குவார் பாவம் போக
எண்ணிலாச் சமண ரோடே இசைந்தனை ஏழை நெஞ்சே
தெண்ணிலா எறிக்குஞ் சென்னித் திருஐயா றமர்ந்த தேனைக்
கண்ணினுற் காணப் பெற்றுக் கருதிற்றே முடிந்த வாறே. 8

குருந்தம தொசித்த மாலும் குலமலர் மேவி னுனும்
திருந்து நற் றிருவ டியுந் திருமுடி காண மாட்டார்
அருந்தவ முனிவ ரேத்துந் திருஐயா றமர்ந்த தேனைப்
பொருந்திநின் றுன்னு நெஞ்சே பொய்வினை மாயு மன்றே: 9

அறிவிலா அரகக னேடு அருவரை எடுக்க லுற்று
முறுகினுன் முறுகக் கண்டு மூதறி வாளன் நோக்கி
நிறுவினுன் சிறுவி ரலால் நெரிந்துபோய் நிலத்தில் வீழ
அறிவினுல் அருள்கள் செய்தான் திருஐயா றமர்ந்த தேனே. 10

திருச்சிற்றம்பலம்

திருச்சிற்றம்பலம்

தானலா துலக மில்லை சகமலா தடிமை யில்லை
கானலா தாட லில்லை கருதுவார் தங்க ளுக்கு
வானலா தருளு மில்லை வார்குழல் மங்கை யோடும்
ஆனலா தூர்வ தில்லை ஐயன்ஐ யாற னார்க்கே. 1

ஆலலால் இருக்கை யில்லை அருந்தவ முனிவர்க் கன்று
நூலலால் நொடிவ தில்லை நுண்பொரு ளாய்ந்து கொண்டு
மாலுநான் முகனும் கூடி மலரடி வணங்க வேலை
ஆலலால் அமுத மில்லை ஐயன்ஐ யாற னார்க்கே. 2

நரிபுரி சுடலை தன்னில் நடமலால் நவிற்ற லில்லை
சுரிபுரி குழலி யோடுந் துணையலால் இருக்கை யில்லை
தெரிபுரி சிந்தை யார்க்குத் தெளிவலால் அருளு மில்லை
அரிபுரி மலர்கொண் டேத்தும் ஐயன்ஐ யாற னார்க்கே. 3

தொண்டலால் துணையு மில்லை தோலலா துடையு மில்லை
கண்டலா தருளு மில்லை கலந்தபின் பிரிவ தில்லை
பண்டைநான் மறைகள் காணாப் பரிசின னென்றென் றெண்ணி
அண்டவா னவர்க ளேத்தும் ஐயன்ஐ யாற னார்க்கே. 4

எரியலால் உருவ மில்லை ஏறலால் ஏற லில்லை
கரியலாற் போர்வை யில்லை காண்டகு சோதி யார்க்குப்
பிரிவிலா அமரர் கூடிப் பெருந்தகைப் பிரானென் றேத்தும்
அரியலால் தேவி யில்லை ஐயன்ஐ யாற னார்க்கே. 5

என்பலாற் கலனு மில்லை எருதலால் ஊர்வ தில்லை
புன்புலால் நாறு காட்டிற் பொடியலாற் சாந்து மில்லை
துன்பிலாத் தொண்டர் கூடித் தொழுதழு தாடிப் பாடும்
அன்பலாற் பொருளு மில்லை ஐயன்ஐ யாற னார்க்கே. 6

கீளலால் உடையு மில்லை கிளர்பொறி யரவம் பைம்பூண்
தோளலால் துணையுமில்லை தொத்தலர் கின்ற வேனில்
வேளலாற் காயப் பட்ட வீரரு மில்லை மீளா
ஆளலாற் கைம்மா றில்லை ஐயன்ஐ யாற னார்க்கே 7

சகமலா தடிமை யில்லை தானலால் துணையு மில்லை
நகமெலாந் தேயக் கையால் நாண்மலர் தொழுது தூவி
முகமெலாங் கண்ணீர் மல்க முன்பணிந் தேத்துந் தொண்டர்
அகமலாற் கோயி லில்லை ஐயன்ஐ யாற ஞர்க்கே. 8

உமையலா துருவ மில்லை உலகலா துடைய தில்லை
நமையெலா முடைய ராவர் நன்மையே தீமை யில்லை
கமையெலா முடைய ராகிக் கழலடி பரவுந் தொண்டர்க்
கமைவிலா அருள்கொடுப்பார் ஐயன்ஐ யாற ஞர்க்கே. 9

மலையலால் இருக்கை யில்லை மதித்திடா அரக்கன் தன்னைத்
தலையலால் நெரித்த தில்லை தடவரைக் கீழ டர்த்து
நிலையிலார் புரங்கள் வேவ நெருப்பலால் விரித்த தில்லை.
அலையினுர் பொன்னி மன்னும் ஐயன்ஐ யாற ஞர்க்கே. 10

திருச்சிற்றம்பலம்

திருவிருத்தம் 4-ம் திருமுறை

திருச்சிற்றம்பலம்

அந்தி வட்டத்திங்கட் கண்ணியன் ஐயா றமர்ந்து வந்தென்
புந்தி வட்டத் திடைப் புக்கு நின்றுனையும் பொய்யென்பனோ
சிந்தி வட்டச்சடைக் கற்றை யலம்பச் சிறிதலர்ந்த
நந்திவட்டத்தொடு கொன்றை வளாவிய நம்பனையே. 1

பாடகக் கால்கழற் கால்பரி திக்கதி ருக்கவந்தி
நாடகக் கால் நங்கை முன்செங்கண் ஏனத்தின் பின் நடந்த
காடகக் கால்கணங் கைதொழுங் காலெங்க ளுய்நின்றகால்
ஆடகக் காலரி மான்தேர் வலவன்ஐ யாற்றனவே. 2

திருச்சிற்றம்பலம்

திருவிருத்தம் 4-ம் திருமுறை

திருச்சிற்றம்பலம்

குறுவித்த வாகுற்ற நோய்வினை காட்டிக் குறுவித்தநோய்
உறுவித்த வாவுற்ற நோய்வினை தீர்ப்பான் உகந்தருளி
அறிவித்த வாறடி யேனைஐ யாறன் அடிமைக்களே
செறிவித்த வாதொண்ட னேனைத்தன் பொன்னடிக்
கீழெனையே. 1

கூர்வித்த வாகுற்ற நோய்வினை காட்டியுங் கூர்வித்த நோய்
ஊர்வித்த வாவுற்ற நோய்வினை தீர்ப்பான் உகந்தருளி
ஆர்வித்த வாறடி யேனைஐ யாறன் அடிமைக்களே
சேர்வித்த வாதொண்ட னேனைத்தன் பொன்னடிக்
கீழெனையே. 2

தாக்கின வாசல மேவினை காட்டியுந் தண்டித்த நோய்
நீக்கின வாநெடு நீரினின் றேற நினைந்தருளி
ஆக்கின வாறடி யேனைஐ யாறன் அடிமைக்களே
நோக்கின வாதொண்ட னேனைத்தன் பொன்னடிக்
கீழெனையே. 3

தருக்கின நான்தக வின்றியு மோடச் சலமதனுல்
நெருக்கின வாநெடு நீரின்நின் றேற நினைந்தருளி
உருக்கின வாறடி யேனைஐ யாறன் அடிமைக்கேள
பெருக்கின வாதொண்ட னேனைத் தன் பொன்னடிக்
கீழெனையே. 4

இழிவித்த வாறிட்ட நோய்வினை காட்டி இடர்ப்படுத்துக்
கழிவித்த வாகட்ட நோய்வினை தீர்ப்பான் கலந்தருளி
அழிவித்த வாறடி யேனைஐ யாறன் அடிமைக்களே
தொழுவித்த வாதொண்டனேனைத் தன் பொன்னடிக்
கீழெனையே. 5

இடைவித்த வாறிட்ட நோய்வினை காட்டி இடர்ப்படுத்து
உடைவித்த வாஉற்ற நோய்வினை தீர்ப்பான் உகந்தருளி
அடைவித்த வாறடி யேனைஐ யாறன் அடிமைக்களே
தொடர்வித்தவா தொண்ட னேனைத் தன் பொன்னடிக்
கீழெனையே 6

படக்கின வாபட நின்றுடன் ளுளும் படக்கின நோய்
அடக்கின வாறது வன்றியுந் தீவினை பாவமெல்லாம்
அடக்கின வாறடி யேனைஐ யாறன் அடிமைக்களே
தொடக்கின வாதொண்ட னேனைத்தன் பொன்னடிக்
கீழெனையே. 7

மறப்பித்த வாவல்ல நோய்வினை காட்டி மறப்பித்த நோய்
துறப்பித்த வாதுக்க நோய்வினை தீர்ப்பான் உகந்தருளி
இறப்பித்த வாறடி யேனையை யாறன் அடிமைக்களே
சிறப்பித்த வாதொண்ட னேனைத்தன் பொன்னடிக்
கீழெனையே. 8

துயக்கின வாதுக்க நோய்வினை காட்டித் துயக்கின நோய்
இயக்கின வாறிட்ட நோய்வினை தீர்ப்பான் இசைந்தருளி
அயக்கின வாறடி யேனைஐ யாறன் அடிமைக்களே
மயக்கின வாதொண்ட னேனைத்தன் பொன்னடிக்
கீழெனையே. 9

கறுத்துமிட்டார் கண்டங் கங்கை சடைமேற் கரந்தருளி
இறுத்துமிட்டார் இலங்கைக்கிறை தன்னை இருபதுதோள்
அறுத்துமிட்டாரடி யேனைஐ யாறன் அடிமைக்களே
பொறுத்துமிட்டார் தொண்ட னேனைத்தன் பொன்னடிக்
கீழெனையே. 10

திருச்சிற்றம்பலம்

திருவிருத்தம் 4-ம் திருமுறை

திருச்சிற்றம்பலம்

சிந்திப் பரியன சிந்திப் பவர்க்குச் சிறந்து செந்தேன்
முந்திப் பொழிவன முத்தி கொடுபபன மொய்த்திருண்டு
பந்தித்து நின்ற பழவினை தீர்ப்பன பாம்பு சுற்றி
அந்திப் பிறையணிந் தாடும்ஐ யாறன் அடித்தலமே. 1

இழித்தன ஏழேழ் பிறப்பும் அறுத்தன என் மனத்தே
பொழித்தன போரெழிற் கூற்றை யுதைத்தன போற்றவர்க்
காய்க்
கிழித்தன தக்கன் கிளரொளி வேள்வியைக் கீழ முன்சென்
றழித்தன ஆறங்க மானஐ யாறன் அடித்தலமே. 2

மணிநிறம் ஒப்பன பொன்னிறம் மன்னின மின்னியல்பாய்
கணிநிற மன்ன கயிலைப் பொருப்பன காதல் செய்யத்
துணிவன சீலத்த ராகித் தொடர்ந்து விடாத தொண்டர்க்
கணியன சேயன தேவர்க்கை யாறன் அடித்தலமே. 3

இருள்தரு துன்பப் படல மறைப்பமெய்ஞ் ஞான மென்னும்
பொருள்தரு கண்ணிழந் துள்பொருள் நாடிப் புகலிழந்த
குருடரும் தம்மைப் பரவக் கொடுநரகக் குழிநின்
றருள்தரு கைகொடுத் தேற்றும் ஐயாறன் அடித்தலமே. 4

எழுவாய் இறுவாய் இலாதன வெங்கட் பிணி தவிர்த்து
வழுவா மருத்துவ மாவன மாநர கக்குழிவாய்
விழுவா ரவர்தம்மை வீழ்ப்பன மீட்பன மிக்க அன்போ
டழுவார்க் கமுதங்கள் காண்கஐ யாறன் அடித்தலமே. 5

துன்பக் கடலிடைத் தோணித் தொழில் பூண்ட தொண்டர் தம்மை
இன்பக் கரைமுகந் தேற்றுந் திறத்தன மாற்றயலே
பொன்பட் டொழுகப் பொருந்தொளி செய்யுமப் பொய் பொருந்தா
அன்பர்க் கணியன காண்கஐ யாறன் அடித்தலமே. 6

களித்துக் கலந்த தொர் காதற் கசிவொடு காவிரிவாய்க்
குளித்துத் தொழுதுமுன் நின்ற இப் பத்தரைக் கோதில் செந்தேன்
தெளித்துச் சுவையமு தூட்டி யமரர்கள் சூழிருப்ப
அளித்துப் பெருஞ் செல்வ மாக்கும்ஐ யாறன் அடித்தலமே. 7

திருத்திக் கருத்தினைச் செவ்வே நிறுத்திச் செறுத்துடலை
வருத்திக் கடிமலர் வாளெடுத் தோச்சி மருங்கு சென்று
விருத்திக் குழக்கவல் லோர்கட்கு விண்பட்டிகையிடுமால்
அருத்தித் தருந்தவர் ஏத்தும்ஐ யாறன் அடித்தலமே. 8

பாடும் பறண்டையும் ஆந்தையும் ஆர்ப்பப் பரந்துபல்பேய்
கூடி முழவக் குவிகவிழ் கொட்டக் குறு நரிகள்
நீடுங் குழல்செய்ய வையம் நெளிய நிணப்பிணக்காட்
டாடுந் திருவடி காண்கஐ யாறன் அடித்தலமே. 9

நின்போல் அமரர்கள் நீண்முடி சாய்த்து நிமிர்த்து குத்த
பைம்போ துழக்கிப் பவளந் தழைப்பன பாங்கறியா
என்போ லிகள்பறித் திட்ட இலையும் முகையுமெல்லாம்
அம்போ தெனக்கொள்ளும் ஐயன்ஐ யாறன் அடித்தலமே. 10

மலையார் மடந்தை மனத்தன வானோர் மகுடம் மன்னி
நிலையா யிருப்பன நின்றோர் மதிப்பன நீள் நிலத்துப்
புலையாடு புன்மை தவிர்ப்பன பொன்னுல கம்மளிக்கும்
அலையார் புனற் பொன்னி சூழ்ந்தஐ யாறன் அடித்தலமே. 11

பொலம் புண்ட ரீகப் புதுமலர் போல்வன போற்றி யென்பார்
புலம்பும் பொழுதும் புணர்துணை யாவன பொன்னனையாள்
சிலம்புஞ் செறிபா டகமுஞ் செழுங்கிண் கிணித்திரளும்
அலம்புந் திருவடி காண்கஐ யாறன் அடித்தலமே. 12

உற்றாரிலாதார்க் குறுதுணை யாவன ஓதி நன்னூல்
கற்றார்பரவப் பெருமை யுடையன காதல் செய்ய
கிற்பார் தமக்குக் கிளரொளி வானகந்தான் கொடுக்கும்
அற்றார்க் கரும்பொருள் காண்கஐ யாறன் அடித்தலமே. 13

வானைக் கடந்தண்டத் தப்பால் மதிப்பன மந்திரிப்பார்
ஊனைக் கழித்துய்யக் கொண்டருள் செய்வன உத்தமர்க்கு
ஞானச் சுடராய் நடுவே யுதிப்பன நங்கையஞ்ச
ஆனை யுரித்தன காண்கஐ யாறன் அடித்தலமே. 14

மாதிர மாநில மாவன வானவர் மாமுகட் டின்
மீதனமென்கழல் வெங்கச்சு வீக்கின வெந்நமனார்
தூதரை யோடத் துரப்பன துன்பறத் தொண்டு பட்டார்க்
காதர மாவன காண்கஐ யாறன் அடித்தலமே. 15

பேணித் தொழுமவர் பொன்னுலகாளப் பிறங்கருளால்
ஏணிப் படிநெறி யிட்டுக் கொடுத்திமை யோர்முடிமேல்
மாணிக்கம் ஒத்து மரகதம் போன்று வயிரம் மன்னி
ஆணிக் கனகமும் ஒக்கும்ஐ யாறன் அடித்தலமே. 16

ஓதிய ஞானமும் ஞானப் பொருளும் ஒலிசிறந்த
வேதியர் வேதமும் வேள்வியு மாவன விண்ணும் மண்ணும்
சோதியஞ் செஞ்சுடர் ஞாயிறும் ஒப்பன தூமதியோ
டாதியும் அந்தமு மானஐ யாறன் அடித்தலமே. 17

சுணங்கு முகத்துத் துணைமுலைப் பாவை சுரும்பொடுவண்
டணங்குங் குழலி யணியார் வளைக்கரங் கூப்பி நின்று
வணங்கும் பொழுதும்வருடும் பொழுதும்வண் காந்த
ளொண்போ
தணங்கும் அரவிந்தம் ஒக்கும்ஐ யாறன் அடித்தலமே. 18

சுழலார் துயர்வெயிற் சுட்டிடும்போ தடித்தொண்டர்
துன்னும்
நிழலா வனவென்று நீங்காப் பிறவி நிலை கெடுத்துக்
கழலா வினைகள் கழற்றுவ காலவனங் கடந்த
அழலார் ஒளியன காண்கஐ யாறன் அடித்தலமே. 19

வலியான் தலைபத்தும் வாய்விட்டலற வரையடர்த்து
மெலியா வலியுடைக் கூற்றை யுதைத்துவிண் ணோர்கண்
முன்னே
பலிசேர் படுகடைப் பார்த்துப்பன் னுளும் பலரிகழ
அலியா நிலை நிற்கும் ஐயன்ஐ யாறன் அடித்தலமே. 20

திருச்சிற்றம்பலம்

திருக்குறுந்தொகை 5 ம் திருமுறை

திருச்சிற்றம்பலம்.

சிந்தை வாய்தலு ளான்வந்து சீரியன்
பொந்து வார்புலால் வெண்டலைக் கையினன்
முந்தி வாயதோர் மூவிலை வேல்பிடித்
தந்தி வாயதோர் பாம்பர்ஐ யாறரே. 1

பாகம் மாலை மகிழ்ந்தனர் பால்மதி
போக ஆனையின் ஈருரி போர்த்தவர்
கோக மாலை குலாயதோர் கொன்றையும்
ஆக ஆன்நெய்அஞ் சாடும்ஐ யாறரே. 2

நெஞ்சம் என்பதோர் நீள்கயந் தன்னுளே
வஞ்சம் என்பதோர் வான்சுழிப் பட்டுநான்
துஞ்சும் போழ்து நின் நாமத் திருவெழுத்(து)
அஞ்சுந் தோன்ற அருளும்ஐ யாறரே. 3

நினைக்கும் நெஞ்சினுள் ளார்நெடு மாமதில்
அனைத்தும் ஒள்ளழல் வாயெரி யூட்டினுர்
பனைக்கை வேழத் துரியுடல் போர்த்தவர்
அனைத்து வாய்தலுள் ளாரும்ஐ யாறரே. 4

பரியர் நுண்ணியர் பார்த்தற் கரியவர்
அரிய பாடலர் ஆடல ரன்றியும்
கரிய கண்டத்தர் காட்சி பிறர்க்கெலாம்
அரியர் தொண்டர்க் கெளியர்ஐ யாறரே. 5

புலரும் போது மிலர்பட்ட பொற்சுடர்
மலரும் போதுக ளாற்பணி யச்சிலர்
இலரும் போதும் இலாதது மன்றியும்
அலரும் போதும் அணியும்ஐ யாறரே. 6

பங்க மாலைக் குழலியோர் பால்நிறக்
கங்கை மாலையர் காதன்மை செய்தவர்
மங்கை மாலை மதியமுங் கண்ணியும்
அங்க மாலையுஞ் சூடும்ஐ யாறரே. 7

முன்னை யாறு முயன்றெழு வீரெலாம்
பின்னை யாறு பிரியெனும் பேதைகாள்
மன்னை யாறு மருவிய மாதவன்
தன்னை யாறு தொழத்தவ மாகுமே. 8

ஆனை யாறென ஆடுகின் றான்முடி
வானை யாறு வளாயது காண்மினோ
நான்ஐ யாறுபுக் கேற்கவன் இன்னருள்
தேனை யாறு திறந்தாலே யொக்குமே. 9

அரக்கின் மேனியன் அந்தளிர் மேனிய
அரக்கின் சேவடி யாளஞ்ச அஞ்சலென்(று)
அரக்கன் ஈரைந்து வாயும் அலறவே
அரக்கி னானடி யாலும்ஐ யாறனே. 10

திருச்சிற்றம்பலம்

திருக்குறுந்தொகை. 5-ம் திருமுறை

திருச்சிற்றம்பலம்

சிந்தை லண்ணத்தராய்த்திறம் பாவணம்
முந்தி வண்ணத்த ராய்முழு நீறணி
சந்தி வண்ணத் ராய்த்தழல் போல்வதோர்
அந்தி வண்ணமு மாவர்ஐ யாறரே. 1

மூல வண்ணத்த ராய்முத லாகிய
கோல வண்ணத்த ராகிக் கொழுஞ்சுடர்
நீல வண்ணத்த ராகி நெடும்பளிங்
கால வண்ணத்த ராவர்ஐ யாறரே. 2

சிந்தை வண்ணமுந் தீயதோர் வண்ணமும்
அந்திப் போதழ காகிய வண்ணமும்
பந்திக் காலனைப் பாய்ந்ததோர் வண்ணமும்
அந்தி வண்ணமு மாவர்ஐ யாறரே. 3

இருளின் வண்ணமு மேழிசை வண்ணமும்
சுருளின் வண்ணமுஞ் சோதியின் வண்ணமும்
மருளு நான்முகன் மாலொடு வண்ணமும்
அருளும் வண்ணமு மாவர்ஐ யாறரே. 4

இழுக்கின் வண்ணங்க ளாகிய வெவ்வழல்
குழைக்கும் வண்ணங்க ளாகியுங் கூடியும்
மழைக்கண் மாமுகி லாகிய வண்ணமும்
அழைக்கும் வண்ணமு மாவர்ஐ யாறரே. 5

இண்டை வண்ணமும் ஏழிசை வண்ணமும்
தொண்டர் வண்ணமுஞ் சோதியின் வண்ணமும்
கண்ட வண்ணங்க ளாய்க்கனல் மாமணி
அண்ட வண்ணமு மாவர்ஐ யாறரே. 6

விரும்பும் வண்ணமும் வேதத்தின் வண்ணமும்
கரும்பின் இன்மொழிக் காரிகை வண்ணமும்
விரும்புவார்வினை தீர்த்திடும் வண்ணமும்
அரும்பின் வண்ணமு மாவர்ஐ யாறரே. 7

ஊழி வண்ணமும் ஒண்சுடர் வண்ணமும்
வேழ ஈருரி போர்த்ததோர் வண்ணமும்
வாழித் தீபுரு வாகிய வண்ணமும்
ஆழி வண்ணமு மாவர்ஐ யாறரே. 8

செய்த வன்திரு நீறணி வண்ணமும்
எய்த நோக்கரி தாகிய வண்ணமும்
கைது காட்சி யரியதோர் வண்ணமும்
ஐது வண்ணமு மாவர்ஐ யாறரே. 9

எடுத்த வாளரக் கன்திறல் வண்ணமும்
இடர்க்கள் போற்பெரி தாகிய வண்ணமும்
கடுத்த கைந்நரம் பாலிசை வண்ணமும்
அடுத்த வண்ணமு மாவர்ஐ யாறரே. 10

திருச்சிற்றம்பலம்

திருத்தாண்டகம் 6–ம் திருமுறை

திருச்சிற்றம்பலம்

ஆரார் திரிபுரங்கள் நீறு நோக்கும்
அனலாடி ஆரமுதே யென்றேன் நானே
கூரார் மழுவாட் படையொன் றேந்திக்
குறட்பூதப் பல்படையா யென்றேன் நானே
பேராயிரமுடையா யென்றேன் நானே
பிறைசூடும் பிஞ்ஞகனே யென்றேன் நானே
ஆரா அமுதேயென் ஐயா றனே
யென்றென்றே நானரற்றி நைகின் றேனே.

தீவாயின் முப்புரங்கள் நீறு நோக்குந்
தீர்த்தா புராணனே யென்றேன் நானே
மூவா மதிசூடி யென்றேன் நானே
முதல்வா முக்கண்ணனே யென்றேன் நானே
ஏவார் சிலையானே யென்றேன் நானே
இடும்பைக் கடல்நின் றும் ஏற வாங்கி
ஆவாவென் றருள்புரியும் ஐயா றன்னே
யென்றென்றே நானரற்றி நைகின் றேனே. 2

அஞ்சுண்ண வண்ணனே யென்றேன் நானே
அடியார்கட் காரமுதே யென்றேன் நானே
நஞ்சணி கண்டனே யென்றேன் நானே
நாவலர்கள் நான்மறையே யென்றேன் நானே

நெஞ்சுணர வுள்புக் கிருந்த போது
நிறையும் அமுதமே யென்றேன் நானே
அஞ்சாதே யாள்வானே ஐயா றன்னே
யென்றேன்றே நானரற்றி நைகின் றேனே. 3

தோலே த்தொடுகடலே யென்றேன் நானே
துலங்கும் இளம்பிறையா யென்றேன் நானே
எல்லே நிறைந்தானே யென்றேன் நானே
ஏழ்நரம்பின் இன்னிசையாய் என்றேன் நானே
அல்லற் கடல்புக் கழுந்துவேனை
வாங்கியருள் செய்தா யென்றேன் நானே
எல்லேயாம் ஐயாறு என்றேன் நானே
யென்றென்றே நானரற்றி நைகின் றேனே. 4

இண்டைச் சடைமுடியா யென்றேன் நானே
இருசுடர் வானத்தா யென்றேன் நானே
தொண்டர் தொழப்படுவா யென்றேன் நானே
துருத்தி நெய்த்தானத்தா யென்றேன் நானே
கண்டங் கறுத்தானே யென்றேன் நானே
கனலாகுங் கண்ணனே யென்றேன் நானே
அண்டத்துக் கப்பாலாம் ஐயா றன்னே
யென்றென்றே நானரற்றி நைகின் றேனே. 5

பற்றூர் புரமேரித்தா யென்றேன் நானே
பசுபதி பண்டரங்கா என்றேன் நானே
கற்றூர்கள் நாவினு யென்றேன் நானே
கடுவிடையொன் றூர்தியா யென்றேன் நானே
பற்றுனர் நெஞ்சுளா ·யென்றேன் நானே
பார்த்தற் கருள்செய்தா யென்றேன் நானே
அற்றூர்க் கருள்செய்யும் ஐயா றன்னே
யென்றென்றே நானரற்றி நைகின் றேனே. 6

விண்ணுேர் தலேவனே யென்றேன் நானே
விளங்கும் இளம்பிறையா யென்றேன் நானே
எண்ணு ரெயிலெரித்தா யென்றேன் நானே
யேகம்பம் மேயானே யென்றேன் நானே

பண்ணூர் மறைபாடி யென்றேன் நானே
பசுபதீ பால்நீற்று யென்றேன் நானே
அண்ணுஐ யா றனே யென்றேன் நானே
யென்றென்றே நானரற்றி நைகின் றேனே. 7

அவனென்று நானுன்னை யஞ்சா தேனை
அல்லல் அறுப்பானே யென்றேன் நானே
சிவனென்று நானுன்னை யெல்லாஞ் சொல்லச்
செல்வந் தருவானே யென்றேன் நானே
பவனாகி யென்னுள்ளத் துள்ளே நின்று
பண்டை வினையறுப்பா யேன்றேன் நானே
அவனென்றே யாதியே ஐயா றன்னே
யென்றென்றே நானரற்றி நைகின் றேனே. 8

கச்சியே கம்பனே யென்றேன் நானே
கயிலாயா காரோணு என்றேன் நானே
நிச்சன் மணாளனே யென்றேன் நானே
நினைப்பார் மனத்துளா யென்றேன் நானே
உச்சம்போ தேறேறீ யென்றேன் நானே
உள்குவா ருள்ளத்தா யென்றேன் நானே
அச்சம் பிணிதீர்க்கும் ஐயா றன்னே
யென்றென்றே நானரற்றி நைகின் றேனே. 9

வில்லாடி வேடனே யென்றேன் நானே
வெண்ணீறு மெய்க்கணிந்தா யென்றேன் நானே
சொல்லாய சூழலா யென்றேன் நானே
சுலாவாய தொல்நெறியே யென்றேன் நானே
எல்லாமா யென்னுயிரே யென்றேன் நானே
இலங்கையர்கோன் தோளிறுத்தா யென்றேன் நானே
அல்லா வினைதீர்க்கும் ஐயா றன்னே
யென்றென்றே நானரற்றி நைகின் றேனே. 10

திருச்சிற்றம்பலம்

திருத்தாண்டகம் 6-ம் திருமுறை

திருச்சிற்றம்பலம்

ஓசை யொலியெலா மானாய் நீயே
உலகுக் கொருவனாய் நின்றாய் நீயே
வாச மலரெலா மானாய் நீயே
மலையான் மருகனாய் நின்றாய் நீயே

பேசப் பெரிதும் இனியாய் நீயே
　　பிராணும் அடியென்மேல் வைத்தாய் நீயே
தேச விளக்கெலா மாணும் நீயே
　　திருவையா றகலாத செம்பொற் சோதீ. 1

நோக்கரிய திருமேனி யுடையாய் நீயே
　　நோவாமே நோக்கருள வல்லாய் நீயே
காப்பரிய ஐம்புலனுங் காத்தாய் நீயே
　　காமனையுங் கண்ணழலாற் காய்ந்தாய் நீயே
ஆர்ப்பரிய மாநாக மார்த்தாய் நீயே
　　அடியானென் றடியென்மேல் வைத்தாய் நீயே
தீர்ப்பரிய வல்வினைநோய் தீர்ப்பாய் நீயே
　　திருவையா றகலாத செம்பொற் சோதீ. 2

கனத்தகத்துக் கடுஞ்சுடராய் நின்றாய் நீயே
　　கடல்வரைவான் ஆகாய மாணும் நீயே
தனத்தகத்துத் தலைகலனுக் கொண்டாய் நீயே
　　சார்ந்தாரைத் தகைந்தாள வல்லாய் நீயே
மனத்திருந்த கருத்தறிந்து முடிப்பாய் நீயே
　　மலர்ச்சே வடியென்மேல் வைத்தாய் நீயே
சினத்திருந்த திருநீல கண்டன் நீயே
　　திருவையா றகலாத செம்பொற் சோதீ. 3

வானுற்ற மாமலைக ளாணும் நீயே
　　வடகயிலை மன்னி யிருந்தாய் நீயே
ஊனுற்ற வொளிமழுவாட் படையாய் நீயே
　　ஒளிமதியோ டரவுபுனல் வைத்தாய் நீயே
ஆனுற்ற ஐந்தும் அமர்ந்தாய் நீயே
　　அடியானென் றடியென்மேல் வைத்தாய் நீயே
தேனுற்ற சொல்மடவாள் பங்கன் நீயே
　　திருவையா றகலாத செம்பொற் சோதீ. 4

பெண்ணாண் பிறப்பிலியாய் நின்றாய் நீயே
　　பெரியார்கட் கெல்லாம் பெரியாய் நீயே
உண்ணா வருநஞ்ச முண்டாய் நீயே
　　ஊழி முதல்வனாய் நின்றாய் நீயே

கண்ணு யுலகெலாங் காத்தாய் நீயே
கழற்சே வடியென்மேல் வைத்தாய் நீயே
திண்ணூர் மழுவாட் படையாய் நீயே
திருவையா றகலாத செம்பொற் சோதீ. 5

உற்றிருந்த உணர்வெலா மானுய் நீயே
உற்றவர்க்கோர் சுற்றமாய் நின்ருய் நீயே
கற்றிருந்த கலைஞான மானுய் நீயே
கற்றவர்க்கோர் கற்பகமாய் நின்ருய் நீயே
பெற்றிருந்ததாய் அவளின் நல்லாய் நீயே
பிரானு யடியென்மேல் வைத்தாய் நீயே
செற்றிருந்த திருநீல கண்டன் நீயே
திருவையா றகலாத செம்பொற் சோதீ. 6

எல்லா வுலகமு மானுய் நீயே
யேகம்பம் மேவி யிருந்தாய் நீயே
நல்லாரை நன்மை யறிவாய் நீயே
ஞானச் சுடர்விளக்காய் நின்ருய் நீயே
பொல்லா வினைக ளறுப்பாய் நீயே
புகழ்ச்சே வடியென்மேல் வைத்தாய் நீயே
செல்வாய செல்வந் தருவாய் நீயே
திருவையா றகலாத செம்பொற் சோதீ. 7

ஆவினில் ஐந்தும் அமர்ந்தாய் நீயே
அளவில் பெருமை யுடையாய் நீயே
பூவினில் நாற்றமாய் நின்ருய் நீயே
போர்க்கோலங் கொண்டெயி லெய்தாய் நீயே
நாவில் நடுவுரையாய் நின்ருய் நீயே
நண்ணி யடியென்மேல் வைத்தாய் நீயே
தேவ ரறியாத தேவன் நீயே
திருவையா றகலாத செம்பொற் சோதீ, 8

எண்டிசைக்கும் ஒண்சுடராய் நின்ருய் நீயே
ஏகம்பம் மேய இறைவன் நீயே
வண்டிசைக்கும் நறுங்கொன்றைத் தாராய் நீயே
வாரா வுலகருள வல்லாய் நீயே

தொண்டிசைத்துன் அடிபரவ நின்றாய் நீயே
 தூமலர்ச்சே வடியென்மேல் வைத்தாய் நீயே
திண்சிலைக்கோர் சரங்கூட்ட வல்லாய் நீயே
 திருவையா றகலாத செம்பொற் சோதீ. 9

விண்டார் புரமூன்றும் எய்தாய் நீயே
 விண்ணவர்க்கும் மேலாகி நின்றாய் நீயே
கண்டாரைக் கொல்லுநஞ் சுண்டாய் நீயே
 காலங்கள் ஊழியாய் நின்றாய் நீயே
தொண்டாய் அடியேனை ஆண்டாய் நீயே
 தூமலர்ச்சே வடியென்மேல் வைத்தாய் நீயே
திண்டோள்விட் டெரியாட லுகந்தாய் நீயே
 திருவையா றகலாத செம்பொற் சோதீ. 10

ஆரு மறியா இடத்தாய் நீயே
 ஆகாயந் தேரூர வல்லாய் நீயே
பேரும் பெரிய இலங்கை வேந்தன்
 பெரிய முடிபத் திறுத்தாய் நீயே
ஊரும் புரமூன்றும் அட்டாய் நீயே
 ஒண்தா மரையானும் மாலுங் கூடித்
தேரும் அடியென்மேல் வைத்தாய் நீயே
 திருவையா றகலாத செம்பொற் சோதீ. 11

திருச்சிற்றம்பலம்

சுந்தரமூர்த்தி சுவாமிகள்

பண் – காந்தார பஞ்சமம் 7-ம் திருமுறை

திருச்சிற்றம்பலம்

பரவும் பரிசொன் றறியேன் நான்
 பண்டே உம்மைப் பயிலாதேன்
இரவும் பகலும் நினைந்தாலும்
 எய்த நினைய மாட்டேன்நான்
கரவில் அருவி கமுகுண்ணத்
 தெங்கங் குலைக்கீழ்க் கருப்பாலை
அரவந் திரைக்கா விரிக்கோட்டத்
 தையா றுடைய அடிகளோ. 1

எங்கே போவேன் ஆயிடினும்
அங்கே வந்தென் மனத்தீராய்ச்
சங்கை ஒன்றும் இன்றியே
தலைநாள் கடைநாள் ஒக்கவே
கங்கை சடைமேற் கரந்தானே
கலைமான் மறியுங் கனல்மழுவும்
தங்குந் திரைக்கா விரிக்கோட்டத்
தையா றுடைய அடிகளோ. 2

மருவிப் பிரிய மாட்டேன்நான்
வழிநின் றொழிந்தேன் ஒழிகிலேன்
பருவி விச்சி மலைச்சாரற்
பட்டை கொண்டு பகடாடிக்
குருவி ஓப்பிக் கிளிகடிவார்
குழல்மேல் மாலை கொண்டோட்டம்
தரவந் திரைக்கா விரிக்கோட்டத்
தையா றுடைய அடிகளோ. 3

பழகா நின்று பணிசெய்வார்
பெற்ற பயனொன் றறிகிலேன்
இகழா துமக்காட் பட்டோர்க்கு
வேகபட மொன் றரைச்சார்த்தி
குழகா வாழைக் குலைத்தெங்கு
கொணர்ந்து கரைமேல் எறியவே
அழகார் திரைக்கா விரிக்கோட்டத்
தையா றுடைய அடிகளோ. 4

பிழைத்த பிழையொன் றறியேன்நான்
பிழையைத் தீரப் பணியாயே
மழைக்கண் நல்லார் குடைந்தாட
மலையும் நிலனுங் கொள்ளாமைக்
கழைக்கொள் பிரசங் கலந்தெங்குங்
கழனி மண்டிக் கையேறி
அழைக்குந் திரைக்கா விரிக்கோட்டத்
தையா றுடைய அடிகளோ. 5

கார்க்கொள் கொன்றை சடைமேல்ஒன்
றுடையாய் விடையாய் கையினுன்
மூர்க்கர் புரமூன் றெரிசெய்தாய்
முன்னீ பின்னீ முதல்வன்நீ
வார்க்கொள் அருவி பலவாரி
மணியும் முத்தும் பொன்னுங்கொண்
டார்க்குந் திரைக்கா விரிக்கோட்டத்
தையா றுடைய அடிகளோ. 6

மலைக்கண் மடவாள் ஒருபாலாய்ப்
பற்றி உலகம் பலிதேர்வாய்
சிலைக்கொள் கணையால் எயில்எய்த
செங்கண் விடையாய் தீர்த்தன்நீ
மலைக்கொள் அருவி பலவாரி
மணியும் முத்தும் பொன்னுங்கொண்
டலைக்குந் திரைக்கா விரிக்கோட்டத்
தையா றுடைய அடிகளோ. 7

போழும் மதியும் புனக்கொன்றை
புனல்சேர் சென்னிப் புண்ணியா
சூழும் அரவச் சுடர்ச்சோதி
உன்னைத் தொழுவார் துயர்போக
வாழும் அவர்கள் அங்கங்கே
வைத்த சிந்தை உய்த்தாட்ட
ஆழுந் திரைக்கா விரிக்கோட்டத்
தையா றுடைய அடிகளோ. 8

கதிர்க்கொள் பசியே ஒத்தேநான்
கண்டேன் உம்மைக் காணுதேன்
எதிர்த்து நீந்த மாட்டேன்நான்
எம்மான் தம்மான் தம்மானே
விதிர்த்து மேகம் மழைபொழிய
வெள்ளம் பரந்து நுரைசிதறி
அதிர்க்குந் திரைக்கா விரிக்கோட்டத்
தையா றுடைய அடிகளோ. 9

கூசி அடியார் இருந்தாலுங்
குணம்ஒன் றில்லீர் குறிப்பிலீர்
தேச வேந்தன் திருமாலும்
மலர்மேல் அயனுங் காண்கிலாத்
தேசம் எங்குந் தெளித்தாடத்
தெண்ணீர் அருவி கொணர்ந்தெங்கும்
வாசந் திரைக்கா விரிக்கோட்டத்
தையா றுடைய அடிகளோ. 10

கூடி அடியார் இருந்தாலுங்
குணம்ஒன் றில்லீர் குறிப்பிலீர்
ஊடி இருந்தும் உணர்கிலேன்
உம்மைத் தொண்டன் ஊரனேன்
தேடி எங்கும் காண்கிலேன்
திருவா ரூரே சிந்திப்பன்
ஆடுந் திரைக்கா விரிக்கோட்டத்
தையா றுடைய அடிகளோ. 11

திருச்சிற்றம்பலம்

52. திருநெய்த்தானம்

திருஞானசம்பந்த சுவாமிகள்

பண்–நட்டபாடை 1–ம் திருமுறை

திருச்சிற்றம்பலம்

மையாடிய கண்டன்மலை மகள்பாகம துடையான்
கையாடிய கேடில்கரி யுரிமூடிய வொருவன்
செய்யாடிய குவளைம்மலர் நயனத்தவ ளோடும்
நெய்யாடிய பெருமானிடம் நெய்த்தானமெ னீரே. 1

பறையும்பழி பாவம்படு துயரம்பல தீரும்
பிறையும்புனல் அரவம்படு சடையெம்பெரு மானூர்
அறையும்புனல் வருகாவிரி அலைசேர்வட கரைமேல்
நிறையும்புனை மடவார்பயில் நெய்த்தானமெ னீரே. 2

பேயாயின பாடப்பெரு நடமாடிய பெருமான்
வேயாயின தோளிக்கொரு பாகம்மிக வுடையான்
தாயாகிய வுலகங்களை நிலைபேறுசெய் தலைவன்
நேயாடிய பெருமானிடம் நெய்த்தானமெ னீரே. 3

சுடுநீறணி யண்ணல்சுடர் சூலம்மன லேந்தி
நடுநள்ளிருள் நடமாடிய நம்பன்னுறை யிடமாம்
கடுவாளிள அரவாடுமிழ் கடல்நஞ்சம துண்டான்
நெடுவாளைகள் குதிகொள்ளுயர் நெய்த்தானமெ னீரே. 4

நுகராரமொ டேலம்மணி செம்பொன்னுரை யுந்திப்
பகராவரு புனல்காவிரி பரவிப்பணிந் தேத்தும்
நிகரான்மண லிடிதண்கரை நிகழ்வாய நெய்த்தான
நகரான் அடி யேத்தந்நமை நடலையடை யாவே. 5

விடையார்கொடி யுடையவ்வணல் வீந்தார்வெளை யெலும்பும்
உடையார்நறு மாலைசடை யுடையாரவர் மேய
புடையேபுனல் பாயும்வயல் பொழில்சூழ்ந்தநெய்த் தானம்
அடையாதவ ரென்றும்அம ருலகம்மடை யாரே. 6

நிழலார்வயல் கமழ்சோலைகள் நிறைகின்றநெய்த் தானத்
தழலானவன் அனலங்கையி லேந்தியழ காய,
கழலானடி நாளுங்கழ லாதேவிட லின்றித்
தொழலாரவர் நாளுந்துய ரின்றித்தொழு வாரே. 7

அறையார்கடல் இலங்கைக்கிறை யணிசேர்கயி லாயம்
இறையாரமுன் எடுத்தான்இரு பதுதோளிற வூன்றி
நிறையார்புனல் நெய்த்தானனன் நிகழ்சேவடி பரவக்.
கறையார்கதிர் வாளீந்தவர் கழலேத்துதல் கதியே. 8

கோலம்முடி நெடுமாலொடு கொய்தாமரை யானும்
சீலம்மறி வரிதாயொளி திகழ்வாயநெய்த் தானம்
காலம்பெற மலர்நீரவை தூவித்தொழு தேத்தும்
ஞாலம்புகழ் அடியாருடல் உறுநோய்நலி யாவே. 9

மத்தம்மலி சித்தத்திறை மதியில்லவர் சமணர்
புத்தரவர் சொன்னம்மொழி பொருளாநினை யேன்மின்
நித்தம்பயில் நிமலன்னுறை நெய்த்தானம தேத்தும்
சித்தம்முடை யடியாருடல் செறுநோயடை யாவே. 10

தலமாகிய புனற்காழியுள் தமிழ்ஞானசம் பந்தன்
நிலமல்கிய புகழான்மிகு நெய்த்தானனை நிகரில்
பலமல்கிய பாடல்லிவை பத்தும்மிக வல்லார்
சிலமல்கிய செல்வன்னடி சேர்வர்சிவ கதியே. 11

திருச்சிற்றம்பலம்

திருநாவுக்கரசு சுவாமிகள்

திருநேரிசை 4-ம்திருமுறை

திருச்சிற்றம்பலம்

காலனை வீழச் செற்ற கழலடி யிரண்டும் வந்தென்
மேலவா யிருக்கப் பெற்றேன் மேதகத் தோன்று கின்ற
கோலநெய்த் தான மென்னுங் குளிர்பொழிற் கோயில் மேய
நீலம்வைத் தனைய கண்ட நினைக்குமா நினைக்கின் றேனே. 1

காமனை யன்று கண்ணாற் கனலெரி யாக நோக்கித்
தூபமுந் தீபங் காட்டித் தொழுமவர்க் கருள்கள் செய்து
சேமநெய்த் தான மென்னுஞ் செறிபொழிற் கோயில் மேய
வாமனை நினைந்த நெஞ்சம் வாழ்வுற நினைந்த வாறே. 2

பிறைதரு சடையின் மேலே பெய்புனற் கங்கை தன்னை
உறைதர வைத்த எங்கள் உத்தமன் ஊழி யாய
நிறைதரு பொழில்கள் சூழ நின்றநெய்த் தானம் என்று
குறைதரு மடிய வர்க்குக் குழகனைக் கூட லாமே. 3

வடிதரு மழுவொன் றேந்தி வார்சடை மதியம் வைத்துப்
பொடிதரு மேனி மேலே புரிதரு நூலர் போலும்
நெடிதரு பொழில்கள் சூழ நின்றநெய்த் தான மேவி
அடிதரு கழல்க ளார்ப்ப ஆடுமெம் மண்ண லாரே. 4

காடிட மாக நின்று கனலெரி கையி லேந்திப்
பாடிய பூதஞ் சூழப் பண்ணுடன் பலவுஞ் சொல்லி
ஆடிய கழலர் சீரார் அந்தண்நெய்த் தானம் என்றுங்
கூடிய குழக னரைக் கூடுமா றறிகி லேனே. 5

வானவர் வணங்கியேத்தி வைகலும் மலர்கள் தூவத்
தானவர்க் கருள்கள் செய்யுஞ் சங்கரன் செங்கண் ஏற்றன்
தேனமர் பொழில்கள் சூழத் திகழுநெய்த் தானம் மேய
கூனிள மதியி னானைக் கூடுமா றறிகி லேனே. 6

காலதிர் கழல்க ளார்ப்பக் கனலெரி கையில் வீசி
ஞாலமுங் குழிய நின்று நட்டம தாடு கின்ற
மேலவர் முகடு தோய விரிசடை திசைகள் பாய
மாலொரு பாகமாக மகிழ்ந்தநெய்த் தான னாரே. 7

பந்தித்த சடையின் மேலே பாய்புன லதனை வைத்து
அந்திப்போ தனலும் ஆடி அடிகள்ஐ யாறு புக்கார்
வந்திப்பார் வணங்கி நின்று வாழ்த்துவார் வாயி னுள்ளார்
சிந்திப்பார் சிந்தை யுள்ளார் திருந்துநெய்த் தான னாரே. 8

சோதியாய்ச் சுடரு மானார் சுண்ணவெண் சாந்து பூசி
ஓதிவா யுலகம் ஏத்த உகந்துதாம் அருள்கள் செய்வார்
ஆதியாய் அந்த மானார் யாவரும் இறைஞ்சி யேத்த
நீதியாய் நியம மாகி நின்றநெய்த் தான னாரே. 9

இலையுடைப் படைகை ஏந்தும் இலங்கையர் மன்னன் றன்னைத்
தலையுடன் அடர்த்து மீண்டே தானவற் கருள்கள் செய்து
சிலையுடன் கணையைச் சேர்த்துத் திரிபுரம் எரியச் செற்ற
நிலையுடை யடிகள் போலும் நின்றநெய்த் தான னாரே. 10

திருச்சிற்றம்பலம்

திருவிருத்தம் 4-ம் திருமுறை

திருச்சிற்றம்பலம்

பாரிடஞ்சாடிய பல்லுயிர் வான்அம ரர்க்கருளிக்
காரடைந் தகடல் வாயுமிழ் நஞ்சமு தாகவுண்டான்
ஊரடைந் தில்வுல கிற்பலி கொள்வது நாமறியோம்
நீரடைந் தகரை நின்றநெய்த் தானத் திருந்தவனே. 1

தேய்ந்திலங் குஞ்சிறு வெண்மதி யாய்நின் திருச்சடைமேல்
பாய்ந்தகங் கைப்புனல் பன்முக மாகிப் பரந்தொலிப்ப
ஆய்ந்திலங் கும்மழு வேலுடை யாய்அடி யேற்குரைநீ
ஏந்திள மங்கையும் நீயும்நெய்த் தானத் திருந்ததுவே. 2

கொன்றடைந் தாடிக் குமைத்திடுங் கூற்றமொன்
ஞர்மதில்மேல்
சென்றடைந் தாடிப் பொருததுந் தேசமெல் லாமறியும்
குன்றடைந் தாடுங் குளிர்பொழிற் காவிரி யின்கரைமேல்
சென்றடைந் தார்வினை தீர்க்குநெய்த் தானத் திருந்தவனே. 3

கொட்டும் முழவர வத்தொடு கோலம் பலஅணிந்து
நட்டம்பல பயின் ருடுவர் நாகம் அரைக்கசைத்துச்
சிட்டர் திரிபுரந் தீயெழச் செற்ற சிலையுடையான்
இட்டம் உமையொடு நின்றநெய்த் தானத் திருந்தவனே. 4

கொய்ம்மலர்க் கொன்றை துழாய்வன்னி மத்தமுங் கூவிளமும்
மெய்ம்மலர் வேய்ந்த விரிசடைக் கற்றைவிண் ணேர்பெருமான்
மைம்மலர் நீலநிறங் கருங்கண்ணியோர் பால்ம கிழ்ந்தான்
நின்மல ஞடல் நிலயநெய்த் தானத் திருந்தவனே. 5

பூந்தார் நறுங்கொன்றை மாலையை வாங்கிச் சடைக்கணிந்து
கூர்ந்தார் விடையினை ஏறிப்பல் பூதப் படைநடுவே
போந்தார் புறவிசை பாடவும் ஆடவும் கேட்டருளிச்
சேர்ந்தார் உமையவ ளோடுநெய்த் தானத் திருந்தவனே. 6

பற்றின பாம்பன் படுத்த புலியுரித் தோலுடையன்
முற்றின மூன்று மதில்களை மூட்டி எரித்தறுத்தான்
சுற்றிய பூதப் படையினன் சூல மழுவொருமான்
செற்றுநந் தீவினை தீர்க்குநெய்த் தானத் திருந்தவனே. 7

விரித்த சடையினன் விண்ணவர் கோன்விட முண்டகண்டன்
உரித்த கரியுரி மூடியொன் ஞர்மதில் மூன்றுடனே
எரித்த சிலையினன் ஈடழி யாதென்னை யாண்டுகொண்ட
தரித்த உமையவ ளோடுநெய்த் தானத் திருந்தவனே. 8

தூங்கான் துளங்கான் துழாய் கொன்றைதுன்னிய
செஞ்சடைமேல்
வாங்கா மதியமும் வாளர வுங்கங்கை தான்புனைந்தான்
தேங்கார் திரிபுரந் தீயெழ எய்து தியக்கறுத்து
நீங்கான் உமையவ ளோடுநெய்த் தானத் திருந்தவனே. 9

ஊட்டிநின் றான்பொரு வான்நில மும்மதில் தியம்பினால்
மாட்டிநின் றான்அன் றினார்வெந்து வீழவும் வானவர்க்குக்
காட்டிநின் றான்கத மாக்கங்கை பாயவொர் வார்சடையை
நீட்டிநின் றான்திரு நின்றநெய்த் தானத் திருந்தவனே. 10

திருச்சிற்றம்பலம்

திருக்குறுந்தொகை 5-ம் திருமுறை

திருச்சிற்றம்பலம்

கொல்லி யான்குளிர் தூங்குகுற் றாலத்தான்
புல்லி யார்புரம் மூன்றெரி செய்தவன்
நெல்லி யானிலை யானநெய்த் தானனைச்
சொல்லி மெய்தொழு வார்சுடர் வாணரே. 1

இரவ னையிடு வெண்டலை யேந்தியைப்
பரவ னைப்படை யார்மதில் மூன்றையும்
நிரவ னைந்நிலை யானநெய்த் தானனைக்
குரவ னைத்தொழு வார்கொடி வாணரே. 2

ஆனி டைஐந்தும் ஆடுவ ராரிருள்
கானி டைநடம் ஆடுவர் காண்மினோ
தேனி டைமலர் புரியுநெய்த் தானனை
வானி டைத்தொழு வார்வலி வாணரே. 3

விண்ட வர்புர மூன்றும்வெண் ணீறெழக்
கண்ட வன்கடி தாகிய நஞ்சினை
உண்ட வன்னெறி யானநெய்த் தானனைத்
தொண்ட ராய்த்தொழு வார்சுடர் வாணரே. 4

முன்கை நோவக் கடைந்தவர் நிற்கவே
சங்கி யாது சமுத்திர நஞ்சுண்டான்
நங்கை யோடு நவின்றநெய்த் தானனைத்
தங்கை யால்தொழு வார்தலை வாணரே. 5

சுட்ட நீறுமெய் பூசிச் சுடலையுள்
நட்ட மாடுவர் நள்ளிருள் பேயொடே
சிட்டர் வானவர் சேருநெய்த் தானனை
இட்ட மாய்த்தொழு வாரின்ப வாணரே. 6

கொள்ளித் தீயெரி வீசிக் கொடியதோர்
கள்ளிக் காட்டிடை யாடுவர் காண்மினோ
தெள்ளித் தேறித் தெளிந்துநெய்த் தானனை
உள்ளத் தால்தொழு வாரும்பர் வாணரே. 7

உச்சி மேல்விளங் கும்மிள வெண்பிறை
பற்றி யாடர வோடுஞ்ச டைப்பெய்தான்
நெற்றி யாரழல் கண்டநெய்த் தானனைச்
சுற்றி மெய்தொழு வார்சுடர் வாணரே. 8

மாலொ டும்மறை யோதிய நான்முகன்
காலொ டும்முடி காண்பரி தாயினான்
சேலொ டுஞ்செருச் செய்யுநெய்த் தானனை
மாலொ டுந்தொழு வார்வினை வாடுமே. 9

வலிந்த தோள்வலி வாளரக் கன்றனை
நெருங்க நீள்வரை யூன்றுநெய்த் தானனூர்
புரிந்து கைந்நரம் போடிசை பாடலும்
பரிந்த னைப்பணி வார்வினை பாறுமே. 10

திருச்சிற்றம்பலம்

திருத்தாண்டகம் 6-ம் திருமுறை

திருச்சிற்றம்பலம்

வகையெலா முடையாயும் நீயே யென்றும்
வான்கயிலை மேவினாய் நீயே யென்றும்
மிகையெலாம் மிக்காயும் நீயே யென்றும்
வெண்காடு மேவினாய் நீயே யென்றும்
பகையெலாந் தீர்த்தாண்டாய் நீயே யென்றும்
பாசூர் அமர்ந்தாயும் நீயே யென்றும்
திகையெலாந் தொழச்செல்வாய் நீயே யென்றும்
நின்றநெய்த் தானாவென் நெஞ்சு ளாயே. 1

ஆர்த்த எனக்கன்பன் நீயே யென்றும்
ஆதிக் கயிலாயன் நீயே யென்றும்
கூர்த்த நடமாடி நீயே யென்றும்
கோடிகா மேய குழகா வென்றும்

பார்த்தற் கருள்செய்தாய் நீயே யென்றும்
பழையனூர் மேவிய பண்பா வென்றும்
தீர்த்தன் சிவலோகன் நீயே யென்றும்
நின்றநெய்த் தானுவென் னெஞ்சு ளாயே. 2

அல்லாய்ப் பகலானாய் நீயே யென்றும்
ஆதிக் கயிலாயன் நீயே என்றும்
கல்லா லமர்ந்தாயும் நீயே யென்றுங்
காளத்திக் கற்பகமும் நீயே யென்றும்
சொல்லாய்ப் பொருளானாய் நீயே யென்றுஞ்
சோற்றுத் துறையுறைவாய் நீயே யென்றும்
செல்வாய்த் திருவானாய் நீயே யென்றும்
நின்றநெய்த் தானுவென் னெஞ்சு ளாயே. 3

மின்னே ரிடைபங்கன் நீயே யென்றும்
வெண்கயிலை மேவினாய் நீயே யென்றும்
பொன்னேர் சடைமுடியாய் நீயே யென்றும்
பூத கணநாதன் நீயே யென்றும்
என்னா விரதத்தாய் நீயே யென்றும்
ஏகம்பத் தென்னீசன் நீயே யென்றும்
தென்னூர்ப் பதியுளாய் நீயே யென்றும்
நின்றநெய்த் தானுவென் னெஞ்சு ளாயே. 4

முந்தி யிருந்தாயும் நீயே யென்றும்
முன்கயிலை மேவினாய் நீயே யென்றும்
நந்திக் கருள்செய்தாய் நீயே யென்றும்
நடமாடி நள்ளாறன் நீயே யென்றும்
பந்திப் பரியாயும் நீயே யென்றும்
பைஞ்ஞீலி மேவினாய் நீயே யென்றும்
சிந்திப் பரியாயும் நீயே யென்றும்
நின்றநெய்த் தானுவென் னெஞ்சு ளாயே. 5

தக்கா ரடியார்க்கு நீயே யென்றுந்
தலையார் கயிலாயன் நீயே யென்றும்
அக்காரம் பூண்டாயும் நீயே யென்றும்
ஆக்கூரில் தான்றோன்றி நீயே யென்றும்

புக்காய ஏழுலகும் நீயே யென்றும்
புள்ளிருக்கு வேளூராய் நீயே யென்றும்
தெக்கார மாகோணத் தானே யென்றும்
நின்றநெய்த் தானுவென் னெஞ்சு ளாயே. 6

புகழும் பெருமையாய் நீயே யென்றும்
பூங்கயிலை மேவினுய் நீயே யென்றும்
இகழுந் தலையேந்தி நீயே யென்றும்
இராமேச் சுரத்தின்பன் நீயே யென்றும்
அகழும் மதிலுடையாய் நீயே யென்றும்
ஆலவாய் மேவினுய் நீயே யென்றும்
திகழும் மதிசூடி நீயே யென்றும்
நின்றநெய்த் தானுவென் னெஞ்சு ளாயே. 7

வானவர்க்கு மூத்திளையாய் நீயே யென்றும்
வானக் கயிலாயன் நீயே யென்றும்
கான நடமாடி நீயே யென்றுங்
கடவூரில் வீரட்டன் நீயே யென்றும்
ஊனுர் முடியறுத்தாய் நீயே யென்றும்
ஒற்றியூ ராரூராய் நீயே யென்றும்
தேனுய் அமுதானுய் நீயே யென்றும்
நின்றநெய்த் தானுவென் னெஞ்சு ளாயே. 8

தந்தைதா யில்லாதாய் நீயே யென்றும்
தலையார் கயிலாயன் நீயே யென்றும்
எந்தாயெம் பிரானுனுய் நீயே யென்றும்
ஏகம்பத் தென்னீசன் நீயே யென்றும்
முந்திய முக்கணுய் நீயே யென்றும்
மூவலூர் மேவினுய் நீயே என்றும்
சிந்தையாய் தேனூராய் நீயே யென்றும்
நின்றநெய்த் தானவென் னெஞ்சு ளாயே. 9

மறித்தான் வலிசெற்ருய் நீயே யென்றும்
வான்கயிலை மேவினுய் நீயே யென்றும்;
வெறுத்தார் பிறப்பறுப்பாய் நீயே யென்றும்
வீழி மிழலையாய் நீயே யென்றும்.

அறத்தாய் அமுதீந்தாய் நீயே யென்றும்
யாவர்க்குந் தாங்கொணா நஞ்ச முண்டு
பொறுத்தாய் புலனைந்தும் நீயே யென்றும்
நின்றநெய்த் தாணுவென் நெஞ்சு ளாயே. 10

திருச்சிற்றம்பலம்

திருத்தாண்டகம் 6-ம் திருமுறை

திருச்சிற்றம்பலம்

மெய்த்தானத் தகம்படியுள் ஐவர் நின்று
வேண்டிற்றுக் குறைமுடித்து வினைக்குக் கூடாம்
இத்தானத் திருந்திங்ங னுய்வா னெண்ணும்
இதனையொழி இயம்பக்கேள் ஏழை நெஞ்சே
மைத்தான நீள்நயனி பங்கன் வங்கம்
வருதிரைநீர் நஞ்சுண்ட கண்டன் மேய
நெய்த்தான நன்னகரென் றேத்தி நின்று
நினையுமா நினைந்தக்கா லுய்ய லாமே. 1

ஈண்டா இரும்பிறவித் துறவா ஆக்கை
யிதுநீங்க லாம்விதியுண் டென்று சொல்ல
வேண்டாவே நெஞ்சமே விளம்பக் கேள்நீ
விண்ணவர்தம் பெருமானார் மண்ணி லென்னை
ஆண்டானன் றருவரையாற் புரமூன் றெய்த
அம்மானை அரிஅயனுங் காணா வண்ணம்
நீண்டா னுறைதுறைநெய்த் தான மென்று
நினையுமா நினைந்தக்கா லுய்ய லாமே. 2

பரவிப் பலபலவுந் தேடி யோடிப்
பாழாங் குரம்பையிடைக் கிடந்து வாளா
குரவிக் குடிவாழ்க்கை வாழ வெண்ணிக்
குலைகை தவிர்நெஞ்சே கூறக் கேள்நீ
இரவிக் குலமுதலா வானோர் கூடி
யெண்ணிறந்த கோடி யமர ராயம்
நிரவிக் கரியவன்நெய்த் தான மென்று
நினையுமா நினைந்தக்கா லுய்ய லாமே. 3

அலையார்வினைத் திறஞ்சே ராக்கை யுள்ளே
அகப்பட்டு ளாசையெனும் பாசந் தன்னுள்
தலையாய்க் கடையாகும் வாழ்வி லாழ்ந்து
தளர்ந்துமிக நெஞ்சமே அஞ்ச வேண்டா
இலையார் புனற்கொன்றை யெறிநீர்த் திங்கள்
இருஞ்சடைமேல் வைத்துகந்தான் இமையோ ரேத்தும்
நிலையா னுறைநிறைநெய்த் தான மென்று
நினையுமா நினைந்தக்கா லுய்ய லாமே. 4

தினைத்தனையோர் பொறையிலா வுயிர்போங் கூட்டைப்
பொருளென்று மிகவுன்னி மதியா லிந்த
அனைத்துலகும் ஆளலா மென்று பேசும்
ஆங்காரந் தவிர்நெஞ்சே யமரர்க் காக
முனைத்துவரு மதில்மூன்றும் பொன்ற அன்று
முடுகியவெஞ் சிலைவளைத்துச் செந்தீ மூழ்க
நினைத்தபெருங் கருணையன்நெய்த் தான மென்று
நினையுமா நினைந்தக்கா லுய்ய லாமே, 5

மிறைபடுமிவ் வுடல்வாழ்வை மெய்யென் றெண்ணி
வினையிலே கிடந்தழுந்தி வியவேல் நெஞ்சே
குறைவுடையார் மனத்துளான் குமரன் தாதை
கூத்தாடுங் குணமுடையான் கொலைவேற் கையான்
அறைகழலுந் திருவடிமேற் சிலம்பு மார்ப்ப
அவனிதலம் பெயரவரு நட்டம் நின்ற
நிறைவுடையா னிடமாம்நெய்த் தான மென்று
நினையுமா நினைந்தக்கா லுய்ய லாமே 6

பேசப் பொருளலாப் பிறவி தன்னைப்
பெரிதென்றுன் சிறுமனத்தால் வேண்டி யீண்டு
வாசக் குழல்மடவார் போக மென்னும்
வலைப்பட்டு வீழாதே வருக நெஞ்சே
தூசக் கரியுரித்தான் தூநீ றாடித்
துதைந்திலங்கு நூல்மார்பன் தொடர கில்லா
நீசர்க் கரியவன்நெய்த் தான மென்று
நினையுமா நினைந்தக்கா லுய்ய லாமே. 7

அஞ்சப் புலனிவற்ருலாட்ட வாட்டுண்
டருநோய்க் கிடமாய வுடலின் தன்மை
தஞ்ச மெனக்கருதித் தாழேல் நெஞ்சே
தாழக் கருதுதியே தன்னைச் சேரா
வஞ்ச மனத்தவர்கள் காண வொண்ணு
மணிகண்டன் வானவர்தம் பிரானென் றேத்தும்
நெஞ்சர்க் கினியவன் நெய்த்தான மென்று
நினையுமா நினைந்தக்கா லுய்ய லாமே. 8

பொருந்தாத உடலகத்திற் புக்க ஆவி
போமா றறிந்தறிந்தே புலைவாழ் வுன்னி
இருந்தாங் கிடர்ப்படநீ வேண்டா நெஞ்சே
இமையவர்தம் பெருமானன் றுமையா ளஞ்சக்
கருந்தாள் மதகரியை வெருவச் சீறுங்
கண்ணுதல்கண் டமராடிக் கருதார் வேள்வி
நிரந்தரமா இனிதுறைநெய்த் தான மென்று
நினையுமா நினைந்தக்கா லுய்ய லாமே. 9

உரித்தன் றுனக்கிவ் வுடலின் தன்மை
உண்மை யுரைத்தேன் விரத மெல்லாம்
தரித்துத் தவமுயன்றும் வாழா நெஞ்சே
தம்மிடையி லில்லார்க்கொன் றல்லார்க் கன்னன்
எரித்தான் அனலுடையான் எண்டோ ளானே
எம்பெருமா னென்றேத்தா இலங்கைக் கோனை
நெரித்தானை நெய்த்தானம் மேவி னானை
நினையுமா நினைந்தக்கா லுய்ய லாமே. 10

திருச்சிற்றம்பலம்

53. திருப்பெரும்புலியூர்

திருஞானசம்பந்த சுவாமிகள்

பண்—காந்தாரம் 2-ம் திருமுறை.

திருச்சிற்றம்பலம்

மண்ணுமோர் பாகம் உடையார் மாலுமோர் பாகம் உடையார்
விண்ணுமோர் பாகம் உடையார் வேதம் உடைய விமலர்
கண்ணுமோர் பாகம் உடையார் கங்கை சடையிற் கரந்தார்
பெண்ணுமோர் பாகம் உடையார் பெரும் புலியூர்பிரி யாரே. 1

துன்னுகடற் பவளஞ்சேர் தூயன நீண்டதிண் டோள்கள்
மின்னு சுடர்க்கொடி போலும் மேனியி னுளொரு கங்கைக்
கன்னிக ளின்புனை யோடு கலைமதி மாலை கலந்த
பின்னு சடைப்பெரு மானுர் பெரும்புலி யூர்பிரி யாரே. 2

கள்ள மதித்த கபாலங் கைதனி லேமிக ஏந்தித்
துள்ள மிதித்துநின் ருடுந் தொழிலர் எழில்மிகு செல்வர்
வெள்ள நகுதலை மாலை விரிசடை மேல்மிளிர் கின்ற
பிள்ளை மதிப்பெரு மானுர் பெரும்புலி யூர்பிரி யாரே. 3

ஆட லிலையம் உடையார் அருமறை தாங்கிஆ றங்கம்
பாட லிலையம் உடையார் பன்மை யொருமைசெய் தஞ்சும்
ஊட லிலையம் உடையார் யோகெனும் பேரொளி தாங்கிப்
பீட லிலையம் உடையார் பெரும் புலியூர்பிரி யாரே. 4

தோடுடை யார்குழைக் காதிற் சுடுபொடி யாரன லாடக்
காடுடை யாரெரி வீசுங் கையுடை யார்கடல் சூழ்ந்த
நாடுடை யார்பொரு ளின்ப நல்லவை நாளு நயந்த
பீடுடை யார்பெரு மானுர் பெரும்புலி யூர்பிரி யாரே. 5

கற்ற துறைப்பணி செய்து காண்டுமென் பாரவர் தங்கள்
முற்றி தறிதுமென் பார்கள் முதலியர் வேதபு ராணர்
மற்றி தறிதுமென் பார்கள் மனத்திடை யார்பணி செய்யப்
பெற்றி பெரிதும் உகப்பார் பெரும்புலி யூர்பிரி யாரே. 6

மறையுடை யாரொலி பாடல் மாமலர்ச் சேவடி சேர்வார்
குறையுடை யார்குறை தீர்ப்பார் குழகர் அழகர் நஞ்செல்வர்
கறையுடை யார்திகழ் கண்டங் கங்கை சடையிற் கரந்தார்
பிறையுடை யார்சென்னி தன்மேற் பெரும்புலி யூர்பிரி யாரே. 7

உறவியும் இன்புறு சீரும் ஓங்குதல் வீடெளி தாகித்
துறவியுங் கூட்டமுங் காட்டித் துன்பமும் இன்பமுந் தோற்றி
மறவியஞ் சிந்தனை மாற்றி வாழவல் லார்தமக் கென்றும்
பிறவி யறுக்கும் பிரானுர் பெரும்புலி யூர்பிரி யாரே. 8

சீருடை யாரடி யார்கள் சேடரொப் பார்சடை சேரும்
நீருடை யார்பொடிப் பூசு நினைப்புடை யார்விரி கொன்றைத்
தாருடை யார்விடை யூர்வார் தலைவரைந் நூற்றுப்பத் தாய
பேருடை யார்பெரு மானுர் பெரும்புலி யூர்பிரி யாரே. 9

உரிமை யுடையடி யார்கள் உள்ளுற வுள்கவல் லார்கட்
கருமை யுடையன காட்டி அருள் செயும் ஆதி முதல்வர்
கருமை யுடைநெடு மாலுங் கடிமல ரண்ணலுங் காணுப்
பெருமை யுடைப்பெரு மானுர் பெரும்புலி யூர்பிரி யாரே. 10

பிறைவள ரும்முடிச் சென்னிப் பெரும்புலி யூர்ப் பெருமானை
நறைவள ரும்பொழிற் காழி நற்றமிழ் ஞானசம் பந்தன்
மறைவள ருந்தமிழ் மாலை வல்லவர் தந்துயர் நீங்கி
நிறைவளர் நெஞ்சின ராகி நீடுல கத்திருப் பாரே. 11

திருச்சிற்றம்பலம்

54. திருமழபாடி

திருஞானசம்பந்த சுவாமிகள்

பண்—இந்தளம் 2-ம் திருமுறை

திருச்சிற்றம்பலம்

களையும் வல்வினை யஞ்சல்நெஞ் சேகரு தார்புரம்
உலையும் பூசல்செய் தானுயிர் மால்வரை நல்விலா
வளைய வெஞ்சரம் வாங்கியெய் தான்மதுத் தும்பிவண்
டலையுங் கொன்றையந் தார்மழ பாடியுள் அண்ணலே. 1

காச்சி லாதபொன் னேக்குங்க னவயி ரத்திரள்
ஆச்சி லாதப ளிங்கினன் அஞ்சுமுன் ஆடினுன்
பேச்சி னூலுமக் காவதென் பேதைகாள் பேணுமின்
வாச்ச மாளிகை சூழ்மழ பாடியை வாழ்த்துமே. 2

உரங்கெ டுப்பவன் உம்பர்க ளாயவர் தங்களைப்
பரங்கெ டுப்பவன் நஞ்சையுண் டுபக லோன்றனை
முரண்கெ டுப்பவன் முப்புரந் தீயெழச் செற்றுமுன்
வரங்கொ டுப்பவன் மாமழ பாடியுள் வள்ளலே. 3

பள்ள மார்சடை யிற்புடை யேயடை யப்புனல்
வெள்ளம் ஆதரித் தான்விடை யேறிய வேதியன்
வள்ளல் மாமழ பாடியுள் மேயம ருந்தினை
உள்ளம் ஆதரி மின்வினை யாயின ஓயவே. 4

தேனு லாமலர் கொண்டுமெய்த் தேவர்கள் சித்தர்கள்
பால்நெய் அஞ்சுடன் ஆட்டமுன் ஆடிய பால்வணன்
வான நாடர்கள் கைதொழு மாமழ பாடியெம
கோனை நாடொறுங் கும்பிட வேகுறி கூடுமே. 5

தெரிந்த வன்புர மூன்றுடன் மாட்டிய சேவகன்
பரிந்து கைதொழு வாரவர் தம்மனம் பாவினன்
வரிந்த வெஞ்சிலை யொன்றுடை யான்மழ பாடியைப்
புரிந்து கைதொழு மின்வினை யாயின போகுமே. 6

சந்த வார்குழ லாளுமை தன்னொரு கூறுடை
எந்தை யான்இமை யாதமுக் கண்ணினன் எம்பிரான்
மைந்தன் வார்பொழில் சூழ்மழ பாடிம ருந்தினைச்
சிந்தி யாவெழு வார்வினை யாயின தேயுமே. 7

இரக்கம் ஒன்றுமி லான்இறை யான்திரு மாமலை
உரக்கை யாலெடுத் தான்தன தோள்முடி பத்திற
விரல்த லைந்நிறு வியுமை யாளொடு மேயவன்
வரத்தை யேகொடுக் கும்மழ பாடியுள் வள்ளலே. 8

ஆலம் உண்டமு தம்மம ரர்க்கருள் அண்ணலார்
காலன் ஆருயிர் வீட்டிய மாமணி கண்டனார்
சால நல்லடி யார்தவத் தார்களுஞ் சார்விடம்
மால யன்வணங் கும்மழ பாடியெம் மைந்தனே. 9

கலியின் வல்லம ணுங்கருஞ் சாக்கியப் பேய்களும்
நலியும் நாள்கெடுத் தாண்ட என்நாதனார் வாழ்பதி
பலியும் பாட்டொடு பண்முழ வும்பல வோசையும்
மலியும் மாமழ பாடியை வாழ்த்திவ ணங்குமே. 10

மலியு மாளிகை சூழ்மழ பாடியுள் வள்ளலைக்
கலிசெய் மாமதில் சூழ்கடற் காழிக் கவுணியன் 11

திருச்சிற்றம்பலம்

பண்–கொல்லி 3-ம் திருமுறை

திருச்சிற்றம்பலம்

காலையார் வண்டினங் கிண்டிய காருறும்
சோலையார் பைங்கிளி சொற்பொருள் பயிலவே
வேலையார் விடமணி வேதியன் விரும்பிடம்
மாலையார் மதிதவழ் மாமழ பாடியே. 1

கறையணி மிடறுடைக் கண்ணுதல் நண்ணிய
பிறையணி செஞ்சடைப் பிஞ்ஞகன் பேணுமூர்
துறையணி குருகினந் தூமலர் துதையவே
மறையணி நாவினன் மாமழ பாடியே. 2

அந்தணர் வேள்வியும் அருமறைத் துழனியும்
செந்தமிழ்க் கீதமுஞ் சீரினால் வளர்தரப்
பந்தணை மெல்விர லாளொடும் பயில்விடம்
மந்தம்வந் துலவுசீர் மாமழ பாடியே. 3

அத்தியின் உரிதனை யழகுறப் போர்த்தவன்
முத்தியாய் மூவரின் முதல்வனாய் நின்றவன்
பத்தியாற் பாடிடப் பரிந்தவர்க் கருள்செயும்
அத்தனார் உறைவிடம் அணிமழ பாடியே 4

கங்கையார் சடையிடைக் கதிர்மதி யணிந்தவன்
வெங்கண்வா ளரவுடை வேதியன் தீதிலாச்
செங்கயற் கண்ணுமை யாளொடுஞ் சேர்விடம்
மங்கைமார் நடம்பயில் மாமழ பாடியே. 5

பாலனா ராருயிர் பாங்கினால் உணவரும்
காலனார் உயிர்செகக் காலினாற் சாடினான்
சேலினார் கண்ணினாள் தன்னொடுஞ் சேர்விடம்
மாலினார் வழிபடு மாமழ பாடியே. 6

விண்ணிலார் இமையவர் மெய்ம்மகிழ்ந் தேத்தவே
எண்ணிலார் முப்புரம் எரியுண நகைசெய்தார்
கண்ணினாற் காமனைக் கனலெழக் காய்ந்தஎம்
அண்ணலார் உறைவிடம் அணிமழ பாடியே. 7

கரத்தினுற் கயிலையை யெடுத்தகார் அரக்கன
சிரத்தினை யூன்றலுஞ் சிவனடி சரணென
இரத்தினுற் கைந்நரம் பெடுத்திசை பாடலும்
வரத்தினுன் மருவிடம் மாமழ பாடியே. 8

ஏடுலா மலர்மிசை அயனெழில் மாலுமாய்
நாடினுர்க் கரியசீர் நாதனுர் உறைவிடம்
பாடெலாம் பெண்ணையின் பழம்விழப் பைம்பொழில்
மாடெலாம் மல்குசீர் மாமழ பாடியே. 9

உறிபிடித் தூத்தைவாய்ச் சமணொடு சாக்கியர்
நெறிபிடித் தறிவிலா நீசர்சொற் கொள்ளன்மின்
பொறிபிடித் தரவினம் பூணெனக் கொண்டுமான்
மறிபிடித் தானிடம் மாமழ பாடியே. 10

ஞாலத்தார் ஆதிரை நாளினுன் நாடொறும்
சீலத்தான் மேவிய திருமழ பாடியை
ஞாலத்தான் மிக்கசீர் ஞானசம் பந்தன்சொல்
கோலத்தாற் பாடுவார் குற்றமற் றோர்களே. 11

திருச்சிற்றம்பலம்

பண்–கௌசிகம் 3-ம் திருமுறை

திருச்சிற்றம்பலம்

அங்கை யாரழ லன்னழ கார்சடைக்
கங்கை யான்கட வுள்ளிட மேவிய
மங்கை யானுறை யும்மழ பாடியைத்
தங்கை யால்தொழு வார்தக வாளரே. 1

விதியு மாம்விளை வாமொளி யார்ந்ததோர்
கதியு மாங்கசி வாம்வசி யாற்றமா
மதியு மாம்வலி யாம்மழ பாடியுள்
நதியந் தோய்சடை நாதன்நற் பாதமே. 2

முழவி னுன்முது காடுறை பேய்க்கணக்
குழவி னுன்குல வுங்கையி லேந்திய
மழுவி னுனுறை யும்மழ பாடியைத்
தொழுமின் நுந்துய ரானவை தீரவே. 3

கலையி னுன்மறை யான்கதி யாகிய
மலையி னுன்மரு வார்புர மூன்றெய்த
சிலையி னுன்சேர் திருமழ பாடியைத்
தலையி னுல்வணங் கத்தவ மாகுமே. 4

நல்வி னைப்பயன் நான்மறை யின்பொருள்
கல்வி யாயக ருத்தன் உருத்திரன்
செல்வன் மேய திருமழ பாடியைப்
புல்கி யேத்தும் அதுபுக ழாகுமே. 5

நீடி னுருல குக்குயி ராய்நின்ருன்
ஆடி னுனெரி கானிடை மாநடம்
பாடி னுரிசை மாமழ பாடியை
நாடி னுர்க்கில்லை நல்குர வானவே. 6

மின்னி னுரிடை யாளொரு பாகமாய்
மன்னி னுனுறை மாமழ பாடியைப்
பன்னி னுரிசை யால்வழி பாடுசெய்
துன்னி னுர்வினை யாயின வோயுமே. 7

தென்னி லங்கையர் மன்னன் செழுவரை
தன்னி லங்க அடர்த்தருள் செய்தவன்
மன்னி லங்கிய மாமழ பாடியை
உன்னி லங்க வுறுபிணி யில்லையே. 8

திருவின் நாயக னுஞ்செழுந் தாமரை
மருவி னுனுந் தொழத்தழல் மாண்பமர்
உருவி னுனுறை யும்மழ பாடியைப்
பரவி னுர்வினைப் பற்றறுப் பார்களே. 9

நலியும் நன்றறி யாச்சமண் சாக்கியர்
வலிய சொல்லினும் மாமழ பாடியுள்
ஒலிசெய் வார்கழ லான்திறம் உள்கவே
மெலியும் நம்முடன் மேல்வினை யானவே. 10

மந்தம் உந்து பொழில்மழ பாடியுள்
எந்தை சந்தம் இனிதுகந் தேத்துவான்
கந்த மார்கடற் காழியுள் ஞானசம்
பந்தன் மாலைவல் லார்க்கில்லை பாவமே. 11

திருச்சிற்றம்பலம்

திருநாவுக்கரசு சுவாமிகள்

திருத்தாண்டகம் 6-ம் திருமுறை

திருச்சிற்றம்பலம்

நீறேறு திருமேனி யுடையான் கண்டாய்
நெற்றிமேல் ஒற்றைக்கண் நிறைந்தான் கண்டாய்
கூறாக உமைபாகங் கொண்டான் கண்டாய்
கொடியவிட முண்டிருண்ட கண்டன் கண்டாய்
ஏறேறி யெங்குந் திரிவான் கண்டாய்
ஏழுலகும் ஏழ்மலையு மானான் கண்டாய்
மாறானார் தம்அரணம் அட்டான் கண்டாய்
மழபாடி மன்னும் மணாளன் றானே. 1

கொக்கிறகு சென்னி யுடையான் கண்டாய்
கொல்லை விடையேறுங் கூத்தன் கண்டாய்
அக்கரைமே லாடலுடையான் கண்டாய்
அனலங்கை யேந்திய ஆதி கண்டாய்
அக்கோ டரவ மணிந்தான் கண்டாய்
அடியார்கட் காரமுத மானான் கண்டாய்
மற்றிருந்த கங்கைச் சடையான் கண்டாய்
மழபாடி மன்னும் மணாளன் றானே. 2

நெற்றித் தனிக்கண் ணுடையான் கண்டாய்
நேரிழையோர் பாகமாய் நின்றான் கண்டாய்
பற்றிப்பாம் பாட்டும் படிறன் கண்டாய்
பல்லூர் பலிதேர் பரமன் கண்டாய்
செற்றார் புரமூன்றுஞ் செற்றான் கண்டாய்
செழுமா மதிசென்னி வைத்தான் கண்டாய்
மற்றொரு குற்ற மிலாதான் கண்டாய்
மழபாடி மன்னும் மணாளன் றானே. 3

அலையார்ந்த புனற்கங்கைச் சடையான் கண்டாய்
அண்டத்துக் கப்பாலாய் நின்றான் கண்டாய்
கொலையான கூற்றங் குமைத்தான் கண்டாய்
கொல்வேங்கைத் தோலொன் றுடுத்தான் கண்டாய்
சிலையால் திரிபுரங்கள் செற்றான் கண்டாய்
செழுமா மதிசென்னி வைத்தான் கண்டாய்
மலையார் மடந்தை மணாளன் கண்டாய்
மழபாடி மன்னும் மணாளன் றானே. 4

உலந்தார்தம் அங்கம் அணிந்தான் கண்டாய்
உவகையோ டின்னருள்கள் செய்தான் கண்டாய்
நலந்திகழுங் கொன்றைச் சடையான் கண்டாய்
நால்வேதம் ஆறங்க மானான் கண்டாய்
உலந்தார் தலைகலனாக் கொண்டான் கண்டாய்
உம்பரார் தங்கள் பெருமான் கண்டாய்
மலர்ந்தார் திருவடியென் தலைமேல் வைத்த
மழபாடி மன்னும் மணாளன் றானே. 5

தாமரையான் தன்தலையைச் சாய்த்தான் கண்டாய்
தகவுடையார் நெஞ்சிருக்கை கொண்டான் கண்டாய்
பூமலரான் ஏத்தும் புனிதன் கண்டாய்
புணர்ச்சிப் பொருளாகி நின்றான் கண்டாய்
ஏமருவு வெஞ்சிலையொன் றேந்தி கண்டாய்
இருளார்ந்த கண்டத் திறைவன் கண்டாய்
மாமருவுங் கலைகையி லேந்தி கண்டாய்
மழபாடி மன்னும் மணாளன் றானே. 6

நீராகி நெடுவரைக ளானுன் கண்டாய்
நிழலாகி நீள்விசும்பு மானுன் கண்டாய்
பாராகிப் பௌவமே ழானுன் கண்டாய்
பகலாகி வானுகி நின்ருன் கண்டாய்
ஆரேனுந் தன்னடியார்க் கன்பன் கண்டாய்
அணுவாகி ஆதியாய் நின்ருன் கண்டாய்
வாரார்ந்த வனமுலையாள் பங்கன் கண்டாய்
மழபாடி மன்னும் மணாளன் ருனே. 7

பொன்னியலுந் திருமேனி உடையான் கண்டாய்
பூங்கொன்றைத் தாரொன் றணிந்தான் கண்டாய்
மின்னியலும் வாச்சடையெம் பெருமான் கண்டாய்
வேழத்தின் உரிவிரும்பிப் போர்த்தான் கண்டாய்
தன்னியல்பார் மற்றொருவ ரில்லான் கண்டாய்
தாங்கரிய சிவந்தானுய் நின்ருன் கண்டாய்
மன்னிய மங்கையோர் கூறன் கண்டாய்
மழபாடி மன்னும் மணாளன் ருனே. 8

ஆலாலம் உண்டுகந்த ஆதி கண்டாய்
அடையலர்தம் புரமூன்றும் எய்தான் கண்டாய்
காலாலக் காலனையுங் காய்ந்தான் கண்டாய்
கண்ணப்பர்க் கருள்செய்த காளை கண்டாய்
பாலாரும் மொழிமடவாள் பாகன் கண்டாய்
பசுவேறிப் பலிதிரியும் பண்பன் கண்டாய்
மாலாலும் அறிவரிய மைந்தன் கண்டாய்
மழபாடி மன்னும் மணாளன் ருனே: 9

ஒருசுடரா யுலகேழு மானுன் கண்டாய்
ஓங்காரத் துட்பொருளாய் நின்ருன் கண்டாய்
விரிசுடராய் விளங்கொளியாய் நின்ருன் கண்டாய்
விழவொலியும் வேள்வொலியு மானுன் கண்டாய்
இருசுடர்மீ தோடா இலங்கைக் கோனை
யிடழிய இருபதுதோ ளிறுத்தான் கண்டாய்
மருசுடரின் மாணிக்கக் குன்று கண்டாய்
மழபாடி மன்னும் மணாளன் ருனே. 10

திருச்சிற்றம்பலம்

திருச்சிற்றம்பலம்

அலையடுத்த பெருங்கடல்நஞ் சமுதா வுண்டு
அமரர்கள்தந் தலைகாத்த ஐயர் செம்பொன்
சிலையெடுத்து மாநாக நெருப்புக் கோத்துத்
திரிபுரங்கள் தீயிட்ட செல்வர் போலும்
நிலையடுத்த பசும்பொன்னால் முத்தால் நீண்ட
நிரைவயிரப் பலகையாற் குவையார்த் துற்ற
மலையடுத்த மழபாடி வயிரத் தூணே
யென்றென்றே நானரற்றி நைகின் றேனே. 1

அறைகலந்த குழல்மொந்தை வீணை யாழும்
அந்தரத்திற் கந்தருவர் அமரர் ஏத்த
மறைகலந்த மந்திரமும் நீருங் கொண்டு
வழிபட்டார் வானாளக் கொடுத்தி யன்றே
கறைகலந்த பொழிற்கச்சிக் கம்பம் மேய
கனவயிரத் திரள்தூணே கலிசூழ் மாடம்
மறைகலந்த மழபாடி வயிரத் தூணே
யென்றென்றே நானரற்றி நைகின் றேனே. 2

உரங்கொடுக்கு மிருண்மெய்யர் மூர்க்கர் பொல்லா
ஊத்தைவாய்ச் சமணர்தமை யுறவாக் கொண்ட
பரங்கெடுத்திங் கடியேனை யாண்டு கொண்ட
பவளத்தின் திரள்தூணே பசும்பொன் முத்தே
புரங்கெடுத்துப் பொல்லாத காமன் ஆகம்
பொடியாக விழித்தருளிப் புவியோர்க் கென்றும்
வரங்கொடுக்கும் மழபாடி வயிரத் தூணே
யென்றென்றே நானரற்றி நைகின் றேனே. 3

ஊனிகந்தூ றுறிகையர் குண்டர் பொல்லா
ஊத்தைவாய்ச் சமணருற வாகக் கொண்டு
ஞானகஞ்சேர்ந் துள்ளவயி ரத்தை நண்ணா
நாயேனைப் பொருளாக ஆண்டு கொண்ட
மீனகஞ்சேர் வெள்ளநீர் விதியாற் சூடும்
வேந்தனே விண்ணவர்தம் பெருமான் மேக
வானகஞ்சேர் மழபாடி வயிரத் தூணே
யென்றென்றே நானரற்றி நைகின் றேனே. 4

சிரமேற்ற நான்முகன்றன் தலையும் மற்றைத்
திருமால்தன் செழுந் தலையும் பொன்றச் சிந்தி
உரமேற்ற இரவிபல் தகர்த்துச் சோமன்
ஒளிர்கலைகள் படவுழக்கி உயிரை நல்கி
நரையேற்ற விடையேறி நாகம் பூண்ட
நம்பியையே மறைநான்கும் ஓல மிட்டு
வரமேற்கும் மழபாடி வயிரத் தூணே
யென்றென்றே நானரற்றி நைகின் றேனே. 5

சினந்திருத்துஞ் சிறுப்பெரியார் குண்டர் தங்கள்
செதுமதியார் தீவினைக்கே விழுந்தேன் தேடிப்
புனந்திருத்தும் பொல்லாத பிண்டி பேணும்
பொறியிலியேன் தலைப்பொருளா ஆண்டு கொண்டு
தனந்திருத்து மவர்திறத்தை யொழியப் பாற்றித்
தயாமூல தன்மவழி யெனக்கு நல்கி
மனந்திருத்தும் மழபாடி வயிரத் தூணே
யென்றென்றே நானரற்றி நைகின் றேனே. 6

சுழித்துணையாம் பிறவிவழித் துக்கம் நீக்குஞ்
சுருள்சடையெம் பெருமானே தூய தெண்ணீர்
இழிப்பரிய பசுபாசப் பிறப்பை நீக்கும்
என் துணையே யென்னுடைய பெம்மான் தம்மான்
பழிப்பரிய திருமாலும் அயனுங் காணுப்
பரிதியே சுருதிமுடிக் கணியாய் வாய்த்த
வழித்துணையாம் மழபாடி வயிரத் தூணே
யென்றென்றே நானரற்றி நைகின் றேனே. 7

திருச்சிற்றம்பலம்

சுந்தரமூர்த்தி சுவாமிகள்

பண்-நட்டராகம் 7-ம்திருமுறை

திருச்சிற்றம்பலம்

பொன்னார் மேனியனே புலித்தோலை அரைக்கசைத்து
மின்னார் செஞ்சடைமேல் மிளிர் கொன்றை அணிந்தவனே
மன்னே மாமணியே மழபாடியுள் மாணிக்கமே
அன்னே உன்னையல்லால் இனி யாரை நினைக்கேனே. 1

கீளார் கோவணமுந் திரு நீறுமெய் பூசிஉன்றன்
தாளே வந்தடைந்தேன் தலை வாஎனை ஏன்றுகொள்நீ
வாளார் கண்ணிபங்கா மழ பாடியுள் மாணிக்கமே
ஆளாய் நின்னையல்லால் இனி யாரை நினைக்கேனே. 2

எம்மான் எம்மனையென் றனக் கெட்டனைச் சார்வாகார்
இம்மா யப்பிறவி பிறந் தேஇறந் தெய்த்தொழிந்தேன்
மைம்மாம் பூம்பொழில் சூழ் மழ பாடியுள் மாணிக்கமே
அம்மான் நின்னையல்லால் இனி யாரை நினைக்கேனே. 3

பண்டே நின்னடியேன் அடி யாரடி யார்கட்கெல்லாம்
தொண்டே பூண்டொழிந்தேன் தொடா ராமைத்துரிசறுத்தேன்
விண்டார் பூம்பொழில்சூழ் மழ பாடியுள் மாணிக்கமே
அண்டா நின்னையல்லால் இனி யாரை நினைக்கேனே. 4

கண்ணாய் ஏழுலகுங் கருத்தாய அருத்தமுமாய்ப்
பண்ணார் இன்றமிழாய்ப் பர மாய பரஞ்சுடரே
மண்ணார் பூம் பொழில்சூழ் மழ பாடியுள் மாணிக்கமே
அண்ணா நின்னையல்லால் இனி யாரை நினைக்கேனே. 5

நாளார் வந்தணுகி நலி யா முனம் நின்றனக்கே
ஆளா வந்தடைந்தேன் அடி யேனையும் ஏன்றுகொள் நீ
மாளா நாளருளும் மழ பாடியுள் மாணிக்கமே
ஆளா நின்னையல்லால் இனி யாரை நினைக்கேனே. 6

சந்தா ருங்குழையாய் சடை மேற்பிறை தாங்கி நல்ல
வெந்தார் வெண்பொடியாய் விடை ஏறிய வித்தகனே
மைந்தார் சோலைகள்சூழ் மழ பாடியுள் மாணிக்கமே
எந்தாய் நின்னையல்லால் இனி யாரை நினைக்கேனே. 7

வெய்ய விரிசுடரோன் மிகு தேவர் கணங்களெல்லாம்
செய்ய மலர்கள்இட மிகு செம்மையுள் நின்றவனே
மையார் பூம்பொழில்சூழ் மழ பாடியுள் மாணிக்கமே
ஐயா நின்னை அல்லால் இனி யாரை நினைக்கேனே. 8

நெறியே நின்மலனே நெடு மால்அயன் போற்றி செய்யும்
குறியே நீர்மையனே கொடி யேரிடை யாள் தலைவா
மறிசேர்அங்கையனே மழ பாடியுள் மாணிக்கமே
அறிவே நின்னையல்லால் இனி யாரை நினைக்கேனே. 9

ஏரார் முப்புரமும் எரியச்சிலை தொட்டவனை
வாரார் கொங்கையுடன் மழபாடியுள் மேயவனைச்
சீரார் நாவலர் கோன் ஆரூரன் உரைத்ததமிழ்
பாரோர் ஏத்தவல்லார் பரலோகத் திருப்பாரே. 10

திருச்சிற்றம்பலம்.

55. திருப்பழுவூர்

திருஞானசம்பந்த சுவாமிகள்

திருவிராகம்–பண்–இந்தளம் 2-ம் திருமுறை

திருச்சிற்றம்பலம்

முத்தன்மிகு மூவிலைநல் வேலன்விரி நூலன்
அத்தன்எமை யாளுடைய அண்ணலிட மென்பர்
மைத்தழை பெரும்பொழிலின் வாசமது வீசப்
பத்தரொடு சித்தர்பயில் கின்றபழு வூரே. 1

கோடலொடு கோங்கவை குலாவுமுடி தன்மேல்
ஆடரவம் வைத்தபெரு மானதிட மென்பர்
மாடமலி சூளிகையி லேறிமட வார்கள்
பாடலொலி செய்யமலி கின்றபழு வூரே. 2

வாலிய புரத்திலவர் வேவவிழி செய்த
போலிய வொருத்தர்புரி நூலரிட மென்பர்
வேலியின் விரைக்கமல மன்னமுக மாதர்
பாலென மிழற்றிநட மாடுபழு வூரே. 3

எண்ணுமொ ரெழுத்துமிசை யின்கிளவி தேர்வார்
கண்ணுமுத லாயகட வுட்கிடம தென்பர்
மண்ணின்மிசை யாடிமலை யாளர்தொழு தேத்திப்
பண்ணினொலி கொண்டுபயில் கின்றபழு வூரே. 4

சாதல்புரி வார்சுடலை தன்னில்நட மாடும்
நாதன்நமை யாளுடைய நம்பனிட மென்பர்
வேதமொழி சொல்லிமறை யாளரிறை வன்றன்
பாதமவை யேத்தநிகழ் கின்றபழு வூரே. 5

மேவயரு மும்மதிலும் வெந்தழல் விளைத்து
மாவயர அன்றுரிசெய் மைந்தனிட மென்பர்
பூவையை மடந்தையர்கள் கொண்டுபுகழ் சொல்லிப்
பாவையர்கள் கற்பொடு பொலிந்தபழு வூரே. 6

மந்தண மிருந்துபுரி மாமடிதன் வேள்வி
சிந்தவினை யாடுசிவ லோகனிட மென்பர்
அந்தணர்கள் ஆகுதியி லிட்டஅகில் மட்டார்
பைந்தொடிநன் மாதர்சுவ டொற்றுபழு வூரே. 7

உரக்கடல் விடத்தினை மிடற்றிலுற வைத்தன்
றரக்கனை யடர்த்தருளும் அப்பனிட மென்பர்
குரக்கினம் விரைப்பொழிலின் மீதுகனி யுண்டு
பரக்குறு புனற்செய்வினை யாடுபழு வூரே. 8

நின்றநெடு மாலுமொரு நான்முகனும் நேட
அன்றுதழ லாய்நிமிரும் ஆதியிட மென்பர்
ஒன்றுமிரு மூன்றுமொரு நாலுமுணர் வார்கள்
மன்றினி லிருந்துடன் மகிழ்ந்தபழு வூரே. 9

மொட்டையமண் ஆதர்துகில் மூடுவிரி தேரர்
முட்டைகள் மொழிந்தமுனி வான்றனிட மென்பர்
மட்டைமலி தாழைஇள நீரதிசை பூகம்
பட்டையொடு தாறுவிரி கின்றபழு வூரே. 10

அந்தணர்க ளானமலை யாளரவ ரேத்தும்
பந்தமலி கின்றபழு வூரரனை யாரச்
சந்தமிகு ஞானமுணர் பந்தனுரை பேணி
வந்தவண மேத்துமவர் வானமுடை யாரே. 11

திருச்சிற்றம்பலம்

56. திருக்கானூர்

திருஞானசம்பந்த சுவாமிகள்

பண் – தக்கேசி 1-ம் திருமுறை

திருச்சிற்றம்பலம்

வானார் சோதி மன்னுசென்னி வன்னி புனங்கொன்றைத்
தேனார்போது தானார்கங்கை திங்களொடுசூடி
மானேர்நோக்கி கண்டங்குவப்ப மாலையாடுவார்
கானூர்மேய கண்ணார்நெற்றி ஆன் ஊர்செல்வரே. 1

நீந்தலாகா வெள்ளமூழ்கு நீள்சடை தன்மேலோர்
ஏய்ந்தகோணற் பிறையோடரவு கொன்றை எழிலாரப்
போந்தமென்சொல் இன்பம்பயந்த மைந்தரவர் போலாம்
காந்தள்விம்மு கானூர்மேய சாந்தநீற்றாரே.

சிறையார்வண்டுந் தேனும்விம்மு செய்யமலர்க் சொன்றை
மறையார்பாட லாடலோடு மால்விடை மேல்வருவார்
இறையார்வந்தென் இல்புகுந்தென் எழில்நலமுங் கொண்டார்
கறையார்சோலைக் கானூர்மேய பிறையார் சடையாரே. 3

விண்ணார் திங்கட் கண்ணிவெள்ளை மாலையது சூடித்
தண்ணாரக்கோ டாமைபூண்டு தழைபுன்சடை தாழ
எண்ணாவந்தென் இல்புகுந்தங் கெவ்வநோய்செய் தான்
கண்ணார்சோலைக் கானூர்மேய விண்ணோர் பெருமானே. 4

தார்கொள்கொன்றைக் கண்ணியோடுந் தண்மதியஞ்சூடி
சீர்கொள்பாட லாடலோடு சேடராய் வந்து
ஊர்கள்தோறும் ஐயம்எற்றென் னுள்வெந்நோய் செய்தார்
கார்கொள்சோலைக் கானூர்மேய கறைக்கண் டத்தாரே. 5

முளிவெள்ளெலும்பு நீறுநூலும் மூழ்குமார்பராய்
எளிவந்தார்போல் ஐயமென்றென் இல்லேபுகுந்துள்ளத்
தெளிவுநாணுங் கொண்டகள்வர் தேறலார்பூவில்
களிவண்டியாழ்செய் கானூர்மேய ஒளிவெண்பிறையாரே. 6

மூவாவண்ணர் முளைவெண்பிறையர் முறுவல்செய்திங்கே
பூவார்கொன்றை புனைந்துவந்தார் பொக்கம் பலபேசிப்
போவார்போல மால்செய்துள்ளம் புக்கபுரிநூலர்
தேவார்சோலைக் கானூர்மேய தேவதேவரே. 7

தமிழின் நீர்மை பேசித்தாளம் வீணைபண்ணிநல்ல
முழவமொந்தை மல்குபாடல் செய்கை யிடமோவார்
குமிழின்மேனி தந்துகோல நீர்மையதுகொண்டார்
கமழுஞ்சோலைக் கானூர்மேய பவளவண்ணரே. 8

அந்தமாதி அயனும்மாலும் ஆர்க்கும் அறிவரியான்
சிந்தையுள்ளும் நாவின்மேலுஞ் சென்னியுமன்னினுன்
வந்தென் னுள்ளம் புகுந்துமாலை காலையாடுவான்
கந்தமல்கு கானூர்மேய எந்தைபெம்மானே. 9

ஆமையரவோ டேனவெண்கொம் பக்குமாலைபூண்
டாமோர்கள்வர் வெள்ளர்போல உள்வெந்நோய்செய்தார்
ஓமவேத நான்முக னுங் கோணுகணையானும்
சேமமாய செல்வக்கானூர் மேயசேடரே. 10

கழுது துஞ்சுங் கங்குலாடுங் கானூர்மேயானைப்
பழுதில் ஞான சம்பந்தன் சொற்பத்தும்பாடியே
தொழுது பொழுது தோத்திரங்கள் சொல்லித்து தித்துநின்
றழுதுநக்கும் அன்புசெய்வார் அல்லல் அறுப்பாரே. 11

திருச்சிற்றம்பலம்

திருநாவுக்கரசு சுவாமிகள்

திருக்குறுந்தொகை. 5-ம் திருமுறை

திருச்சிற்றம்பலம்

திருவின் நாதனுஞ் செம்மலர் மேலுறை
உருவ னுயுல கத்தி னுயிர்க்கெலாம்
கருவ னுகி முளைத்தவன் கானூரில்
பரம னுய பரஞ்சுடர் காண்மினே.

பெண்டிர் மக்கள் பெருந்துணை நன்னிதி
உண்டின் றேயென்று கவன்மின் ஏழைகாள்
கண்டு கொண்மினீர் கானூர் முளையிணைப்
புண்ட ரீகப் பொதும்பி லொதுங்கியே. 2

தாயத் தார்தமர் நல்நிதி யென்னுமிம்
மாயத் தேகிடந் திட்டு மயங்கிடேல்
காயத் தேயுள்ள கானூர் முளையிணை
வாயத் தால்வணங் கீர்வினை மாயவே. 3

குறியில் நின்றுண்டு கூறையி லாச்சமண்
நெறியை விட்டு நிறைகழல் பற்றினேன்
அறிய லுற்றிரேல் கானூர் முளையவன்
செறிவு செய்திட் டிருப்பதென் சிந்தையே. 4

பொத்தல் மண்சுவர்ப் பொல்லாக் குரம்பையை
மெய்த்த னென்று விடந்திடல் ஏழைகாள்
சித்தர் பத்தர்கள் சேர்திருக் கானூரில்
அத்தன் பாதம் அடைதல் கருமமே 5

கல்வி ஞானக் கலைபொரு ளாயவன்
செல்வம் மல்கு திருக்கானூ ரீசனை
எல்லி யும்பக லும்மிசை வானவர்
சொல்லி டீர்நுந் துயரங்கள் தீரவே. 6

நீரும் பாரும் நெருப்பும் அருக்கனும்
காரும் மாருதங் கானூர் முளைத்தவன்
சேர்வு மொன்றறி யாது திசைதிசை
ஓர்வு மொன்றில ரோடித் திரிவரே. 7

ஓமத் தோடயன் மாலறி யாவணம்
வீமப் பேரொளி யாய விழுப்பொருள்
காமற் காய்ந்தவன் கானூர் முளைத்தவன்
சேமத் தாவிருப் பாவதென் சிந்தையே. 8 9

வன்னி கொன்றை எருக்கணிந் தான்மலை
உன்னி யேசென் றெடுத்தவன் ஒண்டிறல்
தன்னை வீழத் தனிவிரல் வைத்தவன்
கன்னி மாமதிற் கானூர் கருத்தனே. 10

திருச்சிற்றம்பலம்

57. திரு அன்பிலாலந்துறை

திருஞானசம்பந்த சுவாமிகள்

பண் – தக்கராகம் 1-ம் திருமுறை

திருச்சிற்றம்பலம்

கணைநீடெரி மாலர வம்வரை வில்லா
இணையாஎயில் மூன்றும் எரித்த இறைவர்
பிணைமாமயி லுங்குயில் சேர்மட அன்னம்
அணையும் பொழில்அன் பிலாலந் துறையாரே. 1

சடையார்சது ரன்முதி ராமதி சூடி
விடையார்கொடி யொன்றுடை யெந்தை விமலன்
கிடையாரொலி ஓத்தர வத்திசை கிள்ளை
அடையார்பொழில் அன்பிலா லந்துறை யாரே. 2

ஊரும்மர வம்சடை மேலுற வைத்துப்
பாரும்பலி கொண்டொலி பாடும் பரமர்
நீருண்கய லும்வயல் வாளை வராலோ
டாரும்புனல் அன்பிலா லந்துறை யாரே. 3

பிறையும்மர வும்முற வைத்த முடிமேல்
நறையுண்டெழு வன்னியு மன்னு சடையார்
மறையும்பல வேதிய ரோத ஒலிசென்
றறையும்புனல் அன்பிலா லந்துறையாரே. 4

நீடும்புனற் கங்கையுந் தங்க முடிமேல்
கூடும்மலை யாளொரு பாகம் அமர்ந்தார்
மாடும்முழ வம்மதி ரம்மட மாதர்
ஆடும்பதி அன்பிலா லந்துறை யாரே. 5

நீறூர் திரு மேனிய ரூனமி லார்பால்
ஊறூர் சுவையாகிய உம்பர் பெருமான்
வேறூரகி லும்மிது சந்தனம் உந்தி
ஆறூர்வயல் அன்பிலா லந்துறை யாரே. 6

செடியார் தலை யிற்பலி கொண்டினி துண்ட
படியார்பர மன்பர மேட்டிதன் சீரைக்
கடியார்மல ரும்புனல் தூவிநின் றேத்தும்
அடியார்தொழும் அன்பிலா லந்துறை யாரே. 7

விடத்தார் திகழும்மிட றன்நட மாடி
படத்தாரர வம்விர வுஞ்சடை ஆதி
கொடித்தேரிலங் கைக்குலக் கோன்வரை யார
அடர்த்தாரருள் அன்பிலா லந்துறை யாரே. 8

வணங்கிம்மலர் மேலய னும்நெடு மாலும்
பிணங்கியறி கின்றிலர் மற்றும் பெருமை
சுணங்கும்முகத் தம்முலை யாளொரு பாகம்
அணங்குந்திக ழன்பிலா லந்துறை யாரே.

தறியார் துகில் போர்த்துழல் வார்சமண் கையர்
நெறியாஉண ராநிலை கேடினர் நித்தல்
வெறியார்மலர் கொண்டடி வீழும் அவரை
அறிவாரவர் அன்பிலா லந்துறை யாரே. 10

அரவார்புனல் அன்பிலா லந்துறை தன்மேல்
கரவாதவர் காழியுள் ஞானசம் பந்தன்
பரவார்தமிழ் பத்திசை பாடவல் லார்போய்
விரவாகுவர் வானிடை வீடெளி தாமே. 11.

திருச்சிற்றம்பலம்

திருநாவுக்கரசு சுவாமிகள்

திருக்குறுந்தொகை 5-ம் திருமுறை

திருச்சிற்றம்பலம்

வானஞ் சேர்மதி சூடிய மைந்தனை
நீநெஞ் சேகெடு வாய்நினை கிற்கிலை
ஆனஞ் சாடியை அன்பிலா லந்துறைக்
கோன்எஞ் செல்வனைக் கூறிட கிற்றியே. 1

கார ணத்தர் கருத்தர் கபாலியார்
வார ணத்துரி போர்த்த மணாளனூர்
ஆர ணப்பொருள் அன்பிலா லந்துறை
நார ணற்கரி யானொரு நம்பியே. 2

அன்பி னானஞ்ச மைந்துட னாடிய
என்பின் ஆனை யுரித்துக் களைந்தவன்
அன்பி லாணையம் மானையள் ளூறிய
அன்பி னால்நினைந் தாரறிந் தார்களே. 3

சங்கை யுள்ள துஞ் சாவது மெய்யுமை
பங்க னாரடி பாவியே னானுய
அங்கண னெந்தை அன்பிலா லந்துறைச்
செங்க ணாரடிச் சேரவும் வல்லனே. 4

கொக்கி றகர் குளிர்மதிச் சென்னியர்
மிக்க ரக்கர் புரமெரி செய்தவர்
அக்க ரையினர் அன்பிலா லந்துறை
நக்கு ருவரும் நம்மை யறிவரே. 5

வெள்ள முள்ள விரிசடை நந்தியைக்
கள்ள முள்ள மனத்தவர் காண்கிலார்
அள்ள லார்வயல் அன்பிலா லந்துறை
உள்ள வாறறி யார்சிலர் ஊமரே. 6

பிறவி மாயப் பிணக்கில் அழுந்தினும்
உறவெ லாஞ்சிந்தித் துன்னி உகவாதே
அறவன் எம்பிரான் அன்பிலா லந்துறை
மறவாதே தொழு தேத்தி வணங்குமே. 7

நுணங்கு நூலயன் மாலும் இருவரும்
பிணங்கி யெங்குந் திரிந்தெய்த் துங் காண்கிலா
அணங்கன் எம்பிரான் அன்பிலா லந்துறை
வணங்கும் நும்வினை மாய்ந்தறும் வண்ணமே. 8

பொய்யெ லாமுரைக் குஞ்சமண் சாக்கியக்
கையன் மாருரை கேளா தெழுமினே
ஐயன் எம்பிரான் அன்பிலா லந்துறை
மெய்யன் சேவடி ஏத்துவார் மெய்யரே. 9

இலங்கை வேந்தன் இருபது தோளிற்று
மலங்க மாமலை மேல்விரல் வைத்தவன்
அலங்கல் எம்பிரான் அன்பிலா லந்துறை
வலங்கொள் வாரைவா னோர்வலங் கொள்வரே. 10

திருச்சிற்றம்பலம்

58. திருமாந்துறை

திருஞானசம்பந்த சுவாமிகள்

பண் -நட்டராகம் 2-ம் திருமுறை

திருச்சிற்றம்பலம்

செம்பொ னார்தரு வேங்கையும் ஞாழலுஞ் செருந்தி சென்
பகம் ஆனைக்
கொம்பும் ஆரமும் மாதவி சுரபுனை குருந்தலர் பரந்துந்தி
அம்பொன் நேர்வரு காவிரி வடகரை மாந்துறை யுறைகின்ற
எம்பி ரானிமை யோர்தொழு பைங்கழல் ஏத்துதல் செய்
வோமே. 1

விளைவு தேனொடு சாதியின் பலங்களும் வேய்மணி நிரந்துந்தி
அளவி நீர்வரு காவிரி வடகரை மாந்துறை யுறைவானத்
துளவ மான்மக னைங்கணைக் காமனைச் சுடவிழித் தவனெற்றி
அளக வாணுதல் அரிவைதன் பங்கனை யன்றிமற் றறி
யோமே. 2

கோடு தேன்சொரி குன்றிடைப் பூகமுங் கூந்தலின் குலைவாரி
ஓடு நீர்வரு காவிரி வடகரை மாந்துறை யுறை நம்பன்
வாடி னார்தலை யிற்பலி கொள்பவன் வானவர் மகிழ்ந்தேத்தும்
கேடிலாமணி யைத்தொழல் அல்லது கெழுமுதல் அறி
யோமே. 3

இலவ ஞாழலும் ஈஞ்சொடு சுரபுன்னை இளமரு திலவங்கம்
கலவி நீர்வரு காவிரி வடகரை மாந்துறை யுறைகண்டன்
அலைகொள் வார்புனல் அம்புலி மத்தமும் ஆடரவுடன் வைத்த
மலையை வானவர் கொழுந்தினை யல்லது வணங்குதல்
அறியோமே. 4

கோங்கு சண்பகங் குருந்தொரு பாதிரி குரவிடை மல ருந்தி
ஓங்கி நீர்வரு காவிரி வடகரை மாந்துறை யுறைவானைப்
பாங்கி னாலிடுந் தூபமுந் தீபமும் பாட்டவி மலர்சேர்த்தித்
தாங்கு வாரவர் நாமங்கள் நாவினில் தலைப்படுந்
தவத்தோரே. 5

பெருகு சந்தனங் காரகில் பீலியும் பெருமரம் நிமிர்ந்துந்திப்
பொருது காவிரி வடகரை மாந்துறைப் புனிதனெம் பெரு
மானைப்
பரிவி னாலிருந்திரவியும் மதியமும் பார்மன்னர் பணிந்தேத்த
மருத வானவர் வழிபடு மலரடி வணங்குதல் செய்வோமே. 5

நறவ மல்லிகை முல்லையும் மௌவலும் நாண்மல ரவை வாரி
இறவில் வந்தெறி காவிரி வடகரை மாந்துறையிறை அன்றங்
கறவ னாகிய கூற்றினைச் சாடிய அந்தணன் வரைவில்லால்
நிறைய வாங்கி வலித்தெயி லெய்தவன் நிரைகழல் பணி
வோமே. 7

மந்த மார்பொழில் மாங்கனி மாந்திட மந்திகள் மாணிக்கம்
உந்தி நீர்வரு காவிரி வடகரை மாந்துறை யுறைவானை
நிந்தியா எடுத் தார்த்தவல் லரக்கனை நெரித்திடு விரலானைச்
சிந்தியாமனத் தாரவர் சேர்வது தீநெறியது தானே. 8

நீல மாமணி நித்திலத் தொத்தொடு நிரைமலர் நிரந்துந்தி
ஆலி யாவரு காவிரி வடகரை மாந்துறை யமர்வானை
மாலு நான்முகன் தேடியுங் காண்கிலா மலரடியிணை நாளும்
கோல மேந்தி நின் றேத்துமின் பாடுமின் கூற்றுவன்
நலியானே. 9

நின்று ணுஞ்சமண் தேரரும் நிலையிலர் நெடுங்கழை நறவேலம்
நன்று மாங்கனி கதலியின் பலங்களும் நாணலின் நுரைவாரி
ஒன்றி நேர்வரு காவிரி வடகரை மாந்துறை யொருகாலம்
அன்றி யுள்ளழுந் தெழும்பரி சழகிது அதுவவர்க் கிடமாமே.

வரைவ ளங்கவர் காவிரி வடகரை மாந்துறை யுறைவானைச்
சிரபு ரம்பதி யுடையவன் கவுணியன் செழுமறை நிறைநாவன்
அரவெ னும்பணி வல்லவன் ஞான சம்பந்தன் அன்புறுமாலை
பரவி டுந்தொழில் வல்லவர் அல்லலும் பாவமும் இலர்
தாமே. 11

திருச்சிற்றம்பலம்

59. திருப்பாற்றுறை

திருஞானசம்பந்த சுவாமிகள்

பண்–பழந்தக்கராகம் 1–ம் திருமுறை

திருச்சிற்றம்பலம்

காரார் கொன்றை கலந்த முடியினர்
சீரார் சிந்தை செலச் செய்தார்
பாரார் நாளும் பரவிய பாற்றுறை
ஆரா ராதி முதல்வரே. 1

நல்லா ரும்மவர் தீய ரெனப்படும்
சொல்லார் நன்மலர் சூடினர்
பல்லார் வெண்டலைச் செல்வரெம் பாற்றுறை
எல்லா ருந்தொழும் ஈசரே. 2

விண்ணார் திங்கள் விளங்கு நுதலினர்
எண்ணார் வந்தென் எழில்கொண்டார்
பண்ணார் வண்டினம் பாடல்செய் பாற்றுறை
உண்ணா ளும் உறைவாரே. 3

பூவுந் திங்கள் புனைந்த முடியினர்
ஏவின் அல்லா ரெயிலெய்தார்
பாவந் தீர்புனல் மல்கிய பாற்றுறை
ஓவென் சிந்தை யொருவரே. 4

மாகந் தோய்மதி சூடி மகிழ்ந்தென
தாகம் பொன்னிற மாக்கினார்
பாகம் பெண்ணும் உடையவர் பாற்றுறை
நாகம் பூண்ட நயவரே. 5

போது பொன் திகழ் கொன்றை புனைமுடி
நாதர் வந்தென் நலங்கொண்டார்
பாதந் தொண்டர் பரவிய பாற்றுறை
வேதமோதும் விகிர்தரே. 6

வாடல் வெண்டலை சூடினர் மால்விடை
கோடல் செய்த குறிப்பினர்
பாடல் வண்டிரை பண்செயும் பாற்றுறை
ஆடல் நாகம் அசைத்தாரே. 7

வெவ்வ மேனிய ராய்வெள்ளை நீற்றினர்
எவ்வஞ் செய்தென் எழில்கொண்டார்
பவ்வம் நஞ்சடை கண்டரெம் பாற்றுறை
மவ்வல் சூடிய மைந்தரே. 8

ஏனம் அன்னமும் ஆனவ ருக்கரி
ஆன வண்ணத்தெம் அண்ணலார்
பான லம்மலர் விம்மிய பாற்றுறை
வான வெண்பிறை மைந்தரே. 9

வெந்த நீற்றினர் வேலினர் நூலினர்
வந்தென் நன்னலம் வௌவினர்
பைந்தண் மாதவி சூழ்தரு பாற்றுறை
மைந்தர் தாமோர் மணாளரே. 10

பத்தர் மன்னிய பாற்றுறை மேவிய
பத்து நூறு பெயரனைப்
பத்தன் ஞானசம் பந்தன தின்தமிழ்
பத்தும் பாடிப் பரவுமே. 11

திருச்சிற்றம்பலம்

60. திருவானைக்கா

திருஞானசம்பந்த சுவாமிகள்

பண் - இந்தளம் 2-ம் திருமுறை

திருச்சிற்றம்பலம்

மழையார் மிடறு மழுவா ளுடையாய்
உழை யார்கரவா உமையாள் கணவா
விழவா நம்வெண் ணாவலின்மே வியஎம்
அழகா எனும் ஆயிழையாள் அவளே. 1

கொலையார் கரியின் னுரிமூ டியனே
மலையார் சிலையா வளைவித் தவனே
விலையா லெனையா ளும்வெண்நா வலுளாய்
நிலையா அருளாய் எனும் நேரிழையே. 2

காலா லுயிர்கா லனைவீ டுசெய்தாய்
பாலோ டுநெய்யா டியபால் வணனே
வேலா டுகையா யெம்வெண்நா வலுளாய்
ஆலார் நிழலாய் எனும் நேரிழையே. 3

சுறவக் கொடிகொண் டவன் நீறதுவாய்
உறநெற்றி விழித் தஎம்உத் தமனே
விறல்மிக் ககரிக் கருள்செய் தவனே
அறமிக் கதுவென் னுமென் ஆ யிழையே. 4

செங்கட் பெயர்கொண் டவன்செம் பியர்கோன்
அங்கட் கருணை பெரிதா யவனே
வெங்கண் விடையா யெம்வெண்நா வலுளாய்
அங்கத் தயர்வா யினள்ஆ யிழையே. 5

குன்றே யமர்வாய் கொலையார் புலியின்
தன்தோ லுடையாய் சடையாய் பிறையாய்
வென்றாய் புரமூன் றைவெண்நா வலுளே
நின்றா யருளாய் எனும்நே ரிழையே. 6-7

மலையன் றெடுத்த அரக்கன் முடிதோள்
தொலையவ் விரலூன் றியதூ மழுவா
விலையா லெனையா ளும்வெண்நா வலுளாய்
அலசா மல்நல்காய் எனும்ஆ யிழையே. 8

திருவார் தருநா ரணன்நான் முகனும்
மருவா வெருவா அழலாய் நிமிர்ந்தாய்
விரையா ரும்வெண்நா வலுள்மே வியஎம்
அரவா எனும்ஆ யிழையா ளவளே. 9

புத்தர் பலரோ டமண்பொய்த் தவர்கள்
ஒத்தவ் வுரைசொல் லிவையோ ரகிலார்
மெய்த்தே வர்வணங் கும்வெண் நா வலுளாய்
அத்தா அருளாய் எனும்ஆ யிழையே. 10

வெண்நா வலமர்ந் துறைவே தியனைக்
கண்ணார் கமழ்கா ழியர்தந் தலைவன்
பண்ணோ டிவைபா டியபத் தும்வல்லார்
விண்ணோ ரவரேத் தவிரும் புவரே. 11

திருச்சிற்றம்பலம்

திருவிராகம் பண் - கௌசிகம் 3-ம் திருமுறை

திருச்சிற்றம்பலம்

வானைக்காவில் வெண்மதி மல்குபுல்கு வார்சடைத்
தேனைக்காவில் இன்மொழித் தேவிபாக மாயினான்
ஆனைக்காவில் அண்ணலை அபயமாக வாழ்பவர்
ஏனைக்காவல் வேண்டுவார்க் கேதும்ஏதம் இல்லையே. 1

சேறுபட்ட தண்வயற் சென்றுசென்று சேணுலா
வாறுபட்ட நுண்டுறை யானைக்காவில் அண்ணலார்
நீறுபட்ட மேனியார் நிகரில்பாதம் ஏத்துவார்
வேறுபட்ட சிந்தையார் விண்ணிலெண்ண வல்லரே. 2

தாரமாய மாதராள் தானொர்பாக மாயினான்
ஈரமாய புன்சடை யேற்றதிங்கள் சூடினான்
ஆரமாய மார்புடை யானைக்காவில் அண்ணலை
வாரமாய் வணங்குவார் வல்வினைகள் மாயுமே. 3

விண்ணினண்ணு புல்கிய வீரமாய மால்விடைச்
சுண்ணவெண்ணீ றாடினான் சூலமேந்து கையினான்
அண்ணல்கண்ணோர் மூன்றினான் ஆனைக்காவு கைதொழ
எண்ணும்வண்ணம் வல்லவர்க் கேதமொன்றும் இல்லையே. 4

வெய்யபாவங் கைவிட வேண்டுவீர்கள் ஆண்டசீர்
மைகொள்கண்டன் வெய்யதீ மாலையாடு காதலான்
கொய்யவிண்ட நாண்மலர்க் கொன்றைதுன்று சென்னியெம்
ஐயன்மேய பொய்கைசூழ் ஆனைக்காவு சேர்மினே. 5

நாணுமோர்வு சார்வுமுன் நகையுமுட்கு நன்மையும்
பேணுறாத செல்வமும் பேசநின்ற பெற்றியான்
ஆணும்பெண்ணு மாகிய ஆனைக்காவில் அண்ணலார்
காணுங்கண்ணு மூன்றுடைக் கறைகொள்மிடறன்
அல்லனே. 6

கூருமாலை நண்பகற் கூடிவல்ல தொண்டர்கள்
பேருமூருஞ் செல்வமும் பேசநின்ற பெற்றியான்
பாருவிண்ணுங் கைதொழப் பாயுங்கங்கை செஞ்சடை
ஆரநீரொ டேந்தினான் ஆனைக்காவு சேர்மினே. 7

பொன்னமல்கு தாமரைப் போதுதாது வண்டினம்
அன்னமல்கு தண்டுறை ஆனைக்காவில் அண்ணலைப்
பன்னவல்ல நான்மறை பாடவல்ல தன்மையோர்
முன்னவல்லர் மொய்கழல் துன்னவல்லர் விண்ணையே. 8

ஊனொடுண்டல் நன்றென வூனொடுண்டல் தீதென
ஆனதொண்டர் அன்பினாற் பேசநின்ற தன்மையான்
வானொடொன்று சூடினான் வாய்மையாக மன்னிநின்
றானொடஞ்சும் ஆடினான் ஆனைக்காவு சேர்மினே. 9

கையிலுண்ணுங் கையருங் கடுக்கடின் கழுக்களும்
மெய்யைப்போர்க்கும் பொய்யரும் வேதநெறியை யறிகிலார்
தையல்பாக மாயினான் தழலதுருவத் தானெங்கள்
ஐயன்மேய பொய்கைசூழ் ஆனைக்காவு சேர்மினே. 10

ஊழியூழி வையகத் துயிர்கள்தோற்றும் வானொடும்
ஆழியானுங் காண்கிலா ஆனைக்காவில் அண்ணலைக்
காழிஞான சம்பந்தன் கருதிச்சொன்ன பத்திவை
வாழியாகக் கற்பவர் வல்வினைகள் மாயுமே. 11

திருச்சிற்றம்பலம்

கூடற் சதுக்கம். திருக்கயிலாயம், திருவானைக்கா, திருமயேந்திரம், திருவாரூர்

பண் – பழம்பஞ்சுரம் 3-திருமுறை

திருச்சிற்றம்பலம்

மண்ணது வுண்டரி மலரோன் காணா
வெண்ணாவல் விரும்புமயேந்திரரும்
கண்ணது வோங்கிய கயிலையாரும்
அண்ணல்ஆ ரூராதி யானைக்காவே. 1

வந்துமா லயனவர் காண்பரியார்
வெந்தவெண் ணீறணி மயேந்திரரும்
கந்தவார் சடையுடைக் கயிலையாரும்
அந்தண்ஆ ரூராதி யானைக்காவே. 2

மாலயன் தேடிய மயேந்திரரும்
காலனை உயிர்கொண்ட கயிலையாரும்
வேலையை தோங்கும்வெண் ணாவலாரும்
ஆலைஆ ராதி யானைக்காவே. 3

கருடனை யேறரி அயனோர் காணார்
வெருள்விடை யேறிய மயேந்திரரும்
கருடரு கண்டத்தெங் கயிலையாரும்
அருளன்ஆ ரூராதி யானைக்காவே. 4

மதுசூதனன் நான்முகன் வணங்கரியார்
மதியது சொல்லிய மயேந்திரரும்
கதிர்முலை புல்கிய கயிலையாரும்
அதியன்ஆ ரூராதி யானைக்காவே. 5

சக்கரம் வேண்டுமால் பிரமன்காணா
மிக்கவர் கயிலை மயேந்திரரும்
தக்கனைத் தலையரி தழலுருவர்
அக்கணி யவராரூர் ஆனைக்காவே. 6

கண்ணனும் நான்முகன் காண்பரியார்
வெண்ணாவல் விரும்பு மயேந்திரரும்
கண்ணப்பர்க் கருள்செய்த கயிலையெங்கள்
அண்ணல்ஆ ரூராதி யானைக்காவே. 7

கடல்வண்ணன் நான்முகன் காண்பரியார்
தடவரை யரக்கனைத் தலைநெரித்தார்
விடமது வுண்டவெம் மயேந்திரரும்
அடல்விடை யாராரூராதி யானைக்காவே. 8

ஆதிமால் அயனவர் காண்பரியார்
வேதங்கள் துதிசெயும் மயேந்திரரும்
காதிலோர் குழையுடைக் கயிலையாரும்
ஆதிஆரூரெந்தை யானைக்காவே. 9

அறிவில் அமண்புத்தர் அறிவுகொள்ளேல்
வெறியமான் கரத்தாரூர் மயேந்திரரும்
மறிகடலோன்அயன் தேடத்தானும்
அறிவரு கயிலையோன் ஆனைக்காவே. 10

ஏனமா லயனவர் காண்பரியார்
கானமார் கயிலைநன் மயேந்திரரும்
ஆனஆரூராதி யானைக்காவை
ஞானசம் பந்தன் தமிழ்சொல்லுமே. 11

திருச்சிற்றம்பலம்

திருநாவுக்கரசு சுவாமிகள்

திருக்குறுந்தொகை 5-ம் திருமுறை

திருச்சிற்றம்பலம்

கோனைக் காவிக் குளிர்ந்த மனத்தராய்த்
தேனைக் காவியுண் ணார்சில தெண்ணர்கள்
ஆனைக் காவிலெம் மானை அணைகிலர்
ஆனைக் காவி யுழிதர்வர் ஊமரே. 1

திருகு சிந்தையைத் தீர்த்துச்செம் மைசெய்து
பருகி யூறலைப் பற்றிப் பதமறிந்
துருகி நைபவர்க் கூனமொன் றின்றியே
அருகு நின்றிடும் ஆனைக்கா அண்ணலே. 2

துன்பமின்றித் துயரின்றி யென்றும்நீர்
இன்பம் வேண்டில் இராப்பகல் ஏத்துமின்
என்பொன் ஈசன் இறைவனென் றுள்குவார்க்(கு)
அன்பனாயிடும் ஆனைக்கா அண்ணலே. 3

நாவால் நன்று நறுமலர்ச் சேவடி
ஓவா தேத்தி யுளத்தடைத் தார்வினை
காவா யென்றுதங் கைதொழு வார்க்கெலாம்
ஆவா என்றிடும் ஆனைக்கா அண்ணலே. 4

வஞ்ச மின்றி வணங்குமின் வைகலும்
வெஞ்சொ லின்றி விலகுமின் விடற
நைஞ்சு நைஞ்சுநின் றுள்குளிர் வார்க்கெலாம்
அஞ்ச லென்றிடும் ஆனைக்கா அண்ணலே. 5

நடையை மெய்யென்று நாத்திகம் பேசாதே
படைகள் போல்வரும் பஞ்சமா பூதங்கள்
தடையொன் றின்றியே தன்னடைந் தார்க்கெலாம்
அடைய நின்றிடும் ஆனைக்கா அண்ணலே. 6

ஒழுகு மாடத்துள் ஒன்பது வாய்தலுங்
கழுக ரிப்பதன் முன்னங் கழலடி
தொழுது கைகளால் தூமலர் தூவிநின்(று)
அழும வர்க்கன்பன் ஆனைக்கா அண்ணலே. 7

உருளும் போதறி வொண்ணா உலகத்தீர்
தெருளுஞ் சிக்கெனத் தீவினை சேராதே
இருள றுத்துநின் றீசனென் பார்க்கெலாம்
அருள்கொ டுத்திடும் ஆனைக்கா அண்ணலே. 8

நேசமாகி நினைமட நெஞ்சமே
நாச மாய குலநலஞ் சுற்றங்கள
பாச மற்றுப் பராபர ஆனந்த
ஆசை யுற்றிடும் ஆனைக்கா அண்ணலே. 9

ஓத மாகடல் சூழ்இலங் கைக்கிறை
கீதங் கின்னரம் பாடக் கெழுவினான்
பாதம் வாங்கிப் பரிந்தருள் செய்தங்கோர்
ஆதி யாயிடும் ஆனைக்கா அண்ணலே. 10

திருச்சிற்றம்பலம்

திருத்தாண்டகம் 6-ம்திருமுறை

திருச்சிற்றம்பலம்

எத்தாயார் எத்தந்தை எச்சுற் றத்தார்
எம்மாடு சும்மாடாம் ஏவர் நல்லார்
செத்தால்வந் துதவுவார் ஒருவ ரில்லை
சிறுவிறகால் தீமூட்டிச் செல்லா நிற்பர்
சித்தாய வேடத்தாய் நீடு பொன்னித்
திருவானைக் காவுடைய செல்வா என்றன்
அத்தாவுன் பொற்பாதம் அடையப் பெற்றால்
அல்லகண் டங்கொண் டடியேன் என்செய் கேனே. 1

ஊனாகி உயிராகி யதனுள் நின்ற
உணர்வாகிப் பிறவனைத்தும் நீயாய் நின்றாய்
நானேதும் அறியாமே யென்னுள் வந்து
நல்லனவுந் தீயனவுங் காட்டா நின்றாய்
தேனாருங் கொன்றையனே நின்றி யூராய்
திருவானைக் காவிலுறை சிவனே ஞானம்
ஆனாயுன் பொற்பாதம் அடையப் பெற்றால்
அல்ல கண்டங் கொண்டடியேன் என்செய் கேனே. 2

ஒப்பாயிவ் வுலகத்தோ டொட்டி வாழ்வான்
ஒன்றலாத் தவத்தாரோ டுடனே நின்று
துப்பாருங் குறையடிசில் துற்றி நற்றுன்
திறம்மறந்து திரிவேனைக் காத்து நீவந்(து)
எப்பாலும் நுண்ணுணர்வே யாக்கி யென்னை
ஆண்டவனே யெழிலானைக் காவா வானோர்
அப்பாவுன் பொற்பாதம் அடையப் பெற்றால்
அல்ல கண்டங் கொண்டடியேன் என்செய் கேனே. 3

நினைத்தவர்கள் நெஞ்சுளாய் வஞ்சக் கள்வா
நிறைமதியஞ் சடைவைத்தாய் அடையா துன்பால்
முனைத்தவர்கள் புரமூன்று மெரியச் செற்றாய்
முன்னானைத் தோல்போர்த்த முதல்வா வென்றுங்
கனைத்துவரும் எருதேறுங் காளா கண்டா
கயிலாய மலையாநின் கழலே சேர்ந்தேன்
அனைத்துலகும் ஆள்வானே ஆனைக் காவா
அல்லகண்டங் கொண்டடியேன் என்செய் கேனே. 4

இம்மாயப் பிறப்பென்னுங் கடலாந் துன்பத்
திடைச்சுழிப்பட் டிளைப்பேனை இளையா வண்ணங்
கைம்மான மனத்துதவிக் கருணை செய்து
காதலருளவை வைத்தாய் காண நில்லாய்
வெம்மான மதகரியி னுரிவை போர்த்த
வேதியனே தென்னானைக் காவுள் மேய
அம்மான்நின் பொற்பாதம் அடையப் பெற்றால்
அல்லகண்டங் கொண்டடியேன் என்செய் கேனே. 5

உரையாரும் புகழானே யொற்றியூராய்
கச்சியே கம்பனே காரோ ணத்தாய்
விரையாரும் மலர்தூவி வணங்கு வார்பால்
மிக்கானே அக்கரவம் ஆரம் பூண்டாய்
திரையாரும் புனற்பொன்னித் தீர்த்தம் மல்கு
திருவானைக் காவிலுறை தேனே வானோர்
அரையாவுன் பொற்பாதம் அடையப் பெற்றால்
அல்லகண்டங் கொண்டடியேன் என்செய் கேனே. 6

மையாரும் மணிமிடற்றாய்! மாதோர் கூறாய்
மான்மறியும் மாமழுவும் அனலு மேந்துங்
கையானே காலனுடல் மாளச் செற்ற
கங்காளா முன்கோளும் விளைவு மானாய்
செய்யானே திருமேனி யரியாய் தேவர்
குலக்கொழுந்தே தென்னானைக் காவுள் மேய
ஐயாவுன் பொற்பாதம் அடையப் பெற்றால்
அல்லகண்டங் கொண்டடியேன் என்செய் கேனே. 7

இலையாருஞ் சூலத்தாய் எண்தோ ளானே
எவ்விடத்தும் நீயல்லா தில்லை யென்று
தலையாரக் கும்பிடுவார் தன்மை யானே
தழல்மடுத்த மாமேருக் கையில் வைத்த
சிலையானே திருவானைக் காவுள் மேய
தீயாடி சிறுநோயால் நலிவுண் டுள்ளம்
அலையாதே நின்னடியே அடையப் பெற்றால்
அல்லகண்டங் கொண்டடியேன் என்செய் கேனே. 8

விண்ணுரும் புனல்பொதிசெஞ் சடையாய் வேத
நெறியானே எறிகடலின் நஞ்ச முண்டாய்
எண்ணுரும் புகழானே உன்னை யெம்மான்
என்றென்றே நாவினில்எப் பொழுதும் உன்னிக்
கண்ணுரக் கண்டிருக்கக் களித்தெப் போதுங்
கடிபொழில்சூழ் தென்ஞனைக் காவுள் மேய
அண்ணுநின் பொற்பாதம் அடையப் பெற்ருல்
அல்லகண்டங் கொண்டடியேன் என்செய் கேனே. 9

கொடியேயும் வெள்ளேற்ருய் கூளி பாடக்
குறட்பூதங் கூத்தாட நீயும் ஆடி
வடிவேயும் மங்கைதனை வைத்த மைந்தா
மதிலானைக் காவுளாய் மாகா ளத்தாய்
படியேயுங் கடலிலங்கைக் கோமான் தன்னைப்
பருமுடியுந் திரள்தோளும் அடர்த்து கந்த
அடியேவந் தடைந்தடிமை யாகப் பெற்ருல்
அல்லகண்டங் கொண்டடியேன் என்செய் கேனே. 10

திருச்சிற்றம்பலம்

திருத்தாண்டகம் 6-ம் திருமுறை

திருச்சிற்றம்பலம்

முன்ஞனைத் தோல்போர்த்த மூர்த்தி தன்னை
மூவாத சிந்தையே மனமே வாக்கே
தன்ஞனை யாப்பண்ணி யேறி ஞனைச்
சார்தற்கரியானைத் தாதை தன்னை
என்ஞனைக் கன்றினை யென்ஈசன் தன்னை
யெறிநீர்த் திரையுகளுங் காவிரி சூழ்
தென்ஞனைக் காவானைத் தேனைப் பாலைச்
செழுநீர்த் திரளைச்சென் ருடி னேனே. 1

மருந்தானை மந்திரிப்பார் மனத்து ளானை
வளர்மதியஞ் சடையானை மகிழ்ந்தென் உள்ளத்
திருந்தானை இறப்பிலியைப் பிறப்பி லானை
இமையவர்தம் பெருமானை உமையா ளஞ்சக்

கருந்தான மதகளிற்றி னுரிபோர்த் தானைக்
 கனமழுவாட் படையானைப் பலிகொண் டூரூர்
திரிந்தானைத் திருவானைக் காவு ளானைச்
 செழுநீர்த் திரளைச்சென் றாடி னேனே. 2

முற்றாத வெண்டிங்கட் கண்ணி யானை
 முந்நீர்நஞ் சுண்டிமையோர்க் கமுதம் நல்கும்
உற்றானைப் பல்லுயிர்க்குந் துணையா னானை
 ஓங்காரத் துட்பொருளை உலக மெல்லாம்
பெற்றானைப் பின்னிரக்கஞ் செய்வான் தன்னைப்
 பிரானென்று போற்றாதார் புரங்கள் மூன்றுஞ்
செற்றானைத் திருவானைக் காவு ளானைச்
 செழுநீர்த் திரளைச்சென் றாடி னேனே. 3

காராரும் மணிமிடற்றெம் பெருமான் தன்னைக்
 காதில்வெண் குழையானைக் கமழ்பூங் கொன்றைத்
தாரானைப் புலியதளி னுடை யானைத்
 தானன்றி வேறொன்று மில்லா ஞானப்
பேரானை மணியார மார்பி னானைப்
 பிஞ்ஞகனைத் தெய்வநான் மறைகள் பூண்ட
தேரானைத் திருவானைக் காவு ளானைச்
 செழுநீர்த் திரளைச்சென் றாடி னேனே. 4

பொய்யேது மில்லாத மெய்யன் தன்னைப்
 புண்ணியனை நண்ணாதார் புரம்நீ றாக
எய்தானைச் செய்தவத்தின் மிக்கான் தன்னை
 ஏறமரும் பெருமானை இடமான் ஏந்தும்
கையானைக் கங்காள வேடத் தானைக்
 கட்டங்கக் கொடியானைக் கனல்போல் மேனிச்
செய்யானைத் திருவானைக் காவு ளானைச்
 செழுநீர்த் திரளைச்சென் றாடி னேனே. 5

கலையானைப் பரசுதர பாணி யானைக்
 கனவயிரத் திரளானை மணிமா ணிக்க
மலையானை யென்தலையி னுச்சி யானை
 வார்தருபுன் சடையானை மயானம் மன்னும்

நிலையானை வரியரவு நாணுக் கோத்து
நினையாதார் புரமெரிய வளைத்த மேருச்
சிலையானைத் திருவானைக் காவு ளானைச்
செழுநீர்த் திரளைச்சென் றாடி னேனே. 6

ஆதியனை யெறிமணியி னோசை யானை
அண்டத்தார்க் கறிவொண்ணா தப்பால் மிக்க
சோதியனைத் தூமறையின் பொருளான் தன்னைச்
சுரும்பமரும் மலர்க்கொன்றைத் தொன்னூல் பூண்ட
வேதியனை அறமுரைத்த பட்டன் தன்னை
விளங்குமல ரயன்சிரங்கள் ஐந்தி லொன்றைச்
சேதியனைத் திருவானைக் காவு ளானைச்
செழுநீர்த் திரளைச்சென் றாடி னேனே. 7

மகிழ்ந்தானைக் கச்சியே கம்பன் தன்னை
மறவாது கழல்நினைந்து வாழ்த்தி ஏத்திப்
புகழ்ந்தாரைப் பொன்னுலகம் ஆள்விப் பானைப்
பூதகணப் படையானைப் புறங்காட் டாடல்
உகந்தானைப் பிச்சையே யிச்சிப் பானை
ஒண்பவளத் திரளை யென்னுள்ளத் துள்ளே
திகழ்ந்தானைத் திருவானைக் காவு ளானைச்
செழுநீர்த் திரளைச்சென் றாடி னேனே. 8

நசையானை நால்வேதத் தப்பா லானை
நல்குரவுந் தீப்பிணிநோய் காப்பான் தன்னை
இசையானை யெண்ணிறந்த குணத்தான் தன்னை
இடைமருதும் ஈங்கோயும் நீங்கா தேற்றின்
மிசையானை விரிகடலும் மண்ணும் விண்ணும்
மிகுதீயும் புனலெறி காற்றாகி யெட்டுத்
திசையானைத் திருவானைக் காவு ளானைச்
செழுநீர்த் திரளைச்சென் றாடி னேனே.' 9

பார்த்தானைக் காமனுடல் பொடியாய் வீழப்
பண்டயன்மால் இருவர்க்கும் அறியா வண்ணஞ்
சீர்த்தானைச் செந்தழல்போ லுருவி னானைத்
தேவர்கள்தம் பெம்மானைத் திறமுன் னாதே

ஆர்த்தோடி மலையெடுத்த இலங்கை வேந்தன்
ஆண்மை யெலாங் கெடுத்தவன் தன் இடரப்போதே
தீர்த்தானைத் திருவானைக் காவு ளானைச்
செழுநீர்த் திரளைச்சென் றாடி னேனே. 10

திருச்சிற்றம்பலம்

சுந்தரமூர்த்தி சுவாமிகள்

பண் - காந்தாரம் 7-ம் திருமுறை

திருச்சிற்றம்பலம்

மறைகள் ஆயின நான்கும் மற்றுள பொருள்களும் எல்லாம்
துறையுந் தோத்திரத் திறையுந் தொன்மையும் நன்மையும் ஆய
அறையும் பூம்புனல் ஆனைக் காவுடை ஆதியை நாளும்
இறைவன் என்றடி சேர்வார் எம்மையும் ஆளுடை யாரே. 1

வங்கம் மேவிய வேலை நஞ்செழ வஞ்சர்கள் கூடித்
தங்கள் மேல்அட ராமை உண்ணென உண்டிருள் கண்டன்
அங்கம் ஓதிய ஆனைக் காவுடை ஆதியை நாளும்
எங்கள் ஈசனென் பார்கள் எம்மையும் ஆளுடை யாரே. 2

நீல வண்டறை கொன்றை நேரிசை மங்கை ஓர்திங்கள்
சால வாள்அர வங்கள் தங்கிய செஞ்சடை எந்தை
ஆல நீழலுள் ஆனைக் காவுடை ஆதியை நாளும்
ஏலு மாறுவல் லார்கள் எம்மையும் ஆளுடை யாரே. 3

தந்தை தாய்உலகுக்கோர் தத்துவன் மெய்த்தவத் தோர்க்குப்
பந்த மாயின பெருமான் பரிசுடை யவர்திருவடிகள்
அந்தண் பூம்புனல்ஆனைக் காவுடை ஆதியை நாளும்
எந்தை என்றடி சேர்வார் எம்மையும் ஆளுடை யாரே. 4

கணைசெந் தீயர வந்நாண் கல்வளை யுஞ்சிலை யாகத்
துணைசெய் மும்மதில் மூன்றுஞ் சுட்டவ னேஉலகுய்ய
அணையும் பூம்பொழில் ஆனைக் காவுடை ஆதியை நாளும்
இணைகொள் சேவடி சேர்வார் எம்மையும் ஆளுடை யாரே. 5

விண்ணின் மாமதி சூடி விலையிலி கலன்அணி விமலன்
பண்ணின் நேர்மொழி மங்கை பங்கினன் பசுவுகந் தேறி
அண்ண லாகிய ஆனைக் காவுடை ஆதியை நாளும்
எண்ணு மாறுவல் லார்கள் எம்மையும் ஆளுடை யாரே. 6

தார மாகிய பொன்னித் தண்டுறை ஆடி விழுத்தும்
நீரில் நின்றடி போற்றி நின்மலா கொள்என ஆங்கே
ஆரங் கொண்டஎம் ஆனைக் காவுடை ஆதியை நாளும்
ஈரம் உள்ளவர் நாளும் எம்மையும் ஆளுடை யாரே. 7

உரவம் உள்ளதொர் உழையின் உரிபுலி அதளுடை யானை
விரைகொள் கொன்றை யினானை விரிசடைமேற் பிறையானை
அரவம் வீக்கிய ஆனைக் காவுடை ஆதியை நாளும்
இரவொ டெல்லியும் ஏத்துவார் எம்மையும்
ஆள்உடையாரே. 8

வலங்கொள் வாரவர் தங்கள் வல்வினை தீர்க்கும் மருந்து
கலங்கக் காலனைக் காலாற் காமனைக் கண்சிவப் பானை
அலங்கல் நீர்பொரும் ஆனைக் காவுடை ஆதியை நாளும்
இலங்கு சேவடி சேர்வார் எம்மையும் ஆளுடை யாரே. 9

ஆழி யாற்கருள் ஆனைக் காவுடை ஆதிபொன் னடியின்
நீழ லேசர ணாக நின்றருள் கூர நினைந்து
வாழ வல்லவன் றொண்டன் வண்டமிழ் மாலைவல் லார்போய்
ஏழு மாபிறப் பற்று எம்மையும் ஆளுடை யாரே. 10

திருச்சிற்றம்பலம்

61. திருப்பைஞ்ஞீலி

திருஞானசம்பந்த சுவாமிகள்

பண்–காந்தாரபஞ்சமம் 3-ம் திருமுறை

திருச்சிற்றம்பலம்

ஆரிடம் பாடிலர் அடிகள் காடலால்
ஓரிடங் குறைவிலர் உடையர் கோவணம்
நீரிடஞ் சடைவிடை யூர்தி நித்தலும்
பாரிடம் பணிசெயும் பயில்பைஞ் ஞீலியே. 1

மருவிலார் திரிபுரம் எரிய மால்வரை
பருவிலாக் குனித்தபைஞ் ஞீலி மேவலான்
உருவிலான் பெருமையை யுளங்கொ ளாதவத்
திருவிலார் அவர்களைத் தெருட்ட லாகுமே. 2

அஞ்சுரும் பணிமலர் அமுதம் மாந்தித்தேன்
பஞ்சுரம் பயிற்றுபைஞ் ஞீலி மேவலான்
வெஞ்சுரந் தனிலுமை வெருவ வந்ததோர்
குஞ்சரம் படவுரி போர்த்த கொள்கையே. 3

கோடல்கள் புறவணி கொல்லை முல்லைமேல்
பாடல்வண் டிசைமுரல் பயில்பைஞ் ஞீலியார்
பேடலர் ஆணலர் பெண்ணும் அல்லதோர்
ஆடலை யுகந்தவெம் அடிகள் அல்லரே. 4

விழியிலா நகுதலை விளங்கி ளம்பிறை
சுழியிலார் வருபுனற் சூழல் தாங்கினன்
பழியிலார் பரவுபைஞ் ஞீலி பாடலான்
கிழியிலார் கேண்மையைக் கெடுக்க லாகுமே. 5

விடையுடைக் கொடிவல னேந்தி வெண்மழுப்
படையுடைக் கடவுள்பைஞ் ஞீலி மேவலான்
துடியிடைக் கலையல்கு லாளோர் பாகமாச்
சடையிடைப் புனல்வைத்த சதுரன் அல்லனே. 6

தூயவன் தூயவெண் ணீறு மெனிமேல்
பாயவன் பாயபைஞ் ஞீலி கோயிலா
மேயவன் வேய்புரை தோளி பாகமா
ஏயவன் எனைச்செயுந் தன்மை யென்கொலோ. 7

தொத்தின தோள்முடி யுடைய வன்றலை
பத்தினை நெரித்தபைஞ் ஞீலி மேவலான்
முத்தினை முறுவல்செய் தாளோர் பாகமாப்
பொத்தினன் திருந்தடி பொருந்தி வாழ்மினே. 8

நீருடைப் போதுறை வானும் மாலுமாய்ச்
சீருடைக் கழலடி சென்னி காண்கிலர்
பாருடைக் கடவுள்பைஞ் ஞீலி மேவிய
தாருடைக் கொன்றையந் தலைவர் தன்மையே. 9

பீலியார் பெருமையும் பிடகர் நூன்மையும்
சாலியா தவர்களைச் சாதி யாததோர்
கோலியா வருவரை கூட்டி யெய்தபைஞ்
ஞீலியான் கழலடி நினைந்து வாழ்மினே. 10

கண்புனல் விளைவயற் காழிக் கற்பகம்
நண்புணர் அருமறை ஞானசம் பந்தன்
பண்பினர் பரவுபைஞ் ஞீலி பாடுவார்
உண்பின வுலகினி லோங்கி வாழ்வரே. 11

திருச்சிற்றம்பலம்

திருநாவுக்கரசு சுவாமிகள்

திருக்குறுந்தொகை 5-ம் திருமுறை

திருச்சிற்றம்பலம்

உடையவர் கோவண மொன்றுங் குறைவிலர்
படைகொள் பாரிடஞ் சூழ்ந்தபைஞ் ஞீலியார்
சடையிற் கங்கை தரித்த சதுரரை
அடைய வல்லவர்க் கில்லை அவலமே. 1

மத்த மாமலர் சூடிய மைந்தனூர்
சித்த ராய்த்திரி வார்வினை தீர்ப்பரால்
பத்தர் தாந்தொழு தேத்துபைஞ் ஞீலிஎம்
அத்த னைத்தொழ வல்லவர் நல்லரே. 2

விழுது சூலத்தன் வெண்மழு வாட்படைக்
கழுது துஞ்சிருட் காட்டகத் தாடலான்
பழுதொன் றின்றிப்பைஞ் ஞீலிப் பரமனைத்
தொழுது செல்பவர் தம்வினை தூளியே. 3

ஒன்றி மாலும் பிரமனுந் தம்மிலே
நின்ற சூழ லறிவரி யானிடம்
சென்று பாரிடம் ஏத்துபைஞ் ஞீலியுள்
என்றும் மேவி யிருந்த அடிகளே. 4

வேழத் தின்னுரி போர்த்த விகிர்தனூர்
தாழச் செஞ்சடை மேற்பிறை வைத்தவர்
தாழைத் தண்பொழில் சூழ்ந்தபைஞ் ஞீலியார்
யாழின் பாட்டை யுகந்த அடிகளே. 5

குண்டு பட்டுக் குறியறி யாச்சமண்
மிண்ட ரோடு படுத்துய்யப் போந்துநான்
கண்டங் கார்வயல் சூழ்ந்தபைஞ் ஞீலிஎம்
அண்ட வாணன் அடியடைந் துய்ந்தனே. 6

வரிப்பை யாடர வாட்டி மதகரி
உரிப்பை மூடிய வுத்தம ருருஞ்றை
திருப்பைஞ் ஞீலி திசைதொழு வார்கள்போய்
இருப்பர் வானவ ரோடினி தாகவே. 7

கோடல் கோங்கம் புறவணி முல்லைமேல்
பாடல் வண்டிசை கேட்கும்பைஞ் ஞீலியார்
பேடு மாணும் பிறரறி யாததோர்
ஆடு நாகம் அசைத்த அடிகளே. 8

காரு லாமலர்க் கொன்றையந் தாரினான்
வாரு வாமுலை மங்கையொர் பங்கினன்
தேரு லாம்பொழில் சூழ்ந்தபைஞ் ஞீலிஎம்
ஆர்கி லாஅமு தையடைந் துய்ம்மினே. 9

தருக்கிச் சென்று தடவரை பற்றலும்
நெருக்கி யூன்ற நினைந்து சிவனையே
அரக்கன் பாட அருளும்எம் மானிடம்
இருக்கை ஞீலியென் பார்க்கிட ரில்லையே. 10

திருச்சிற்றம்பலம்

சுந்தரமூர்த்தி சுவாமிகள்

திருச்சிற்றம்பலம்

காருலா விய நஞ்சை உண்டிருள் கண்டவெண்டலை யோடு
கொண்
டுரெலாந்திரிந் தென்செய்வீர் பலி ஓரிடத்திலே கொள்ளும் நீர்
பாரெலாம் பணிந் தும்மையே பரவிப் பணியும் பைஞ்ஞீலியீர்
ஆரமாவது நாகமோ சொலும் ஆரணீய விடங்கரே. 1

சிலைத்து நோக்கும் வெள் ளேறு செந்தழல் வாய பாம் பது
மூசெனும்
பலிக்கு நீர் வரும் போது நுங்கையிற் பாம்பு வேண்டா
பிரானிரே

மலைத்த சந்தொடு வேங்கை கோங்கமும் மன்னுகாரகில் சண்பகம்
அலைக்கும் பைம்புனல் சூழ்பைஞ் ஞீலியில் ஆரணிய விடங்கரே. 2

தூயவர் கண்ணும் வாயு பேணியுந் துன்ன ஆடை சுடலையில்
பேயொடாடத் தவிரும் நீரொரு பித்தரோஎம் பிரானிரே
பாயும் நீர்க் கிடங் கார் கமலமும் பைந்தண் மாதவி புன்னையும்
ஆய பைப்பொழில் குழ்பைஞ் ஞீலியில் ஆரணிய விடங்கரே. 3

செந்தமிழ்த்திறம் வல்லிரோ செங்கண் அரவ:முன்கை யில் ஆடவே
வந்துநிற்குமி தென்கொலோ பலி மாற்றமாட்டோம் இடகிலோம்
பைந்தண்மாமலர் உந்துசோலைகள் கந்தம் நாறுபைஞ் ஞீலியீர்
அந்தி வானமும் மேனியோ சொலும் ஆரணிய விடங்கரே. 4

நீறு நுந்திரு மேனிநித்திலம் நீனெடுங்கண்ணி ணளொடும்
கூறராய் வந்து நிற்றி ராற் கொணர்ந் திடகிலோம்பலி நடமினே
பாறு வெண்டலை கையில் ஏந்திப் பைஞ் ஞீலியே னென்றீர் அடிகள் நீர்
ஆறுதாங்கிய சடையரோ சொலும் ஆரணிய விடங்கரே. 5

குரவம் நாறிய குழலினர்வளை கொள்வதே தொழில் ஆகிநீர்
இரவும் இம்மனை அறிதிரே இங்கே நடந்து போகவும் வல்லிரே
பரவி நாடொறும் பாடுவார்வினை பற்றறுக்கும் பைஞ் ஞீலியீர்
அரவம் ஆட்டவும் வல்லிரோ சொலும் ஆரணிய விடங்கரே. 6

ஏடுலா மலர்க் கொன்றை சூடுவர் என்பெலாம் அணிந்தென் செய்வீர்
காடுநும்பதி ஓடுகையது காதல் செய்பவர் பெறுவதென்
பாடல் வண்டிசை ஆலுங் சோலைப் பைஞ்ஞீலியேன் என்று நிற்றிரால்
ஆடல் பாடலும் வல்லிரோ சொலும் ஆரணிய விடங்கரே. 7

மத்தமாமலர் கொன்றை வன்னியுங் கங்கையாளொடு
திங்களும்
மொய்த்த வெண்டலை கொக்கிறகொடு வெள்ளெருக்கமுஞ்
சடையதாம்
பத்தர்சித்தர்கள் பாடி ஆடும் பைஞ்ஞீலியேன் என்று
நிற்றிரால்
அத்தியிர் உரி போர்த்திரோ சொலும் ஆரணீய விடங்கரே. 8

தக்கை தண்ணுமை தாளம்வீணை தகுணிச் சங்கிணை சல்லரி
கொக்கரைகுட முழவினோடிசை கூடிப்பாடி நின்றுடுவீர்
பக்கமே குயில் பாடுஞ் சோலைப் பைஞ் ஞீலியேன் என்று
நிற்றிரால்
அக்கும் ஆமையும் பூண்டிரோ சொலும் ஆரணீய
விடங்கரே. 9

கையொர் பரம்பரை ஆர்த்தொர்பாம்பு கழுத்தொர் பாம்பவை
பின்புதாழ்
மெய்யெலாம் பொடிக் கொண்டு பூசு திர் வேதம் ஓதுதிர்
கீதமும்
பையவே விடங் காக நின்று பைஞ் ஞீலியேன் என்றீர்
அடிகள் நீர்
ஐயம் ஏற்குமி தென்கொலோ சொலும் ஆரணீய
விடங்கரே. 10

அன்னஞ்சேர்வயல் சூழ்பைஞ் ஞீலியில் ஆரணீய விடங்
கரை
மின்னும் நுண்ணிடை மங்கை மார்பலர் வேண்டிக் காதல்
மொழிந்த சொல்
மன்னு தொல்புகழ் நாவலூரன் வன்றொண்டன் வாய்மொழி
பாடல்பத்
துன்னி இன்னிசை பாடுவார் உமை கேள்வன் சேவடி
சேர்வரே.

திருச்சிற்றம்பலம்

62. திருப்பாச்சிலாச் சிராமம்

திருஞானசம்பந்த சுவாமிகள்

பண்-தக்கராகம் 1-ம் திருமுறை

திருச்சிற்றம்பலம்

துணிவளர்திங்கள் துளங்கி விளங்கச் சுடர்ச்சடை சுற்றி
முடித்துப்
பணிவளர் கொள்கையர் பாரிடஞ்சூழ வாரிட மும்பலி தேர்வர்
அணிவளர் கோல மெலாஞ் செய்து பாச்சி லாச்சிரா
மத்துறைகின்ற
மணிவளர் கண்டரோ மங்கையைவாட மயல் செய்வ தோ
இவர் மாண்பே. 1

கலைபுனை மானுரி தோலுடையாடை கனல் சுட ராலிவர் கண்கள்
தலையணி சென்னியர் தாரணிமார்பர் தம்மடிகள்
ளிவரென்ன
அலைபுனல் பூம்பொழில் சூழ்ந்தமர்பாச்சி லாச்சிரா மத்துறை
கின்ற
இலை புனைவேலரோ ஏழையை வாட இடர் செய்வ
தோ இவரீடே. 2

வெஞ்சுடராடுவர் துஞ்சிருள்மாலை வேண்டுவர் பூண்பது
வெண்ணூல்
நஞ்சடை கண்டர் நெஞ்சிடமாக நண்ணுவர் நம்மை நயந்து
மஞ்சடை மாளிகை சூழ்தரு பாச்சிலாச்சிரா மத்துறை கின்ற
செஞ்சுடர் வண்ணரோ பைங்தொடிவாடச் சிதைசெய்வ
தோஇவர்சீரே. 3

கனமலர்க் கொன்றை அலங்கல் இலங்கக் கனல்தரு தூமதிக்
கண்ணி
புனமலர்மாலை யணிந்தழகாய புனிதர்கொ லாமிவ ரென்ன
வனமலி வண்பொழில் சூழ்தருபாச்சி லாச்சிரா மத்துறைகின்ற
மனமலிமைந்தரோ மங்கையை வாட மயல் செய்வ
தோஇவர்மாண்பே. 4

மாந்தர் தம்பால்நறு நெய்மகிழ்ந்தாடி வளர்சடைமேற் புனல்
வைத்து
மோந்தை முழாக்குழல் தாளமொர்வீணை முதிரவோர் வாய்
மூரி பாடி
ஆந்தை விழிச் சிறு பூதத்தர் பாச்சி லாச்சிரா மத்துறை கின்ற
சாந்தணி மார்பரோ தையலைவாடச் சதுர்செய்வ தோ இவர்
சார்வே. 5

நீறுமெய்பூசி நிறைசடை தாழ நெற்றிக்கண் ணாலுற்று நோக்கி
ஆறதுசூடி ஆடரவாட்டி யைவிரற் கோவண ஆடை
பாறருமேனியர் பூதத்தர்பாச்சி லாச்சிரா மத்துறை கின்ற
ஏறது ஏறியர் ஏழையை வாட இடர் செய்வ தோ இவரீடே. 6

பொங்கிளநாகமொ ரேகவடத்தோ டாமைவெண் ணூல் புனை
கொன்றை
கொங்கிளமாலை புனைந் தழகாய குழகர் கொலாமிவரென்ன
அங்கிளமங்கையோர் பங்கினர் பாச்சிலாச்சிரா மத்துறைகின்ற
சங்கொளி வண்ணரோ தாழ்குழல் வாடச் சதிர் செய்வ தோ
இவர் சார்வே. 7

ஏவலத்தால் விச யற்கருள் செய்து இராவணனை யீட ழித்து
மூவரிலும்முத லாய்நடுவாய மூர்த்தியை யன்றி மொழியாள்
யாவர்களும் பரவும் மெழிற்பாச்சி லாச்சிரா மத்துறைகின்ற
தேவர்கள் தேவரோ சேயிழை வாடச் சிதைசெய்வ தோஇவர்
சேர்வே. 8

மேலது நான்முகன் எய்தியதில்லை கீழது சேவடி தன்னை
நீலது வண்ணனும் எய்தியதில்லை யென இவர் நின்றது
மல்லால்
ஆலது மாமதிதோய் பொழிற்பாச்சிலாச்சிரா மத்துறை கின்ற
பாலதுவண்ணரோ பைந்தொடிவாடப் பழிசெய்வ தோ இவர்
பண்பே. 9

நாணொடு கூடிய சாயி னரேனும் நகுவ ரவரிருபோதும்
ஊணொடு கூடிய வுட்கு நகையால் உரைக ளவைகொள
வேண்டா
ஆணொடுபெண்வடி வாயினர்பாச்சி லாச்சிரா மத்துறை கின்ற
பூணெடு மார்பரோ பூங்கொடி வாடப் புனைசெய்வ தோ
இவர் பொற்பே. 10

அகமலி அன்பொடு தொண்டர் வணங்க ஆச்சிராமத்துறை
கின்ற
புகைமலிமாலை புனைந்தழகாய புனிதர் கொலாமிவரென்ன
நகைமலிதண்பொழில் சூழ்தருகாழி நற்றமிழ் ஞானசம்பந்தன்
தகைமலி தண்டமிழ் கொண்டிவையேத்தச் சாரகிலா வினை
தானே. 11

திருச்சிற்றம்பலம்

சுந்தரமூர்த்தி சுவாமிகள்

பண்–தக்கராகம் 7–ம் திருமுறை

திருச்சிற்றம்பலம்

வைத்தனன் தனக்கே தலையுமென் னாவும்
நெஞ்சமும் வஞ்சம் ஒன் றின்றி
உய்த்தனன் தனக்கே திருவடிக் கடிமை
உரைத்தக்கால் உவமனே ஒக்கும்
பைத்தபாம் பார்த்தோர் கோவணத் தோடு
பாச்சிலாச் சிராமத்தெம் பரமர்
பித்தரே ஒத்தோர் நச்சில ராகில்
இவரலா தில்லையோ பிரானார். 1

அன்னையே என்னேன் அத்தனே என்னேன்
அடிகளே அமையுமென் றிருந் தேன்
என்னையும் ஒருவன் உளனென்று கருதி
இறைஇறை திருவருள் காட்டாய்
அன்னமாம் பொய்கை சூழ்தரு பாச்சி
லாச்சிரா மத்துறை அடிகள்
பின்னையே அடியார்க் கருள்செய்வ தாகில்
இவரலா தில்லையோ பிரானார். 2

உற்றபோ தல்லால் உறுதியை உணரேன்
உள்ளமே அமையும்என் றிருந்தேன்
செற்றவர் புரமூன் றெரிஎழச் செற்ற
செஞ்சடை நஞ்சடை கண்டர்
அற்றவர்க் கருள்செய் பாச்சிலாச் சிராமத்
தடிகள்தா மியாது சொன்னாலும்
பெற்றபோ துகந்து பெறாவிடில் இகழில்
இவரலா தில்லையோ பிரானார். 3

நாச்சில பேசி நமர்பிறர் என்று
நன்றுதீ தென்கிலர் மற்றோர்
பூச்சிலை நெஞ்சே பொன்விளை கழனிப்
புள்ளினஞ் சிலம்புமாம் பொய்கைப்

பாச்சிலாச் சிராமத் தடிகளென் றிவர்தாம்
பலரையும் ஆட்கொள்வர் பரிந்தோர்
பேச்சிலர் ஒன்றைத் தரவில ராகில்
இவரலா தில்லையோ பிரானுர். 4

வரிந்தவெஞ் சிலையால் அந்தரத் தெயிலை
வாட்டிய வகையின ரேனும்
புரிந்தஅந் நாளே புகழ்தக்க அடிமை
போகுநாள் வீழுநா ளாகிப்
பரிந்தவர்க் கருள்செய் பாச்சிலாச் சிராமத்
தடிகள்தா மியாதுசொன் னலும்
பிரிந்திறைப் போதிற் பேர்வதே ஆகில்
இவரலா தில்லையோ பிரானுர். 5

செடித்தவஞ் செய்வார் சென்றுழிச் செல்லேன்
தீவினை செற்றிடும் என்று
அடித்தவம் அல்லால் ஆரையும் அறியேன்
ஆவதும் அறிவர்எம் அடிகள்
படைத்தலைச் சூலம் பற்றிய கையர்
பாச்சிலாச் சிராமத்தெம் பரமர்
பிடித்தவெண் ணீறே பூசுவ தானுல்
இவரலா தில்லையோ பிரானுர். 6

கையது கபாலம் காடுறை வாழ்க்கை
கட்டங்கம் ஏந்திய கையர்
மெய்யது புரிநூல் மிளிரும்புன் சடைமேல்
வெண்திங்கள் சூடிய விகிர்தர்
பையர வல்குற் பாவையர் ஆடும்
பாச்சிலாச் சிராமத்தெம் பரமர்
மெய்யரே ஒத்தோர் பொய்செய்வ தாகில்
இவரலா தில்லையோ பிரானுர். 7

நிணம்படும் உடலை நிலைமையென் றோரேன்
நெஞ்சமே தஞ்சமென் றிருந்தேன்
கணம்படிந் தேத்திக் கங்குலும் பகலும்
கருத்தினுர் கைதொழு தெழுவேன்

பணம்படும் அரவம் பற்றிய கையர்
பாச்சிலாச் சிராமத்தெம் பரமர்
பிணம்படு காட்டில் ஆடுவ தாகில்
இவரலா தில்லையோ பிரானுர். 8

குழைத்துவந் தோடிக் கூடுதி நெஞ்சே
குற்றேவல் நாள்தொறுஞ் செய்வான்
இழைத்தநாள் கடவார் அன்பில ரேனும்
எம்பெரு மான்என்றெப் போதும்
அழைத்தவர்க் கருள்செய் பாச்சிலாச் சிராமத்
தடிகள்தா மியாது சொன்ஞலும்
பிழைத்தது பொறுத்தொன் றீகில ராகில்
இவரலா தில்லையோ பிரானுர். 9

துணிப்படும் உடையுஞ் சுண்ணவெண் ணீறும்
தோற்றமுஞ் சிந்தித்துக் காணில்
மணிப்படு கண்டனை வாயினுற் கூறி
மனத்தினுல் தொண்டனேன் நினைவேன்
பணிப்படும் அரவம் பற்றிய கையர்
பாச்சிலாச் சிராமத்தெம் பரமர்
பிணிப்பட ஆண்டு பணிப்பில ராகில்
இவரலா தில்லையோ பிரானுர். 10

ஒருமையே அல்லேன் எழுமையும் அடியேன்
அடியவர்க் கடியனும் ஆனேன்
உரிமையால் உரியேன் உள்ளமும் உருகும்
ஒண்மலர்ச் சேவடி காட்டாய்
அருமையாம் புகழார்க் கருள்செயும் பாச்சி
லாச்சிரா மத்தெம் அடிகள்
பெருமைகள் பேசிச் சிறுமைகள் செய்யில்
இவரலா தில்லையோ பிரானுர். 11

ஏசின அல்ல இகழ்ந்தன அல்ல
எம்பெரு மானென்றெப் போதும்
பாயின புகழான் பாச்சிலாச் சிராமத்
தடிகளை அடிதொழப் பன்ஞள்

வாயினுற் கூறி மனத்தினுல் நினைவான்
வளவயல் நாவல் ஆரூரன்
பேசின பேச்சைப் பொறுக்கில ராகில்
இவரலா தில்லையோ பிரானுர். 12

திருச்சிற்றம்பலம்

63. திரு ஈங்கோய்மலை

திருஞானசம்பந்த சுவாமிகள்

பண்-தக்கேசி 1-ம் திருமுறை

திருச்சிற்றம்பலம்

வானத்துயர்தண் மதிதோய்சடைமேல் மத்தமலர் சூடித்
தேனொத்தனமென் மொழிமான்விழியாள் தேவி பாகமாக்
கானத் திரவில் எரிகொண்டாடுங் கடவுள் உலகேத்த
ஏனத்திரள்வந் திழியுஞ்சாரல் ஈங்கோய் மலையாரே. 1

சூலப்படையொன் றேந்திஇரவிற் சுடுகாடிட மாகக்
கோலச்சடைகள் தாழக்குழல் யாழ் மொந்தைகொட்டவே
பாலொத்தனைய மொழியாள் காண ஆடும்பரமனுர்
ஏலத்தொடுநல் இலவங் கமழும் ஈங்கோய் மலையாரே. 2

கண்கொள்நுதலார்கறைகொள் மிடற்றுர் கரியின்உரிதோலார்
விண்கொள்மதிசேர் சடையார் விடையார் கொடியார்
வெண்ணீறு
பெண்கொள் திருமார் பதனிற் பூசும் பெம்மான்எமையாள்வார்
எண்கும் அரியுந் திரியுஞ்சாரல் ஈங்கோய் மலையாரே. 3

மறையின்னிசையார்நெறிமென் கூந்தல் மலையான்மகளோடும்
குறை வெண்பிறையும் புனலுந்நிலவுங் குளிர்புன் சடைதாழப்
பறையுங் குழலும் கழலும் ஆர்ப்பப் படுகாட் டெரியாடும்
இறைவர் சிறைவண் டறை பூஞ்சாரல் ஈங்கோய்மலை யாரே. 4

நொந்தசுடலைப் பொடி நீறணிவார் நுதல் சேர்கண்ணினுர்
கந்தமலர்கள் பலவுந்நிலவு கமழ்புன் சடைதாழப்
பந்தண் விரலாள் பாகமாகப் படு காட்டெரி யாடும்
எந்தம் மடிகள் கடிகொள் சாரல் ஈங்கோய்மலையாரே. 5

நீருர் அகலம் உடையார் நிரையார் கொன்றை யரவோடும்
ஆரூர் சடையார் அயில் வெங்கணையால் அவுணர்புரம்மூன்றும்
சீருளரிசெய் தேவர் பெருமான் செங்கண் அடல்வெள்ளை
ஏரூர்கொடியார் உமையாளோடும் ஈங்கோய்மலை யாரே. 6

வினையாயின தீர்த்தருளே புரியும்விகிர்தன் விரிகொன்றை
நனையார் முடிமேல் மதியஞ்சூடும் நம்பானலமல்கு
தனையார் கமல மலர்மேலுறைவான் தலை போடனலேந்தும்
எனையாளுடையான் உமையாளோடும் ஈங்கோய்மலை யாரே. 7

பரக்கும் பெருமை இலங்கையென்னும் பதியிற் பொலிவாய
அரக்கர்க்கிறைவன் முடியுந்தோளும் அணியார் விரல்தன்னால்
நெருக்கியடர்த்து நிமலா போற்றி யென்று நின்றேத்த
இரக்கம் புரிந்தார் உமையாளோடும் ஈங்கோய் மலைபாரே. 8

வரியார் புலியின் உரிதோலுடையான் மலைபான் மகளோடும்
பிரியாதுடனாய் ஆடல் பேணும் பெம்மான் திருமேனி
அரியோடயனும் அறியா வண்ணம் அளவில் பெருமையோ
டெரியாய் நிமிர்ந்த எங்கள் பெருமான் ஈங்கோய் மலையாரே. 9

பிண்டியேன்று பெயராநிற்கும் பிணங்கு சமணரும்
மண்டை கலனாக் கொண்டு திரியும் மதியில் தேரரும்
உண்டி வயிறூர் உரைகள் கொள்ளாதுமை யோடுடனாகி
இண்டைச் சடையான் இமையோர் பெருமான் ஈங்கோய்மலை
யாரே. 10

விழவாரொலியும் முழவும் ஓவா வேணுபுரந்தன்னுள்
அழலார் வண்ணத் தடிகளருள் சேரணிகொள் சம்பந்தன்
எழிலார் சுனையும் பொழிலும் புடை சூழ் ஈங்கோய்மலை யீசன்
கழல் சேர்பாடல் பத்தும் வல்லார் கவலை களைவாரே. 11

திருச்சிற்றம்பலம்

